பின்பு நீலநு மப்படியே பாகவதாராதநம் பண்ணிக்கொண்டு வரச்செய்தே சோழராஜா இத்தைக்கேட்டுத் தன் பகுதிப்பணங் கொடுக்கச்சொல்லிக் கேழ்க்க, இவரும் இப்போது பின்னையென்றுசொல்ல, ராஜாகேட்டு இவரைப் பிடித்துவரச்சொல்லி சேனையை யனுப்பிவைக்க, யிவரும் யுத்தம் பண்ணி சேனையைத்தரத்திவிட, ராஜாவும்பின்னையும் பகுசேனையோடே தானே புறப்பட்டுவந்து யுத்தம்பண்ணச்செய்தே இவருடைய பராக்ரமத்தைக்கண்டி சந்தோஷித்து இவரை நல்லவார்த்தைபேசி பகுதிப்பணத்தை யொப்பவித்து மந்திரிகள்வசம் பண்ணிப்போனன். யந்திரிகள் இவரைப் பகுதிக்காகப் பட்டினிவைத்திருக்கச்செய்தே இவர் ஸ்வப்நத்திலே காஞ்சீபுராதிபரான வரதராஜர்வந்து உமக்கு வேண்டியதனங் கொடுக்கிறேமென்று சொன்னர். இவர் பொழுதுவிடிந்தபின்பு காஞ்சீபுரத்திலேதனமிருக்கிறது கொடுக்கிறேமென்று மந்திரிகளைக்கூட்டிக்கொண்டு காஞ்சீபுரத்திலேபோய் வரதனுடைய கடாக்ஷத்தினாலே வேகவதிகரையிலே நிசேஷபமெடுத்துப் பகுதிகொடுத்து மிகுதிதனத்தை பாகவதாரதனைத்திற்கு வைத்துக்கொண்டார். சோழராஜாவு மிச்செய்தியை மந்திரிமுகத்தாலேகேட்டு இவர் ஸாமாந்யரன்று, மஹாப்ரபாவசாலியென்றுசொல்லி யிவரை யழைத்துத் தன்னபராதத்தைப் பொறுப்பித்துக்கொண்டுப்ட்டினிவைத்ததோஷந் திருகைக்காகப் பகுதிதனத்தை ப்ராம்மணருக்குக்கொடுத்துவிட்டான். பின்பு இவருங் கையிலிருந்த தனமெல்லாம் பாகவதாராதனத்திற்கு வ்ரயம்பண்ணி யத்தைவிடமாட்டாமல்வழிபறித்து தனங்கொண்டு பாகவதாராதநத்தை நடத்திக்கொண்டு வந்தார். ஸ்ரீமந்நாராயணன் பாகவதாராதநம் பண்ணினது மூலமாக இவரை விசேஷமாக அங்கீகரிக்கவேணுமென்று எண்ணித் தன்னையும் இவர் வழிபரிக்கும்படியாக ப்ராம்மணவேஷங்கொண்டு பத்நியுடன்கூடக் கல்யாணப்பிள்ளைக் கோலங்கொண்டு ஆபரணங்கள் முதலான பகுபதார்த்தங்களுடனேகூடப் புறப்பட்டுவந்தான். நீலனென்கிற பரகாலனுங்கண்டு கூட்டத்துடனேசென்று வளைத்து வழிபறித்து மோதிரத்தைக் கழித்துவாங்கினமிடுக்காலே கலியனென் றழைக்கப்பட்டு பின்பு சுமைகட்டியெடுத்துவிடப்பார்க்க, பின்பு அந்த சுமையெடுக்கப் போகாதபடியாலே கல்யாணப்பிள்ளையான ப்ராம்மணனைப்பார்த்து நீ மந்த்ரவாதம் பண்ணினையென்று தொடர்ந்தார். பின்பு ப்ராம்மணவேஷங்கொண்ட நாராயணன் உமக்கு மந்த்ரத்தைச் சொல்லுகிறேன் வாருமென்று மந்த்ரத்தை யுபதேசித்தான், இவர் மந்த்ரத்தை யிப்படி வாள்வலியால் பெற்றபின்பு நாராயணன் கருடாரூடனுய் லக்ஷ்மீஸமேதனுய்வந்து இவருக்குத் தன்னைக் காட்டினன். இவருமவனை பரிபூர்ணனுபவம்பண்ணி அக்ஞாநங்களெல்லாந்தீர்ந்து நல்லக்ஞாநங்களைப்பெற்று ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தரம், என்கிற நான்கு கவிகளாலே திருமொழிமுதலாகிய வாறுப்ரபந்தங்களைச் செய்தார். இப்படி திருமொழிப்ரபந்தஞ்செய்துக்கொண்டு திவ்யதேசங்கள் தோறும் சேவித்துவருகையில் சோழமண்டலத்திலேவந்தவளவிலே நாலு

கவிப்பெருமாள் வந்தாரென்று விருதாதக்கேட்ட சம்பந்தரென்கிற சைவ குருவினுடைய சிஷ்யர்வந்து விருதைத்தடுக்க, இவரும் சம்பந்தனிருக்கிற சீர்காழிக்குச்சென்று தாடாளப்பெருமாளென்கிறதிருக்கோலத்தைக்கூடக் கொண்டுபோய் வாக்கு மிகவுங் கிளர்ந்துவருகையாலே சம்பந்தரோடே தர்க்கித்து இவரைக்குறித்து சம்பந்தன்சொன்ன கவியைத் தூஷித்தார். சம்பந்தனு மிவரையொருகவிச் சொல்லச்சொன்னன். இவருஞ் சீர்காழியி லிருக்கிற தாடாளப்பெருமாள்மேலே இருபதுகவிச்சொல்லித் தம்முடைய பெருமைதோற்றமுடிவிலே ஆவிநாடன், அருண்மாறி, அரட்டமுக்கி, அடையார்சீயம், கொங்குமலர்க்குழலியர்வேள், மங்கைவேந்தன், கொற்ற வேற்பரகாலன், கலியன், சொன்னதமிழென்று சொன்னர். சம்பந்தனும் உத்தரஞ் சொல்லமாட்டாதே நீர் நாலுகவிப்பெருமாளென்றுசொல்ல ஜயித்து எல்லாராலும் பூஜைகொண்டு ஆனைக்கழுத்திலேறி ஜயபேரியறைவித்துக்கொண்டு மீண்டும் ஸ்ரீரங்கத்திற்குவந்தார். இவர் மதிள் முதலானது செய்விக்கச்செய்தே சாஸ்த்ரங்களிற்சொல்லுகிறபடியேசங்கசக்ரசின்னங்களும் அடிப்பாதத்துடனேகூடின திருமண்காப்புக்குறிகளும் மதிள் முதலானவைகளிலே செய்வித்தார். அதுமுதலாக நாளதுவரைக்கு மந்தக்குறிகள் இருக்கின்றன. பின்பு திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகமென்கிற ப்ரபந்தத்தை தேவகாதத்திலே ரங்கநாதன் ஸந்நிதியிலேபாடி அவரை ஸந்தோஷிப்பித்தார். அவர் ஸந்தோஷத்தாலே உமக்கென்ன வேண்டுமென்று கேட்டார். திருமங்கையாழ்வாரும் தேவரீர் முன்பு சடகோபன் முகமாக வெளிப்படுத்திய தமிழ்வேதங்கள் நாலையும் திருவத்யயனத் திருநாளிலே கீர்வாணவேதங்களுடனே பாராயணம்பண்ணும்படியாகக் கட்டளையிட வேணுமென்று கேட்டுக்கொண்டார். ரங்கநாதனு மப்படியேயாகிற தென்றுசொல்லி தேவகாநம்பாடின விவர் மிடருக்குத் தாம் சாற்றின வெண்ணெக்காப்பு சேஷத்தைத் தடவிவித்துத் திருக்குறுகையினின்றுஞ் சடகோபன் ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளும்படி திருமுகத்தையும் ஸந்நிதிப்பேரையும அனுப்பிவிக்க, சடகோபனும் திருமுகத்தைத் திருமுடியிலே வைத்துச்கொண்டு திருநாளுக்குதவும்படி ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருள, திருமங்கைமன்னனுஞ் சடகோபனை யெதிர்கொண்டு திருவடித்தொழுது ஸந்நிதியிலே யெழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோக, ரங்கநாதனுஞ் சடகோபனைக் குளிரநோக்கி நம்மாழ்வாரென்று திருநாமஞ் சாற்றித் திருமாலைமுதலான வரிசைகளைஸாதிக்க, திருமங்கைமன்னனும் மற்றைநாள் திருவேகாதசிதுடங்கிப் பத்துநாளாகப் பகலிலே கீர்வாண வேத பாராயணமும் ராத்ரிகாலத்திலே திருவாய்மொழியாகிய தமிழ்வேத பாராயணமும் நடப்பித்து பத்தாவதுநாளிராத்திரி திருவாய்மொழிசாற்றும் போது சடகோபன் ரங்கநாதனைத் திருவடிதொழும்படியனுகரித்துக்காட்டும்படிபண்ணி, யிப்படி வருஷந்தோறும் இந்தத் திருநாளுக்குத் திருநகரியில் நின்றும் நம்மாழ்வாரெழுந்தருளுவதாகநியமித்து திருமாலைமுதலான வரிசைகளையெல்லாம் ப்ரஸாதித்து பெரியபெருமாள் விடைஸாதித்தருளி

நம்மாழ்வாருந்திருக்குறுக்கைக்கெழுந்தருளி வருவதுந்தோறும் ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளி திருவத்யயநத்திருநாளைப் பரிபாவித்தருளும்படி திருமங்கை மன்னன்செய்த கட்டளைப்பாடு நாளதுவறைக்கு நடந்துவருகிறது.

பின்புதிருமங்கைமன்னனுஞ் சிறிதுகாலத்திலே யொருசிந்தைசெய்து அறிவுடையார் அறிவில்லாதவர்க ளெல்லாருக்கும் பரமபதங்கிடைக்கும் படியாக ரங்கநாதனுடைய வநுமதிகொண்டு சிறிது நிலம்வாங்கி யதிலே சிறுது முதுகாடாக்கி அதிலே தகனம்பெற்ற வெப்பேர்ப்பட்டவர்களுக்கும் மோக்ஷ முண்டாம்படிசெய்த கட்டளைப்பாடு நாளதுவறைக்கும் நடந்து வருகிறது.

திருமங்கையாழ்வார் ஸ்ரீரங்கத்திலே பண்ணின கைங்கர்யங்களி னுடைய துகை:-திருமடப்பள்ளி-திருநடமாளிகை-ஆலிநாடன்றிருமண்ட பம் - திருக்கொட்டாரம் - அஞ்சுகளஞ்சியம்-இரண்டுதிருமதில்கள்-திருக் கோபுரங்கள்-ஆகவிப்படி கைங்கர்யங்களைப் பண்ணிக்கொண்டு ரங்கநா தனுக்கு மிகவு மிஷ்டராயிருந்தார். பகவானுடைய கைங்கர்யத்திற்காக வழிபறிப்புமுதலான வக்ருத்யங்களெல்லாம் நல்ல க்ருத்யங்களென்று வேதஞ்சொல்லுகிறதென்றுசொல்லி யதற்கு ஸம்வாதமாக வொருபாகவத சூடிதை சொல்லுகிறேனென்றுசொல்லி திருமங்கையாழ்வாருடைய சரி தத்தைச்சொல்லி கைங்கர்யார்த்தமாகச்செய்த செயல்களெல்லாம் மஹா புண்யங்களாயிருக்கு மென்று வ்ருத்தபாத்மத்திலே சொல்லுகையாலே திருமங்கையாழ்வாருக்குப் பாபமுண்டென்று சொல்லுகை யஸங்கதம். திருமங்கையாழ்வார் பூர்வம் திவ்யதேசயாத்ரை செய்கிறவளவில் மஹேந் த்ரகிரிக்கருகே பத்ராச்ரமமென்று புராணங்களிற் சொல்லப்படுகிற திருக் குறுங்குடியிலேவந்து நம்பியுடைய வழகை யநுபவித்து அங்கே நித்ய வாஸம் பண்ணவேணுமென்று நினைவுபிறக்கச் செய்தேயும் மற்றுந் திவ்ய தேசங்களைத் தொழவேண்டியும் ஸ்ரீரங்கத்திலே கோபுரப்ரகாராதி கைங் கர்யங்கள் செய்யவேண்டியுமிருந்தபடியாலே திருக்குறுங்குடியை விட் டெழுந்தருளினார். பின்பு அதெல்லாந் தலைக்கட்டினவாறே திருக்குறுங் குடியில் நித்யவாஸஞ்செய்யவாஞ்சைதலையெடுத்தது. பின்புஸ்ரீரங்கநாதன் ஸன்னிதியிலே விண்ணப்பஞ்செய்து அநுமதிகொண்டு குமுதவல்லியாருந் தாமுந் திருக்குறுங்குடியிலே யெழுந்தருளி. யோகநிஷ்டராய்க்கொண்டு நித்யவாஸம்பண்ணிக் கொண்டிருந்தார் பார்க்கவப்புராண ச்லோகம்

"తతఃపరాన్తకోగ్రాత్వావిరక్తోభార్యయాసహ । శ్రీరంగపతినానుజ్ఞాంప్రాప్యభద్రా
శ్రమంపరం, ప్రవిశ్యతత్రసంతస్థౌయోగీంద్రస్సమాధినా" இதற்குப்பொருள்
அதற்குப்பின்பு பரகாலரான திருமங்கையாழ்வார் விரக்தராய்க்கொண்டு
ஸ்ரீரங்கநாதன் கையிலே யநுக்ஞை தன்முகப்பெற்று பார்யையான குமுத
வல்லியாரோடேகூட பத்ராச்ரமமென்கிற திருக்குறுங்குடியிலே போயி
ருந்துகொண்டு யோகநிஷ்டருக்கெல்லாந் தலைவரா யிருந்துக்கொண்டு

ஸமாதியென்கிற மஹாயோகத்தாலே தேஹத்யாஸத்தைப் பண்ணி மோக்ஷத்தைப் பெற்றார். என்றபொருள். இப்படி மஹா ப்ரபாவசாலியான திருமங்கையாழ்வாருடைய வர்ச்சாவிக்ரஹமானது பூர்வமேபிடித்த காளதுவரைக்கும் ஸ்ரீரங்க ஸ்தலத்திலே பூஜோத்ஸவங்களுடனே யிருக்கிறது. ஈ.

இனி ஆண்டாளவதார மெழுதுகிறது. அவதாரகாலங் கலியுகத்தில் தொண்ணூற்றேழுக்குமேற் செல்லாநின்ற ஸ்வரூஷம் ஆடிமாசம் சுக்லபக்ஷத்தில் சதுர்த்தி செவ்வாய்க்கிழமைகூடின பூரநக்ஷத்ரம். ஸ்தலம். ஸ்ரீவில்லிபுத்தூரிலே துளஸீவநம். இவள் பூமிதேவியம்சம். இவள் அயோநிஜையாகையும் பெரியாழ்வார் வளர்ப்பகையாலே ப்ரஹ்மணவர்ணமென்னப்படும். இவள்செய்த ப்ரபந்தம்:—திருப்பாவைமுப்பது, திருமொழி கசாஉ. பார்க்கவபுராண ச்லோகம். తుళసీమూలమేదిన్యాముద్భూతశుభావహా। బాలాభూమ్యంశజా పూర్ణచంద్రరేఖేవశారదీ''. ஙக.

இனி மதுரகவிகள் அவதாரம் த்வாபரயுகத்தில் எட்டிலக்ஷத்தெண்பத்துமூவாயிரத்தெண்ணூற்றைம்பத்தெட்டுக்குமேற் செல்லாநின்ற ஈச்வரவருஷம் சித்திரைமாசம் சுக்லபக்ஷம் வெள்ளிக்கிழமைகூடின சித்ராநக்ஷத்ரம் அவதாரகாலம். ஸ்தலம் பாண்ட்யதேசத்தில் திருக்கோளூர் திருப்பதி. இவர் குமுதாமசம் கருடாம்சம். இவர்செய்த ப்ரபந்தம் கண்ணிநுண்சிறுத்தாம்பு. இவர் முன்குடுமி ப்ராம்மணர். ஙஉ

இப்படி யாழ்வார்களுடைய வவதாரமெழுதப்பட்டது. பாஷ்யகாரருடைய அவதாரம் குருபரம்பரையிலே யெழுதப்படும். குருபரம்பரையாவது:—பெரியபெருமாள், பெரியபிராட்டியார், சேனைமுதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, பாஷ்யகாரர், இத்யாதி. அதில் ஸகலவித்யைகளுக்கும் ப்ரதமாசார்யனான மெம்பெருமான் திருநக்ஷத்ரம்:—திருவோணம். பெரியபிராட்டியார் திருநக்ஷத்ரம்:—உத்திரபல்குநீ. சேனைமுதலியார் திருநக்ஷத்ரம்:—அப்பிசியில் பூராடம். நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்:—வைகாசி விசாகம். நாதமுனிகள் திருநக்ஷத்ரம்:—ஆனிமாசத்தில் அநூராதம். இவர் ப்ராம்மணவர்ணத்திலே சொட்டைக்குலம். இவர்ஸைநாபதிமந்த்ரியான கஜ்ஜாகநாம்சம். இவர்செய்த ப்ரபந்தம் ஸ்ரீபுருஷநிர்ணயமும், ந்யாயதத்வமும் இவருக்குப்பிதா ஈச்வரபட்டாழ்வான். புத்ரர் புருஷோத்தமர்ப்பாம்சரான ஈச்வரமுநிகள். இந்த மூவரும் வீரநாராயணபுரத்திலே மன்னரைஸேவித்துக்கொண்டுநித்யவாஸம்பண்ணுநிற்கச்செய்தேமன்னருடைய வநுமதிபெற்று மதுரை ப்ருந்தாவநம் முதலாகிய வடதேசத்திலுள்ள திவ்யதேசங்களையெல்லாம்ஸேவித்து கோவர்த்தனபுரமென்கிறக்ராமத்திலே யழுவைத்துறைவனென்கிறவெம்பெருமானைஸேவித்துக்கொண்டு

92/2
15

பழநடை விளக்கம்

திவ்யவாசம் பண்ணுகிற காலத்திலே நாதமுனிகளுடைய ஸம்பந்தத்தினா
மன்னனுள்வந்து இவரை வீரநாராயணபுரத்திற்கு வரவேணுமென்று நிய
மிக்க நாதமுனிகள் யழுனைத்துறைவரை யநுமதிகொண்டுபுறப்பட்டு வார
ணஸீ வழியாகவந்து ஸ்ரீஜகந்நாதன் முதலானுரை சேவித்து ஸிங்கஸ்ரீ,
அகோபிலம், திருவேங்கடம், முதலான திருப்பதிகளே சேவித்து ஸ்ரீரங்க
நாதனேசேவித்து திருக்குடந்தையி லாராவமுதனேசேவித்து வீரநாரா
யணபுரத்திற்குவந்து மன்னனுரை சேவித்து அவர் நியமனத்தினுலே அங்
கே திருநந்தவனம் முதலான கைங்கர்யங்களே நடத்திக்கொண்டு சாஸ்த்ர
ப்ரவர்த்தகமுஞ் செய்துக்கொண் டிருக்கச்செய்தே மேல்நாட்டினின்றும்
சில ஸ்ரீவைஷ்ணவர்க ளெழுந்தருளி மன்னனுரை சேவித்து அவர்முன்னே
ஆராவமுதென்கிற திருவாய்மொழியை விண்ணப்பஞ்செய்ய, நாதமுனிகள்
அதைக்கேட்டருளி ஆகந்தித்து ஆயிரத்தினிப்பத்து என்றிருக்கிறதே இப்
ப்ரபந்தம்உங்களுக்குமுடியவந்திருக்குமோவென்றுகேழ்க்க, இப்பத்துப்பா
ட்டுமேவருவதென்று அவர்கள்சொல்ல, நாதமுனிகளும்அவர்களே ஆதரித்துப்
போகவிட்டருளி சடகோபனவதரித்த திருக்குருகூர் ப்ரதேசத்திலே இது
இருக்கவேணுமென்று அத்தேசத்திற் கெழுந்தருளி ஆழ்வானைஸேவித்து
மதுரகவிகளுடைய சிஷ்யரான பராங்குசதாஸரைக்கண்டு சேவித்து இவ்
விடத்திலே திருவாய்மொழி நடையாடுகிறதோ வென்றுகேழ்க்க, திருவாய்
மொழியும் மற்றுத் திவ்யப்ரபந்தங்களும் நெடுங்காலமுண்டு கிலமாய்த்து;
ஆனுலுமெங்களாசார்யர் மதுரகவிகள் அடியேனுக்குக் கண்ணிநுண்
சிறுத்தாம் பென்கிற திவ்யப்ரபந்தத்தைஸாதித்து இத்தை யாழ்வார் திரு
முன்பே பன்னீராயிரமுருச்சொல்ல ஆழ்வார் ப்ரஸன்னராவாரென்று
எங்களாசார்ய ரருளிச்செய்தாரென்றுசொல்ல, நாதமுனிகளுங் கண்ணி
நுண் சிறுத்தாம்பைப் பராங்குசதாஸரிடத்திலேபெற்று ஆழ்வார் திரு
முன்பே பன்னீராயிரமுரு நியமத்தோடே யநுஸந்தாநம் பண்ணினார்.
பின்பு ஆழ்வாரும் பெரியபிராட்டியார் நியமனத்தாலே மிகவும் ப்ரஸந்த
ராய் நாதமுனிகளைக்குறித்து அசரீரிவாணி சொல்லுமாப்போலே திருவாய்
மலர்ந்து உமக்கென்ன வேண்டுவதென்று கேட்டருள, நாதமுனிகளும்
திருவாய்மொழிமுதலான திவ்யப்ரபந்தங்களே யடியேனுக்குத் தந்தருள
வேண்டுமென்ன, ஆழ்வாரும் ப்ரீதியுடனே திவ்யஜ்ஞாநக்கண்ணைக்
கொடுத்தருளி ரஹஸ்யங்களேயுந் திருவாய்மொழிமுதலான மற்றுமுள்ள
நாலாயிர ப்ரபந்தங்களேயும் அதின்தாத்பர்யங்களேயும் யோகரஹஸ்யத்
தையு முபதேசித்தருள, நாதமுனிகளு மத்தைப்பெற்று பக்தியுடனே
யங்கே யாழ்வானை சேவித்துக்கொண் டிருக்கச்செய்தே, மன்னனுர்
நாதமுனிகளுடைய ஸ்வப்நத்திலே இப் ப்ரபந்தங்களேத் தம்முடைய ஸன்
னிதியிலே யொருதரம் சொல்லவேணுமென்றுசொல்ல, நாதமுனிகள்
ஆழ்வாருக்குச் செய்தியை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் நீர் வீரநாரா
யண புரத்திற்குப்போய் இப் ப்ரபந்தங்களே சமதமாதிகுணங்களேயுடைய
ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கற்பியுமென்று ஸாதித்துவிடைகொடுத்தருள,

நாதமுனிகளும் புறப்பட்டு வழியிலுள்ள திருப்பதிகளையு மத்தத்திருப்பதி களையுமான திவ்யப்ரபந்தாறு ஸந்தானத்துடனே சேவித்துக்கொண்டு வீரநாராயணபுரத்திற்குவந்து மன்னனைச் சேவிக்க, மன்னனும் நீர் அந்த திவ்ய ப்ரபந்தங்களை யியலுமிசையு மாக்குமென்று நியமிக்க, நாத முனிகளுந் தம்முடைய மருமக்களான தென்னரையகத்தாழ்வாரையும் மேலை யகத்தாழ்வாரையுங் கூட்டிக்கொண்டு இப் ப்ரபந்தங்களை திவ்யகானத்திலே படைத்துப் பாடுவித்தருள, இது லோகத்திலே ப்ரஸித்தமாய்ற்று. அந் நரம் அத்தேசத்திற்கு ராஜாவான சோழன்வாசலிலே இருவர் வேசிகள் தேவகானம் பாடுவாளொருத்தியும் மனுஷ்யகானம் பாடுவாளொருத்தியும் தம்மிலே விவாதபபட்டு ராஜஸபையிலே வித்வான்களைத் திரட்டிப்பாட, ராஜாவும் வித்வான்களுந் தேவகானந்தெறிந்தவரல்லாமையாலே தேவகா னம் பாடினவளைத் தள்ளிவிட, அவளுந்தேவகானத்தை தேவதைகளறியு மாகையாலே தேவாலயங்கள்தோறும பாடிக்கொண்டிவந்து மன்னனர் கோவிலிலேபாட, நாதமுனிகளும் அத்தைக் கேட்டருளி யபிநந்தித்து அவ ளுக்கு ஸந்நிதியிலே வரிசைகளெல்லாம் ப்ரஸாதிப்பித்தருள, அவளும் விடைகொண்டிச்செய்தியை ராஜாவுக் கறிவிக்க, ராஜாவும் நாதமுனிகளை ராஜகோஷ்டிக் கெழுந்தருளப்பண்ண, நாதமுனிகளும் எழுந்தருளி யாசீர் வதிக்க, ராஜாவும் .ஆதரத்துடனே யிந்தவேசிபாடுகிற தேவரீர் அறிவீரோ? வென்று கேழ்க்க, நாதமுனிகளும் வேசிகளிருவரையும் பாடச்சொல்லி இது மனுஷ்யகான முங்களுக்குத்தெறியும்; இதுதேவகானம்தேவதைகளுக் குத்தெரியுமென்ன, தேவரீர் அறிவீரென்று நாகங்ளறிவதெப்படியென்ன, நாதமுனிகளும் நூறுதாளத்தை யொருக்காலே தட்டச்சொல்லியோசை யைக்கொண்டு இது யித்தனையிடை இதித்தனையிடையென்றருளிச்செய்ய, ராஜாவுந் தாளங்களைத் தானே நிறுத்துப்பார்க்குமிடத்தில் மூன்றிரை யேராமல் குறையாம லிருந்தபடியைக் கண்டாச்சர்யப்பட்டு ஸ்ரீபாதத் திலே தண்டனிட்டு பகுத்ரவ்யத்தை ஸமர்ப்பிக்கத்தேட, இவர் அதை வேண்டாமென்று ராஜாவை யாசீர்வதித்து வீரநாராயணபுரத்திற் கெழுந் தருளினர். இவர் ஸ்ரீபாதத்திலே யாச்ரயித்தவர்கள்:—உய்யக்கொண் டார், குறுகைக்காவலப்பன், நம்பிகருணாகரதாஸர், எறுதிருவுடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வாகமாதேவியாண்டான், உருப்புட்டூராச் சான்பிள்ளை, சோகத்தூராழ்வான், என்று எண்வர். இவர்களுக்கு ராஜ ஸ்யங்களையுந் திவ்ய ப்ரபந்தங்களையும் அதிகரிப்பித்துக்கொண்டு போருகிற காலத்திலே முன்பு திருமங்கைமன்னன் பண்ணின திருவத்யயநத் திருநாள் கட்டளைப்பாட்டைடத் திரும்பவும் ஜீர்ணோத்தாரணம் பண்ணும்படி யாக நினைப்பிட்டு ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளி திருக்குறுகையி னின்றும் நம்மாழ்வாரை ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளப்பண்ணிவைத்து முன்பு திரு மங்கைமன்னன் காலத்திலே நடந்தாப்போலே பகல் திர்வாணவேதமும் இராத்ரி திருவாய்மொழியும் பாராயணம்பண்ணும்படியாகவும் திருப்பல் லாண்டு முதலாக திருநெடுந்தாண்டகமளவாக ஏகாதசிக்குமுன் பத்துகா

ளிலே பெரியபெருமாள் கேட்டருளும்படியாகவும் திருவத்தாதிமுதலாகத் திருவத்தியயாத்திருநாள் சாற்றுமுறைக்கு மறுநாள் கேட்டருளும்படியாகவும் இப்படி வருஷந்தோறும் நம்மாழ்வார் எழுந்தருளும்படியாகவும் கட்டளைப்படுத்தி வீரநாராயணபுரத்திற் கெழுந்தருளி சிறிதுகாலம் யோகத்திலே எழுந்தருளியிருந்து குறுகைக்காவலப்பனுக்கு யோகக்ரமத்தை யருளிச்செய்தார்.

சாஸ்த்ரங்களையும் திவ்யப்ரபந்தங்களையும் ப்ரவர்த்திக்கும்படி உய்யக்கொண்டாருக்கு நியமித்தருளினார். தம்புத்ரரான ஈச்வரமுனிகளைப்பார்த்து உமக்கொருகுமாரர் உண்டாகப்போகிறார், அவருக்கு யமுனைத்துறைவனென்று திருநாமஞ்சாற்றுமென்று அருளிச்செய்து உய்யக்கொண்டானையும் குறுகைக்காவலப்பனையுங்குறித்து உங்களுக்கு நாம்சொன்னதர்சநதாத்பர்யங்களையும் யோகக்ரமங்களையும் யமுனைத்துறைவருக்கு உபதேசியுங்களென்று நியமித்தருளி நாதமுனிகள் முன்புபோலே யோகத்திலேயெழுந்தருளியிருந்தார். பின்பு அந்தசோழராஜா பரிவாரத்துடனே வேட்டைக்குவந்து மீண்டுபோகாநிற்கச்செய்தே நாதமுனிகளுடைய பெண்பிள்ளைகள்வந்து ஐயா நம்மகத்திலே ஒருகுரங்கும் இரண்டுவில்லிகளும் ஒரு பெண்பிள்ளையுமாகவந்து நாதமுனிகள் எங்கேயென்று தேடிப்போந்தார்கள் என்றவாறே, நாதமுனிகளும் அவர்கள் சக்ரவர்த்திதிருமகனும் (லக்ஷ்மணனும் ஸீதையும்) இளையபெருமாளும் பிராட்டியுந் திருத்திருவடியுமாக வந்திக்குமென்று எண்ணிக்கொண்டு பின்றொடர்ந்து வழியிலே எதிரேஸந்தித்தவர்களை யிப்படிபோகிறவர்களைக் கண்டீர்களோவென்று பலரையுங்கேட்டருளப் பலரும் போகிறார்கள் போகிறார்களென்றுசொல்ல, இப்படி கங்கைகொண்டபுரத்தின் தென்வாசலளவாக வெழுந்தருளி யங்குள்ளவர்களைக்கேழ்க்க, வவர்கள் கண்டிலோமென்றவாறே யங்கேவிழுந்து மோஹித்துத் திருநாட்டுக்கெழுந்தருளினார். பின்பிச்செய்தியை உய்யக்கொண்டார் குறுகைக்காவலப்பன் ஈச்வரமுதலிகள் மூதலாஞர்கேட்டு அங்கேபோய் நாதமுனிகளைக்கொண்டு ப்ரம்மமேதம் நடத்தி வீரநாராயணபுரத்திற்குவந்து மற்றுஞ் செய்யவேண்டுவதெல்லாஞ் செய்வித்தார்கள். அநந்தரம் நாதமுனிகளுடைய தெய்யரான உய்யக்கொண்டார் திருக்ஷேத்ரம் சித்திரையில் க்ருத்திகை. இவர்ஸோமயாஜம். இவர் ஸ்ரீபாதத்திலே யாச்ரயித்தமுதலிகள் மணக்காலநம்பி; திருவல்லிக்கேணிப்பாண்பெருமாளரையர்; சொட்டைடப்பூசி சண்டலங்காரர்; புண்டரீகதாஸர்; உலகுபெருமாள்நங்கை என்கிறவைவர். இவர்களில் மணக்கால்நம்பி உய்யக்கொண்டார் திருவடிகளிலே ஸகலவிதகைங்கர்யங்களையும் பண்ணிக்கொண்டு இருந்து உய்யக்கொண்டார் திருநாட்டுக்கெழுந்தருளுகிறபோது இனி தர்சநப்ரவர்த்தகராவாரா என்று உய்யக்கொண்டானைக் கேட்க, அவரும் இனிமேல் நீரோதர்சநம் நிர்வஹிக்கக்கடவீர், பின்பு நாதமுனிகள்

பழநடை விளக்கம்.

திருவயிந்திலே சொட்டைக்குலத்திலே ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஒருதிருப் பேரனர் அவதரிப்பர், அவருக்கு யமுனைத்துறைவனென்று திருநாமஞ் சாற்றுவித்து தர்சநப்ரவர்த்தகராம்படி ஸகலரஹஸ்யக்கூட்டு முபதேசி யும், அவர் தர்சநப்ரவர்த்தகராவனென்று நியமித்தருளி திருவாட்டிற் கெழுந்தருளினர். உய்யக்கொண்டாருக்கு ப்ரம்மமேதம்முதலான சரம கைங்கர்யத்தை மனைக்கால்நம்பி செய்தருளினர்.

பின்பு மணக்கால்நம்பி திருவவதாரஞ்சொல்லுகிறது. இவர்திருநக்ஷத் யம் மாகிமாசத்தில், மகம். இவர் குமுதாம்சம், இவர் திருநாமம் ஸ்ரீராம மிச்ரர்.

இனி ஆளவந்தார் அவதாரஞ்சொல்லுகிறது. இவர் திருநக்ஷத்ரம் ஆடிமாசத்தில் உத்ராடம். ஸ்தலம் வீரநாராயணபுரம். இவர் ஸிம்மாஸ நாம்சம். இவர்செய்தருளின ப்ரபந்தம்:—ஆத்மஸித்தி; ஸம்வித்ஸித்தி; மோக்ஷஸித்தி; ஆகமப்ராமாண்யம்; கீதார்த்தஸங்க்ரஹம்: ஸ்தோத்ர ரத்நம்; மாயாவதகண்டநம்; என்றிவை. இப்படி யாளவந்தாரவ தரித்த செய்தியை மனைக்கால்நம்பி கேட்டு வீரநாராயணபுரத்திற்கு வந்து ஈச்வராமுநிகளைக்கொண்டு ஜாதகர்மத்தைச் செய்வித்து, சங்கசக்ராங்கநம் முன்பாக யமுனைத்துறைவனென்று திருநாமஞ் சாற்றுவித்தார். பின்பு ஈச்வராமுநிகளும் அந்தந்த காலங்களிலே அந்தப்ராசநம் முதலானவை செய்தருளி அத்யயநம் பண்ணுவிக்கிற காலத்திலே ஸந்தைசொல்லும் போது ஓதினவைதையே இவர்கள் ஓதுகிறார்களென்று யமுனைத்துறைவர் தவிர்ந்துநிற்க, ஓதப்போகிறோமென்றால் ஓதினத்தையே யோதாநின்றார் கள், அங்குப் போவானேனென்று சொல்லுவர். இப்படி யொருஸந்தை யிலே வேதங்களையறிந்து தரித்து பின்பு திருக்கல்யாணமுஞ் செய்தருளி னர். சிலநாளைக்குப்பின்பு ஈச்வராமுநிகள் திருவாட்டிற் கெழுந்தருள, யமுனைத்துறைவரும் அவருக்கு ப்ரம்மமேதம் முதலான சரம கைங்கர் யத்தை நடத்தியருளினர். அந்தரம் யமுனைத்துறைவர் மஹாபாஷ்ய பட்டருடனே சாஸ்த்ராப்யாஸம் பண்ணும்போது அந்த ராஜாவுக்கு புரோஹிதனை ஆக்கியாழ்வானுக்கு அந்த தேசத்திலுள்ள வித்வான்க ளெல்லாரும் இறையிறுத்துக்கொண்டு வருகையாலே மஹாபாஷ்யபட்ட நிடத்திலும் இறைக்குத் தரவுவந்தது. அதைக்கண்டு மஹாபாஷ்யபட் டர் வ்யஸநப்பட்டுக்கொண்டிருக்க, யமுனைத்துறைவர் அதறிந்து அந்தத் தலைவைத் தடவிவிட்டார். ஆக்கியாழ்வானும் இதைக்கேட்டு இவர் வெறுங்கவியோ? சாஸ்த்ரநிபுணரோ? என்றுகேட்டு வரவிட்டான். இவரும் காட்வெறும்சாஸ்த்ர நிபுணருமன்று. வெறுங் கவியுமன்று. பின்னை ப்ரதிவாதிகளைப்பிளக்கும் வலியுடையோமென்று எழுதிப்போக விட, ஆக்கியாழ்வானும் இதை ராஜாவுக்கறிவித்து யமுனைத்துறைவரை வரும்படி சாஸநமனுப்பிவிக்க, யமுனைத்துறைவர் அந்தசாஸநத்தையுங்கிழி த்துவிட்டார். ராஜாவு மிச்செய்தியைக்கேட்டிவருக்குத் தண்டிகையும்

1242/2
(2163)

86.043/
4.23.1

பழநடை விளக்கம்.

சவிகையாரையும் கொடுத்துவரவிட்டான். இவரும் அதிலேயேறியருளி ராஜஸபைக்கெழுந்தருளி நாலுதிக்குக்குள்ளே யென்போலே சாஸ்த்ர நிபுணன் ஒருவனைத் தேடுவதென்று ஒருச்லோக மருளிச்செய்ய, ஆக்கியாழ்வானுங் கேட்டு கோபத்துடனே நானிவருடனே தர்க்கிக்கக்கடவேனென்ன, அப்போது ராஜமஹிஷியானவள் இவர் தோராரென்று ராஜாவுக்குச்சொல்ல, ராஜாவும் ஆக்கியாழ்வான்தோற்றாலுனகில் இவருக்குப்பாதி ராஜ்யம் தருகிறேனென்றுசொல்லி பின்பு இருவருந் தர்க்கித்து ஆக்கியாழ்வான்தோற்று யமுனைத்துறைவரை வீதிவலஞ்செய்வித்துக்கொண்டு எல்லாரும் வருகிறபோது ராஜமஹிஷியானவள் என்னை யாளவந்தீரோவென்று யமுனைத்துறைவரையெடுத்து அணைத்துக்கொள்ளுகையாலே இவருக்கு ஆளவந்தாரென்று திருநாமம் ஆய்த்தது. பின்பு ராஜாவும் இவருச்குப் பாதிராஜ்யமுங்கொடுத்து தேவிகளையு மழைப்பிக்க, ஆளவந்தாரும் பத்நீஸமேதராய்க்கொண்டு ராஜ்யத்துடனே ஸுகமாகவெழுந்தருளியிருக்கும்போது இவருக்கு பிள்ளைக்கரசுநம்பியென்று ஒருகுமார ருண்டானர். பின்பு மேலெழுதிய மணக்கால்நம்பி யித்தைக்கேட்டு ஆகாத்துடனே அங்கேவந்தவிடத்தில், அவ்விடம் ராஜஸ்தாநமாய்க் கட்டுங் காவலுமாயிருக்கையாலே ஆளவந்தாரைக் காணப்போகாமல் இவருக்குத் தனிகைக்கு சமைக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கொண்டு இவருக்குத் தூதுவளையிஷ்டமென்றறிந்து ஆறுமாசவரைக்கும் நித்யமாய்த் தூதுவளைக்கொடுத்துக்கொண்டிருந்தார். இப்படியிருந்தவிடத்திலும் ஆளவந்தாரிடத்தில் ஒருப்ரஸாதமும்பிறவாமையாலேயேங்கி நாலுநாள் அதுகொடாமலிருந்தார். பின்பு ஆளவந்தாரும் தூதுவளையில்லாமலிருப்பானேனென்று ஸ்ரீவைஷ்ணவர்களைக்கேட்க, அவர்களும் ஒரு வ்ருத்தவைஷ்ணவர் நித்யம் கொடுத்துக்கொண்டிவந்தார்; நாலுநாளாய் அவர் வரவில்லையென்று விண்ணப்பஞ்செய்ய, அவர்வந்தால் நமக்கறியுங்கோளென்ன, நம்பியுமின்னமும் பார்ப்போமென்று தூதுவளைக்கொண்டு வந்தவாறே அவர்களு மப்படியே யறிவிக்க, ஆளவந்தாரும் நம்பியை யெழுந்தருளப்பண்ணி தண்டன் ஸமர்ப்பித்து இத்தனைநாள் நமக்குத் தூதுவளை யெதற்காகக் கொண்டுவந்து கொடுத்தீர், உமக்கர்த்தப்வேணுமோ? கேஷத்ரம்வேணுமோ? வென்று கேட்க, நம்பியும் நமக்கிதுக ளொன்றும்வேண்டா, உங்கள் பூர்வர்கள் தேடினவர்த்தம் என்கையிலே யிருக்கிறது, அத்தை நான்காட்டி தீர்கைக்கொள்ளுந்தனையும் நாம் உம்பக்கல் வந்துபோகும்படி வாசலப்பனையிட வேணுமென்ன, ஆளவந்தாரு மப்படியேசெய்ய, நம்பியும் அன்றுமுதல் ஸ்ரீகீதையின்பொருளை யாளவந்தாருக் கருளிச்செய்ய, ஆளவந்தாரும் அதுகேட்டு நாலுக்குநாள் ஆர்த்திபிறந்து விரக்தானபடிகண்டு அவரைக்கூட்டிக்கொண்டு மணக்கால்நம்பி, கோயிலுக்கெழுந்தருளி பெரிய பெருமாள் திருவடிகளாகிற தந்தைக்காட்ட, ஆளவந்தாரும் சேவித்து அப்போதே ஸர்வஸங்கபரித்யாகம்பண்ணி ஸந்யாஸாச்ரமத்தையடைந்து யெப்பொழுதும் பெரியபெருமாளை ஸேவித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பழங்கதை விளக்கம்.

இவருக்கு சிஷ்யர்கள்:—பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, பெரிய திருமலைநம்பி, மாறனேரிநம்பி, திருக்கச்சிநம்பி, ஆளவந்தாராழ்வான், திருமாலையாண்டான், வாகுமாமலையாண்டான், தெய்வவாரியாண்டான், சுசருண்டான், திருக்குறுகூரப்பன், திருமோகூரப்பன், திருமோகூர்நின்றான், தெய்வப்பெருமாள், வகுளாபரணதேஸாமயாஜியார், திருக்குறுகூர்தாஸர், திருமாலிருஞ்சோலைதாஸர், வடமதுரைப்பிறந்தான், ஆள்க்கொண்டி, அம்மங்கி, என்றிருபதுபெயர். இவர்களிலே பெரியநம்பிகுமுதாக்ஷாம்சம், பெரியதிருமலைநம்பி ஸுமுகாம்சம், திருக்கச்சிநம்பி சங்குகர்ணாம்சம், திருக்கோட்டியூர்நம்பி புண்டரீகாம்சம், திருமலையாண்டான் ராமாம்சம், இவர்களிவரும், பாஷ்யகாரருக்கு ஆசார்யர்கள், ஆளவந்தாருக்கு ஸதீர்த்தியான திருவரங்கப் பெருமாளரையரும் பாஷ்யகாரருக்கு ஆசார்யர்.

அநந்தரம் பெரியநம்பி—இவரவதாரகாலம் மார்கழியிலேகேட்டை, இவர் ஆளவந்தாருடைய நியமனத்தாலே பாஷ்யகாரருக்கு பஞ்சஸம்ஸ்காரம் ஸாதித்தார். இவருக்குத் திருநாமம் பெரியநம்பி, மகாபூர்ணர்.

அநந்தரம் பாஷ்யகாரர்-இவருடைய திருவவதாரகாலம் கலியுகத்தில் நாலாயிரத்து நூற்றுப்பதினெட்டுக்குமேல் செல்லாநின்றுள்ள பிங்கள வருஷத்தில் சித்திரைமாசத்தில் ஸப்தமீ குருவாரங்கூடின திருவாதிரை திருநக்ஷத்ரம். ஸ்தலம் ஸ்ரீபெரும்பூதூர். இவர் பகவதம்சம்; லக்ஷ்மணாம்சம்; சேஷாம்சம்; ஸைன்யாதிபத்யாரம்சம்; பஞ்சாயுதாம்சம். இவருக்குப்பெரிய திருமலைநம்பி சாற்றிவித்த திருநாமம்:-இளையாழ்வார். பேரருளாளன் சாற்றின திருநாமம்:—இராமானுஜன். பெரியபெருமாள்சாற்றின திருநாமம், உடையவர். திருக்கோட்டியூர்நம்பிசாற்றின திருநாமம்:--எம்பெருமானார். ஸர்வஜ்ஞர்சாற்றின திருநாமம்:-பாஷ்யகாரர். இன்னமிப்படி திருநாமங்களுண்டு. இவர்செய்தருளின ப்ரபந்தங்கள்:-ஸ்ரீபாஷ்யம்; வேதார்த்தஸாரம்; வேதார்த்ததீபம்; வேதார்த்தஸங்க்ரஹம்; கத்யங்கள்மூன்று; கீதாபாஷ்யம், நித்யம்; ஆக ஒன்பது. இன்னுமநேக விதிநிஷேதாகங்களும் விதிவார்த்தைகளுமுண்டு. இவர் ஹரிதகுலதிலகர். இவருடையவைபவம் மிகுந்த விஸ்தாரமானையாலே யெழுதிமுடியாது. ஆகிலும் சிறிது சுருக்கமாக வெழுதுகிறது. என்னவென்றால்:— பெரியதிருமலைநம்பிக்கு உடன்பிறந்தவர்கள் பூமிப்பிராட்டியாரென்னும் பெரியபிராட்டியாரொன்றும் மிருவர். இவர்களிலே மூத்தபூமிப்பிராட்டியார் ஸ்ரீபெரும்பூதூர் ஆஸுரிகேசவப்பெருமாளுக்கு பத்னீ. இளையபெரியபிராட்டியார் மழலைமங்கலத்து வட்டமணிக்குலம் கமலாயநபட்டருக்குபத்னீ. இவர்களில் பூமிப்பிராட்டியாரிடத்தில் கேசவப்பெருமாளுக்கு மேலெழுதிய தேசகாலாம்சங்களிலே பாஷ்யகாரர் அவதரித்தார். இவருக்குப் பிதாவான கேசவப்பெருமாள் ஜாதகர்ம்மஞ் செய்தருளினார். பின்பு பெரியதிருமலைநம்பி யெழுந்தருளி கேசவப்பெருமாளைக் கொண்டு தப்தசக்ராங்கணம் முன்பாக விளையாழ்வா

ரென்று திருநாமஞ்சாத்திவித்தார். பின்பு இளையாழ்வார் உபநயநமாய் மேலதங்களை ஸாங்கமாக ஒதி பதினலு வித்யைகளையுங்கற்று திருக்கல் யாண்மாய்ப் பெருமாள்கோவிலிலே திருப்புட்குழியிலே யாதவப்ரகாச னென்பானெரு வகதண்டஸந்யாஸியிடத்திலேவேதாந்தம் வாசித்திராநின் ரூர். அப்பொழுது மேலெழுதிய கமலநயநப்பட்டருக்கு அவர்பத்நீ பெரிய பிராட்டியா ரிடத்திலே க்ரோதாவர்ஷத்தில் தைமாசத்திலே பௌர்ணமீ ஸோமவாரங்கூடின புர்வஸு நக்ஷத்ரத்திலே வைநதேயாம்சமாகவொரு குமாரர் அவதரித்தார். கமலநயநபட்டர் இவருக்கு ஜாதகர்மம் பண்ணி னார். பெரியதிருமலைநம்பிவந்து இவருக்குக் கமலநயநபட்டனைக் கொ ண்டி சோவிக்தரென்று திருநாமஞ் சாற்றிவித்தார். சோவிக்தரும் உப நயநவிவாஹங்களையும்பெற்று ஸகலசாஸ்த்ரங்களையுங்கற்று இளையாழ்வார் யாதவப்ரகாசனிடத்தில் வாசிக்கிரூரென்றுகேட்டித் தாமும் அங்கேபோய் கூடவாசித்துசகொண்டிருந்தார். யாதவப்ரகாசன் இரண்டு ச்ருதிவாக்யங் களுக்கு அவப்பொருளைச்சொல்ல, இளையாழ்வாரும் அதுபொருமல் அவன் தலையிலே கெருப்புப் பொரிபோலே கண்ணீர்த் துளியை யுதிர்க்க, அவனு மிதென்னென்று கேழ்க்க, இவரும் அதற்கு நற்பொருளிருக்க அவப்பொருள் சொன்னீராகையாலேயென்ன, யாதவப்ரகாசனும் ஆகில் கீரிங்கே வாசிக்கவேண்டாவென்ன, இளையாழ்வாரும்வாசிக்கைவிட்டிருந் தார். பின்பு யாதவன் தன் சிஷ்யர்களுடனே ஆலோசனை பண்ணி யிவனை வஞ்சனையிலே முடிக்கும்படிதேடிக் கபடமாகவழைத்து கல்வார் தையிலேயிவரைப் படிக்கும்படிபண்ணிப் பின்பு இவரையும் கோவிந்தரை யும் மற்றுஞ்சிஷ்யர்களையுங் கூட்டிக்கொண்டு கங்காயாத்ரை புறப்பட் டான். அப்போது இளையாழ்வாரும் கோவிந்தரும் இருவருஞ்சேராதபடி பண்ணிக்கொண்டுவந்தான், ஒருநாள் விந்த்யாடவியிலே வழிநடக்கும் பொழுது ஜலத்திற்குநின்றவிடத்திலே இளையாழ்வாரைப்பார்த்து கோவிந்த பட்டர் யாத்ரைக்கு நிமித்தந்தைச்சொல்ல இளையாழ்வாரும், வ்யாகுலப் பட்டு வழியைவிட்டு ஒரு மரத்தடியிலே நிகைத்துக்கொண்டு நின்ரூர். அப்போது பெருமாளும் பிராட்டியும் ஒருவில்லியும் வேடச்சியுமாய் முன் னேவந்து தோன்றினர்கள். இவரும் அவர்களைக்கண்டு தெளிந்து நீங்கள் எங்கேபோகிறீர்கள் என்றுகேட்க, நாம் ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திற்குப்போகி ரோமென்ன, இவர் என்னையுங் கூட்டிக்கொண்டு போங்களென்ன, அவர் களும் வாருமென் றிவரைக்கூட்டிக்கொண்டு நடந்து விந்த்யாடவியைக் கடந்து அன்றிராத்திரி ஒரு மரத்தின்கீழே இளையாழ்வாரும் அவர்களும் பட்டினியாகவே யிருந்தார்கள். அப்போது வேடிச்சி வேடனைத் தண்ண ணீர்கேட்டாள், வேடனும் அருகிலே கிணற்றிலே வெடிவோரே தண் ணீர்காட்டுகிறேனென்ன, இவருமதுகேட்டு ஐயோ இந்ததேசம் நிலைதெரி யாமையாலே யிவர்களுக்கு தண்ணீர்கொடுக்கப் பெறுகிலேனென்று வெறுத்திருக்க, பின்பு கிழக்குவெளுத்தவாறே அவர்களைத்தேடிக் காலை மல காலைநடந்து வெளிச்செரிவானவாறே அங்கே யொருதோப்பும்

பழநடை விளக்கம்.

கினரும் காவிரண்டுபேருமாக விருக்கக்கண்டு இது எவ்விடம்? எந்தவூர்? என்று அவர்களைக்கேட்க, அவர்களும் இதோபுண்யகோடிவிமானமென்று காட்ட, இளையாழ்வாருங்கண்டு ஆநந்தத்துடனே திடுக்கிட்டுநின்று வேட னையும் வேடுவச்சியும் பெருமாளும் பிராட்டியுமென்று நினைத்துக்கொண்டு பெருமாள்கோவிலிலேவந்து பேரருளாளரையும் பெருந்தேவித்தாயாரை யும் சேவித்து முன்னே தண்ணீர்கேட்டதை நினைத்து அவர்களுக்கு திரு வாராதநத்திற்கு சாகேக்கினற்றிலிருந்து திருமஞ்சநம் சமர்ப்பித்துக்கொண் டிருந்தார். யாதவப்ரகாசனும் இளையாழ்வாரைத் தேடிக்காணுமல் துக்கங் காட்டி கோவிந்தபட்டருடனே கங்காஸ்நாநம் பண்ணிவந்தான். அங்கே கோவிந்தபட்டர் கையிலே யொருலிங்கஞ் சேர்ந்தது. அதிலேலே அவ ருக்கு உள்ளங்கைகொளர்ந்த நயினரென்று பெயராயிற்று. பின்பு யாதவப்ரகாசன் காஞ்சிபுரத்திற்குப் போனான். கோவிந்தபட்டர் அவ னைநமஸ்கரித்துக்கொண்டு மழலேமங்கலத்திலேவந்து அந்த லிங்கத்தை ப்ரதிஷ் டைப்பித்திருக்கச்செய்தே காளஹஸ்திகாதன்கனவிலேவந்துகாளஹஸ்திக்கு வரச்சொன்னபடியாலே அங்கேபோய் ஸ்தானத்திற்கு வேண்டிய முத் தரைமோதிரம்பெற்றுமுக்யராயிருந்தார். யாதவப்ரகாசனும் பெருமாள்கோ விலிலே இளையாழ்வாரைக்கண்டு ஆச்சர்யப்பட்டுசந்தோஷத்துடனேஇவ ரையுங் கூட்டிக்கொண்டு போடத்தை நடத்திக்கொண்டிருந்தான். இச் செய்தியை ஸ்ரீரங்கத்திலே ஆளவந்தார் கேட்டருளி அப்போதே இள யாழ்வாரைக் காணவேணுமென்று புறப்பட்டு பெருமாள்சோவிலுக் கெ ழுந்தருளி திருக்கச்சிநம்பியைக்கூட்டிக்கொண்டு பேரருளாளரையும்பெருந் தேவித்தாயாரையும் சேவித்து ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளச்செய்தே யாதவப்ரகாசனும் கூட்டத்துடனே ப்ரதக்ஷிணமாக வாராதிற்க, ஆளவந் தாரும் இவர்களிலே இளையாழ்வாரானொன்று திருக்கச்சிநம்பியைக்கேட்க, சிவந்து நெடியராய் வலியராய் ஆஜாநுபாகுவாய் நடுவே வருகிறவனென்று விண்ணப்பஞ் செய்ய, ஆளவந்தாரும் இளையாழ்வாரைக் குளிரப்பார்த் தருளி யிவர் நந்தாசநத்திற்குமுதல்வராவரென்று கடாக்ஷம்பண்ணிபெரு மாளைநோக்கி ப்ரபத்திபண்ணி ஹஸ்திகிரியின்மேலே யெழுந்தருளி பெரு மாளைசேவித்தமீண்டுபுறப்பட்டு மூதலிகளுந்தாமுமாக ஸ்ரீரங்கத்திற்கெ ழுந்தருளினார். பின்பு கச்சிநகரிலே ராஜாவின் பிள்ளையை ப்ரம்மரக்ஷஸ் பிடிக்க, அத்தை யாதவன் கேட்டு உன்னை நான் போகச்சொன்னே னென்று ப்ரம்மரக்ஷஸ்ஸிற்குச் சொல்லுங்கோவென்ன, ப்ரம்மரக்ஷஸ் ஸும் நானுன்னைப் போகச்சொன்னேனென்று யாதவனுக்குச் சொல் லுங்கோவென்ன, யாதவனு மித்தைக்கேட்டு கோபத்துடனேவந்து மந்த் ரங்களைமந்த்ரிக்க, ப்ரம்மரக்ஷஸும் உன்மந்த்ரங்களையும், உன்ஜன்மமும், என்ஜன்மமும், யான்அறிவேன்;பூர்வஜன்மத்திலே மதுராந்தகத்தேரியிலே புத்தியிலே யும்பாயிருந்தாய்; அங்கே ஸ்ரீவைஷ்ணவர்கள் கோடி யமுது செய்து இந்தினப்ரஸாதத்தை ஸ்வீகரித்து வித்வாணுய்ப்பிறந்தாய்; நானும் பூர்வஜன்மத்திலே ப்ராம்மணனுய்ப்பிறந்து யாகம்பண்ணி மந்த்ரலோபம்

க்ரியாலோபம் பிறக்கு ப்ரம்மரக்ஷஸ்ஸாகே னென்று ப்ரம்மரக்ஷஸ் சொல்லிற்று. யாதவனும் ஆகில் நீ யார்சொன்னால் போவாயென்ன ப்ரம்மரக்ஷஸ்ஸும் இளையாழ்வானைக்காட்டி இவர் போகச்சொன்னால் போவேனென்ன, இளையாழ்வாரும் யாதவன் வார்த்தைகொண்டு அத்தைப்போகச்சொல்ல, அதுவு முன்திருவடிகளை யென்தலைமேலேவைத்தால் போகிறேனென்ன, அவரு மப்படியேசெய்ய, அதுவு மெழுந்திருந்து கும்பிட்டு அவருடைய நியமனத்திலே அடையாளத்திற்காக வருகிருந்த வரசுமரத்தைமுறித்துக்கொண்டு பிள்ளையைவிட்டுப்போய்த்தது. பின்பு யாதவப்ரகாசனும் அதற்கு சந்தோஷப்பட்டான். பின்பு யாதவப்ரகாசன் ஒருவாக்யத்திற்கு அவப்பொருள்சொல்ல, இளையாழ்வாரு மத்தைமறுத்து நற்பொருள்சொல்ல, யாதவனுக்கோபத்துடனே பாடஞ்சொல்லுகைதவிர்ந்தான். இளையாழ்வாரும் ப்ரீதியுடனே மீண்டு திருத்தாயார் நியமனத்தாலே திருக்கச்சிநம்பியை ஸேவித்து அவர்நியமனத்தாலே பேரருளாளர்க்கு முன்புபோலே திருமஞ்சனம் ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தார். இப்படி யிளையாழ்வார் யாதவனைவிட்டு கீங்கினசெதியை ஆளவந்தார்கேட்டருளி பேரருளாளர் நம்முடைய ப்ரபத்தினை ஸபலமாக்கினரென்று கொண்டு ப்ரியப்பட்டு ஸ்தோத்ரரத்நத்தை பெரியநம்பி திருக்கையிலே கொடுத்து கீரிப்போதேபோய் இளையாழ்வானை நம்மோடே சேர்ப்பிக்க வேணுமென்றுநியமித்தத் திருமேனியிலே மோவுசாற்றியிருந்தார். பெரிய நம்பியும் புறப்பட்டுப் பெருமாள்கோவிலுக் கெழுந்தருளிப் பெருமாளை ஸேவித்து ஸ்தோத்ரரத்நத்தை யநுஸந்தித்து தீர்த்த ப்ரஸாதமும் ஸ்வீகரித்துப் புறப்பட்டு இளையாழ்வார்வருகிற சாலைக்கிணற்றுவழியிலே ஆளவந்தார்ஸ்தோத்ரத்தை யநுஸந்தித்துக்கொண்டிராநிற்கவதிலேயொரு ச்லோகத்தை யிளையாழ்வார்கேட்டு இதை யருளிச்செய்தது ஆன்றபெரிய நம்பியைக்கேழ்க்க, பெரியநம்பியும் ஆளவந்தார் திவ்யஸமக்தியென்ன, இவரும் ஆளவந்தாரை யடியேன்ஸேவிக்க வேணுமென்ன, ஆகில் கூட வாரீரென்று கூட்டிக்கொண்டு புறப்பட்டு ஸ்ரீரங்கத்தருகேசென்று திருக்கரம்பன்றுறையிலே திரண்டகூட்டத்தைக்கண்டு ஆளவந்தார் திருநாட்டிற் கெழுந்தருளினரொன்றுகேட்டு ஏங்கியழுது தெளிந்து சென்று ஆளவந்தார் திருமேனியைஸேவித்து மூன்றுவிரல்கள் மடங்கியிருப்பதைக்கண்டு மூன்றுமிப்படியிவருக்குண்டோவென்றுகேட்க, வவர்களும் முன்பில்லை யிப்போது கண்டதென்ன, இளையாழ்வாரும் இவர்திருவுள்ளத்திலொரு கருத்துண்டாகவேணுமென்று சிந்தித்துக்கொண்டு மூன்பு இவருடைய ஸல்லாபங்களைக் கேட்டவர்களுண்டோவென்ன, அவர்களும் வ்யாஸபராசரர்களிடத்திலே உபகாரஸ்மருதியும் நம்மாழ்வார் பக்கல் ப்ரேமாதிசயமும் வ்யாஸஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைத பரமாக பாஷ்ய வாக்யசையும் பலகாலும் ஆளவந்தாரருளிச்செய்துக்கொண்டிருப்பனென்ன, இளையாழ்வாரும் என்னிடத்தில் ஆசார்யக்ருபை யுண்டாகில் இம்மூன்றையும் தீர்க்கக்கடவேனென்ன, விரல்கள் நிமிரக்கண்டு எல்லாரும்

ஆச்சர்யப்பட்டு நீர் தர்சநப்ரவர்த்தகராவீரென்று இளையாழ்வாருக்கு மங்களாசாஸனம் பண்ணினர்கள். பின்பு இளையாழ்வார் பெரியநம்பியை நண்டனிட்டு ரங்கநாதனை ஸேவியாதே பெருமாள்கோவிலுக் கெழுந்தருளி நிருக்கச்சிநம்பியை சேவித்துச் சேதியை விண்ணப்பஞ்செய்ய, அவரும்மிகவுங் க்லேசித்து ஸ்ரீகூர்ணபரிபாலநமும் திருவத்யயநமும் கடத்தினர். இளையாழ்வார் நிருக்கச்சிநம்பி திருவடிகளிலே மிகவும்பக்தியுடையவராய்க்கொண்டு ஆச்ரயிப்பதாகவிருக்க, அதற்கு நம்பி ஸம்மதியாதிருக்க, இளையாழ்வார் நிருக்கச்சிநம்பி தனிகை ப்ரஸாதத்தை வாங்கித்து அவரைத் தம்முடைய திருமாளிகையிலே அமுதுசெய்ய வேணுமென்று விண்ணப்பஞ்செய்து நன்முகத் தனிகைக்கு செய்வித்து தம்முடைய க்ரஹார்ச்சனையான பொருளாளரை யமுதுசெய்வித்து, நம்பியை யழைக்கதெற்குத் திருவீதியாலே நம்பி மடத்திற் கெழுந்தருளினர். நம்பியும் வடக்குத்திருவீதியாலே இளையாழ்வர் திருமாளிகைக் கெழுந்தருளி திருவாலவட்ட கைங்கர்யத்திற்குப் போகவேணுமென்று கதிக வமுது செய்து எழுந்தருளினர். இளையாழ்வார் தேவியாரும் நம்பிதனிகையைக்கோலாலே தள்ளி கோமயத்தாலே ஸ்தலசுத்திபண்ணி நீராடிநிற்கிறவளவிலே இளையாழ்வாரும் நம்பியைத்தேடிக்காணுமல் மீண்டெழுந்தருளி தேவிகள் நீராடினபடிகண்டு இதென்னென்றுகேட்க, தேவியாரும் அந்த ஸ்ரீவைஷ்ணவ ரெழுந்தருளி அமுதுசெய்து திருவாலவட்ட கைங்கர்யஞ்செய்தருள வேண்டுமென்று கதிக மீண்டெழுந்தருளினர். அவர் சாத்தாதவராகையாலே அவர் தனிகையைக் கோலாலேதள்ளி கோமயத்தாலே ஸ்தலசுத்தி பண்ணினேன்; அத்தாலே சரீரம் அலம்பவேண்டுத்தென்ன, இளையாழ்வாரும் தேவியாரை மிகவுங்கோபித்து தம்முடைய இஷ்டம்ஸித்தியாமையாலேமிகவுங் க்லேசித்து நிந்தித்துக்கொண்டிருந்து நம்பியைச்சென்றுசேவித்து அடியேன்நிலநினைவுகள் நினைத்திருந்தேன், அவையெவையேதென்று தேவரீர் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து பெருமாளருளிச்செய்ததை யடியேனுக்கு அருளிச்செய்யவேணுமென்று (உடையவர்) விண்ணப்பஞ் செய்ய, நம்பியும் அன்றிராத்திரி பெருமாளை யநுபவித்துக்கொண்டு ஏகாந்தமாக விருக்கச்செய்தே பெருமாளும் நம்பியைநோக்கி நீர்நிலவார்த்தை சொல்வாரைப்போலே யிருக்கிறதென்ன, நம்பியும் இளையாழ்வார் விண்ணப்பப்படியைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, அதற்குப் பெருமாளருளிச்செய்தது;—நித்யசூரிகளிலேயொருவன் நாம் ஸாந்தீபனீயண்டையிலே வித்யாப்யாஸம் பண்ணினாப்போலே பலவிடங்களிலே ஸகல சாஸ்த்ரங்களையும் நன்முகவறிந்திருப்பானொருவன் நம்மைக்கேட்கிறான்; அதற்கிதுவார்த்தை:—பரதத்வம் நாமே, பேதநிர்சநம், உபாயமும் ப்ரபத்தியே, அந்திமகாலத்தில் நினைக்கவும்வேண்டா, சரீரம்விடுமளவிலே மோக்ஷம், பெரியநம்பி திருவடிகளிலே யாச்ரயிப்பது, என்றிவ்வாறுவார்த்தையும் பேரருளாளர் அருளிச்செய்ய, நம்பியுமித்தைக்கேட்டு வெடிவோரே இளையாழ்வாருக் கருளிச்செய்து இவையோ வுமக்கு நினைவுகளென்ன, ஆமெ

ன்று இளையாழ்வாரும் மிகவும் உகந்து நம்பி ஸ்ரீபாதத்திலே தண்டனிட நம்பியும் இளையாழ்வார் நிலைவும் பெருமாள் திருவுள்ளமும் ஒன்றுயிருந்த தென்று மிகவுமுகந்தருளினர். அப்போது ஸ்ரீரங்கத்திலே ஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் திரளாகவிருந்து பெரியநம்பியுடனே இத்தர்சனத்திற்கு ப்ரவர்த்தகராவாராரென்ன, பெரியநம்பியும், ஆளவந்தார் மூன்பு அநுக்ரஹம்பண்ணினதும் திருவிரல்கள் நிமிர்ந்ததும் தெரிந்திருக்குமே யென்ன, முதலிகளெல்லாரும் பெரியநம்பியைப் பார்த்து தேவரீரே இளையாழ்வாரைக் கடாக்ஷித்து தர்சனத்திற்குக் கடவராம்படி திருத்தி யழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் அப்போதே குடும்ப ஸமேதமாய்ப் புறப்பட்டு பெருமாள்கோவிலுக் கெழுந்தருளச்செய்தே மதுராந்தகத்தேரிகாத்த பெருமாள்கோவிலிலே இறங்கியிருந்தவளவிலே இளையாழ்வாரும் பேரருளாளர் நியமித்தபடி பெரியநம்பி திருவடிகளிலே யாச்ரயிப்பதாகப் புறப்பட்டெழுந்தருளாநிற்க, ஸ்ரீமதுராந்தகம் வழியாகையாலே இவரும் எரிகாத்தபெருமாளை சேவிப்பதாக வெழுந்தருள, அங்கே பெரியநம்பியை தூரத்திலே கண்டாச்சர்யப்பட்டு மிகவும் ஆதரத்துடனே தண்டன்ஸமர்ப்பித்துநிற்க, நம்பியுந் தம்மபிலாஷை கடுக வெதிரேவந்ததென்று இளையாழ்வாரை வாரியெடுத்தணைத்துக்கொள்ள, இளையாழ்வாரும் அடியேனுக்கு தேவரீர்போதே ஹிதோபதேசஞ் செய்தருளவேணுமென்ன, நம்பியும் பேரருளாளர் சந்நிதியிலே செய்கிறோமென்ன, இளையாழ்வாரும் சரீரம்நிலையில்லாதாகையாலே இப்போதே செய்தருளவேணுமென்று திருவடிகளிலே விழுந்துகிடக்க, பெரியநம்பியும் முடிபிடித்தெடுத்து இளையாழ்வாரைக் கையைப்பிடித்தழைத்துக்கொண்டுபோய் எரிகாத்த பெருமாள்கோவில் திருமதிழமரத்தடியிலே எழுந்தருளியிருந்து தாபாதி பஞ்சஸம்ஸ்காரங்களையும் மந்த்ரரத்நத்தையும் ஸாதித்தருளி இளையாழ்வாரையுங் கூட்டிக்கொண்டு பெருமாள்கோவிலுக் கெழுந்தருளி பேரருளாளரைசேவித்து இளையாழ்வார்திருமாளிகையிலே மேல்ப்பாதியிலே பெரியநம்பி குடும்ப சமேதமாக வெழுந்தளியிருந்துக்கொண்டு இளையாழ்வாருக்கு த்ராவிட வேதங்களை ப்ரஸாதித்துக்கொண்டிருந்தார்.

அப்போதொருநாள் திருமஞ்சநமுறையிலே எண்ணைக்காப்புசாத்தவந்த ஸ்ரீவைஷ்ணவருக்கு பழையது ப்ரஸாதங் கொடுக்கவேணுமென்று இளையாழ்வார் தந்தேவிகளைநியமிக்க, தேவிகளும் அல்பமும் ப்ரஸாதமில்லையென்ன, தேவிகளை யொருகார்யத்திலேயேவி உள்ளேபுகுந்து சோதித்து பாத்ரத்திலே பழைய ப்ரஸாதங்கண்டெடுத்து தேவியாரையழைத்துக்காட்டி மிகவுங்கோபித்தார். பின்பொருநாள் கிணற்றின்கரையிலே இளையாழ்வார் தேவிகளுக்கும் பெரியநம்பிதேவிகளுக்கு மொருதோண்டிநிமித்தமாக வுண்டானசண்டையைப் பெரியநம்பி யறிந்தருளி தம்முடையதேவிகளை மிகவுங்கோபித்து இளையாழ்வாருக்கு மறிவியாதே

தேவிகளையழைத்துக்கொண்டு மீண்டு ஸ்ரீரங்கத்திற்செழுந்தருளிவிட்டார். இளையாழ்வாரும் அநுஷ்டானம்பண்ணி யெழுந்தருளி பெரியநம்பியை சேவிக்கவந்தவிடத்திலே அவரைக்காணப்பெறுமையாலே அங்கிருந்தவர் கனே பெரியநம்பி யெங்கேயென்றுகேட்க, அவர்களுந் தொண்டிச்சண்டை யையறிவிக்க, இளையாழ்வாருங்கேட்டு மிகவுந் திருவுள்ளங்கலங்கி தேவி களைப்பார்த்து முதல் திருக்கச்சிநம்பி விஷயத்திலும் இரண்டாவது எண் ணாக்காப்புசாத்தவந்த ஸ்ரீவைஷ்ணவவிஷயத்திலும் மூன்றுவது பெரிய நம்பி தேவிகள் விஷயத்திலும் அபசாரப்பட்டாய் இப்படிசெய்த நீ இப் போதே புறப்பட்டுப்போவென்று பயணமாக்கிப் பிறந்தகம்போகவிட்டுப் பேரருளாளரை யாசார்யராகவங்கீகரித்து முக்கோலும் மூப்பினியும் காஷா யமுஞ் சிகையும் இவைமுதலானவைகூடின வுத்தமாஸ்ரமத்தையடைந்து பேரருளாளராலே ராமாநுஜமுனியென்று திருநாமஞ்சாற்றப்பெற்றுத் திருக்கச்சிநம்பியையிட்டு மடத்திலேவைத்தருளப்பெற்று பேரருளாள ராலே யிகவுமுடலாளிக்கப்பட்டிருந்தார். பின்பு ஆளவந்தார்கருத்தை நினைவேற்றுகைக்குஸஹாயமாக ஸகலசாஸ்த்ரநிபுணரான கோவிந்தபட்ட ரைத் திருத்தவேணுமென்று நினைத்துப் பெரிய திருமலைநம்பிஸந்நிதிக்குத் தம்மூடையநினைவை விண்ணப்பஞ்செய்தனுப்பியருளினர்.

இப்படியிவர் ஆச்ரமப்ராப்திசெய்தருளின சேதியைக்கேட்டு கந் தாடை முதலியாண்டானும் வரிதகுலதிலகரான கூரத்தாழ்வானும் பெரு மாள்கோவிலுக்கெழுந்தருளி ராமாநுஜனேவலித்து அவர்திருவடிகளிலே பஞ்சஸம்ஸ்காராதிகளைப்பெற்றார்கள். முதலியாண்டான் அவதாரம் சித்தி யையில் புநர்வஸுநக்ஷத்ரம். ஊர் பச்சைவாரணப்பெருமாள்கோவிலென் கிற புருஷமங்கலம். தாயார் இராமாநுஜனுக்குத் தமக்கையான பூமிதேவி யாண்டாள். பிதா வாதூலகுலதிலகரான அநந்தநாராயணதீக்ஷிதர். திரு நாமம்:—முதலியாண்டான், தாசரதி, வாதூலதேசிகன், ஸ்ரீவைஷ்ணவதா ஸன், இராமாநுஜபாதுகை. இவர் ராமாம்சம். சக்ராம்சம் (வை) சுப்ர திஷ்டாம்சம். ஆழ்வான் திருநக்ஷத்ரம் தைமாசத்தில் ஹஸ்தநக்ஷத்ரம். ஊர் கூரம். பிதா கூரத்தாழ்வானென்கிற ராமமிஸ்ரமையாஜிகள், இவரும் ராமாம்சம். சங்காம்சம். ஸர்வேந்த்ராம்சம்; திருநாமம். கூரத்தாழ்வான். திருமருமார்பன். ஸ்ரீவத்ஸசிந்ஹன். கடையாமிம்பதஞ்சலி. ஸஞ்சாரிமஹா பாஷ்யன். யதீந்த்ரசரணர். இப்படியாண்டாலு மாழ்வானு மிராமாநுஜ ரனைப்பிரியாமல் அடிமைசெய்துக்கொண்டு சேவித்துக்கொண்டிருக்கிற காலத்திலே யாதவப்ரகாசனுடைய மாதாவுக்குப் பேரருளாளர் நித்ய ஸேவையாலே இராமாநுஜனிடத்திலே ப்ரேமம்பிறந்து அதுவேகாரண மாக நம்தர்சநத்திலே யவருக்கு ருசிபிறந்து இத்தர்சநத்திலே யாதவனு மிறங்கினால் நன்றுயிருக்குமென்று நினைத்துக்கொண்டு ஹஸ்திகிரிப்படி யேறுகிற, நல்லது நல்லதென்று உபச்ருதியுண்டாக வதுகேட்டுத் தன் பிள்ளை யாதவனுக் கிச்சேதியைச்சொல்லி நீயு மிராமாநுஜனைப்போலே

சிகையுமுபவீதமும் மூக்கோலுந்தரிக்கவேணுமென்ன, யாதவனுமினாயாழ்வார் அந்நாளிலே தனக்கு ப்ரதியாகச்சொன்ன நற்பொருள்களெஞ்சிலே பட்டிருக்கையாலும் கங்கையாடப்போரும்போது வேடரைகவந்தராமஸஹாயத்தாலும், இவர்மாஹாத்ம்யத்தை ப்ரம்மரகஸ்யஞ்சொல்லியிருக்கையாலும், தாயார் வாக்யத்தாலும் சம்மதித்து "சிகையுமுபவீதமும் த்யாகம் பண்ணினதற்குப்ரயாச்சித்தமாக பூப்ரதக்ஷிணஞ்சொல்லியிருக்கது அதற்கிப்போது வார்த்தகத்தாலே சக்தியில்லே" யென்று மாதாவுடனே சொல்விக்லேசித்துக்கொண்டிருக்க, வவ்விராவிலே பேரருளாளர் யாதவன் கனவிலேவந்து நம்மிராமாநுஜனை யொரு ப்ரதக்ஷிணம் பண்ணி யவரிடத்தில் மூக்கோல்முதலானவைதரித்து ஸந்யாஸம் பண்ணுவென்ன, யாதவனும் அதை நம்பாமல் திருக்கச்சிநம்பியுடனே காலைருகினவு கினைத்திராநின்றேன், அத்தைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து அவர்திருவுள்ளத்தையெனக்குத் தெரிவிக்கவேணுமென்ன, நம்பியும் யாதவனைருகினவு கினைத்திருந்தே னென்றான் என்று பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் அவனுக்குத் தாயார்சொன்னதையும், தாயாருக்கவன்சொன்னதையும், தாமவனுக்குக் கனவிலே சொன்னதையும், நம்பிக்கருளிச்செய்ய, நம்பியும், வெடிவோறே யிச்செய்தியை யாதவனுக்கருளிச்செய்ய, யாதவனும் விச்வஸித்துவந்து இராமாநுஜனைத் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்துத் தான்கண்ட கனவை விண்ணப்பஞ்செய்து, இராமாநுஜனை வலம்வந்து மூக்கோல் மூட்புரி கௌபீநாயங்களைதரித்து இராமாநுஜனிடத்தில் ஸந்யாஸம்பெற்றான். பின்புகோவிந்தஜீயென்று திருநாமஞ் சாற்றப்பெற்றுப் பஞ்சஸம்ஸ்காரம்பெற்றான். பின்பு இராமாநுஜன் அவன்செய்த யதிதர்ம்மஸமுச்சயமென்கிற க்ரந்தத்தைக்கடாக்ஷித்து சந்தோஷித்தருளினார். கோவிந்தஜீயரும் சிறிதுநாள் ஆசார்யஸந்நிதியிலே யெழுந்தருளியிருந்து கடகத்திருநாட்டிற்கெழுந்தருளினார். பின்பு அரங்கநாதன் இராமாநுஜனைத் தமக்குத்தரும்படி பேரருளாளருக்கு திருமுகம் போகவிட பேரருளாளரும் அத்தைப்பார்த்துத் தனஸமாதத்தை புறம்பே போகவிடலன்றே நாம் நம்மிராமாநுஜனைப் போகவிடுவதென்றருளிச்செய்துவிட, பெரியநம்பிமுதலான முதலிகள்கேட்டுத் தங்களிலே சிந்தித்துத் தேவப்பெருமாள் காக (ஈன) ரஸிகராயும் பரமோதாரராயுமிருப்பவராஜகையாலே ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரை யேறவெழுந்தருளி தேவகாநத்திலே பாடிதேவப்பெருமாளையுகப்பித்து இராமாநுஜனைத் தந்தருளவேணுமென்றுல் தந்தருளுவரென்றுகினைத்து அரையருக்கு விண்ணப்பஞ்செய்ய, அரையருங் கோயில்நின்றும் அப்போதேபுறப்பட்டுப்பெருமாள்கோவிலுக் கெழுந்தருளா நிற்க, அவருக்குபந்துவான பெருமாள் கோவில் வரந்தரும்பெருமாளரையர் எதிர்கொண்டு ஆழவார் திருவரங்கப் பெருமாளரையரைத் தம்திருமாளிகையில் அமுதுசெய்யப் பண்ணிவித்து மற்றைநாள் தேவப்பெருமாள் ஸந்நிதிக்கு அழைத்துக் கொண்டுபோக, அரையருந் தேவப்பெருமாளைஸேவித்து தேவகாநத்திலேபாடி யுகப்பிக்க,

பெருமாளுமுகந்து நீர் வேண்டினதைத் தருகிறோம் அத்தைச் சொல்லு மென்ன. அரையரும் இராமாநுஜனைத் தந்தருளவேணுமென்ன, பெருமாளும் வருத்தத்துடனே இராமாநுஜனைத் தந்தருள, இராமாநுஜனும் பெருமாளைத் தண்டன்சமர்ப்பித்து அரையருடனே ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருள, நம்பெருமாளும், சேனைமுதலியாரையும் பெரியநம்பி யுள்ளிட்டமுதலிகளையும் மற்றுமனைத்துக் கொத்துப்பரிஜநங்களையு மெதிரே தூரத்திலே யநுப்பியருளித் தாமும் திருக்கைத்தலத்திலே புறப்பட்டு அழகிய மணவாளன் திருமண்டபத்தளவு மெழுந்தருள, இராமாநுஜனும் விழுந்தெழுந்து தொழுது திருப்பள்ளியறையிலேபுகுந்து பெரியபெருமாளை சேவித்து ஸகலபரிசுகளையு முபயவிபூதி யைச்வரியத்தையும்பெற்று, கோயிற்கார்யத்தையுமாராய்ந்து நடத்தும்படி பெருமாள் நியமஞ்செய்து, அவை யெல்லாவற்றையுமாராய்ந்து நன்றாக நடத்திக்கொண்டு அகளங்காட்டாழ்வானைச் சிஷ்யனாக்கிக் கோயிலுக்கு மேற்காவலாகவைத்து கோயில்கைங்கர்யங் குறைவற நடத்திக்கொண்டு வருகிறகாலத்திலே கோவிந்தபட்டர் திருந்தி பெரிய திருமலைநம்பி திருவடிகளையாச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெற்றதுகேட்டு மிகவுமுகந்தருளி பெரியதிருமலைநம்பியை தண்டன் சமர்ப்பித்து தேவரீர் திருவுள்ளத்திலுண்டான வர்த்தங்களை யடியேனுக்கு ஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் பலவர்த்தங்களையும் சாதித்து சிலவர்த்தங்களைத் திருக்கோட்டியூர்நம்பி சந்நிதியிலே கேளுமென்று நியமிக்க, இராமாநுஜனும் திருக்கோட்டியூருக்கெழுந்தருளி நம்பியை சேவித்து அடியேனுக்கு ரஹஸ்யார்த்தங்களை யருளிச்செய்ய வேணுமென்றுவிண்ணப்பஞ்செய்ய, நம்பியுமிவருடைய அத்யவஸாயத்தை யறியவேணுமென்றிடங்கொடாமலிருக்க உடையவரும் கோயிலுக்கெழுந்தருளினார். பின்பு திருநாள் சேவிக்கவந்து மீண்டெழுந்தருளும்போது நம்பெருமாள் நம்பிக்கருளப்பாடிட்டு நம்மிராமாநுஜனுக்கு ரஹஸ்யார்த்தங்களை யுபதேசியுமென்று நியமிக்க, நம்பியும் ஒருவர்ஷம் சோதியாமல் உபதேசிக்கவேண்டாவென்று சாஸ்த்ரமுகத்தாலே தேவரீர் நியமித்ததே என்ன, பெருமாளும் இங்கப்படியன்று; சிஷ்யபூர்த்தியுள்ள ராமாநுஜனுக்குச் சொல்லலாமென்று அருளிச்செய்ய, நம்பியு முடையவரைக்குறித்து ஊரே வாருமென்றுசொல்லி யெழுந்தருளினார். பின்பு உடையவருந்திருக்கோட்டியூருக்குச்செல்ல, நம்பியுமிப்போது போய்வாருமென்ன, இவருங் கோயிலுக் கெழுந்தருளினார். இப்படி பதினெட்டு நடையாச்சுது. பின்பு உடையவருங்கோயிலுக்குவந்தநம்பிசிஷ்யரொருவர்முகமாகத்தம்முடைய வார்த்தியைவிண்ணப்பஞ்செய்துப்போகவிட நம்பியுமத்தைக்கேட்டு உகந்தருளிதண்டிம்பவித்ரமாகத்தாமொருவருமேவருவதென்றுசொல்லிப்போகவிட, உடையவரும் அதுகேட்டு மிகவுமுகப்போடே கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையுங்கூட்டிக்கொண்டு நம்பிஸந்நிதியிலேசென்று தண்டனிட்டுநிற்க, நம்பியும் உம்மையொருவனையன்றே வரச்சொன்னேம்; இவர்களைக்கூட்டிக்கொண்டு வருவானேனென்ன, உடையவரும் தேவரீர்

தண்டும் பவித்ரமுமாக வரச்சொல்லுகையாலே தண்டும் பவித்ரமுமான விவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தேனென்ன, நம்பியும் தண்டார், பவித்ரமார், என்றுகேட்க, உடையவரும் முதலியாண்டானை தண்டென்றும் கூரத்தாழ்வானைப் பவித்ரமென்றும் விண்ணப்பஞ்செய்ய, நம்பியுமிவர் களை விரைவாக மற்றிரண்டுவருக்குஞ்சொல்ல வேண்டாவென்று நியமித்து உடையவருக்குத் திருமந்த்ரார்த்தத்தை ஸாதித்தருளினார். இராமானுஜரும் அதுகேட்டு இனியராய் பராநர்த்தம் பொறுக்கமாட்டாதவராகையாலே திருவோலக்கத்தில் அனேகம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அந்த ரஹஸ்யார்த்தத்தை ஸாதித்தருள, நம்பியு மித்தைக்கேட்டு உடையவரை யழைத்து என் நியமனத்தைமறுத்த வுமக்குப்பலமேதென்ன,உடையவரும் எனக்கு நரகமே பலமென்ன, நம்பியும் நீரறிந்து மிப்படிசெய்வானென்னென்ன, உடையவரும் நானெனதுவன்போலுமே தேவரீர் திருவடிஸம்பந்தத்திலே இவ்வர்த்தமாக்களுஜ்ஜீவிப்பர்களென்று சொன்னேனென்ன, நம்பியும் மிகவுமுகந்து எம்பெருமானாரோ வாருமென்றெடுத்தணைத்துக் கொண்டு அவரோ நீ யென்றருளிச்செய்து இன்னமுமக்கோ ரர்த்தஞ்சொல்லுகிறேரும் இப்போதுபோய் நீ ரொருவருமேவாருமென்ன, உடையவரும் கோயிலுக்கெழுந்தருளி பின்பு திருக்கோட்டியூருக்கெழுந்தருள, நம்பியு முகந்து ச்லோகார்த்தத்தையருளிச்செய்யக்கேட்டு உடையவர் கோயிலுக் கெழுந்தருளி நம்பிநியமநத்தாலே ஆழ்வானைமாஸோபவாஸங்கொண்டு இவ்வர்த்தங்களை யாழ்வானுக்கருளிச்செய்ய,முதலியாண்டானும் தண்டனிட்டு அடியேனுக்கு மருளிச்செய்ய வேணுமென்று கேட்க, உடையவரும் ஆழ்வா னிருவனுக்குமேநம்பி நியமனமானபடியால் நீர் நம்பி சந்நிதிக்குப் போய்க் கேளுமென்ன, ஆண்டானும் திருக்கோட்டியூரிலே நம்பியை ஆறுமாசம்சேவித்துநின்றார். பின்பொருநாள் நம்பி ஆண்டானைப்பார்த்து முக்குறும்பு போலல் எம்பெருமானார் தாமே அருளிச்செய்வர் அஞ்சாதே போமென்று தம்முடைய திருவடிகளை ஆண்டான் திருமுடியிலே வைத்து விடைகொடுத்தருள, ஆண்டானும் உடையவர் சந்நிதியிலே வந்து தண்டனிட்டு நிற்க, உடையவர் உகப்புடனே ஆண்டானுக்கும் ச்லோகார்த்தத்தை யருளிச்செய்து இப்போது தமக்கு தண்டும் பவித்ரமுங் கைபுகுந்ததென்று அருளிச்செய்தார். பின்பு சிலநாளையிலே திருக்கோட்டியூர் நம்பி கோயிலுக் கெழுந்தருளி திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தங்கேளுமென்ற உடையவரைநியமித்து நம்பி திருக்கோட்டியூருக் கெழுந்தருளினார். பின்பு திருமாலையாண்டான் திருவாய்மொழி தொடங்கி நடவாநிற்க, உடையவர் சிலபாட்டுகளுக்கு நன்றாக வர்த்தங்களைச்சொல்ல. திருமாலையாண்டான் "இது ஆளவந்தார்பக்கல் கேட்டதல்ல, விச்வாமித்ராஸ்ருஷ்டி" என்றுசொல்லி திருவாய்மொழிசொல்லுகை தவிர்ந்தார். பின்பு இத்தைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளிகோயிலுக்குவந்து திருவாய்மொழிநடக்கிறதோவென்றுகேட்டருள, திருமாலையாண்டானும் நடந்த செய்தியை அறிவிக்க, நம்பியு முடையவர் சொன்னவார்

பழநடை விளக்கம்.

த்தை ஆளவந்தாரருளிச்செய்ய நாம் கேட்டிருந்தோம் என்று சொல்லி, திருமாலையாண்டானையும் பெரியநம்பியையுங்கூட்டிக்கொண்டு உடையவர் மடத்திற்கெழுந்தருளி முன்புபோலே திருவாய்மொழி நடக்கும்படி பண்ணியெழுந்தருளினார். பின்னையும் திருவாய்மொழி நடக்கச்செய்தே ஒரு ப்ரஸ்தாவத்திலே ஆண்டான்சொன்னவர்த்தங்கேட்டு ஆளவந்தார் இப்படியருளிச்செய்யாயென்று உடையவர் விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும் நீர் ஆளவந்தானைக்காணாதிருக்க இப்படி சொல்லுகைக்கு மூலமெதன்ன, உடையவரும்நான் ஆளவந்தாருக்கு ஏகலவ்யனென்ன (அதாவது ஏகலவ்யனென்பானுக்கு குருவைக்காணாதிருக்கச்செய்தேயும் குருபக்தியாலே அஸ்த்ரவித்தையை கைபுகுந்தாப்போலே அடியேனுக்கும் ஆளவந்தானைக் காணாதிருந்தாலும் அவர்திருவடிகளிலே பரமபக்தியாலே திருவாய்மொழி யர்த்தங்கள்தானே தோற்றுமென்னபடி) இத்தையாண்டான் கேட்டருளி இதுவுமோரவதாரமென்று உடையவனைதண்டனிட்டருளி பின்பு சிலகாளிலே திருவாய்மொழி சாத்தினபோது பெரியநம்பி உடையவனைப்பார்த்து ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் பக்கலிலே இன்னுமொருபொருளுண்டு அத்தை அவர்பக்கலிலே கேளுமென்றருளிச்செய்ய, உடையவரும் அரையர் ஸந்நிதியிலே ஆறுமாஸமடிமைசெய்து அரையரிடத்திலே சரயார்த்தங்கேட்டருளினர். பின்பொருநாள் உடையவர்மாதுகரம் பண்ணுகிறபோது ஸ்தாநத்தொறையாரிலே யொருவன், மாதுகரத்திலே விஷத்தைக்கலந்துகொடுக்கச்சொல்லி ஒருபெண்பிள்ளையை புருஷனைக்கொண்டுகொருக்க, அவளும் விஷங்கலந்த மாதுகரத்தையிட்டு தண்டனிட்டுப்போக, உடையவரும் கருத்தறிந்து அத்தைப்புகட்டி உபவாஸமாயிருந்தார். இத்தைத் திருக்கோட்டியூர்நம்பி கேட்டெழுந்தருளி கல்லவெய்யலிலே திருக்காவேரியிலே எழுந்தருளாநிற்க, உடையவரும் மூதலிகளோடனே எழுந்தருளி தண்டனிட்டுக்கொண்டுசிடக்க, நம்பியுமெழுந்திருக்கச்சொல்லாமலிருக்க, கிடாம்பியாச்சானும் இதென்ன சிஷ்யாசார்யக்ரமம் புமாலையெய்யலிலே கவிவார்களோவென்றுசொல்லி உடையவனைப்பரிந்தெடுக்க, நம்பியு மாச்சானைப்பார்த்து உம்மை காணுந்தேடுகிறோம், இன்றுமுதல் நீர் தளிகைக்குப்பண்ணி இவர்க்கு ஏகமாதுகரமாக ப்ரஸாதியுமென்று நியமிக்க, கிடாம்பியாச்சானும் அப்படியே பண்ணிக்கொண்டு வந்தார். பின்பு யக்ஞமூர்த்தி என்கிற மகாவித்வான் கங்கையாடப்போய் அங்குள்ள வித்வான்களை ஜயித்து மாயாவாத ஸம்பாஸியாய்வித்தையிரண்டும் சிஷ்யஸம்பத்திரண்டும் மிகுந்தவனாய் அங்கே உடையவருடைய வைபவத்தைக்கேட்டுக் கோயிலுக்குவந்து உடையவரைப் பார்த்து என்னுடன் தர்க்கிக்க வேணுமென்ன, இவரும் அப்படியே செய்கிறேம் நீ தோற்றால் என்செய்கிறு யென்ன, அவனும் நான் தோற்றேனாகில், உம்முடையபாதரக்ஷையைச்சுமந்து உம்முடையபேரையுமிட்டுக்கொண்டு உம்முடைய ஸித்தாந்தத்திலே புகுரக்கடவே னென்ன, உடையவரும் நாம் தோற்றோமாகில் க்ரந்தஸந்யாஸம்பண்ணி தோற்றனென்கி

ரூமென்ன, அவனும் சம்மதித்து பதினெட்டுநாள்வரை யவதியிட்டு வாதம்பன்ணுகிற்கப், பதினேழாஞள் அவனுடையகக்ஷி ப்ரபலமானவள விலே காளைக்கு வருவதாக வெழுந்திருந்து அனுப்பிப்போக, உடையவரும் வ்யாகுலராய் மடத்திற்செழுந்தருளி பேரருளாளரை ஆராதித்து அமுது செய்யப்பண்ணி ப்ரபத்திபண்ணித் தாமமுதுசெய்யாதே வெறுப்புடனே கண்வளர்ந்தருள, பேரருளாளர் ஸ்வப்நத்தி லெழுந்தருளி "ஈராமாநுஜ முனியே உமக்குப் பெரியகிஷ்யனைத் தந்தோம், ஆளவந்தார் செய்தரு ளின மாயாவாத கண்டனத்தைச்சொல்லி அவனை ஜயிப்பீ ரென்ன" உடையவரும் வெடிவோரே எழுந்திருந்து நித்யாநுஷ்டாநஞ் செய்தருளி பேரருளாளரை சேவித்துக் கடகமெழுந்தருளும்போது யக்ஞமூர்த்தி இவருடைய காம்பீர்யத்தைக்கண்டு இவர்நம்மை ஜயிப்பரென்றுநினைத்து எழுந்திருந்து உடையவர் திருவடிகளிலே சேவித்து தேவரீருக்குத்தோற் றேனென்று ஸ்ரீபாதரக்ஷையை யெடுத்துக்கொண்டு அடியேனை இரங்கி யருளவேணுமென்ன, உடையவரும் இதென்னென்று திகைத்துத் தர்க் கிக்கலாகாதோவென்ன, அவனும் பெரியபெருமாளே தேவரீராசையாலே தேவர்முன்னே வாய்திறக்க வழியில்லை என்ன, ஆகிலுங் கேளீரென்று மாயாவாதகண்டனத்தை யுபக்யஸித்துக்காட்ட, அவனுமிணைந்து எகதண் டத்தை மூறித்தெறிய, உடையவரும் அவனுக்கு முக்கோல் மூப்புரிநூல் கிகோபவீதங்களை தரிப்பித்து தாபாதி பஞ்சஸம்ஸ்காரங்களைப்பண்ணி அரு ளாளப்பெருமாளென்று திருநாமஞ்சாத்தியருளி பெரியபெருமாளையும் பே ரருளாளரையும் ஸேவிக்கப்பண்ணிவித்துத்தாமும் அமுதுசெய்து இவருக் குத் தளிகைப்ரஸாதப்ஸாதித்து திவ்யப்ரபந்தங்களையும்ஓதுவித்து தத்வ நிரூபணஞ்ஸாதித்து அனந்தாழ்வானையும் எச்சானையும் தொண்டனூர்நம்பி யையும் மருதூர்நம்பியையும்அவர் (அருளாளப்பெருமாளெம்பெருமானார்) ஸ்ரீபாதத்திலேயாச்ரயிப்பித்தருளி அநந்தாழ்வானதிருமலைக்கனுப்பியருளி பின்பு சிலநாளிலே கோயில்நின்றும் புறப்பட்டருளித் திருக்கோவலூருக் கெழுந்தருளி நயிணரைசேவித்து பெருமாள்கோவிலுக் கெழுந்தருளிதிருக் கச்சிநம்பியை சேவித்து அவர்புருஷகாரமாகி பேரருளாளரைசேவித்து அங்குநின்றும்புறப்பட்டு வடக்குத் திருவீதிக்கெழுந்தருளச்செய்தே வழி காட்டினை யெத்தமிறைப்பானைத் தண்டனிட்டுத் திருமலைத்தாழ்வரையிலே எழுந்தருளியிருக்கிற பராங்குசபரகாலாதியான ஆழ்வார் பதிவரையும் ஸேவிக்கப்பண்ணிவித்துத்தாமும் அமுதுசெய்து இவருக் குத் தளிகைப்ரஸாதப்ஸாதித்து திவ்யப்ரபந்தங்களையும்ஓதுவித்து தத்வ நிரூபணஞ்ஸாதித்து அனந்தாழ்வானையும் எச்சானையும் தொண்டனூர்நம்பி யையும் மருதூர்நம்பியையும்அவர் (அருளாளப்பெருமாளெம்பெருமானார்) ஸ்ரீபாதத்திலேயாச்ரயிப்பித்தருளி அநந்தாழ்வானதிருமலைக்கனுப்பியருளி பின்பு சிலநாளிலே கோயில்நின்றும் புறப்பட்டருளித் திருக்கோவலூருக் கெழுந்தருளி நயிணரைசேவித்து பெருமாள்கோவிலுக் கெழுந்தருளிதிருக் கச்சிநம்பியை சேவித்து அவர்புருஷகாரமாகி பேரருளாளரைசேவித்து அங்குநின்றும்புறப்பட்டு வடக்குத் திருவீதிக்கெழுந்தருளச்செய்தே வழி காட்டினை யெத்தமிறைப்பானைத் தண்டனிட்டுத் திருமலைத்தாழ்வரையிலே எழுந்தருளியிருக்கிற பராங்குசபரகாலாதியான ஆழ்வார் பதிவரையும் ஸேவிக்கப்பண்ணிவித்துத்தாமும் அமுதுசெய்து இவருக் குத் தளிகைப்ரஸாதப்ஸாதித்து திவ்யப்ரபந்தங்களையும்ஓதுவித்து தத்வ நிரூபணஞ்ஸாதித்து அனந்தாழ்வானையும் எச்சானையும் தொண்டனூர்நம்பி யையும் மருதூர்நம்பியையும்அவர் (அருளாளப்பெருமாளெம்பெருமானார்) ஸ்ரீபாதத்திலேயாச்ரயிப்பித்தருளி அநந்தாழ்வானதிருமலைக்கனுப்பியருளி பின்பு திலநாளிலே கோயில்நின்றும் புறப்பட்டருளித் திருக்கோவலூருக் கெழுந்தருளி நயிணரைசேவித்து பெருமாள்கோவிலுக் கெழுந்தருளிதிருக் கச்சிநம்பியை சேவித்து அவர்புருஷகாரமாகி பேரருளாளரைசேவித்து அங்குநின்றும்புறப்பட்டு வடக்குத் திருவீதிக்கெழுந்தருளச்செய்தே வழி காட்டினை யெத்தமிறைப்பானைத் தண்டனிட்டுத் திருமலைத்தாழ்வரையிலே எழுந்தருளியிருக்கிற பராங்குசபரகாலாதியான ஆழ்வார் பதிவரையும் ஸேவிக்கப்பண்ணிவித்துத்தாமும் அமுதுசெய்து இவருக் குத் தளிகைப்ரஸாதப்ஸாதித்து திவ்யப்ரபந்தங்களையும்ஓதுவித்து தத்வ நிரூபணஞ்ஸாதித்து அனந்தாழ்வானையும் எச்சானையும் தொண்டனூர்நம்பி யையும் மருதூர்நம்பியையும்அவர் (அருளாளப்பெருமாளெம்பெருமானார்) ஸ்ரீபாதத்திலேயாச்ரயிப்பித்தருளி அநந்தாழ்வானதிருமலைக்கனுப்பியருளி பின்பு சி

தருளியிருந்தார். அப்போது பெரியதிருமலைநம்பியை விட்டுவந்த க்ஷேத்தாலே கோவிந்தப்பெருமாளுக்கு உடம்புவெளுக்க உடையவரும் அவர் கருத்தறிந்து அவனைத்திருமலைக்குப்போகவிட, திருமலைநம்பியுங் கூட்டிக் கொள்ளாமல் தள்ளிவிட, கோவிந்தபட்டரும் உடையவர்ஸந்நிதியிலே வந்து தண்டனிட, உடையவரும் அங்கீகரித்துத் தம்மூடைய கல்யாண குணங்களை யநுபவிப்பித்துத் தேற்றித்தெளிவித்து கோவிந்தபட்டனையுங் கூட்டிக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி யிருக்கிறகாளிலே கோவிந்த பட்டருடைய விரக்தியைக்கண்டு ஸந்யாஸாச்ரமத்தைக் கொடுத்தருளி எம்பெருமானொன்று திருநாமஞ்சாற்ற, அவரும் தேவரீருக்கு பாதச் சாயையாயிருக்கிற வழியேணிக்குப் பொருச்சும்படி திருநாமம் ஸாதிக்க வேணுமென்ன, உடையவரும் இடையைக்கழித்துத் தலையையுங்கடை யையுங்கூட்டி யெம்பானொன்று திருநாமஞ்சாற்றினர். பின்பு சிலதேசாந்த ரஸ்தர்வந்து எம்பெருமானர் மடமெங்கென்றுகேட்க. இருந்தவர்கள் எந்த வெம்பெருமானர் மடமென்றுகேட்க, அவர்களும் இரண்டெம்பெருமானு ருண்டோவென்ன, இருந்தவர்களும் அருளாளப்பெருமாளெம்பெருமானர் ஒருவருண்டென்ன, இப்படி சிலவார்த்தைநடந்துகொண்டிருக்க, இத் தை யருளாளப்பெருமா ளெம்பெருமானர்கேட்டு நாம் வேறுமடத்திலே யிருக்கையாலே இப்படிவந்ததென்று மடத்தை யிடித்துப்புகட்டு உடை யவர் திருவடிகளைக்கட்டிக்கொண்டு இச்செய்தியை விண்ணப்பஞ்செய்து க்லேசிக்க, உடையவரும் அவரைப்பிரியாமல் அடிமை செய்யும்படித் தம்மூடைய மடத்திலேயே வத்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அருளா ளப்பெருமாளெம்பெருமானரும் உடையவர் ஸந்நிதியிலே பிரியாமல் அடிமைசெய்துக்கொண்டிருந்து ஞானஸாரம் ப்ரமேயஸாரம் என்கிற விரண்டு ப்ரபந்தங்களைச் செய்தருளினர். பின்பு கூரத்தாழ்வான். அருளா ளப்பெருமாளெம்பெருமானரை. முதலியாண்டான். இவர்களைக் கூட்டிக் கொண்டு ஸ்ரீபாஷ்யஞ்செய்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றினர். அதற்கு போதாயனவ்ருத்தி கிரந்தம் வேணுமென்று விசாரித்து அது வடக்கே யிருக்கிறதென்றுகேட்டு ஆழ்வானுடனே உடையவர் அங்கேயெழுந்தருளி உபாயத்திலே அந்தகோசத்தைதவாங்கி ஆழ்வானுக்தாமும் திருக்கண்மலர் சாற்றிக் கோசத்தைக்கொண்டுவருகிறதாக விருக்கச்செய்தே அங்கே சிலர் கோசத்தை யெடுத்துக்கொண்டுபோக உடையவரும் கோசம் போனதற்கு வ்யாகூலப்பட்டிருக்க, ஆழ்வானும் தேவரீர் கடாக்ஷத்தி னாலே வ்ருத்திக்ரந்தமெல்லாம் அடியேனுடைய சித்தபித்தியில் விதமா யிருக்கிறதென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் மிகவும் உகந்தருளி ஆழ்வானுடனே கோயிலுக்கெழுந்தருளி முதலியாண்டானையுங் கூட்டிக் கொண்டு ஸ்ரீபாஷ்யந்தலைக்கட்டியருளி ஆளவந்தாருடைய முதல்நினை வைப் பூரித்தருளினர்.

பின்பு முதலிகளெல்லாரும் உடையவரைத்தண்டனிட்டுதேவரீர்திக் விஜய யாத்ரைசெய்தருளி அங்குள்ள திவ்யதேசங்களையும் ஸேவித்தெழுந்

தருளதேவணுமென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரு மங்கீகரித்து நம் பெருமாளநுமதிகொண்டு முதலிகளுடனே புறப்பட்டுச் சோழமண்டலத் திற் கெழுந்தருளி திருக்குடந்தை முதலான திருப்பதிகளை லேவித்து அங்கள்ள புறச்சமயிகளை ஜயித்து தெற்கே புறப்பட்டு அழகர் திருமலை முதலான திருப்பதிகளை லேவித்து பாண்டியமண்டலத்திலுண்டான புறச் சமயிகளை ஜயித்து லேதுதர்சனம்பண்ணி திருநகரிக்கெழுந்தருளி ஆழ்வா ரை லேவித்து ஒரு ச்லோகம் விண்ணப்பஞ்செய்து ஆதிப்பிரானையும் சே வித்து சுற்றிலுள்ள திருப்பதிகளையும் லேவித்து அங்குள்ள புறச்சமயி களையும் ஜயித்து திருக்குறுங்குடிக் கெழுந்தருளி நம்பியை சேவித்து அவர் திருவுள்ளப்படியே அவரை ராமாநுஜமுடையராக்கி ஸ்ரீவைஷ்ணவ நம்பி என்று தாஸ்யநாமம் ஸாதித்து அங்குனின்றும் புறப்பட்டு திருவண் பரிசாரம் திருவாட்டாறு லேவித்து திருவநந்தபுறத்தை லேவித்து அங்கே ராமாநுஜமடத்தை யுண்டாக்கி மற்றும் மலையாளதேசத்திலுண்டான திருப்பதிகளை லேவித்து அங்குள்ள புறச்சமயிகளை ஜயித்து மேற்கு ஸமு த்ரகரை வழியாக உத்தரதேசத்திற்கெழுந்தருளி வடமதுரை, ஸாளக்ரா மம், த்வாரகை, பதரிகாச்ரமம், கைமிசம், கோகுலம், கோவர்த்தனம், ப்ருந் தாவனம், திருக்கண்டம் முதலான திருப்பதிகளையும்லேவித்து அங்குள்ள புறசமயிகளையும் ஜயித்து ப(பு)ட்டிமண்டபத்திற்குவந்து ஸரஸ்வதீபீடத் திற்கெழுந்தருளினவர் அப்போது ஸரஸ்வதி தானேவாசலைத்திறந்துகொண்டு எதிரே புறப்பட்டுவந்து உடையவரைப்பார்த்து ஒரு ச்ருதிசுருப்பொருள் சொல்லச்சொல்ல இவருமச்சொல்ல, அவளும் சந்தோஷத்துடனே ஸ்ரீ பாஷ்யகோசத்லதத தன்முடியிலே லைத்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யகார னென்று திருநாமமிட்சாற்றி ஹயக்ரீவனையுங்கொடுத்து முன்வந்த சுகரன் என்கருத்தறிந்து சொல்லமாட்டாதேபோனன். நீர் அதறிந்து சொன்னீ ரென்று ஸரஸ்வதியானவள் மிகவுஞ்சொன்டாடினள். உடையவரும் அங் குள்ள புறச்சமயிகளை ஜயித்து அந்த நாட்டுக்குராஜாவையும் சிஷ்யனாக்கிக் கொண்டு அங்கேகதம்மேலே மந்த்ரப்ரயோகம்பண்ணின யித்வான்களைப் பிச்சேறும்படிபண்ணி அந்தராஜாவுக்காக வவர்களைப் பிச்சுத்தெளிவித்து சிஷ்யர்களாக்கிக்கொண்டு புறப்பட்டு வாரானஸீவழியாசவந்து கங்கை நோபட்டவாறே அதிலே நீராடிபுறப்பட்டு ஸ்ரீஜகந்நாதத்திலேவந்து ஜகந் நாதனைலேவித்து அங்குள்ள புறச்சமயிகளைஜயித்து அங்கேராமாநுஜ மடமுண்டாக்கிப்புறப்பட்டு ஸ்ரீகூர்மம் ஸிம்மகிரி அஹோபிலம் சேவித் துக்கொண்டு திருமலையிலே வந்தவளவிலே அங்கேசைவர்வந்து திருவேங் கடமுடையானைத் தங்கள் தைவமென்றுவழக்குப்பேச, உடையவரும் சூலடமருகங்களையும் சங்கசக்ரங்களையும் திருமுன்பேவைப்பது அவர் எத்தைதரிக்கிறாரோ அத்தைக்கொண்டு இவரை இன்னொன்றுகொள்ளுவ தென்றருளிச்செய்ய, எல்லாரும்சம்மதித்து அப்படியேசெய்ய, பின்பு திரு வேங்கடமுடையான் திருவாழிதிருச்சங்கை தரித்தபடிகண்டு எல்லாரும் ஆனந்தித்து சைவனை அடித்தோட்டிவிட்டார்கள். அத்தாலே அப்பனுக்

பழநடை விளக்கம்.

குச் சங்காழி யளித்தருளும் பெருமானென்று உடையவருக்குத் திருநாம மூண்டாயிற்று. பின்பு புறப்பட்டு மற்றுள்ள திருப்பதிகளை ஸேவித்துக் கொண்டு கோயிலுக்கெழுந்தருளி முதலிகளுடனே ஸுகமாக வெழுந்தருளியிருந்தார். பின்பொருக்கால் மழைகாலத்திலே பகலளவும் வர்ஷம் வர்ஷிக்க உபாதாகாலம் தப்பிப்போகையாலே ஆழ்வான் அன்றைக்குப் பட்டினியாக வெழுந்தருளியிருக்க, அன்றிராத்ரி பெரியபெருமாள் பெரிய வவஸரம் அமுது செய்கிறபோது திருச்சின்னாதங்கேட்டு ஆண்டாள் பெருமாளை நோக்கி உம்முடைய அடியவர் பட்டினியிருக்க நீரமுதுசெய் கிறீரென்று நினைக்க, பெரியபெருமாளும் உத்தம நம்பிக்கு நியமித்த அக்காரவடிசில் தளிகைவரிசைகளுடனே உத்தம நம்பி திருமுடியிலே வரவிட, ஆழ்வானும் மகா ப்ரஸாதமென்றங்கீகரித்து ஆண்டாள்நினைவைக் கேட்டு வெறுத்து தாமொருதிரளை யமுதுசெய்து ஆண்டாளுக் கொருதிர ளையும் ஸாதித்தருளினர். பட்டரும் சிராமப்பிள்ளையும் அவதரிக்கைக்கு மூலம் இத்திராளைகளாயிருக்கும். பின்பு நம்பெருமாளனுக்ரகத்தாலே வைகாசி அனுராதத்திலே ஆழ்வானுக்கொரு குமாரர் அவதரித்தார். உடையவர் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளி எம்பாரைக் குழந்தை யை யெடுத்துவரச்சொல்லிக் குளிரநோக்கி எம்பாரைப் பார்த்து நீரே இவருக் காசார்யராகக்கடவீரென்று நியமித்துக் குழந்தைக்குப் பஞ்ஜாரம் தந்திருக்கையாலே சாத்தியருளி நாமகரணத்தினன்று எம்பாரைக்கொ ண்டு சங்கசக்ராங்கனஞ் செய்வித்து ஸ்ரீபராசரபட்டரென்று திருநாமஞ் சாற்றி ஆளவந்தாருடைய விரண்டாவது நினைவைப் பூரித்தருளினர். பட்டர் ஸ்ரீரங்கநாதாம்சம். (ச்லோகம்) ஸ்ரீபராசரభట்டார்யంభూయோభூ யோనమామ్యహమ్। యదాశ్రనాస్వయింరంగీభేజేకూరేశపుత్రతామ్॥ இது அக் காலத்திலுள்ள பெரியோர்க ளருளிச்செய்தது. பின்பு எம்பார் திருத் தம்பியார் சிறிய கோவிந்தப்பெருமாளுக்கு ஒரு குமாரர் அவதரித்தருள, உடையவர் கடாக்ஷித்தருளி பராங்குசநம்பி யென்று திருநாமஞ்சாற்றி ஆளவந்தாருடைய மூன்றாநினைவைப் பூரித்தருளினர். பின்பு நம்பெரு மாள் பசுங்குழந்தையான பட்டரை மஞ்சநீர் குடப்பித்து தம்முடைய ஸந்நிதியிலே திருமணைத்தூண் சமீபத்திலே தொட்டிலிட்டு நாச்சியார் சீராட்டிவளர்க்க வளர்ந்த விக்குழந்தைப், பெருமாளுக்குத்தளிகை ஸமர்ப் பித்திருக்கச்செய்தே அதிலே தம்திருக்கையாலே அள்ளிக்கொண்டு அமுது செய்தருள, பெருமாளதுகண்டு மகிழ்ந்தருளி பின்பு தாமும் அமுதுசெய்தரு ளினர். பின்பொருக்கால் உடையவர் பாலராயிருக்கிறபட்டர் திருக் கையிலே யொரு ச்லோகத்தைச்சொடுத்து வாசிக்கச்சொல்ல பட்டருமழ கியதாகவாசிக்க உடையவரும் மிகவு முகந்தருளி முதலிகளெல்லாரையு மழைத்து கம்மிடத்திலே யிருக்குமாப்போலே இவரிடத்திலே யிருங்கோ ளென்றுநியமித்து அருளினர். எம்பாருமொருக்கால் பட்டர் வாசிக்கக்கே ட்டு இக்குழந்தை நந்தகோபனத்திற்குக் கீர்த்திகொண்டு வருமென்றருளிச் செய்தார். பின்பொருநாள் ஆழ்வான்திருவாய்மொழியநுஸந்திக்கும்போது

"சிறுமாமனிசரா" யென்கிறவித்தை ஐந்துவயஸ்ஸிலே பட்டர்கேட்டுசிறு
மைபெருமை யொன்றிலேகூடுமோவென்றுகேட்க, ஆழ்வானுமுகந்தருளி
சிறியாச்சானையும் அருளாளப்பெருமா ளெம்பெருமானையுங் காட்டிஇத்
திருமேனிசிறுத்து ஜ்ஞானம்பெருத்து இருக்குமிவர்களைக்கண்டீர்! சிறுமா
மனிசனென்கிறது என்று ஸமாதானம் பண்ணியருளினார். பின்டொருநாள்
பட்டர் ஐந்துவயஸ்ஸிலே திருவீதியிலே புழுதியளைந்து விளையாடுகிறபோது
ஸர்வஜ்ஞபட்டனொன்று (ஓருவித்வான்) காஹளமூதிவர, குழந்தையான
பட்டரிருந்து உடையவர்முதலானிருந்தவிடத்திலே இவரைடா காஹள
மூதிக்கொண்டு வருகிறானென்று பார்த்து இரண்டுகையாலும் புழுதியை
யள்ளிக்கொண்டி அவனைப்பார்த்து நீ ஸர்வஜ்ஞனுசுதே இதெத்தனை
சொல்லென்றுகேட்க, அவனுமொன்றுஞ்சொல்லமாட்டாதே தலைவணங்
கிக்கொண்டிருக்க, பட்டரும் அவனைப்பார்த்துகெடுவாய்! இதொருகைப்
புழுதியென்றுசொல்லி விருதாதித்திரியமாட்டாதே அஞ்ஞானியிருந்தாயே
யென்றுசொல்லிக்காஹளத்தைப்பரியுங்கோளென்ன, வம்மழலைச்சொல்லே
யவன்கேட்டு இவராருடையபுத்திரர் என்றுகேட்க, ஆழ்வான்குமார
னென்று அங்குள்ளார்சொல்ல, வதைக்கேட்டுப் பிறப்பதின்குட்டித்தவீழு
மோவென்றுசொல்லி ஆச்சர்யப்பட்டுக் குழந்தையைத் தன்தண்முகை
யிலேவைத்துக்கொண்டு ஆழ்வான் திருமாளிகைவாசலிலே சென்றவாறே
பொன்னுய்ச்சியார்வாரியெடுத்துக்கொண்டு ஆண்டாள்கையிலே கொடு
த்து ஸ்ரீபாததீர்த்தத்தைத் தெளித்துக் கண்ணெச்சில்படாதபடி ரக்ஷை
யிட்டாள். பட்டர் உபநயனமானபின்பு வேதமோதும்போது உபாத்யாயர்
ஸந்தையிடாநிற்க, பட்டர் ஒருநாள் ஒருக்கால்சந்தைசொல்லிக்கொண்டி
மற்றைநாள் உபாத்தியண்டைக்குப்போக, அவரும்நேற்றையதினம் ஸந்தை
யிட்டதை யன்றைக்கும் ஸந்தையிட, பட்டர் அத்தைக்கேட்டு ஓதினத்தை
யோதுசிறுர்களென்று வந்துவிட்டு விளையாடிக்கொண்டிவர, ஆண்டா
ளுரும் ஆழ்வானுங்கண்டு பிள்ளாய் என் ஓதவதைவிட்டு விளையாடுகிறாய்?
என்ன, அவர்களோதினத்தையே யோதுகிறார்கள் ஆகையாலே
விட்டிவந்தேனென்ன, ஆகில் நேற்றோதினத்தைச் சொல்லா யென்ன,
பட்டர் அத்தை யொன்றுதப்பாமல்சொல்ல, ஆழ்வானு மாண்டாளுங்
கேட்டு பயப்பட்டு இனி ஓதவிடவொண்ணுதென்று சங்கித்திருந்தார்கள்.
பின்பு பட்டருக்கு விவாஹகாலம் வந்தவாறே கன்னிகை இசையாதிரு
க்க, பெரியபெருமாள் கன்னிகையுடையவர்கள் ஸ்வப்நத்திலே யெழுந்
தருளி பட்டருக்கு கன்னிகையைக்கொண்டு கொடுத்து பெருக்கக் கல்வி
யாணுஞ் செய்யுங்கோளென்று நியமித்தருள, அவர்களுரும் மற்றைநாள்
அப்படியே கல்வியாணுஞ் செய்துக்கொடுத்தார்கள். இன்னும் பட்டர்
வைபவம் மேலே யெழுதப்படுகிறது.

பின்பொருநாள் உடையவர் முதலிகளைப்பார்த்து நம் முதலியாண்
டானை யொழிய ஸர்வஸங்கபரித்யாகம் பண்ணினேனென்றருளிச்செய்ய,

பழநடை விளக்கம்.

முதலிகள் அப்படி யருளிச்செய்யலாமோவென்று கேழ்க்க, நங்கையில் முக்கோலவிடு லன்றோ நம்முதலியாண்டானை விடுவதென்று அருளிச் செய்தார். இப்படி முதலியாண்டான் ஆழ்வான் மற்றுமுண்டான முதலி களுக்கு உடையவர் ஸ்ரீபாஷ்யம் வ்யாக்யானித்துக்கொண்டிலை கமாக வெ ழுந்தருளியிருக்கிற காலத்திலே சோழராஜா சிவபாரப்யத்திற்குக்கையெழு த்துஇடச்சொல்லி பாஷ்யகாரரைகொடு கதினைக்க, பாஷ்யகாரரும்ஒருகார ணத்தினாலே அவனை நிராகரியாமல் அவ்விடத்தைவிட்டுப் போவதாக நினைத்துப் பெரிய பெருமாளுடனே விண்ணப்பஞ்செய்து ஆழ்வானுடைய வெள்ளை வஸ்த்ரத்தை தரித்துக்கொண்டு முதலியாண்டான் முதலான முதலிகளுடனே புறப்பட்டு மேற்கே யெழுந்தருளும்போது ராஜாவின் சேவகர் பின்னுடர, முதலிகளையிட்டு மனலோந்தூவி, சேவகரை வர வொட்டாமல் தடுத்து மேற்கே யெழுந்தருளி கல்லாலுடைய சிஷ்யரான வேடக்குடியிலே புக்கு அங்கு நாலுநாளிருந்து காஷாயவஸ்த்ரம முதலான தை ஸம்பாதித்துக்கொண்டு வன்னிபுஷ்கரணி யென்கிற க்ராமத்திற் கெழுந்தருளி இரவுகாலமிருந்து அங்குனின்றும் புறப்பட்டு மிதிலைசாலிக் கிராமத்திற கெழுந்தருளி அங்கிருக்கிற யோதிகளை முதலியாண்டா னுடைய ஸ்ரீபாதீர்த்த வைபவத்தாலே திருத்தி சிஷ்யரைக்கிக்கொண்டு சிங்கிரிகோயிலிலே இரவுநாளிருந்து விஷ்ணுவைவ்ஷ்ணவ விரோதியான சோழன்சிமிகண்டனைய் நசிக்கும்படி மந்த்ரவாதம்பண்ணித் தொண்ட னூருக்கெழுந்தருளி அந்த தேசத்திற் கதிபதியான விட்டலதேவராஜன் மகளைப்பிடித்திருந்த பிசாசத்தைத் தொண்டனூர்நம்பி முகமாக ராஜாக்ரு ஹத்திற் கெழுந்தருளி ஸ்ரீபாததீர்த்தத்தை யவன்மகள்தலையிலேதெளித்து உச்சாடனம்பண்ணிவிட்டு விட்டலதேவராஜனை சிஷ்யரைக்கி அங்கே எதி ரிட்டகூபணைத் திரைக்குள்ளேயிருந்து திருவநந்தாழ்வானை ஆயிரம் பணமுகத்தாலே ஒருத்தருக்குப் பதிணாயிரம்முகமாகவுத்தரஞ்சொல்லி ஜயி த்து அவர்களிலே அனுகூலித்தார் சிலரைச் சிஷ்யராக்கிக்கொண்டு விடல தேவராஜனையிருந்த விஷ்ணுவர்த்தனராயன் மிகவுமுபசரிக்கவெழுந்தரு ளியிருந்து தொண்டனூரிலே கம்பியபடிவாணித்திருக்கிற வெம்பெருமானுக்கு நம்பிதம்பிரானென்று திருநாமஞ்சாற்றிச் சிங்கிரிகோயிலிலே ஸ்ரீபாஷ்யம் வ்யாக்யானித்துக்கொண்டருள, கையில் திருமணிலவழிந்துபோனபடி யாலே சிந்தித்துக்கொண்டு கண்வளர வன்றிராத்திரி திருநாராயணபுரப் பெருமாள், பாஷ்யகாரர் ஸ்வப்நத்திலே வந்து ஸமீபத்திலே யதகிரியிலே யும்முடைய வரவுபார்த்துகொண்டிருக்கிறோம்; உமக்கிஷ்டமான திரு மஞ்சுகாப்பு மங்கேயுண்டு; கதிக வாரீரென்றருளிச்செய்ய, இவரும் விடிவு காலத்திலே விஷ்ணுவர்த்தராயனை யழைப்பித்து அவனையிட்டுக் காடு வெட்டுவித்து பகுதான்ய ஸம்வத்ஸரத்திலே தைமாசத்திலேயதகிரியேறி, திரும்பவும் ஸ்வப்னங்கண்டபடியே திருத்தழாய் மாதத்தின்கீழே புற்றிலே யிருந்த திருநாராயணப்பெருமானை சகஸ்ரவர்ஷம் ஆயிரத்திற்குமேல் பனி னொன்றுசென்ற பகுதான்ய வருஷத்தில் தைமாசத்திலே சுக்ல பக்ஷத்

திலே சதுர்த்தசீ வ்யாழக்கிழமை கூடின புனர்வசு நக்ஷத்திரத்தில் ஜீர் ணோத்தாரணம் பண்ணியருளி பாலாலே திருமஞ்சனஞ் செய்தருளித் தங் திருக்கையாலே மூன்றுகால் திருவாராதனஞ் செய்தருளி " ஒருநாயக மாய் " என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்துத் திருக்கல்யாண் வட மேற்கு மூலையிலே த்ரிதண்டத்திலேகீறி திருமண்கூலைவலையைக் கண்டு கொண்டு யதுகிரியிலே ஸுருங்கோவிலுங் கட்டுவைத்துத் திருநாராயணப் பெருமாளுக்குப் பாஞ்சராத்ர ஸாத்வதஸம்ஹிதையாலே ஸம்ப்ரோக்ஷணம் பண்ணிவைத்து உத்ஸவபரமில்லையென்று நிந்திதிருக்க, திருநாரா யணன் இவர் ஸ்ப்ருத்திலேவந்து நம்முத்ஸவபரமான ராமப்ரியர் மூல் லியிலேயிருக்கிறார் அங்கே போய்க்கொண்டிவாருமென்று நியமிக்க, பாஷிய காரரும் மூல்லிக்கெழுந்தருளி மூல்லிராஜன் மகள் பதிக்கை வீட்டிலேசெ ல்ல, ராமப்ரியருங் கிங்கிணிகதக்கை யோசையுடன் எல்லாருங்காணும்படி யோடிவந்து உடையவர் மடியிலேயிருக்க, உடையவரும் ஆனந்தத்தட னே யணைத்துக்கொண்டு என் செல்வப்பிள்ளாய்யாவென்று தொல்லுகை யாலே ராமப்ரியருக்கு செல்வப்பிள்ளையென்று திருநாமமுண்டாய்த்து.

பின்பு பாஷியகாரர் செல்வப்பிள்ளையை யதுகிரியிலே ப்ரதிஷ்டை பண்ணி யங்கே யதிராஜமடங் கட்டுவைத்து ஐம்பத்திருவருக்கு ஊழியங் கற்பித்து ஊருக்குத்திருநாராயணபுரமென்று திருநாமஞ்சாற்றினர் இப்படி யதிராஜர் ஜீர்ணோத்தாரணம் பண்ணியபடியாலே அதற்கு யதுகிரியென்று திருநாமமுண்டாய்த்து.

இப்படிபணிரண்டிவருஷம் மேலட்டமிலெழுந்தருளியிருந்து இவ்விட த்தில் ஆழ்வான்முதலானார் சேநையைக்கிட்டிச், சோயிலுக்கெழுந்தருளுவ தாகநினைத்துத் திருநாராயணப்பெருமாளை யநுமதிகொண்டு ஐம்பத்திருவரு க்குந் தம்முடையவர்ச்சாரூபத்தை யேறவித்துக்கொடுத்து ஊழியகைங்கர் யங்களைக் கட்டளைப்படுத்தி அங்குனின்றும் புறப்பட்டு கோயிலுக்கெழுந் தருளி நம்பெருமாளையும்சேவித்து ஆழ்வானையும்கடாக்ஷித்து அவரையிட்டி வாதராஜஸ்தவத்தைச்செய்வித்துத் தில்லைநகர்திருச்சித்ரகூடத்தெம்பெரு மானைத் திருப்பதியிலே ப்ரதிஷ்டைபண்ணியருளித் திருவேங்கடமுடை யானைசேவித்து அங்குனின்றும்புறப்பட்டுகோயிலுக் கெழுந்தருளிவியாக் யாநித்துக்கொண்டிருந்தநாச்சியார்திருமொழிப்ரஸ்தாவத்திலே அழகர்திரு மலைக்கெழுந்தருளி நாச்சியார்சொல்லியிருந்தபடி நூறுகுடம் அக்காரவடி சில் அமுதுசெய்வித்து ஸ்ரீவில்லிபுத்தூருக் கெழுந்தருளி கோதையாலே நங்கோயிலண்ணனென்று திருநாமம்பெற்று திருநகரிக்கெழுந்தருளி யாழ் வாரை சேவித்து மீண்டு கோயிலுக்கெழுந்தருளி நம்பெருமாளை சேவித்து ஸ்ரீபாஷ்யம் வ்யக்யானித்துக்கொண்டெழுந்தருளி யிருக்கச்செய்தே ஒரு நாள் பட்டருடைய உபந்யாஸவைபவத்தைக்கேட்டருளி யுகந்து பட்ட ருக்கு வேதாந்தாசார்யபதம் கொடுத்தருளினர். அன்றுமுதல் பட்ட

ருக்கு வேதாந்தாசார்ய ரென்றும் திருநாமமுண்டாய்த்து. ஒருக்கால் திருவத்யயநோத்ஸவத்திற்காக நம்மாழ்வார் திருநகரியில்நின்றும் கோயிலுக்கெழுந்தருளச்செய்தே வழியிலே கள்ளர்வந்து விழுந்து உபத்திரவம் பண்ணினபடியினாலே ஆழ்வாருடைய திருவடிநிலையான மதுரகவிகள் கைதப்பிப்போச்சுது. ஆழ்வார்மாத்திரம் தங்கத் திருநகரிக் கெழுந்தருளி விட்டார். உடையவர் இந்த சேதியைக்கேட்டு திருநகரிக்கெழுந்தருளி ஆழ்வார் திருவடிநிலையான ராமாநுஜனைப் பண்ணிவித்து இன்று முதல் ஆழ்வார் திருநகரியைவிட்டுப் புறப்படவேண்டாவென்றுநியமித்துக்கோயிலுக்கெழுந்தருளி, நம்மாழ்வார் விக்ரஹத்தை யேறியருளப்பண்ணிவித்துத் திருவத்யயநோத்ஸவத்தை நடத்தியருளினார். முன்னாலே திருமங்கையாழ்வானைப் பண்ணிவித் திருகையாலே திருமங்கையாழ்வா ரொழிந்த மற்றையாழ்வார் விக்ரஹங்களையும் ஏறியருளப்பண்ணினவைத்தார்.

இப்படி பாஷ்யகாரர்வைபவங்கள் அநந்தமுண்டு. இப்படிப்பட்ட பாஷ்யகாரர் திருவடிகளிலே ஆஸ்ரயித்தவர்கள்; கூரத்தாழ்வான், மாடப்பூசையாழ்வான், சேட்டலூர்கிரியாழ்வான். அனந்தாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான் அரணைப்புறத்தாழ்வான். நெய்யுண்டாழ்வான். உக்கலாழ்வான். கோமடத்தாழ்வான். வேதாந்தியாழ்வான். திருக்கோவலூராழ்வான். திருமோகூராழ்வான், கடிவிலாழ்வான். பிள்ளையாழ்வான். மிளகாழ்வான். காராஞ்சியாழ்வான். ஈயுண்ணியாழ்வான். கோயிலாழ்வான். அகளங்காட்டாழ்வான். முதலியாண்டான். பெரியாண்டான். சிறியாண்டான். ஈயுண்ணிப்பிள்ளையாண்டான் அம்மங்கியாண்டான் மாருதிப்பெரியாண்டான், மாதிருன்றில்லாமாருதியாண்டான். சோமாசியாண்டான். குருகைப்பூர் சிறியாண்டான். ஆளவந்தாராண்டான், அய்ப்பராண்டான். இடாம்பியாச்சான். அருளாளப்பெருமா ளெம்பெருமானார். ஆச்சி.எச்சான். சிறியாச்சான். கணிய ரூர்சிறியாச்சான். கொங்கிலாச்சான். சுச்சம்பாழியாச்சான். பொன்னுச்சான். அய்பாவிள்ளையாச்சான் தொண்டனூர்நம்பி. மருதூர்நம்பி மழவூர்நம்பி. சொட்டைநம்பி. குரவிநம்பி. திருக்குருங்குடிநம்பி. வங்கிப்புரத்துநம்பி. மூக்கைநம்பி. ஸ்ரீபராங்குசநம்பி. ஸ்ரீவில்லிபுத்தூர்நம்பி திருக்குருகூர்நம்பி. ஸ்ரீபராங்குசபட்டர். ஸ்ரீவேதவ்யாஸபட்டர். செருப்பள்ளிதேவராஜபட்டர். கோவிந்தபட்டர். திருவரங்கபட்டர். நம்பியூரில் ஸ்ரீரங்கராஜபட்டர். உள்ளூரில்பெரியபெருமாள்பட்டர். வரந்தரும் பெரியபெருமாள்பட்டர். அழகியமணவாளபட்டர். சட்டம்பள்ளிஸ்ரீயர். சுச்சம்பாழிஸ்ரீயர். சூலசேகரஸ்ரீயர். ஸ்ரீகோவிந்தராஜஸ்ரீயர். திருவெள்ளறைஸ்ரீயர். ஆள்க்கொண்டவில்லிஸ்ரீயர். திருமழிசைஸ்ரீயர். திருநாராயணபுரஸ்ரீயர். ஸ்ரீசாளக்கிராமஸ்ரீயர். திருப்புட்குழிஸ்ரீயர். திருமாலிருஞ்சோலைஸ்ரீயர். திருநாராயணபுரத்தரையர். திருவரங்கமாளிகையரையர். திருவாய்மொழியரையர். பெருமாளரையர். பிள்ளைதிருநறையூரரையர். திருக்குருங்குடியரையர். திருநகரியரையர். திருக்கண்ணபுரத்தரையர்.

திருமாலிருஞ்சோலையாயர். திருவனந்தபுரத்தாயர். ராஜமஹேந்திரப் பெருமாளாயர். ராஜநாராயணப்பெருமாளாயர். திருவரங்கமாளிகையாயர். பின்னவிழுப்புத்தூராயர். ஆள்க்கொண்டார். அம்மங்கியம்மாள். மும்மைபயம்மாள். பருத்திக்கொல்லையம்மாள் உக்கலம்மாள். சொட்டையம்மாள். ஆசூரிப்பெருமாள். திடாம்பிப்பெருமாள். அம்மங்கிப்பெருமாள். மூனிப்பெருமாள். பட்டினிப்பெருமாள். திருமலைகல்லான். எம்பார். காராஞ்சிலோமயாஜியார். பெரியகோயில்வெள்ளலார். அலங்காரவேங்கடவர். திருக்குறுகைப்பிரான்பிள்ளான். ஆர்க்காட்டுப்பிள்ளான். இராமானுஜப்பிள்ளான். திருநகரிப்பிளளான். கோமடத்தையன். வைத்தமாநிதி. சிரியய்யர். பெரியய்யர். அணியரங்கத்தமுதனார். திருவரங்கத்தமுதனர். குமாண்டூர் இளையவில்லி. குமாண்டூரில்பிள்ளை. கம்பிகருந்தேவர். (ஐம்பத்திருவர்.) எம்பெருமானார்செல்வப்பிள்ளை.

சாத்தாதமுதலிகள்:- ஸ்ரீசூலதேசகரப்பெருமாள்தாஸர். பட்டர்பிரான்தாஸர். பசைவில்லிதாஸர். ஸ்ரீவில்லிபுத்தூர்தாஸர். ஸ்ரீநாராயணதாஸர். ஸ்ரீகோவர்த்தனதாஸர். திருவழுதிவளநாடுதாஸர். ஸ்ரீராமானுஜதாஸர். பின்னையுரங்காவில்லிதாஸர். வண்டார். சொண்டர். இராமானுஜவேளைக்காரர். மழலைக்கூத்தமுதலிகள்:- மூவர். திருநாமம்:- யதிவரசூடாமணிதாசர். யதிதேசகரதாஸர். யதிராஜதாஸர். பாண்டியனட்டில் முதலிகள்:— மூவர். திருநாமம்:- மகிழலங்காரதாஸர். சடதேகபதாஸர். வானமாமலைதாஸர் கொங்கில்முதலிகள் மூவர் திருநாமம்:- அழகியமணவாளதாஸர். திருவேங்கடதாஸர் பேரருளாளதாஸர். ஸ்தானத்தாரில் சேணைதப்பம்மராயர். வீரசுந்தரப்பம்மராயர். ஜகந்நாதப்பம்மராயர். வீரராகவப்பம்மராயர். பிள்ளைதேவராஜர். பிள்ளையுரந்தையுடையார். திருமஞ்சனமெடுக்கும் தூயமுனிவேழம். ஸ்ரீபண்டாரம்நோக்கும் திருவரங்கமாளிகையார். ஆண்டவர் அரியவர். ஆக கருசு.

அம்மையாரில்-திருவனந்தபுறத்தம்மை. திருவாட்டாற்றம்மை. திருவண்பரிசாரத்தம்மை. மன்னூர்கோயில்போரேற்றம்மை. திருநறையூரம்மை. திருக்கண்ணபுரத்தம்மை. திருப்பதி ஸ்ரீகாரியஞ்செய்யுமம்மை. ஆண்டாளம்மை நாயகத்தேவியார். உய்யபெருந்தேவியார், பெரியபெருந்தேவியார். சிறியபெருந்தேவியார். ஸ்ரீபெரும்பூதூர் திருவரங்கம். திருக்குடந்தையில் தூயவாயிரம். கொங்கில்பெரியபிராட்டியார். அத்தழாய். அம்மங்கி. கூரத்தாண்டான். தேவகிப்பிராட்டியார். யதிராஜவல்லியார். (உ) பங்கயச்செல்வியார். பொன்னாச்சியார். இன்னிளவஞ்சியார். சூடிக்கொடுத்தாள். திருப்பாவைபாடினாள். (ரு) உடையவர்திருவடிகளை யாஞ்யித்தமுதலிகளில் எழுபத்தாறு ஸ்ரீமத்மாசாரதிபதிகள்:- ஆளவந்தார்குமாரர். சொட்டைகம்பி. அவர் குமாரர்-எச்சான். அவர்குமாரர்பிள்ளையப்பன். க. பெரியகம்பிகுமாரர்-புண்டரீகதாஸர். உ. திருக்கோட்டியூர்கம்பிகுமாரர்-தெக்காற்றான். ங. திரு

மாலையாண்டான்குமாரர்-சுந்தரத்தோளிணையான். சு. திருமலைராயபிகுமாரர்களில் ராமானுஜப்பிள்ளையும் திருமலைநம்பியும். நு. கூரத்தாழ்வான் குமாரர் பட்டரும் சோமப்பிள்ளையும். கூ. மூதலியாண்டான் அவர்குமாரர் கந்தாடையாண்டான். எ. கடிவிலாழ்வான். அ. கோமடத்தாழ்வான். கூ. திருக்கோவலூராழ்வான். ஐ. திருமோகூராழ்வான். ககூ. பிள்ளைப்பிள்ளையாழ்வான். கஉ. நடாதூராழ்வான் சஙூ. எங்களாழ்வான். கசு. அநந்தாழ்வான். கநு. மிளகாழ்வான். சசூ. நெய்யுண்டாழ்வான் கஎ. சேட்டலூர் சிரியாழ்வான். கஅ. வேதந்தியாழ்வான். ககூ கோயிலாழ்வான். உஐ. உக்கலாழ்வான். உக. அணைபுரத்தாழ்வான். உஉ. எம்பார். உஙூ. கிடாம்பியாச்சான் உசு. கணியனூர்சிறியாச்சான். உநு கொங்கிலாச்சான். உகூ. நச்சம்பாடியாச்சான். உஎ. திருமலைநல்லான். உஅ சட்டம்பள்ளி ஜீயர். உகூ. நச்சம்பாடிஜீயர். ஙஐ. திருவெள்ளைஜீயர். ஙக ஆள்கொண்டவில்லி ஜீயர் ஙஉ. திருநகரிப்பிள்ளை. ஙஙூ. காராஞ்சிலைமையாஜ்ஞையார். ஙசு. அலகாரவேங்கடவர். ஙநு. நம்பிகருந்தேவர். ஙகூ. செருப்பள்ளிதேவராஜபட்டர். ஙஎ. பிள்ளையுரந்தையுடையார். ஙஅ. திருக்குருகைப்பிரான்பிள்ளான் ஙகூ பெரியகோயில்வெள்ளலார். சஐ. திருக்கண்ணபுரத்தெச்சான். சக. ஆசூரிப்பெருமாள். சஉ. மூனிப்பெருமாள். சஙூ அம்மங்கிப்பெருமாள். சச. மாருதிப்பெரியாண்டான். சநு மாறனேற்றில்லாமாருதியாண்டான். சகூ சோமயாஜியாண்டான். சஎ. ஜீயராண்டான். சஅ. ஈசாண்டான். சஙூ. ஈயுண்ணிப்பிள்ளையாண்டான். நஐ. பெரியாண்டான். நக. சிறியாண்டான். நஉ. குஞ்சிப்பூர்சிறியாண்டான். நஙூ அம்மங்கியாண்டான். நச. ஆளவந்தாராண்டான். நநு அருளாளப்பெருமாள் எம்பெருமானார் நகூ. தொண்டனூர்நம்பி. நஎ. மருதூர்நம்பி நஅ. மழலூர்நம்பி. நஙூ. திருக்குருங்குடிநம்பி. சூ0. குரவிநம்பி. சூக. முடும்பைநம்பி. சூஉ. வடுகநம்பி. சூஙூ. வங்கிப்புரத்துநம்பி. சூசு. ஸ்ரீபராங்குசநம்பி சூநு. அம்மங்கியம்மாள். சூகூ. பருத்திக்கொல்லையம்மாள். சூஎ உக்கலம்மாள் சூஅ. சொட்டையம்மாள். சூகூ முடும்பையம்மாள். எ0. குமாண்டூர்பிள்ளை. எக. குமாண்டூர் இளைவில்லி, எஉ. கிடாம்பிப்பெருமாள். எஙூ. ஆர்க்காட்டுப்பிள்ளை. எசு. "రామానుజార్యాఙ్ఘ్రియుగాలిభాష్య మర్థంగహస్యంద్రమిళశ్రుతేశ్చ సంప్రాప్యతేనైవగురూక్తాంస్తా భజేచతుస్సప్తతిపీఠసంస్థా" என்றெல்லாரும் ஸ்ரீபாஷ்யப்ரவர்த்தகராயிருப்பர்.

(இவ்வளவே விஞ்ஞாக இந்த எழுபத்திநாலுபேரிலே எழுபத்தைவர் உடையவருக்குமுன்னே பாஷ்யஞ்செய்தவர்களென்றும் எழுபத்திரண்டாவர்தாமென்றும் எழுதிவைத்தது மிகவும் பொய்யென்று கொள்ளவேண்டியது.) இன்னும் பதினாராயிரம் உபவீததாரிகளான ஸ்ரீவைஷ்ணவர்கள். பன்னீராயிரம் திருநாமம் உபவீதமில்லாத ஸ்ரீவைஷ்ணவர்கள். எழுநூறு திருநாமம் உத்தமாச்ரமிகள். எழுநூறுதிருநாமம் அம்மையார்கள். இன்னுமிப்படி அனேக திருநாமங்களுண்டு.

இவர்கள் உடையவர் திருவடிகளிலேசெய்யும் அடிமைகள்வகை. கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் கடாதூராழ்வானும் டட்டவர்சக மும், ஸ்ரீபாஷ்யத்திற்கு உசாத்தாணையாயிருப்பார்கள். அருளாளப் பெரு மாளெம்பெருமானார் பேரருளாளருசகு திருவாராதநம் பண்ணிக்கொண்ட டிருப்பர். கிடாம்பிப்பெருமாளும் கிடாம்பியாச்சானும் திருமடப்பள்ளிக் குக் கடவராயிருப்பார்கள்.

வடுகநம்பி எண்ணெணக்காப்பு சாற்றியருளுவர். கோமடத்துகிரியாழ் வான் கலசப்பானையையும் ஸ்ரீபாதரக்ஷையையுமெடுப்பர். பிள்ளையுரங்கா வில்லிதாஸர் குருகூலம்நோக்குவர். அம்மங்கி, பாலமுதகாச்சுவர். உக்க லாழ்வான் ப்ரஸாதக்கலமெடுப்டா. உக்கலம்மாள், திருவாலவட்டம் பணி டாருவர்.மாறுதிப்பெரியாண்டான், திருக்கைச்சொம்புபிடிப்பர்மாறுண் றில்லாமாறுதிக் கிரியாண்டான், மடத்திற்கு அமுதுபடி சமையமுது பால முது நெய்யமுது முதலானவை நடத்திப்பொருவர், தூயமுனிவேழம் திரு மஞ்சனமெடுப்பர் திருவரங்கமாளிகையார் ஸ்ரீபண்டாரம்நோக்குவர். வண் டருடும், சொண்டருடும் கைக்காயிரம்பொன்னுக்கு ராஜஸேவைபண்ணி மடத்திற்குத் திருக்கைவழக்காக்கியருளுவர். ராமாநுஜவேளைக்காரா திரு மேனிக்காவலாய்ப் போறுவர். அகளங்கநாட்டாழ்வான் ப்ரதிபக்ஷநிரஸ னம்பண்ணிப்போறுவர், அனந்தாழ்வான் உடையவர்நியமனப்படி திரு மலையிலே திருநந்தவன கைங்காயம் செய்துக்கொண்டிருப்பர்.

பின்பொருநாள் முதலிகளெல்லாரும் பாஷ்யகாரர் புத்திரரான திருக் குறுகைப்பிரான் பிள்ளாணை யனுவர்த்தித்து ஆழ்வார்களருளிச்செயல்களி லுமும்பொருள்கள் தெறியும்படி வ்யாக்யாநஞ் செய்தருளவேண்டுமென்று உடையவரை வேண்டிக்கொள்ள வேணுமென்று பிள்ளாணுக்கு விண் ணப்பஞ்செய்ய, பிள்ளாணும் உடையவர் திருவோலக்கத்திலே யெழுந் தருளியிருக்கச்செய்தே தண்டம்ஸமர்ப்பித்து உடையவருக்கு இத்தைவிண் ணப்பஞ்செய்ய.உடையவரும் திருவுள்ளத்திலேவிசாரித்தருளி நாமேவ்யா க்யாநம்பண்ணினால் மத்யமதிகளுக்கு இதற்கு இவ்வளவே அர்த்தமுள்ள தென்று தோற்றுமாகில் நாமொரு வரம்புகட்டிதாமாகையாலே அபசார மாம். ஆகையாலே நீரொருபடி திருவாய்மொழிக்கு வ்யாகயாநம்பண்ணு மென்று நியமிக்க, திருக்குறுகைப்பிரான்பிள்ளாணும் யதிராஜ நநுமதி கொண்டு திருவாய்மொழிக்கு ஆரூயிரப்படி யுரைத்தருளினர். பின்பு சிறிதுநாளிலே ஆழ்வான் திருநாட்டிற் கெழுந்தருளினர். உடையவரும் மிகவுங் க்லேசித்து பட்டரையுஞ் சோமப்பிள்ளையையுங் கொண்டு ஆழ் வானுக்கு சரமகைங்கரியம் நடத்தியருளி பட்டரைக் கையைப்பிடித்துக் கொண்டுபோய் பெரியபெருமாள் திருவடிகளைக் காட்டிக்கொடுக்க, பெரு மாளுந் திரும்பவும் பட்டரை மஞ்சள்நீர்குடிப்பித்து புத்ரஸ்வீகாரம்பண்ணி யருளி பட்டரைப்பார்த்து நம்மை யாழ்வானாக நினைத்திருமென்றருளிச் செய்தார்.

பின்பு இலஙாளிலே முதலியாண்டான் குமாரரான கந்தாடையான் டான் பாஷ்யகாரனைமிகவுமுகப்பித்து தேவரீரவதரித்தருளின ஸ்ரீபெரும் பூதூரிலே யெல்லாக்காலத்திலும் யெல்லாருக்கும் சேவிக்கும்படி தேவரீ ருடைய வர்ச்சாவிக்ரஹ மேறியருளப்பண்ணவேணுமென்று விண்ணப் பஞ்செய்ய, பாஷ்யகாரரும் அதற்கனுமதிபண்ணியருள, கந்தாடையான் டானும் அப்பொழுதே அனுகூலனை ஸ்தபதியை யழைப்பித்து உடை யவருடைய திருமேனியை சேவிக்கப்பண்ணி அப்போதிருந்த வார்த்திக்ய வடிவை நன்முக ஒருவிக்ரஹமாக வெழுந்தருளப்பண்ணி உடைய வாஸன்னிதியிலே கொண்டுவந்தவைக்க, உடையவருங் கடாக்ஷித்து மிகவுமுகந்தருளி அந்தவிக்ரஹத்தை யாலிங்கனம்பண்ணி தம்முடைய ஸகலசக்தியையு மதிலேவைத்து புஷ்யமாஸத்தில் குருபுஷ்யத்திலே ப்ரதிஷ்டைபண்ணுவதாக நாளிட்டுத் திருமுகத்தைக்கொடுத்தருள ஆண் டானும் அத்தைப்பெற்று ஆதரத்துடனே அந்தவிக்ரஹத்தை ஸ்ரீபெரும் பூதூருக் கெழுந்தருளப் பண்ணிவித்துக்கொண்டுவந்து மூலவிக்ரஹத் தையு மேறியருளப்பண்ணிவித்து திருமுகப்படியே குருபுஷ்யத்திலே ப்ரதிஷ்டைபண்ணினபோது, அந்தநினத்திலே கோயிலிலே உடை யவர் திருமேனியிலே மிகவுக்களர்த்தியுண்டாக உடையவரும்தே தென்று நினைத்துப்பார்த்தவிடத்தில் கந்தாடையாண்டானுக்குத் திரு முகமிட்டுக் கொடுத்தாள் அந்நாளாயிருக்கையாலே மிகவும் ஆச்சர் யப்பட்டு ஆண்டானுக்குக் கடிகைக் கோயிலுக்கு வருவதென்று திருமுகம் அனுப்பியருள, கந்தாடையாண்டானும் அத்தைக்கண்டு கடிகைக்கோயிலுக் கெழுந்தருளி உடையவரைசேவித்துக்கொண்டிருந்தார். இப்படி பாஷ்ய காரர் அதிமானுஷ சரிதங்களைச் செய்துகொண்டு நூற்றிருபது திருநக்ஷத் திரம் எழுந்தருளியிருந்தார். இப்படி அவதரித்தருளின காரியந் தலைக்கட் டினவாறே உடையவருக்குப் பரமபதத்திலே திருவுள்ளஞ்சென்று முத லிகளெல்லாரையு மழைத்து பட்டரைக்காட்டிக்கொடுத்து இவரை நம் மைப்போலே பார்த்துக்கொள்ளுங்கோளென்று நியமித்து பட்டரைப் பெரியபெருமாள் ஸன்னிதிக்குக் கூட்டிக்கொண்டுபோய் முன்னுக பட் டருக்குத் தீர்த்தப்பிரஸாதங்களைப் பிரஸாதிப்பித்து பின்பு தாமுந் தீர்த்த ப்ரஸாத ஸ்வீகாரஞ்செய்து பட்டரைப்பார்த்து மேல்நாட்டிலே வேதாந்தி யென்றொரு பெரியவித்வானிருக்கிறான் என்று கேட்டோம்; நீரங்கே போய் அவனைத் திருத்தி தர்சநப்ரவார்த்தகராக்கு மென்றருளிச்செய்து, பட்டரைக் கூட்டிகொண்டு மடத்திற்கெழுந்தருளி, முதலிகளெல்லாரை யும் பார்த்து அருளிச்செய்தபடி:—இங்கிருக்கும்நாள் பண்ணுங் கைங் கரியமாறுண்டு. அதாவது ஸ்ரீபாஷ்யத்தை வாசித்தும் வாசிப்பித்தும் போருவது (க). திவ்யப்ரபந்தங்களையோதியு மோதிவித்தும் போருவது (உ). திவ்யதேசங்களிலே அமுதுபடிசாத்துப்படி முதலானவை கடத் திப்பொருவது (ங). திருநாராயணபுரத்திலே ஒரு குடிசையாகிலுங் கட் டிக்கொண்டிருப்பது (ச). திவயத்தை அர்த்தத்துடனே யநுஸந்தித்துப்

போருவது (ரு). ஒருபாகவதன் அபிமானத்திலே ஒதுங்கியிருப்பது (கூ). இப்படி ஆறுகைங்கரியங்களிலே கிடைத்தபடிசெய்துகொண்டு மூன்றப சாரமும் கிட்டாதபடி யிருங்கோளென்று நியமித்தருளி. நடாதூராழ்வா னைக் கடாக்ஷித்தருளி அவருக்கு ஸ்ரீபாஷ்யஸிம்மாஸநத்தைக் கொடுத் தருளி ப்ரபந்நபராய், மூக்ய ப்ரமாணமான ஆழ்வார்களுடைய ஸ்ரீ சூக்தி ஸிம்மாஸனத்தை பட்டருக்குக் கொடுத்தருளி. கந்தாடையாண்டானுக் குத் தஞ்சரமகைங்கரியத்தையும், தம்மைத் திருப்பள்ளிபடுக்குமிடத்திலே அர்ச்சா விக்ரஹத்தையேறியருளப்பண்ணும்படியையும்நியமித்துத் திருக் குறுகைப்பிரான் பிள்ளான் முதலானைமுதலிகளைப்பார்த்து பட்டருக்கு இஷ்டமாக விருங்கோளென் றருளிச்செய்து, கோயில் ஸ்தாநமையத்தி லுண்டானவர்களை யழைத்தருளி பட்டர்திருச்சையிலே காட்டிக்கொடுத் தருளி, இன்னுமிப்படி யனேகஞ் சொல்லவேண்டுவதில்லாஞ் சொல்லி யருளி, எழுபத்திரண்டு ஸிம்மாஸநாதிபதிகளைப் பார்த்தருளி, ஸ்ரீபாஷ்யம் வாசித்தும் வாசிப்பித்தும், திருவாய்மொழி வ்யாக்யாநம் வாசித்தும் வாசிப் பித்தும் போருங்கோளென்று நியமித்தருளி விசேஷித்து நடாதூராழ்வா னுக்கு ஸ்ரீபாஷ்யப்ரவர்த்தனமும் பட்டருக்கு ஸ்ரீஸூக்திப்ரவர்த்தனமும் நியமித்து பெரியபெருமாளுடைய தீர்த்த ப்ரஸாதங்களை ஸ்வீகரித்து ஆள வந்தார் திருவடிகளை த்யாநித்துச்கொண்டு சகவர்ஷம் ஆயிரத்தொண்பதா வதிலே பிங்களவர்ஷம் மாகமாஸத்திலே சுக்லபக்ஷதசமி திருவாதிரையில் மத்தியாநத்தில்(ஸ்ரீசேஷாவதாரமானபாஷ்யகாரர்) சேஷத்வடனே சேர் ந்தருளினார். (பரமபதத்திற் சென்றருளினார்) பின்பு பட்டர் கந்தாடை யாண்டான்முதலான முதலிகளெல்லாரும் மிகவுங் கிலேசித்துத் தெளிந்து பெரியபெருமாள் நியமனத்திலே ஆஜ்ரணத்திற்குள்ளே திருப்பள்ளி படித்துச் சரமகைங்கர்யம் செய்தார்கள். பெரியபெருமாளும் நாச்சிமா ருடனே திருமஞ்ஞங் கண்டருளி சுருளமுதுந் தவிர்த்தருளினர். பின்பு கந்தாடையாண்டான் நம்பெருமாள் நியமனத்துடனே திருப்பள்ளிபடுத்த விடத்திலே எம்பெருமாளுடைய அர்ச்சாவதாரத்திருமேனியை யேறி யருளப்பண்ணி ப்ரதிஷ்டைசெய்தருளினர். முற்காலத்திலே நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு உடையவருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைக் கொடுத்தருள, அந்த விகிரஹம் உய்யக்கொண்டார் மணக்கால்நம்பி ஆளவந்தார் திருக்கோட்டியூர் நம்பி அவர் குமாரத்தி அத்துழாயம்மன் இவர்களிடங்களிலே இருந்தது. பின்பு அத்துழாய்ம்மனை யநுவர்த்தித் துக் கிடாம்பியாச்சான் அந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைப் பெற் றிருந்தார். ஆகம்மாழ்வார் நாதமுனிகளுக்காக எறி யருளப்பண்ணின விக்ரஹம். (க) உடையவர்தாமே திருநாராயணபுரத்திலே ஐம்பத்திரு வருக்காக எறியருளப்பண்ணின விக்ரஹம். (க) கந்தாடையாண்டான் ஸ்ரீபெரும்பூதூரிலே ப்ரதிஷ்டைபண்ணின உடையவர் ஆலிங்கன விக்ர ஹம் (க). பின்பு சந்தாடையாண்டான் மூன்பு உடையவர் நியமனத்தி லும் பின்பு நம்பெருமாள் நியமனத்திலும் திருப்பள்ளி படித்தவிடத்

பழநடை விளக்கம்.

திலே எறி யருளப்பண்ணின விக்ரஹம் (க) ஆகவிக்ரஹங்கள் காலும் ஆதியிலே யுண்டானது. பின்பு கந்தாடையாண்டானும் பட்டரும் உடை யவருடைய திருவாதிரை திருநக்ஷத்திரத்தை மாஸந்தோறும் மஹோத் ஸவமாக நடத்திக்கொண்டிருந்தார்கள்.

பின்பு திருவேங்கடநாட்டிலிருந்த அனந்தாழ்வான் முதலானும், கிழக்குதிக்கி லிருந்த எச்சான்முதலானும், தெற்குதிக்கான பாண்டிய நாட்டிலிருந்த திருக்கோட்டியூர்நம்பி குமாரர் யாமுனாசார்யரும், சொக்கத் தேவர் திருமாலையாண்டான குமாரரான சுந்திரத்தோளுடையார் முதலா னோரும், மேல்நாட்டிலிருந்த சோமாசியாண்டான் மருதூர்நம்பி தொண்ட னூர்நம்பி முதலானோரும், மற்றுந் தேசாந்தரத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும், திரண்டு பெருங்கூட்டமாகக் கோயிலிலே வந்து உடை யவருடைய பிரிவாலே மிகவுங் க்லேசித்து பின்பு பட்டரை ஸேவித்து தங்கள் க்லேசமெல்லாந் தீர்ந்து பட்டரையே எம்பெருமானாராகக்கண்டு தங்களுக்கு வேண்டுமிஷ்டார்த்தங்களையும் கேட்டுக்கொண்டு அந்த உகப் பாலே "ப்ரமாணநகநிபிண்ணவாஸமத்தே பமஸ்துகः । ப்ராஜதேநிகமாந்தகுரு ராஜ ஸ்ரீப ராஸரகேஸரீ" என்றித்யாதியான க்லோகங்களையும் பட்டர் திருமுன்பே விண்ணப்பஞ்செய்து, அவரநுமதிகொண்டெல்லாருந் தங்களூருக்கெழுந் தருளினார்கள்.

இந்த க்லோகத்திற் கர்த்தமென்னென்றில்:-ப்ரத்யக்ஷப்ரமாணம், அநு மான ப்ரமாணம், வேதாதியான சாஸ்த்ரப்ரமாணம், இதுகளாகிற நகங் களாலே நன்றாகப் பிளக்கப்பட்ட ப்ரதிவாதிகளாகிற யானைகளுடைய மஸ்தகத்தை யுடையவராய், வேதாந்தங்களைச்சொல்லி கர்ஜித்துக்கொ ண்டு ஸ்ரீபராசரபட்டரென்றுஞ்சிங்கமானதுவிளங்குகிறது.என்று. இன்னு படி க்லோகங்களுக்கு அர்த்தங்கண்டுகொள்வது.

முன்புடையவர் நியமனத்தாலே திக்விஜய யாத்ரைபண்ணி சாரதா பீடத்திற்குப்போய் சாரதாதேவிக்கு ஸ்ரீபாஷ்யத்தைக் காண்பித்து அவ ளாலே ச்லாகிக்கப்பட்டு அவளநுமதிகொண்டு மீண்டுவருகிறபோது திரு வேங்கடமுடையானை சேவித்து வழியில் வருகிறபோது, ஓரிடச்சிக்கு மோக்ஷங்கொடுத்துகோயிலுக்கெழுந்தருளி உடையவரை சேவித்துநிற்க, உடையவருமுகந்தருளி வேதாந்தேதாதயனுசாயரென்று திருநாமஞ் சாற் றப்பட்டிருக்கிற கிடாம்பியாச்சான், ஒருநாள்பட்டர் ஆளவந்தார் ஸ்தோ த்ரத்தி லொருச்லோகத்திற்கு நன்றாகப்பொருள்சாதிக்கக் கேட்டருளி பட்டரிடத்திலே ஆசார்ய ப்ரதிபத்திபண்ணியருளினார்.

அப்போது கிடாம்பியாச்சானுடைய சிஷ்யர்கள் எதிப்படி செய்கிறீ ரென்றுகேட்க, அப்போதுகிடாம்பியாச்சான் சொன்னவார்த்தை:-பிள்ளை

கால் நீரறிந்திரீரோ ! உடையவரெங்களையெல்லாம் அழைத்தருளி நம்மிடத்திலே இருக்குமாப்போலே நீங்களெல்லாரும் பட்டரிடத்தி லிருங்கோளென்று நியமித்தாராகையால் நானிப்படிசெய்தேனென் றருளிச்செய்தார். பின்பொருநாள் பட்டர்திருநெடுந்தாண்டகத்திலேயொருபாட்டிற்கு இனிதாகப்பொருளுரைக்கக் கேட்டருளி திருவரங்கப்பெருமாளரையர் மூன்பொ ராசார்யரிடத்திலும் இப்படி பொருள்கேழ்க்கப்பெற்றதில்லை; இப்பொழுது பட்டரிடத்திலே இது கேட்கப்பெற்றோமென்றருளிச்செய்து பட்டரிடத்திலே ஆசார்யப்ரபத்திபண்ணியருளினார். பின்பொருநாள் பட்டருடனே அனேகவித்வான்கள் வந்துதர்க்கிக்க, பட்டரும் அவர்களெல்லாரையும் ஜயித்தருளினார். பின்னையுமவர்கள் பட்டருடைய ஸர்வக்ஞதையைப் பரீக்ஷபண்ணவேணுமென்று நினைத்து ஒருகுடத்திலேயொருபாம்பை யடக்கிக்கட்டி. இக்குடத்திலேயிருக்கிறவஸ்துவென்னென்றுகேட்டார்கள். பட்டரும் இதிலேபெருமாளுடைய திருவெண்குடையிருக்கிறதென்ன, அவர்களுச்சிரித்து குடத்துக்கட்டை விட்டவளவிலே பாம்புபுறப்பட்டது இதகுடையோவென்றுகேட்டார்கள், பட்டரும், சென்றூற்குடையாமென்றுபூர்வாரருளிச்செய்கையாலே குடையன்றோவென்ன, அவர்களும் பட்டர் ஸர்வக்ஞரென்று ஆச்சர்யப்பட்டுப்போனார்கள்.

பட்டர் சப்தாதிவிஷயங்களிலே அத்யந்தம் விரக்தராயிருக்கிறபடி கண்டு இதை நன்றாகத் தெறிவிக்கைக்காகச் சிலர் பட்ட ராமுதுசெய்கிறபோது செய்யமுதென்று வேப்பெண்ணையைப் பரிமாற, பட்டரும் ஒரு விகாரமின்றிக்கே முகமலர்த்தியோடே அமுதுசெய்தருள, எல்லாரும் அதுகண்டு இவர் ஜீதேந்த்ரியரென்று ஆச்சர்யப்பட்டார்கள்.

பின்பு பட்டர் ஸ்ரீ பாதத்துமுதலிகளுடன் பெருங்கூட்டமாக வெழுந்தருளி யிருந்து தர்சநம் நிர்வஹிக்கிறபோது ஒரு தீர்த்தவாஸிப்ராம்மணன் வந்து பட்டரை ஸேவித்து இவர் வேதாந்தப் பொருளுரைக்கிற சாதுர்யத்தையும், சோஷ்டியில் வைபவத்தையுங் கண்டு, பட்டரே ? மேல்நாட்டில் வேதாந்தியென்றொரு பெரிய வித்வானிருக்கிறான். அவனுடைய வித்யையுங் கோஷ்டியும்போலே யுமக்குமிருந்ததென்ன; பட்டரும் அது கேட்டு அப்படியுமொரு வித்வானுண்டோவென்ன உண்டென்றுசொல்லி, அந்த ப்ராம்மணன் மேல்நாட்டிற்குப்போய் "வேதாந்திகளே ? உம்முடைய வித்யைக்கும் கோஷ்டிக்கு மீடாயிருப்பா ரொருவர் ஸ்ரீரங்கத்திலே பட்டரென்றிருக்கிறாரென்ன, வேதாந்திகளும் பட்டர் நமக்கீடாவென்ன, அவரும் பட்டர் உம்மிலும் எதிப்பாயிருப்பரென்ன, வேதாந்திகளும் பட்டருக்கு எந்த சாஸ்த்ரம்வருமென்ன, ப்ராம்மணனும் சப்தாதிக்முதலான ஸகல சாஸ்த்ரங்களும் வருமென்ன, வேதாந்திகளுங் கேட்டு இந்த உலகத்தில் நமக்கொருவருமெதிரில்லையென்று ஆறுசாஸ்த்ரங்களுக்கு

மாமுஸலமிட்டு, அதின்மேலே உன்னதமாக விருந்தோம்; பட்டர்கம்மிலும் அதிகரென்று ப்ராம்மணன் சொன்னனென்று அன்றுதுடங்கி வேதாந்தி திகிக்கிட்டிருந்தான். பின்பந்த ப்ராம்மணன் கோயிலுக்குவந்து பட்டர் ஸந்நிதியிலே நின்று பட்டரே? உம்முடைய வைபவங்களெல்லாம் வேதாந்திகளுக்குச் சொன்னேனென்று சொன்னன். பட்டரும் ப்ராம்மணனைக் குறித்து அதற்கு வேதாந்திகள் என்சொன்னனென்று கேழ்க்க, வேதாந்திகள் பட்டருக்கு எந்த சாஸ்த்ரம் வருமென்று கேட்டான்; பட்டருக்கு சப்ததர்க்க முதலான ஸகலசாஸ்த்ரங்களும்வருமென்று சொன்னேனென்று ப்ராம்மணன் சொல்ல, பட்டரும், ப்ராம்மணா? நீ குறையச் சொன்னாய்; பட்டருக்குத் திருநெடுந்தாண்டகம் வருமென்று வேதாந்திகளுக்குச் சொல்லாதிருந்தா யென்று சொல்லிப்போகவிட, ப்ராம்மணனும்போய் வேதாந்திகளுடனே இச்செய்தியைச்சொன்னன். வேதாந்திகளுக் திருநெடுந்தாண்டகமென்கிற சொல்லுக்கே பொருள்தெறிகிறதில்லை; அவரெப்படிப்பட்டவரோ வென்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டிருந்தான்.

பின்பு பட்டரும், உடையவர் நியமித்தபடி வேதாந்திகளைத் திருத்த வேணுமென்று நினைத்தருளி பெரியபெருமாளைசேவித்துத் தம் நினைவை விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் திருவுள்ளமுகந்து கனகப்போய் வேதாந்தியைத் திருத்திக்கொண்டு வாருமென்று அருளிச்செய்து தமக்கு பட்டர் குமாரராகையாலே எல்லாருக்கு மிவர் ராஜகுமாரரென்று தோற்றும்படியாக ஆபரண வஸ்த்ராதிகளையும் நிருத்த (நृத்) கீதவாத்யங்களையும் தம்முடைய ஸகல பரிகரங்களையும் கூட்டி விடைகொடுத்தருளினர். பட்டரும்புறப்பட்டு திருக்காவேரிக்கரையிலே சிறுப்பத்தூரண்டையிலே நின்றபோது அவ்வூரி லெழுந்தருளியிருக்கிற அனந்தாழ்வான் இதுகேட்டுப் புறப்பட்டுத் திருக்காவேரிக் கரையிலே பட்டரைக் கண்டு ஸேவித்து, ஐயோ! சுந்தரகுமாரரான நீர் காட்டிலும் மலையிலும் இத்தனைதூரமெழுந்தருளலாமோவென்ன, பட்டரும் அனந்தாழ்வான் திருவடிகளிலே விழுந்து ஸேவித்து எம்பெருமானார் நியமித்தருளினபடியே நம்பெருமாளும் விடைஸாதித்து வேதாந்தியைத் திருத்தினைப்பதாக அடியேனை யனுப்பி யருளினரென்று விண்ணப்பஞ்செய்தார்.

அனந்தாழ்வானும் மிகவுமுகந்து எங்கள் குடிக்காரசே! வாருமென்று பட்டரையெடுத்து அணைத்துக்கொண்டார். அகையாலே பட்டருக்கு எங்கள் குடிக்கார சென்று திருநாமமுண்டாயிற்று. பின்பு அனந்தாழ்வான் பட்டருடனே கூடப்புறப்பட்டு பட்டரை யதுகரிக்கு எழுந்தருளவித்துக்கொண்டுபோய் திருக்கல்யாணியிலே நித்யங்களைச்செய்தருள, அங்கிருக்கிற வைம்பத்திருவர் முதலான வெல்லாரும் ஸ்ரீசடகோப மெழுந்தருளப்பண்ணிவித்துக்கொண்டு எதிர்கொள்ள, பட்டரும் ஸேவித்துக் கோயிலுக்குள் ளெழுந்தருளி உடையவரை ஸேவித்து ஆழ்வார்களையும் ஸேவித்து,

செல்வப்பிள்ளையையும் வைவித்துப் பின்புள்ளேசென்று திருநாரணனை வைவித்து ஸகலவரிசைகளையும் பெற்று, அவரனுமதிகொண்டனந்தாழ்வா னுடனே புறப்பட்டு வேதாந்தி யிருக்கிறவூருக்கருகேவந்தவாறே ஆழ்வான் குமாரர் பட்டர்வந்தார், அணியரங்கன் குமாரர் பட்டர்வந்தார், வேதாந்தா சார்யர் பட்டர்வந்தார், வேதியர்கள் தனித்தலைவன் வந்தார், பராசரபட் டர்வந்தார, பரவாதி மதஹரஸ்தி பஞ்சாननன் வந்தார், என்று பலவிருது கூறு மூதிக்கொண்டு பெரியவாரவாரத்துடனே எழுந்தருளிக்கொண்டிரா னின்றார்.

அப்போ திரண்டு ப்ராம்மணரெதிரேவந்து பட்டரைப்பார்த்து, பட்டரே! நீர் அனேகசம்ப்ரமத்துடனே எங்கே எழுந்தருளுகிறீரென்ன, பட்டரும் நாம் ஸ்ரீரங்கபட்டர், வேதாந்திகளுடனே தர்க்கிக்கபோகிறே மென்ன, அந்த ப்ராம்மணர் சொன்னது:—நீரிப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினால் வேதாந்திகளை யுமக்குக்காணப்போகாது; அவர் திருவரங் திற்குள்ளே யிருந்துவிடுவர்; அவருடைய சிஷ்யரும் ப்ரசிஷ்யரும் தலை வாசலிலே யிருந்து காலாறுமாஸம் தர்க்கித்து வந்தவர்களையுள்ளேபோக வொட்டார்களென்று சொல்ல, பட்டரும், அந்த ப்ராம்மணரைப்பார் த்து ஆகில் நாம் வேதாந்திகளைக் காணுமுபாயமென்னென்ன, அதற்கு ப்ராம்மணர் சொன்னது:—வேதாந்திகள் அபாரமாக ஸத்ரபோஜனம் பண்ணிவைப்பர். அந்த ஸத்ரத்திலே புகுக்கும் ப்ராம்மணர்களோடே கலகி, அந்த ப்ராம்மணவேஷத்தையும் தரித்துக்கொண்டு உள்ளேசென் றால் வேதாந்திகள் அங்கே புகுக்கிறவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பர். அங்கே வேதாந்திகளைக் காணலாமென்று சொன்னார்கள். பட்டரும் அத்தைக்கேட்டு இவர்கள்சொன்னது காரியமாயிருந்ததென்று திருவுள் ளம்பற்றி தம்மூடைய பரிகரத்தையெல்லாம் ஊருக்கு தூரே நிறுத்தி திரு வாபரணங்களையுங் களைந்துவைத்து (அரசிலையின்கொத்தை பிடுக்கிக்கொ ண்டு)காவிவேஷ்டியுந்தரித்து ஒருகமண்டலுவையுந் தூக்கிக்கொண்டு அந் தாழ்வானுந் தாமுமாய் உள்ளேபுகுர, வேதாந்திகளும் ப்ராம்மணர்புகுக் கையைப் பார்த்துக்கொண்டி ஒருமண்டபத்திலே ஆழ்ஸனமிட்டு அதின் மேலேயிருக்க, ப்ராம்மணரெல்லாரும் ஸத்ரசாலையிலேபுகுர, பட்டர் அங்கே போகாமல் வேதாந்திகளைநோக்கி யெழுந்தருள, வேதாந்திகளும் பிள்ளை இங்கென் வருகிறீரென்ன? பட்டரும் பிக்ஷைக்கு வருகிறேனென்ன, வே தாந்தியும்எல்லாருமுண்கிறவிடத்தே பிக்ஷைக்குப் போகிறென்ன, எனக்கு அன்னபிக்ஷையன்றென்ன, வேதாந்திகளும் இவர்ஸத்ரபோஜியாரையும் சிறிது வித்வாரூக்க கூடுமென்று நினைத்து "காபிக்ஷா" (కాభిక్షా) வென்ன பட்டரும் தர்க்கபிக்ஷாவென்ன, வேதாந்திகளும் இத்தைக் கேட்டு திடுக் கிட்டு மூன்பு தீர்த்தவாஸி ப்ராம்மணன் சொல்லியிருந்த பட்டரல்லது நம்மூன்னே யொருவரு மிப்படிதர்க்கபிக்ஷை கேட்கமாட்டார்கள், ஆகையால் இந்த வேஷம் கார்ப்பண்யமாக யிருந்தேயாகிலும் இவர்

பட்டராகவேணுமென்று நிச்சயித்து நீர்பட்டரோவென்று கேழ்க்க, இவரும் ஆமென்று அந்தவேஷத்தைக் குலைத்துக்கொண்டு மஹாவேகத்திலே உபன்யஸித்தருள, வேதாந்திகளும் பட்டர் வைபவங் கேட்டிருந்தும் இவர் வித்யாமாஹாத்ம்யங் காணவேணுமென்று இவருடனேதர்க்கிக்க, இப்படியொருவர்க்கொருவர் மதயானைகள் போர்செய்யுமாப்போலே தர்க்கிக்க, இப்படி ஒன்பதுநாள்சென்றபின்பு பத்தாவதுநாள் பட்டர் மாயாவாதஸித்தாந்தத்தைப் பலமுகமாகக் கண்டித்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்க, இதைக்கண்டு வேதாந்திகளெழுந்திருந்துநின்று நடுங்கிவேறொன்றுஞ் சொல்லாதே "மனுஷ்யமாத்ரமோ வென்றிருந்தேன் நம் பெருமாளே நீர்" என்றுசொல்லி பட்டர் திருவடிகளிலே அடவுகட்டவிழ்ந்து ஸேவித்து அடியேனை யிரக்கியருள வேணுமென்று மிகவும் வேண்டிக்கொண்டான். பட்டரும் தாமெண்ணினகாரியம் கடிகபலிக்கையாலே மிகவுமுகந்து வேதாந்திகளுக்குத் தப்தாதி பஞ்சஸம்ஸ்காரங்களைப் பண்ணி பாகவதோத்தமராக்கி வேதாந்திகளைப்பார்த்து தெளிச்செய்தது:— வேதாந்திகளே ? நீர் ஸர்வக்ஞராயிருந்தீர் ; நாமுமக்கு விஸ்தரித்துச் சொல்லவேண்டியதில்லை; விசிஷ்டாத்வைதமேபொருள். நீர் மாயாவாத வாஸனையைவிட்டு திருமால் திருவடிகளைப்பற்றி ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தையே நிர்வஹித்துக்கொண்டிருமென்றருளிச்செய்து ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்கள் காலாயிரமும் ஓதும்படி நியமித்தருளிப் புறப்படுகிறபோது பட்டருடைய பரிகரமெல்லாம்வந்து பட்டரைச்சூழ்ந்துகொண்டு ஸர்வாபரணங்களாலும் பூஷித்து உபயசாமரம் முதலானது பணிமாறி ஸகலவாத்யங்களும் முழங்கி திருச்சின்னம் பணிமாறப் புறப்படக்கண்டு வேதாந்திகள் பட்டர் திருவடிகளிலே விழுந்து ஸ்ரீமாணை தேவரீர் எனக்காக கார்ப்பண்ய வேஷத்தைக்கொண்ட விந்தக்லேசம் அடியேனுக்குப்பொறுக்கப்போகிறதில்லை யென்று சொல்லி வாய்விட்டழுதுகொண்டு கிடக்க, பட்டரும் வேதாந்திகளை முடிபிடித்தெடுத்துநிறுத்தித் தேற்றி நீரிங்கேதியரை ஆராதித்துக்கொண்டிருமென்றருளிச்செய்து கோயிலுக்கெழுந்தருளி பெரியபெருமாளை ஸேவிக்க, பெரியபெருமாளும் பட்டருக்கு ஸகலவிணைகளையும் தீர்த்தரும் சடகோபனும் ப்ரஸாதித்து திருமாளிகையிலே போகவிட்டருளினர்.

பின்பு பட்டரும் திருமாளிகையிலே யெழுந்தருளியிருந்து தர்சந நிர்வாஹஞ் செய்துக்கொண்டு ஸுகமாக வெழுந்தருளியிருந்தார். இப்படி மஹாவாதிகளா யிருக்கிற அந்ய ஸித்தாந்தாதிபதிகளை வாதத்திலேஜயித்து திருத்தி தர்சநப்ரவர்த்தகராம்படி பண்ணுகிற மாஹாத்ம்யம் பாஷ்யகாரருக்கும் பட்டருக்குமே யுண்டு ; மற்றொருவருக்குமில்லை.

பின்பு மேல்நாட்டிலே வேதாந்திகள் தென்கரை யென்கிறவூரிலே தநியாராதனம் பண்ணிக்கொண்டிருக்கிறகாளிலே இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமாளிகைக் கெழுந்தருளி பசிநலியா நிற்கிறதென்றுசேழ்க்க,

வேதாந்திகளுடைய தேவிகளிருவரும் உங்கள் வேதாந்திகள் தீர்த்தமாடப் போனார்; இங்கேயொன்றுமில்லை, நீங்களங்கே போங்கோ வென்று சொல்லி யனுதாபணண்ணினார்கள். அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் வேதாந்திகளண்டையிலேவந்து இத்தை யறிவித்தார்கள். வேதாந்திகளுமதுகேட்டு வெறுத்துக்கொண்டு திருமாளிகைக் கெழுந்தருளி தேவிகளிருவரையுங் கோபித்துக்கொண்டு அப்போதே கோயிலுக்குப் புறப்பட நினைத்தார். அங்குள்ளவர்கள் வேதாந்திகளைப்போகவொண்ணுதென்று தடைகந்தார்கள். வேதாந்திகளுந் தமக்குண்டான வளவற்றதனங்களை மூன்றுகூறிட்டு ஓரண்டுகூறு இரண்டு தேவிகளுக்குக் கொடுத்து மற்றொருகூறைத் தம்முடைய வாசார்யருக்காக வெடுப்பித்துக்கொண்டு தம்முடைய தேசத்தை விட்டு வந்து உத்தமாச்ரமத்தைப்பெற்று திருக்காவேரிக்கரையிலே திருப்பத்தூரிலேவந்து அநந்தாழ்வானை ஸேவித்து அவரருளிசெய்த ஹிதத்தை யநுஸந்தித்துக்கொண்டுகோயிலுக்கெழுந்தருளிபட்டர்திருவடிகளை ஸேவித்தார். பட்டரும் மிகவுமுகந்தருளி நம்முடைய ஜீயர் வந்தாரென்று வாரியெதிர்தணைத்துக் கொள்ளுகையாலே வேதாந்திகளுக் கன்றுமுதல் நஞ்சீயரென்று திருநாமமுண்டாயிற்று. முன்பு மாதவாசார்யரென்று நாமதேயம். பின்பு வேதாந்திகளென்று நாமதேயம். இப்போது நஞ்சீயரென்று திருநாமம். நஞ்சீயரும் பட்டரைஸேவித்துக் கொண்டுவந்ததனங்களைத் திருவடிகளிலே ஸமர்ப்பித்து பட்டரைப்பிரியாமல் அடிமைசெய்துக்கொண்டு பட்டரருளிச்செய்த தர்சநார்த்தங்களைக் கேட்டுக்கொண்டெழுந்தருளி யிருந்தார். பின்பு சிலநாளிலே பட்டர் நஞ்சீயர் முதலான முதலிகளுடனே கூடப்புறப்பட்டருளி திருவனையாழித்திரும்பி யெழுந்தருளுகிறபோது சாயங்காலமானவாறே பாதரி யென்கிறவூரிலே ஒரு வேடன்வீட்டிலே இராத்திரி தங்கியிருக்கிறபோது பட்டர் அந்தவேடனை இங்கு விசேஷமென்னென்று கேட்டருள, அதற்கு வேடன் விண்ணப்பம்:—நாயனேன் காட்டிலே வேட்டைக்குப்போனேன்; அங்கேயொரு மூசற்குட்டியைக் கண்டுபிடித்தேன்; அதில் தாயானது என் முன்னே வந்து வழியிலே எதிரே கும்பிட்டுக்கொண்டு கிடந்தது. அத்தைக்கண்டனக் கிறக்கம்பிறந்து அதின் குட்டியை விட்டுவந்தேன் என்றுசொன்னேன். அத்தை பட்டர்கேட்டருளி இந்தவேடனுக்கிப்படி சரணாகதியிலே யிரக்கம்பிறந்தபடி கண்டபடியால் எம்பெருமானுக்குச் சரணாகதனிடத்திலே இரக்கம் பிறக்கைக்கொரு சாஸ்த்ரம் தேடவேண்டுவதில்லை யென்றருளிச்செய்து பொழுதுவிடிந்து புறப்பட்டு கோயிலுக் கெழுந்தருளினார்.

பின்பொருநாள் பட்டர் நஞ்சீயரை யழைத்துத் திருவாய்மொழியிலொருபாட்டிற்கு இயல் சொல்லச்சொல்ல, நஞ்சீயரும் தாம் த்ரவிடராய்த் த்ரவிடபாஷையிலே நிபுணரா யிருக்கையாலே இனிதாக வியல்சொல்ல, பட்டர் அத்தைக்கேட்டருளி மூர்ச்சித்தார். நஞ்சீயரும்பயப்பட்டு இயலை நிறுத்தி பட்டருக்கு மூர்ச்சைதெளித்தவாறே இப்படி கோமளமான திரு

வுள்ளத்திற்கு இயல்கேழ்க்கக்கூடுமோவென்று விண்ணப்பஞ் செய்தார். அக்காலத்திலே ஆழ்வான் சிஷ்யனான வீரசுந்திர ப்ரம்மராயன் பெருமாளுக்குத் திருமதிள் கட்டிவைக்கிற நேரிலே ஆழ்வானுடைய சிஷ்யரான பிள்ளையாழ்வானுடைய திருமாளிகை அகப்பட, அத்தையிழித்து மதிள் கட்டவேணுமென்று வீரசுந்திரன் சொல்ல, பட்டரும் வீரசுந்திரனுக்குச் சொன்னது:—உன் திருமதிளோபெருமாளுக்கு ரக்ஷகம்? பிள்ளைப்பிள்ளையாழ்வான் மாஹாநுபாவனுகையாலே அவர் மங்களாசாஸநமே ரக்ஷகம்; ஆகையாலவர் திருமாளிகை தப்ப ஒதுங்கவிட்டு மதிள் கட்டுவைக்கவேணும். முன்பு திருமங்கையாழ்வார் மதிள்கட்டிவைக்கும்போது தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைகட்டிவைக்கிற விடத்தைத்தப்ப ஒதுங்கவிட்டுத் திருமதிள்கட்டினாரே, நீயுமப்படியே செய்யவேணுமென்றருளிச் செய்தார். வீரசுந்திரனும் பாகவதவிரோதமென்றுபாராதே ஆசார்யபுத்ரனென்றுமஞ்சாதே அவர்வார்த்தையை அதிக்ரமித்துப்பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகையை யிழித்துத் திருமதிள்கட்டிவைத்து அதுமூலமாக பட்டரையுங் கோயிலிலே யிருக்கவொட்டாதபடி கலிய, பட்டர்கோயில் நின்றுப்புறப்பட்டு திருக்கோட்டியூருக் கெழுந்தருளுகிறபோது கஞ்சீயருந்துடர்ந்து தேடிக்கொண்டுபோய் பட்டரைக்கண்டு அழுமைசெய்ய, கஞ்சீயருடனேகூடத் திருக்கோட்டியூருக் கெழுந்தருளி யிருக்கிறபோது ஒரு ஸ்ரீவைஷ்ணவர்பட்டரைசேவித்து அழுயேனுக்குத் திருவிருத்தமென்கிற திவ்ய ப்ரபந்தத்திற்கு அர்த்தமருளிச்செய்ய வேணுமென்று மிகவும்வேண்டிக்கொண்டார். பட்டரும் கஞ்சீயரைப்பார்த்து ஜீயரே?எனக்குக்கோயிலையும் பெருமாளையும் விட்டுப்பிரிந்த க்லேசாதிசயத்தாலே செவிகள் சீபாயாணின்றது; ஆகையாலே எனக்கு வாய்திறந்து ஒருவார்த்தை சொல்லப்போகிறதில்லே, நீரிவருக்குத் திருவிருத்தத்திற்கோருரு அர்த்தஞ் சொல்லுமென்று நியமிக்க, ஜீயரும் அப்படி நடத்திக்கொண்டு வருகிறவளவிலே பட்டர் திருவுள்ளத்தைத் கலக்கின வீரசுந்திரன் மறித்தானென்று பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருக்கோட்டியூருக்குவந் தருளிச்செய்ய, பட்டருங்கேட்டு ஸந்துஷ்டராய் பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருவடிகளை அழுக்கழுக்குவணங்கி, அவருடனேகூட திருக்கோட்டியூரில்நின்றும் புறப்பட்டருளி கோயிலுக்கெழுந்தருளி, பெருமாளையும்ஸேவித்து. தர்சநத்தையம் நிர்வஹித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார். பின்பொருநாள் பட்டர் பெரியபெருமாளை ஸேவித்துநிற்க, பெரியபெருமாள் பட்டருக்கருளப்பாடிட்டு, உடையவர் ஸ்ரீபாஷ்யமும் கீதாபாஷ்யமுஞ் செய்தருளினார். நீர் நம்முடைய ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யஞ்செய்யுமென்று நியமித்தருள பட்டரும் பெரியபெருமாள் நியமித்தபடியை அகப்பிலே தோற்றுவித்து மிகவுஞ் சதிருடனே ஸஹஸ்ரநாமபாஷ்யத்தைச் செய்தருளினார்.

பின்பொருநாள் பட்டர் உடையவருக்குப் பின்புள்ளராய் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ப்ரவர்த்தகரான நிகில பூர்வாசார்யர்களுக்கும்

1292/2
LIB

தாம் ஆசார்யராகையாலே அஷ்டாக்ஷரமென்று மூதலிலே மந்த்ரவ் யாக்யானத்தை யருளிச்செய்தார். இந்தவ்யாக்யானமே யெல்லாருஞ் செய்த மந்த்ரவ்யாக்யானங்களுக்கு மூன்னூலாயிருக்கும். முன்பு உடையவ ரிவருக்குச்சாத்தியிருந்த வேதாந்தாசார்யனென்கிற திருநாமத்தை யிவரு டைய சாயையைச் சிறிதுபெற்றிருக்கிற தூப்பில்பிள்ளைக்குப் பெருமாள் ஸாதிக்கையாலே அவர்க்கு வேதாந்தாசார்யனென்கிற திருநாமமுண்டாகப் போகிறது.

தூப்பில்பிள்ளை பட்டருடைய சாயையைச் சிறிது அனுஸரித்திருக்கு மென்கிறதில் ப்ரமாணம்:—தூப்பில்பிள்ளைவிஷயமான எழுபது ச்லோ கத்திலேயிருக்கிற "వేదాన్త దేశికోయం సూక్తిరనుసరతికూరనాథసుతమ்." என்கிற ச்லோகம். இதற்குப்பொருள்:—தூப்பில்பிள்ளையான வேதாந்தா சார்யரானவர் கல்லகவிகள் சொல்லுமிடத்தில் கூறத்தாழ்வான்மகனை பட்டரைச் சிறிதநுஸரித்திருக்கிறாரென்று. ஆகவிப்படி ஸகலபூர்வாசார்யர் களைக்காட்டிலும் மிகவும் மாஹாத்மயத்தையுடைய பட்டரருளிச்செய்த ப்ரபந்தங்கள்:—ஸஹஸ்ரகாமபாஷ்யம், அஷ்டாக்ஷரமென்கிற மந்த்ரவ் யாக்யானம், தத்வரத்நாகரம், ப்ரணவவிவரணம், ஸ்ரீகுணரத்நகோசம், ஸ்ரீரங்கராஜஸ்தவம், க்ரியாதீபம், தத்வத்ரயச்லோகம் இத்யாதி, பட்ட ருடையவைபவம் ரகுநாதசரிதம்போலே மிகவும் பரந்திருக்கும். ஆகிலும் சிறிதெழுதிற்று.

பட்டர், கஞ்சியருக்குப் பிள்ளாணூறாயிரமும் கன்றுகப்ரஸாதித்தருளி னர். கஞ்சியருமத்தை கன்றுகவதிகரித்தபட்டரணுகிகொண்டு ஆறுயிரப் படிக்கு விவரணரூபமாய் ஒன்பதினாயிரப்படியாசத் திருவாய்மொழிக் கொரு வ்யாக்யானஞ் செய்தருளினர். பின்பொருநாள் பட்டருக்கு இருபத் தெட்டாவது திருநக்ஷத்ரத்திலே கார்த்திகைமாசத்திலே சுக்லபக்ஷத்தில் த்வாதசியி னன்று வராஹபுராணைத்திலே கைசிகமாஹாத்மயமென்கிற வத் யாயத்தை பட்டர் வாசித்தருளாநிற்கச் செய்தே என்றையும்போலன் றியே ஒருபதத்திலே நின்று பலமுகமாக தாத்பர்யங்களை யருளிச்செய்கிற படிகளைக்கண்டு பெரியபெருமாள் மிகவுமுகந்துதாம்சாற்றியிருந்ததிருமாலை திருப்பரியட்டம், திருவாபரணம்முதலானதையும், தாமெழுந்தருளியிருக் கும் திவ்யஸிம்மாஸனத்தையும் பட்டருக்கு ஸம்மானமாகக் கொடுத் தருளி, பின்னையும் ஸந்தோஷாதிசயத்தாலே கொடுப்பது தெறியாமை பட்டு, பட்டரே? உமக்கு மேல்வீடுதந்தோமென்று அருளிச்செய்ய, பட்ட ரும் மஹாப்ரஸாதமென் றங்கீகரித்தருளினர். அப்போதிருந்த பெருங் கூட்டத்திருவாலக்கமானதுகடல்சூழ்ந்பினப்போலேசூழ்ந்திருக்கிட்டு நின்றது. பட்டரும் ஆனந்தத்துடனே பெருமாளை ஸேவித்துப் புறப்பட பெருமாள் தம்விளைசகளெல்லாவற்றுடன் ப்ரம்மரதம் பண்ணிவைத்து கோயிலனைத்துக் கொத்தும் அகில ஸ்ரீ வைஷ்ணவர்களும் எல்லாவாசாரி

யர்களும் மற்றுமுள்ள விப்ரவர்க்கமும் திரண்டு சூழ்ந்து ஸேவித்துக்கொ
ண்டிவர, திருமாளிகையிலேயெழுந்தருளி தாயாரானவாண்டாளை ஸேவிக்க,
ஆண்டாளும் ''நலமந்தமில்லதோர் நாடுபுகுவீரென்று'' ஆசீர்வதித்தாள். அதா
வது:—எல்லையில்லாத ஆனந்தத்தையுடைய பரமபதமாகிற நாட்டிலே
புகப்பெறுவீரென்றபடி. பட்டரும் அதற்கு ''அம்மா வடியேன்வேண்டுவ
தீதே'' என்று உகந்தருளி திருப்பதிகளுள்ளவர்களெல்லாரும் திருமாளிகை
யிலே அமுதுசெய்தருளின பின்பு பெருங்கூட்டமாக வெழுந்தருளியிருந்து
என்றையும்போலே திருநெடுந்தாண்டகத்திற்கு அர்த்தமருளிச்செய்யா
நிற்கச்செய்தே ஸ்ரீ வைகுண்டநாதன் பெரியதிருவடிமேலே எழுந்தருளக்
கண்டு அத்தைத் திருப்பவளத்தாலே அருளிச்செய்து திருக்கண்களமலர
விழித்து திருமேனிபுளகிதமாய் முருவல்செய்து திருமுடியிலே அஞ்சலி
செய்துக்கொண்டு சிர: கபாலம் வெடித்து திருநாட்டிற் கெழுந்தருளினார்.
முதலிகளும் பட்டர் இனைத்தெழுந்தருளி யிருக்கிறாரென்று உள்ளே
சென்று ஆண்டாளுக்கறிவிக்க, ஆண்டாளுங் கதிகவந்து பட்டரைவாரி
யெடுத்து மார்பிலே யணைத்துக்கொண்டு திருவுள்ளங்கலங்காமல்திருமுகங்
கன்றுமல் கண்ணீர்புறப்படாமலிருந்து உடையவர் உடைமையைக் கைக்
கொண்டால் நாமமிவறுக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.
அப்போது கோயிலுள்ளாரெல்லாரும் கடல்கலங்கினாப்போலே கிடந்து
துடித்தார்கள். வேதாந்திகளும் வேரற்றமரம்போலே விழுந்து கோஷித்
துக்கொண்டு பலபலவாகப் புலம்பியழுதார். பெருமாளும் நாச்சிமாரும்
திருமுகத்தின்பணி, காளாஞ்சி, திருவெண்சாமரம், திருவாலவட்டம்,
திருவெண்குடை, திருவெண்முத்தின்கலசம், திருமேற்கட்டி, முத்துத்
தாமம் துடக்கமான தம்முடையஸர்வபரிகரங்களையுங்கொடுத்துவிட்டருளி,
நம்முடைய அவப்ருதோத்ஸவங் கொண்டாடுமாப்போலே பட்டருக்கு
அவப்ருதங்கொண்டாடுங்கோளென்றருளிச்செய்து திருமுகங்கன்றி திருக்
கண்ணீரு முதிர்த்தார்கள். பின்பு பெருமாளும் நாச்சிமாரும் திருவுள்ளம்
நொந்துசுருளமுதும் அமுதுசெய்யாதே நாம்புத்ரனையிழந்தோமே!யென்று
மிகவுங் க்லேசித்தார்கள். பின்பு வேதாந்திகள்முதலான முதலிகளும்
சோமப்பிள்ளையைக்கொண்டு பட்டருக்கு சரமகைங்கரியத்தை நடத்தி
னார்கள்.

பின்பு சோமப்பிள்ளை பெருமாளைஸேவித்துநிற்கப், பெருமாளுஞ் சோ
மப்பிள்ளையை யருளப்பாடிட்டு பட்டரையிழந்தோம்நாம், உமக்குநாமிருக்
கிறோம், நீர் க்லேசிக்கவேண்டாவென்றருளிச்செய்து பட்டருடைய வரி
சைகளெல்லாங் கொடுத்தருளி ப்ரம்மரதம்பண்ணிவித்து சோமப்பிள்ளை
யைத் திருமாளிகைக்குப் போகவிட்டார். பின்பு சோமப்பிள்ளையுங்
க்லேசந்தீர்ந்து தர்சநம் நிர்வஹித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்பு கஞ்சியரும் பட்டர் அணுகிக்கொண்டு ஸ்ரீபாஷ்யக்கணக்கிலே
செய்த ஒன்பதினாயிரப்படியை மூட்டபட்டோலைகொண்டு தாம் த்ராவிடரு

மாய் த்ரவிடபாஷாநிபுணருமாயிருந்தாலும் நன்முகவெழுதுவானைச் சொ
ன்று எழுதிவிக்கவேணுமென்று நினைத்தருளி ஸ்ரீபாதத்துமுதலிகளைபழ
த்து நன்முகவெழுதுவாருண்டோவென்று கேழ்க்க. அவர்களுந்திருக்கா
விளித் தெற்குக்கறையினின்றும் நம்பூர் வரதராஜனென்பாரொருவர் பல
காலும் இங்கேவருவர், அவர் நன்முகவெழுதுவானென்று விண்ணப்பஞ்
செய்ய, ஜீயரும் வரதராஜனையழைத்து சிறிதெழுதிக்காட்டுமென்ன, வரத
ராஜரு மப்படியேயெழுதிக்காட்ட, "எழுத்து முத்துப்போலே யிருந்தது,
ஆகிலும் திருவாய்மொழிவ்யாக்யாநமாகையாலே திருவிலச்சினை திருநாம
மாத்ரமுண்டான விவர் எழுதவொண்ணுது, விசேஷஜ்ஞனைக்கொண்
டெழுதி வைக்கவேணு, மென்று நினைக்க, வரதராஜரும் ஜீயர்கருத்தறிந்து
அடியேனையும் திருத்திப்பணிகொள்ளவேணுமென்று விண்ணப்பஞ்செய்
தார். ஜீயருமுகந்து அப்போதே அவர்க்குப் பஞ்சஸம்ஸ்காரஞ் செய்தருளி
விசேஷஜ்ஞராக்கி ஆறுயிரமும் ஒன்பதிறையிரமும் அவருக்கருளிச்செய்து
ஒன்பதிறையிரத்தை யெழுதச்சொல்லி நியமித்தார். தேவராஜரும் அத்தை
வாங்கிக்கொண்டு ரங்கீயர் அனுமதிபெற்று அடியேன் ஊரிலே யெழுத
கிறேனென்று ஊருக்குப்புறப்பட்டுத் திருக்காவிரிக்குள்ளேயெழுந்தருளச்
செய்தே சற்றிடம் நீர்ச்சுவேண்டுகையாலே பட்டோலையைத் திருமுடி
யிலே கட்டிக்கொண்டு நீர்சுமளவில் அலையடித்து பட்டோலை ஆற்றுக்
குள்ளே விழுந்துப்போய்த்தது. தேவராஜருமக்கரையேறி வ்யாகுலப்பட்
டுத்தேறி ஒரு அகத்தை யுண்டாக்கிக்கொண்டு பட்டோலையிலிருந்த
தொன்றுதப்பாமல் ஒன்பதிறையிரமும் எழுதித் தாமும் தமிழிலே நிபுண
ராகையாலே சிலபாட்டுகளிலே வேண்டியவிடத்திற்கு விவரணமெழுதிக்
கொண்டு ஜீயர் திருக்கையிலேகொடுக்க, ஜீயரும் பார்த்தருளுமிடத்தில்
தாம் அருளிச்செய்தபடியா யிருக்கச்செய்தேயும் சொற்சுருக்கு மிகவுந்
தகுந்த பலபொருள்கள் பலவிடங்களிலெழுதியிருக்கையாலே மிகவுந் திரு
வுள்ளமுகந்து இதுவும் மிகவும் நன்முகயிருந்தது; இது எதென்று தேவ
ராஜரைக்கேட்க, அவரும் பயப்பட்டுவிண்ணப்பஞ்செய்யாதிருக்க, ஜீயரும்
பயப்படவேண்டாம், உண்மைசொல்லுமென்ன, வரதராஜரும் நடந்த
செய்தியை விண்ணப்பஞ்செய்ய, ஜீயருங் கேட்டருளி வரதராஜருடைய
சக்தி விசேஷத்திற்கு மிகவுமுகந்து அழுந்தக்கட்டிக்கொண்டு இவர் நம்
முடையபிள்ளைத் திருக்கலிகன்றிதாஸர் என்று அருளிச்செய்கையாலே
அன்றுமுதல் வரதராஜருக்கு நம்பிள்ளையென்று திருநாமமுண்டாய்த்து.

நம்பிள்ளையு மன்றுமுதல் ஜீயர் ஸந்நிதியிலே பிரியாமல் அடிமை
செய்துக்கொண்டிருந்தார். ஜீயரும் நூறுதரம் திருவாய்மொழிக்கர்த்தம்
நிர்வஹித்துச் சாற்றியருளுகையாலே ஜீயருக்குப் பிள்ளைசதாபிஷேகோத்
ஸவம் பண்ணினார். இப்படியிருக்கும் நம்பிள்ளைதிருவடிகளிலே பெரிய
வாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பின்பழகிய பெருமாள்ஜீயர்,
நயுண்ணிமாதவப்பெருமாள், முதலான வனேகமாசார்யர்கள் ஆச்ரயித்தார்

கள். பின்பொருநாள் நம்பிள்ளை காலக்ஷேபம் ஸாதித்து பெருந்திருவோலக்கம் இனம்பிவருகிற பெருந்திறளைக்கண்டு வைஷ்ணவரையிருப்பானெரு ராஜா நம்பெருமாள் திருவோலக்கம் சூலைத்ததோ? நம்பிள்ளை திருவோலக்கங்குலைந்ததோ! வென்றுகேட்டான். பின்பொருநாள் முதலியாண்டான் பேரரையர்க் கந்தாடையாண்டான் குமாரரான கந்தாடைதோழப்பர் நம்பிள்ளையிடத்திலே சிறிதுபொருமைபட்டு வாசிகமாக வபசாரப்பட்டு பின்பு மஹாவித்வானுமையாலும் திருவம்சப்ரபாவத்தாலும் தெளிந்து நம்பிள்ளை திருவடிகளைப்பற்றிப் புகழ்ந்து நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்று திருநாமஞ் சாற்றியருளினர். பின்பொருநாள் கூரத்தாழ்வானுடைய திருப்பேரனரையர் சோமப்பிள்ளைதிருக்குமாரரான கடவில் திருவீதிப்பிள்ளைபட்டர், மஹாவாக்மியாய் மஹாவித்வானுமிருப்பர். அவரும் நம்பிள்ளையதிசயத்தைக் கண்டு பொருக்கமாட்டாதே யிருப்பர். அந்தபட்டர் ஒருநாள் ராஜஸ்தானத்திற்கெழுந்தருளுகிறபோது வழியிலே நம்பிள்ளை சிஷ்யரான பின்பழகிய பெருமாள் ஜீயரைக்கண்டு ஜீயரே? நம் ராஜதானிக்குப்போகிறோம் கூடவாருமென்றழைத்தார். ஜீயரும் நம்மாசார்யவம்சமன்றோவென்று நினைத்து நடவிற் திருவீதிப்பிள்ளைபட்டருடனேகூட ராஜஸ்தானத்திற்கெழுந்தருளினர். ராஜாவும்பட்டரையெதிர்கொண்டுசேவித்துப் பெரியகோஷ்டியாகவிருந்து தான் மிகவும் கல்வியுடையவனுகையாலே பட்டருடைய வைபவத்தை பரீக்ஷைபண்ணுவதாக ஸ்ரீராமாயணத்திலே ஓராக்ஷேபம்பண்ணிவிட்டு வேறேபராக்காயிருந்தான். பட்டரும்சிந்தித்துப் பார்த்தவிடத்தில் ராஜாசொன்னவாக்ஷேபத்திற்கு ஸமாதானஞ்சொல்வது கடினமாயிருந்தபடியாலே நம்பிள்ளை சிஷ்யரான ஜீயரைப்பார்த்து இவ்விடத்திலே பிள்ளைநிர்வாஹமென்னென்று கேட்டார். ஜீயரும் பிள்ளைநிர்வாஹத்தை சுருக்கத்திலே புதூர் அவிழ்த்தார். பட்டரும் அதுகேட்டு ஆச்சர்யப்பட்டு அத்தைநினைத்துக்கொண்டிருந்தார். ராஜாவும் பராக்கொழிந்து பட்டரைத்திரும்பவும் கேட்டவிடத்தில் பட்டர்தாமே அருளிச்செய்ததாகத் தோற்றுவித்து நம்பிள்ளைநிர்வாஹத்தை ராஜாவுக்கருளிச்செய்தார். இராஜாவுங்கேட்டு அத்யாச்சர்யப்பட்டு மிகவுஞ் சலாகித்து விலையில்லாத வஸ்த்ராபரணங்களையுந் தனங்களையும் ஸமர்ப்பித்து பட்டர் திருவடிகளிலே விழுந்து ஸேவித்துக் கோயிலுக்கெழுந்தருளப்பண்ணினான்.

பின்பு பட்டர் அதுகளை யங்கீகரித்துக்கொண்டு நம்பிள்ளை சிஷ்யரான ஜீயரைக் கையைப்பிடித்துக்கொண்டு அனுவர்த்தித்து அடியேனையுமிந்தனத்தையும் நம்பிள்ளை திருவடிகளிலே சேர்க்கவேணுமென்று சொன்னார். நம்பிள்ளையுந் தம்முடைய வாசார்யவம்சமென்று நடவில் திருவீதிப்பிள்ளை பட்டரைஸேவித்து மிகவுமாதரிக்க, நடவில் திருவீதிப்பிள்ளைபட்டரும் நம்பிள்ளையைப்பார்த்து தேவரீருடைய திவ்யஸக்தியில் பதினாயிரங்கோடியிலே சிந்தனை ஒரு ஸ்ரீஸக்திபெற்ற தமிதுவாகையாலே அடியேனையு மிந்தனையு மங்கீகரித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தார்.

நம்பிள்ளையுமதற்கு உடன்படாமல் பலவுமருளிச்செய்ய, நடுவில் திருவீதிப் பிள்ளைப்பட்டரும் கண்ணுங் கண்ணீருமாய் நம்பிள்ளைதிருவடிகளை சேவித்துநிர்க்க, நம்பிள்ளையும் பட்டரை வாரியணைத்துக்கொண்டு விசேஷ கடாக்ஷஞ் செய்தருளி இவருக்கெல்லா வர்த்தவிசேஷங்களையும் ஸாதித் தருளினார். நடுவில்திருவீதிப்பிள்ளைப்பட்டரும் நம்பிள்ளையினுடைய விசேஷகடாக்ஷத்தைப்பெற்று மிகவு மினிதுடனே நம்பிள்ளைக்கு ஸ்ரீஸ-க்தி ஸாகரமென்று திருநாமஞ்சாற்றினர்.

பின்பொருநாள் நம்பிள்ளையும் முதலிகளும் திருவெள்ளரை நாச்சி யாரை ஸேவித்து திரும்பவுங் கோயிலுக்கெழுந்தருளச்செய்தே திருக்கா வேரி இருகரையுமொத்துப் பெருகாநிற்க. ஓடங்கிடையாதபடியாலே ஒருதாழியிலே எழுந்தருளச்செய்தே நட்டாற்றிலே பொழுது மஸ்தமித்து மழையு மிருட்டுமாய் அக்கரை யிக்கரைதெரியாதே தாழிமுழுகத்தக்கதா யிருக்க, அப்போது தாழிக்காரன்சொன்னது:—ஒருவராகிலு மிப்போது தாழியைவிட்டால் கரைசேரலாம்; இல்லையாகில் தாழி முழுகிப்போம் என்று கூப்பிட்டான். அப்போதொரு ஸாதுவானவம்மையார் தாழிக்கா ரனைப்பார்த்து நீ நூறுபிராயம் புகுருவாய், உலகுக்கெல்லா முயிரான நம் பிள்ளையைக் கரையிலே கொண்டுவிடு என்று அவனைவாழ்த்தி ஆற்றிலே விழுந்தாள். அவ்வளவு கொண்டு நம்பிள்ளையு மக்கரையேறி அம்மையார் விழுந்தாளே யென்று வ்யாகுலப்பட்டுக்கொண்டிருந்தார். அம்மையாரும் காலடிபோனவளவிலே நம்பிள்ளை திருவடிகளில் விச்வாஸவைபவத்தாலே யொருதிடர் தோற்பட்டு அதிலே நின்றாள். அப்போது இராக்குரலாகை யாலும் கைகிட்டியிருந்தபடியாலும் ஆசார்யரான நம்பிள்ளை யருளிச்செய் கிற வ்யாகுலவார்த்தையைக்கேட்டு தேவரீர் வ்யாகுலப்படவேண்டா; அடி யேனிங்கே தரித்திருக்கிறேனென்று கூப்பிட்டாள். பிள்ளையுங் கேட்டு மிகவு முகந்து தாழிக்காரனைவிட்டு அம்மையாரை யழைப்பித்துக்கொண் டருளினார். இந்த வைபவத்தை ஸகலருங்கண் டாச்சர்யப்பட்டார்கள்.

பின்பொருஸாதுவம்மையாருக்கு நம்பிள்ளை திருமாளிகையருகே யொருகோல்கூற்று நிவேசனமுண்டாய் அதிலேயவள் குடியிருப்பள். அவ ளைப்பார்த்து ஒரு ஸ்ரீவைஷ்ணவர், பிள்ளை திருமாளிகைக்கு நெருக்கமா யிருக்கையாலே இந்த நிவேசனத்தை யாசார்யருக்கு ஸமர்ப்பியுமென்று பலகாலுஞ் சொல்லிக்கொண்டிருப்பர். அம்மையாருங்கோயிலிலே கோல் கூறுநிவேசனம் ஆருக்குக்கிடைக்கும். நான் சரீரத்தோ டிருக்குமளவுங் கொடேனென்றாள். பிள்ளையு மதுகேட்டருளி யம்மையாரைப் பார்த்து உமக்கொரு சரீரத்திற்கு சிறிதிடம்போருமே மற்றது முதலிகளுக்காகக் கொடுமென்றருளிச்செய்தார். அம்மையாரும் அப்படியே செய்கிறேன், தேவரீர் அடியேனுக்குப் பரமபதத்திலே கோல்கூற்று நிவேசனந்தந்தருள வேணுமென்றாள். நம்பிள்ளையு மதற்குஸ்ரீவைகுண்டநாதன் கடவணைக

யாலே அவனுக்கு விண்ணப்பஞ் செய்துக்கொண்டு தருகிறேனென்றருளிச் செய்தார். அவளு மெழுத்திட்டுத் தரவேணுமென்றாள். பிள்ளையு மிந்த நம்பிக்கைக்கு மிகவு முகந்தருளி இன்னவருஷம் இன்னமாஸம் இத்தனை யாவதுதேதி இந்த வம்மையாருக்குத் திருக்கலிகன்றிதாஸன் பரமபதத்திலே யொருகோல்கூறு யெழுதிக்கொடுத்தேன், அகிலலோகஸ்வாமியுமாய் அஸ்மத்ஸ்வாமியுமான ஸ்ரீவைகுண்டநாதன் செலுத்திக் கொடுத்தருள வேணுமென்று சாஸநமெழுதி தம்முடைய திருவெழுத்துஞ் சாற்றிக்கொடுத்தருளினார். அம்மையாரும் திருமுகத்தை முடியிலே வைத்துக்கொண்டு அன்று மற்றைநாள் பிள்ளையை ஸேவித்துக்கொண்டிருந்து மூன்றுநாள் அங்கிருக்கிறவர்களுக்குத் தெரியும்படி பரமபதத்திலே சென்றாள். ஸ்ரீவைகுண்டத்திலே சிறுமுறிசெல்லும்படியான நம்பிள்ளையின் வைபவத்தைக்கண்டு எல்லாரு மாச்சர்யப்பட்டார்கள்.

பின்பொருநாள் நம்பிள்ளை பெரிய திருவோலகத்துடனே திருவாய்மொழிக்கர்த்த மருளிச்செய்துக்கொண்டிருக்கச்செய்தே நம்பெருமாள் நம்பிள்ளையைக் கடாக்ஷித்து நீர் நம்முடைய திருமுடிப்பக்கத்திலேயிருந்து திருவாய்மொழி நிர்வஹியுமென்று நியமித்தருளினார். நம்பிள்ளையும் நாயனேன் தேவரீருடைய நியமனத்தைத் தப்பவொண்ணாது; ஆகிலுமவ்விடம் முன்பு தூர்யோதனன்பற்றின விடமாகையாலே அடியார்க்குப்பற்றுமிடமாகாதென்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாளுமுகந்து முன்புபோலே கீழ்ப்படியிலே திருவடிப்பார்ச்வத்திலே திருவாய்மொழி நிர்வஹியுமென்று நியமித்தருளினார். அதுகண்டெல்லாரு மாச்சர்யப்பட்டார்கள் பின்பொருநாள் நம்பிள்ளை பெரியதிருவோலக்கத்துடனே திருவாய்மொழி நிர்வகிக்கச்செய்தே செல்வர் நித்தியப்புறப்பாட்டிலே திருவோலக்கம் கலைவதாக நடந்துக்கொண்டு வருகையாலே அன்றைக்குஞ்செல்வரெழுந்தருளினபோது கோவ்டி குலைந்தபடிகண்டு நம்பெருமாள், இன்று முதல் நமக்கிந்த கூட்டங்கலைத்தான் புறப்பாடுவேண்டாமென்றுமறுத்தருளினார். அன்றுமுதல் நாளதுவரைக்குங் கோயிலிலே செல்வர் புறப்பாடில்லை.

திருவிளக்குப்பிச்சனென்பாரொருவன் கோயிலிலே திருவிளக்குப் பார்த்துக்கொண்டுபிச்சேறிணப்போலேயிருக்கையாலே நம்பெருமாளுக்கு ரஹஸ்யகரணையிருப்பன். ஆஸ்தானத்திலே பணிவிடை செய்துக்கொண்டு வருங் கூனர் குறளர் முதலானவரிடத்திலேராஜாக்களுக்குப்ரீதியுண்டாய் அவர்களுடனே பேசுவது, பரிஹாஸம்பண்ணுவது, அவர் சொற்படிக்கு சிறிது செய்வதுண்டே? அப்படிபோலே ஸ்ரீரங்கராஜரும் திருவிளக்குப் பிச்சரோடே பேசுவது பரிஹாஸம்பண்ணுவது அவன் சொன்னது செய்வதாயிருப்பர். ஒருநாள் நம்பிள்ளை திருவாய்மொழியருளிச்செய்யும்போது நம்பெருமாள் பூபாலராய ஸிம்மாஸனத்தைவிட்டுவந்து ஸந்நிதிவாசற்படிகளைத் திருக்கைகளாலே பற்றிக்கொண்டு உள்ளேயிருந்து பிள்ளையை

129 2/2
(2153)

T
56.043
A.231 தி க

பழநடை விளக்கம்.

நோக்கி எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது திருவிளக்குப் பார்க்கவந்த திருவிளக்குப்பிச்சன் நம்பெருமாளைப்பார்த்து இப்படி கலியுகத்திலே யுமக்குநினைத்தபடி செய்யலாமோ? பூபாலராயனிம்மாஸனத்திலே போயிருமென்று அதிர்த்து வார்த்தைசொன்னன். பெருமாளுமவன்சொன்னது செய்வதாக நினைப்பிட்டிருந்தபடியாலே அவனைப் பார்த்து ஆமாடா நீசொன்னதொக்கும்; ஆகிலும் நம்பிள்ளை திருவோலக்கத்தைக் காணவேணுமென்று வந்திருந்தேன்; இதோ போகிறேனென்று சொல்லி பூபாலராயனிலே யெழுந்தருளினார். இத்தை யிலரறிந்து எல்லாருக்குஞ்சொல்ல, அனைவரு மாச்சர்யப்பட்டார்கள்.

இப்படி நம்பிள்ளை மஹா வைபவத்தையுடையவரா யிருக்குமளவிலே நஞ்சீயருக்கு நூறு திருநக்ஷத்ரமாச்சுது. அப்போது திருமேனியில் நோவு சாற்றிக்கொண்டிருக்கச்செய்தே தெக்காழ்வான் பட்டரென்கிறவர் நஞ்சீயரை ஸேவித்து இப்போது தேவரீருக்குச் செய்யவேண்டுவ தேதென்று கேட்டார். அவராவது கோயிலுக் கதிபதியாயிருப்பர். ஜீயருமதுகேட்டு நமக்குப்பெருமாள் திருமேனியை மறவறக்காட்டி யநுபவிப்பிக்கையாகிற ஸர்வஸ்வதாநம் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். தெக்காழ்வான் பட்டரும் இத்தைப் பெருமாளுக்கறிவிக்க, பெருமாளும் புறப்பட்டருளி நஞ்சீயர்மடத்து வாசலிலேசென்று நஞ்சீயருக்குத்தம்முடைய திருமேனியை மறவறக்காட்டி யநுபவிப்பித்தருளினர். நஞ்சீயரும் தெக்காழ்வான் பட்டர் முதலானைருக்குச் சிலவர்த்தவிசேஷங்களை யுகப்பாலே யுபதேசித்து நம்பிள்ளைக்கும் ஹிதமருளிச்செய்து ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டிற் கெழுந்தருளினர். நஞ்சீயரவதார திருநக்ஷத்ரம் பங்குனியுத்திரம். நஞ்சீயர் செய்தருளின ப்ரபந்தம்:—திருவாய்மொழிக் கொன்பதினாயிரப்படி; திருப்பாவைக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பிற்கும் வ்யாக்யாநம், ஸ்ரீஸூக்தபாஷ்யம். இவருடைய திருநாமம்:—வேதாந்தவேத்யர், நஞ்சீயர், மாதவாசார்யர். (ஸ்லோ) யத்வ்ருத்தஸ்ய கலஂஜாஸ்ரம் யத்ரியாவைதிகோவிதிः। யத்கூடாக்ஷோஜகத்ரக்ஷாதம்வந்தேமாதவம்முநிம்॥ இதற்குப்பொருள்:—யவருடைய சொல்லுதானே ஸகல சாஸ்த்ரங்களா யிருக்கும்; யவருடைய திருக்கடைக்கண்பார்வையானது ஸகல ஜகத்திற்கும் ரக்ஷகமாயிருக்கும்; அப்படிப்பட்ட மாதவமுநி என்கிற நஞ்சீயரை வந்தனம்பண்ணுகிறேனென்றபடி. பின்பு நம்பிள்ளை நஞ்சீயருக்குச் செய்யவேண்டுவதெல்லாஞ் செய்தருளி திருவாய்மொழி நிர்வஹித்தருளும்போது நடுவிற் றிருவீதிப்பிள்ளைபட்டர், பகல் நம்பிள்ளை யருளிச்செய்த திருவாய்மொழி யர்த்தங்களையெல்லாம் ஒன்றுதப்பாமல் தரித்து ராத்ரியெல்லாமெழுதி தலைக்கட்டினபின்பு, அத்தை நம்பிள்ளை ஸந்நிதியிலே கொண்டுவைக்க, நம்பிள்ளையுமத்தை யவிழ்த்துப்பார்த்து அது லக்ஷத்திருபத்தையாயிரங் க்ரந்தமாயிருந்தபடிகண்டு வ்யாகுலப்பட்டு இப்படி திருவாய்மொழி யர்த்தங்களை விஸ்தரித்து வெளிப்படுத்தலாமோ? இப்படி

பழநடை விளக்கம்.

பரந்திருக்கையாலே சிஷ்யாசார்யக்ரமம் கடக்க வரிதாயிருக்குமே, காமு மநுமதி பண்ணவில்லையே, என்று ஸ்ரீகோசத்திலே நீரைச்சொரிந்து கரை யாலுக்கினையாக்கினர். அதப்போதே டோயிற்று.

பின்பு நம்பிள்ளை தமக்கு ப்ரியசிஷ்யரான பெரியவாச்சாம்பிள்ளையை நியமித்தருளி திருவாய்மொழிக்கு இருபத்திரலாயிரப்படியைச் செய்வித் தருளினர். பின்பு நம்பிள்ளைக்கந்தாங்க சிஷ்யரான வடக்குத் திருவீதிப் பிள்ளையும் நம்பிள்ளை யுபந்யாஸத்தைப் பகலெல்லாங்கேட்டு தரித்து ராத்ரி யிலே யெழுதித் தலைக்கட்டினபின்பு நம்பிள்ளை ஸந்நிதியிலே கொண்டு வைத்தார். நம்பிள்ளையு மத்தைப்பார்த்தருளி மிகவுஞ் சுருக்கமன்றிக்கே மிகவும் பரப்புமன்றிக்கே யாஜனக்கலங்காரஞ் செய்தாப்போலே மிகவு மழகாகவெழுதினீராகிலும்நம்முடையவநுமதியில்லாதே யெழுதினீராகை யாலே அத்தையிங்குத்தாருமென்றுவாங்கிக் கட்டியுள்ளைவத்தருளினர். இத்தைவைத்ததற்குக்கருத்து பெரியபெருமாள் நியமனத்திரலே இதற்கு ஸகல தேசத்திலுள்ள ஸகல சிஷ்டபரிக்ரஹ முண்டாகப்போகிறதென்று. அப்படியே நம்பிள்ளை சிஷ்யரான ஈயுண்ணிமாதவப்பெருமாள் பலநாள் பெருமாளையுபாஸித்து வேண்டிக்கொள்ள, ஒருநாள் பெருமாளும் ஈயு ண்ணிமாதவப்பெருமாளை யருளப்பாடிட்டு ஏன் நம்மைப் பலவிதமாக உபா ஸியாநின்றீரென்று கேட்டருளினர். ஈயுண்ணிமாதவப்பெருமாளும் நம் பிள்ளை திருக்கையிலே திருவாய்மொழிக்கு ஈடுமுப்பத்தாரூயிரமென்றொரு வ்யாக்யாநமிருக்கிறது, அத்தை யவரடியேனுக்கிரங்கி யருளும்படி நிய மிக்கவேணுமென்று விண்ணப்பஞ்செய்தார். பெருமாளுந்திருவுள்ளம் பற்றி ஒருநாள் நம்பிள்ளையெழுந்தருளினபோது நம்பிள்ளைக்கு ஸகல வரிசைகளையும் ப்ரஸாதித்தருளி, அர்ச்சகமுகத்தாலே பிள்ளை? ஈடுமுப்பத் தாரூயிரத்தை ஈயுண்ணி மாதவப்பெருமாளுக்கு ப்ரஸாதியுமென்று நிய மித்தருளினர். நம்பிள்ளையும் பெருமாள் நியமனத்தைப்பெற்று மிகவு மூகந்து திருமாளிகையிலே எழுந்தருளித் தஞ்சிஷ்யரான ஈயுண்ணிமாத வப்பெருமாளுக்கு ஈடுமுப்பத்தாரூயிரத்தை ப்ரஸாதித்தருளினர். நம் பிள்ளை திருநக்ஷத்ரம்:-காத்திகைமாசத்தில் க்ருத்திகாநக்ஷத்ரம். அவ ரவ தரித்த ஊர்:—க்ருஷ்ணாரத்திலே நம்பூரென்கிற க்ராமம். திருநாமம்:— வரதராஜர்; நம்பிள்ளை; திருக்கலிகன்றிதாஸர்; கலிவைரிதாஸர்; லோகா சார்யர்; ஸ்ரீஸூக்திஸாகரர். இவர்செய்தருளின ப்ரபந்தம்:—நம்பிள்ளை ரஹஸ்யம்; திருவிருத்தவ்யாக்யாநம்.

பின்பு பெரியவாச்சான்பிள்ளையும் நம்பிள்ளைநியமனத்திரலே திரு வாய்மொழியொழிந்த மற்றிருபத்தாலாயிரப்படி ப்ரபந்தங்களுக்கும் வ்யாக்யா நஞ் செய்தருளினர். பரந்தரஹஸ்யம் முதலான மந்த்ரவ்யாக்யாநமும் மற் றும் பலப்ரபந்தங்களுஞ் செய்தருளினர். இந்தமுப்பத்தாரூயிரப்படி முத லான ப்ரபந்தங்கள் பிள்ளான்செய்தருளினவாரூயிரப்படிக்கு மி[illegible]மனு

கூலமாய் அத்தையே மூலமாகப்பற்றிக்கொண்டு அதிலுண்டான சொல்லை யும் பொருளையும் தொடர்ந்துகொண்டு அதின்கருத்தைப் பரக்கத்தெரிவித் துக்கொண்டு விளக்கிற்கொளுத்தின விளக்குபோலே அவற்றையும் (அவ்வாறுயிரப்படியோடும்) அவர்செய்தபரமரஹஸ்யத்தோடும் மிகவு மொன்றுய்ச்சேர்ந்திருக்கும். இவைகளுக்கெல்லாம் பட்டர்செய்தருளின வஷ்டச்லோகீயென்கிற மந்த்ரவ்யாக்யாநமும் ஸஹஸ்ரநாமபாஷ்யமும் மும்நூலாயிருக்கும். பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ரம்:-ஆவணியில் ரோஹிணீ, திருநாமம்:-க்ருஷ்ணபாதர், இப்படி மஹாவைபவத்தையுடைய ரான பெரியவாச்சாம்பிள்ளை ஒருநாள் பெரியபெருமாள் ஸந்நிதியிலே பெரு மாளேஸேவித்துநின்று பெரியபெருமாளைக்குறித்து தேவரீர்பரமகாருணிகரா கையாலேசேதநரெல்லீவிக்கவேணுமென்றுரஹஸ்யங்களையும்வெளிப்படுத்தி நாதமுநிகளுக்கு நம்மாழ்வாரைக்கொண்டுஸாக்ஷாத்காரமாகவே அவைகளை ஸாதித்தருளி, நாதமுநிகளைக்கொண்டு ஸம்ப்ரதாய பரம்பரையாக தேவரீர் நடத்திக்கொண்டுவருகிற விந்த தர்சநவிஷயமாக நூப்பில்பிள்ளை யென்கிற வர் உபாஸனையாற்பெற்ற க்ஞானச்செறுக்காலே அபசாரப்படா நின்று கொண்டு பின்னை (தினை)ஸம்ப்ரதாயத்தைப் ப்ரவர்த்திப்பித்துக்கொண்டிருக் கிறார். தேவரீர் அவரை அத்தைத்தவிர்ப்பித்துப் பூர்வாசார்ய ஸம்ப்ரதாயப் படியே நடக்கும்படி நியமித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தார். பெரியபெருமாளும் அப்படியே திருவுள்ளம்பற்றி நூப்பில்பிள்ளைக்கு ஒரு ஸ்வப்நமுண்டாகும்படி செய்தருளினார். அதாவது:-நூப்பில்பிள்ளை யொரு நாள்கண்வளரும்போது ஸ்வப்நத்திலே ஸ்ரீரங்கதிவ்யநகரத்திலேதோரணங் கட்டிவைத்திருகீர்தெளிப்பதுதிருப்பிண்டியிடுவதாக இப்படிதிவ்யாலங்காரம் செல்லாநிற்க, இத்தைக்கண்டிதென்னவாச்சர்யம், இன்றைக்கதிசயமென் றென்றுதாம்விசாரியாநிற்கச்செய்தே மத்தளங்கள் சங்கங்கள் தாளங்கள் திருச்சின்னம்முதலான ஸகலவாத்யக்கோஷத்துடனே ஸமஸ்தரான ஸ்ரீயர் கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருங்கூடி பெரியவாச்சாம்பிள்ளையை ப்ரம்ம ரதம்பண்ணிக்கொண்டு பெரியபெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணி வியாநிற்கச்செய்தே, வழியிலுள்ளார் நூபமெடுப்பார் பூமழைபொழிவார் ஆலத்திவழிப்பார் மங்களாசாஸனம் பண்ணுவாராய் நடவாநிற்கச்செய்தே திருக்கோபுரங்கட்டினவளவில் பெருமாளும் நாய்ச்சிமார்களுடனும் நித்ய முக்தர்களுடனுங்கூட வெதிர்கொண்டு பெரியவாச்சாம்பிள்ளையை உள் ளே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகாநிற்கச்செய்தே, மற்றும் கோயிலிலிருக்கும் பெரியோர்களெல்லாரும் கூட வுள்ளேயெழுந்தருளக் கண்டு நூப்பில்பிள்ளை தாமுங்கூட வுள்ளேபுகப்புக்கவளவிலே திருவாசற் காக்கும் முதலிகள் இவரை நீர் உள்ளேபோகாதே கொள்ளுமென்ன, நூப்பில்பிள்ளையும் ஹவதென்னென்றுதேகழற்ற, அதற்குத் திருவாசல்காக் கும் முதலிகள்சொன்னது:—பெரியபெருமாள் ப்ரவர்த்திப்பித்த ப்ரபன்ன தர்சனவிஷயமாக நீரபசாரப்பட்டீராகையாலே பெருமாள் திருவுள்ளம் மிகவுங் கலங்கியிருக்கிறது; ஆகையாலே பெருமாள்நியமனமில்லை, ஆக

யாலே போமென்று தம்மைத் தள்ளிவிட்டதாகக்கண்டு தூப்பில்பிள்ளை விழித்துக்கொண்டு உள்நடுக்கத்துடனே இதென்ன ஸ்வப்நமிருந்தபடி என்று சிந்தாக்ராந்தராய் வெடிவோரே நித்தியாநுஷ்டாநங்களைத் தீர்த்துக் கொண்டுபோய் திருமேனியிலே நோவுசாற்றியிருக்கிற பெரியவாச்சாம் பிள்ளையை விணவுவதாக வவர் திருமாளிகைக்கு எழுந்தருளி, ஆங்கு பெரியவாச்சாம்பிள்ளையை ஸேவித்து திருமேனியிருந்தபடி என்? என்று கேழ்க்க, பெரியவாச்சாம்பிள்ளையும் இவரைக் கடாக்ஷித்தருளி வாரீர் பிளளையே? என்று அழைத்துக் கிட்டவாச்சொல்லி நமக்கு லீலாவிபூதி யிலே அர்ச்சாவதாராநுபவங்களெல்லா மாச்சு, இனி நித்யவிபூதிக்குப் போகிறோமென் றருளிச்செய்தார். அதற்குத் தூப்பில்பிள்ளையும் தேவரீர் ஸகல வரிசைகளுடனே பெருமாளைத் திருவழி தொழுகிறதாக வடியேன் ஸ்வப்நங் கண்டேனென் றருளிச்செய்தார். பெரிய வாச்சாம்பிள்ளையு மத்தைக்கேட்டருளி மிகவுமகிழ்ந்து புளகாங்கிதகாத்ராராய் தூப்பில்பிள்ளை யைத் திருக்கையாலே யணைத்து இப்பேரது நீர்சொன்ன நல்வார்த்தை க்கு ப்ரதியுபகார மென்னபண்ணப்போகிறோமென் றருளிச்செய்ய, அவ் வளவிலே தூப்பில்பிள்ளையுந் தம்மைத் திருவாசல்காக்கும் முதலிகள் ஸந் நிதிக்குள்ளே போகவொட்டாமல் தள்ளிவிட்டதாகக்கண்ட ஸ்வப்நத்தை யும் விண்ணப்பஞ்செய்து இனியடியேன் செய்யவேண்டுவ தென்னென்று கேட்டார். பெரியவாச்சாம்பிள்ளையுந் தூப்பில்பிள்ளையிணுடைய தசையைக் கண்டு தம்முடைய வதிசயத்தையுமறந்து இவரைக் கடாக்ஷித்து உமக்கு ஹிதமாக ஒன்று சொல்லுகிறோம். அத்தைச் செய்வீரோவென்ன, தூப் பில்பிள்ளையும் தேவரீர் நியமித்தபடி செய்கிறேனென்று விண்ணப்பஞ் செய்ய, பெரியவாச்சாம்பிள்ளை யருளிச்செய்தது:- தூப்பில்பிள்ளை? நீர் அநு கூலஸஹவாஸத்தைப் பண்ணுமல் அஹங்காராதிகளாலே இதர ஸஹவா ஸத்தைப் பண்ணிக்கொண்டு ப்ரயோஜநாந்தரபரராய் வித்யா நிமித்தமாக மந்த்ராந்தரங்களை யுபதேசம் பண்ணிவித்துக்கொண்டு ஹயக்ரீவோபவாஸம் பண்ணி, அத்தாற்பெற்ற வித்யாதிசயத்தை யுடையராயிராநின்றீர்; உபா ஸநையாற்பெற்ற வித்யாதிக்யத்திற்கு ப்ரயோஜநம், இதரமதநிராஸனமும் பூர்வசார்ய ஸம்ப்ரதாய பரிபாலனமும் மாகையாலே அத்தைச்செய்யாதே பூர்வாசார்ய ஸம்ப்ரதாயஸித்தமான வர்த்தங்களைக்கண்டித்து விச்வாமித்ர ஸ்ருஷ்டியாக நவீனமான வர்த்தங்களை ப்ரவர்த்திப்பியாநின்றீர்; அது மஹாபசாரமாகையாலே பெருமாள் திருவுள்ளம் மிகவுங்கலங்கிற்று, ஆகையாலே யத்தைத் தவிரவேணுமென்று (பெரியவாச்சாம்பிள்ளை) அருளிச்செய்தார்.

அதற்குத் தூப்பிள்ளைவிண்ணப்பம்:- அடியேனப்படிசெய்தேனே? ஸ்ரீ பாஷ்ய க்ரந்தங்களைத்தானே ப்ரவசநம் பண்ணிக்கொண்டு அத்தை யநுஸந்தித்தே பின்னையுஞ் சிலக்ரந்தங்களையும் பண்ணி லோகத்திலே ப்ர வர்த்திப்பித்துக்கொண்டு போந்தேனென்று விண்ணப்பஞ் செய்தார்.

அதற்கு பெரியவாச்சாம்பிள்ளை யருளிச்செய்தது:—வாரீர் தூப்பில்பிள்ளை! ஶ்ரீ பாஷ்ய விஷயமன்று காணுமிப்போது நாஞ்சொல்லுகிறது, அதுவிஷயத்திலேதான் நீர் அனுகூலமாகச்செய்திரோ? அதுவுமில்லை, ஶ்ரீ பாஷ்ய க்ரந்தங்களிலே சிறிது குற்றங்களுண்டென்று சிந்தித்து நீ ரெழுதத்துடங்கினவளவிலே பாஷ்யகாரர் உம்முடைய ஸ்வப்நத்திலே சிறியருளி மூக்கோலாலே புடைத்த பின்பன்றோ பயபக்திகளுண்டாய் அனுதாபம் பிறந்து அபராத க்ஷாமணார்த்தமாக யதிராஜஸப்ததி விண்ணப்பஞ் செய்ததும், பாஷ்ய க்ரந்தங்களைத் தானே ப்ரவசநம்பண்ணத்துடங்கினதும், ஆகையாலது கிடக்கட்டும். நம்மாழ்வார்நாதமுனிகளுக்கு திவ்ய ப்ரபந்த விஷயமாகவும், ரஹஸ்யவிஷயமாகவும், ப்ரத்யக்ஷமாக ஸாதித்த வர்த்த விசேஷங்களைக் கண்டறித்து வேறே சிலவர்த்தங்களைக் கல்பியாநின்று கொண்டு வ்யாக்யானங்களைப்ரக்க வெழுதாநின்றீர்; அத்தையன்றோநாம் தவிறச்சொல்லுகிறதுமென்றருளிச்செய்தார்.

அதற்குத் தூப்பில்பிள்ளை விண்ணப்பம்:—நம்மாழ்வார், தம் ரஹஸ்யங்களுக்கும் திவ்ய ப்ரபந்தங்களுக்கும் விவரணஞ்செய்ததுண்டோ? அதுண்டாகிலன்றோ அடியேனப்படி. செய்ததாவது. இப்பாற்பட்டவாசார்யர்களருளிச்செய்ததன்றோ வ்யாக்யாநங்கள்? அதிலே சிலவர்த்தங்கள் ப்ரமாணகதிகளுக்குச் சேர்ந்திராமையாலே அத்தையன்றோ நாம்கண்டறித்தெழுதுகிறதுமென்று விண்ணப்பஞ் செய்தார். அதற்குப் பெரியவாச்சாம்பிள்ளை யருளிச்செய்தது:—இதப்படியன்றுகாணும்! கலியுகத்திலுடைய வாதியிலே நம்மாழ்வார் மதுரகவிகள் முகமாக ப்ரவர்த்திப்பித்த திருவாய்மொழி முதலானது கிலமாய்ப்போய் பின்பு பெரிய பெருமாள் அர்ச்சாவதாரமான நம்மாழ்வாரைக்கொண்டு நாதமுநிகளுக்கு ஸாக்ஷாத்காரமாக ப்ரஸாதிப்பிக்க, நாதமுனிகளும் ஸம்ப்ரதாயமாக மேலுள்ள வாசார்யர்களுக்கு ப்ரஸாதிக்க, அந்தவர்த்தங்களை இப்பாலுள்ளமுந்தமநிகளுக்குத் தெரியும்படி பூர்வாசார்யர்கள் க்ரந்தமாக்கினமாத்ரமொழிய தாங்கள் ஸ்வயமாக ஒன்றும் வ்யாக்யாநஞ் செய்ததில்லையே; ஆகையால் நீர் அதற்கு வேறுக ப்ரவர்த்திப்பித்தனைதத்தவிரக்கடவீரென்றருளிச்செய்தார். அதற்கு தூப்பில்பிள்ளைவிண்ணப்பம். ஆழ்வார் ப்ரமாணவிரோதமாக ப்ரஸாதிப்பரோ? அத்தையடியேனுகுத் தெரியவருளிச் செய்யவேணுமென்றார். அதற்குப் பெரியவாச்சாம்பிள்ளை யருளிச்செய்தது:— ஆழ்வார் முக்திதசையிலே எல்லாவற்றையும் ஸாக்ஷாத்கரித்திருக்கிறவராகையாலே தாம் ஸாக்ஷாத்கரித்த வர்த்தங்களையே நாதமுனிகள் முகமாக ப்ரவர்த்திப்பித்தாராகையாலே அதற்கனுகுணமான ப்ரமாணங்களை யவலம்பித்துக்கொண்டு சேராதவற்றை நயிப்பிக்கவேணுமே; கண்டதைக்கொண்டு காணாதவற்றை யொருங்கவிடவேணுமே; காணாததைக்கொண்டு கண்டதை யழிக்கலாகாதே; ஆளவந்தார், எம்பெருமானார், திருக்குறுங்கைப்பிரான்பிள்ளான், அருளாளப்பெருமாளெம்பெருமா

நிகழ்ச்சி பழநடை விளக்கம்.

ரர், பட்டர், நஞ்சீயர் முதலானருடைய ப்ரபாவங்களைக்கேட்டறியீரோ? அவர்களுக்குத் தெரியாததொரு ப்ரமாணகதி யுமக்குத் தெரியுமோ? அவர்களெல்லாரும் கேவல சாஸ்த்ரங்களைப்பற்ற ஆழ்வாருடைய ப்ரத்யகூங்களுக்குச் சேர்ந்திருக்கிற சாஸ்த்ரங்கள் ப்ரபலமாகையாலே தத்வத்திலும் அனுஷ்டானத்திலும் நாதமுனிமுகமாக ஆழ்வா ரருளிச்செய்த கட்டளையை யுபதேச பரம்பரையாலேபெற்று அதுவே ஸத்யமென்று நிர்ணயம் பண்ணிக்கொண்டு அதற்குச் சேராதவசனங்களைக் கபிலாதி வசனங்களைப்போலே பூர்வபக்ஷம்பண்ணி அனுகூலவசனங்களை யவலம்பித்துக் கொண்டு பூர்வ ஸம்ப்ரதாயர்த்தத்தையே தங்கள் தங்கள் ஶ்ரீபாதமூடையார்க்கெல்லாம் உபதேசித்துக்கொண்டுவந்தார்கள். ஆகையாலே சிஷ்டாசாரமப்படியே யிருந்தது. இப்படி பூர்வாசார்ய ஸம்ப்ரதாயத்திற் கனுகுணமாக ப்ரமாணங்களையு மூபபத்திகளையுங்கொண்டு அர்த்த நிர்ணயம் பண்ணிக்கொண்டு புதியதான வழியைவிட்டுவிடும், என்றருளிச்செய்தார். அதற்குத் தூப்பில்பிள்ளை ஸ்வக்ஞராகையாலும் ஸ்வப்னத்திலும் அனுதாபம் பிறந்து பூர்வாசார்யர்கள் செய்த வ்யாக்யானங்களெல்லாம் ஆழ்வாருடைய ப்ரத்யகூமடியாகவந்த உபதேசபரம்பரையாலே வந்ததென்றறிந்திலேன், உலகத்தில் வ்யாக்யானங்களைப்போலே பூர்வர்கள் தங்கள் தங்கள் யுக்த்திக்கனுகுணமாகச் செய்ததென்றிருந்தேன், இப்போது ஸ்வப்னத்திலும் தேவரீர் அடியேனுக்கு ஸத்யபூர்வகமாக வருளிச்செய்கையாலும் உண்மையையறிந்தேன், என்றவிண்ணப்பஞ்செய்து தம்மைவெறுத்துக்கொண்டு முன்பு தாம் பண்ணின புதுவழிக்ரந்தங்களைக் கொண்டுவந்து பெரியவாச்சாம்பிள்ளை திருமுன்பே வைத்து இருக்கிறவர்களைப் பார்த்து இனி இந்த க்ரந்தங்களை யொருவருமெடுக்கும் ப்ரவர்த்திப்பிக்கவேண்டாவென்று திருவாணையிட்டு, அதுவரையிலே விஞ்சி தேசாந்தரங்களிலே பரந்துபோன ரஹஸ்ய க்ரந்தங்களுக்கு மிகவுந் தம்மை நொந்துகொண்டு கண்ணுங்கண்ணீருமாகப் பெரியவாச்சாம்பிள்ளை நிருவடிகளிலே விழுந்து ஸேவித்துக்கொண்டிருந்தார்.

பெரியவாச்சாம்பிள்ளையும், கிட்டவிருந்த முதலிகளைக்கொண்டு தூப்பில்பிள்ளையை யெடுக்கச்சொல்லித் திருக்கைகளாலே யணைத்து அருளிச்செய்தது:—உமக்கிப்படி யநுதாபம்பிறந்தபோதே ஸமஸ்தாபசாரங்களும் நீங்கப்போயிற்று; ஆகிலும் பெரியபெருமாள் ஆழ்வார் எம்பெருமானார் ஸந்நிதிகளிலேபோய் கூஷமணம் பண்ணிக்கொண்டு வாருமென்றார். தூப்பில்பிள்ளையு மந்தந்த ஸந்நிதிகளிலே யெழுந்தருளி கூஷமணம் பண்ணிக்கொண்டு பெரியபெருமாள் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் விஷயமாக கூஷமாஷோடஷீ என்கிற ஒரு ப்ரபந்தம் விண்ணப்பஞ் செய்து பெரியவாச்சாம்பிள்ளை ஸந்நிதியிலே கொண்டுவந்து விண்ணப்பஞ்செய்தார், பெரியவாச்சாம்பிள்ளையும் திருவுள்ள மூகந்து தூப்பில்பிள்ளைக்கு பஞ்சஸம்ஸ்காரபூர்வகமாக ஸகலவிஷேஷார்த்தங்களையும் ஸாதித்தருளினார். தூப்பில்

பிள்ளையு மத்தைப்பெற்று க்ருதார்த்தராய் அடியேனுக்குத் திருவாரா தனம் ஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்தார். பொரிய வாச்சாம்பிள்ளையும் தமக்கந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவரை யழை த்து தம்முடைய கோயிலாழ்வார் திருக்காப்பை நீக்கச்சொல்லி தூப் பில்பிள்ளையைப்பார்த்து நீர்போய் கண்ணைக் கட்டிக்கொண்டு ஒருவரை யெழுந்தருளப் பண்ணிக்கொள்ளுமென்று நியமித்தார். தூப்பில்பிள்ளையு மெழுந்திருந்து ஸந்நிதியிலேபோய் தண்டன் ஸமர்ப்பித்துத் திருக்கண்க ளைக் கட்டிக்கொண்டு ஒருவரை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு பார்க்கு மிடத்தில் அந்த திருக்கோலம் திப்பாணாழ்வாரா யிருந்தார். அவரைக் கொண்டு தூப்பில்பிள்ளை பெரியவாச்சாம்பிள்ளை ஸந்நிதியிலேவந்து காட்டி னார். பெரியவாச்சாம்பிள்ளையும் உம்முடையநெஞ்சை சோதிக்கைக்காக வெம்பெருமான் இப்படி க்ருபைபண்ணினான், ஆகையாலே இவரை நித்ய மாக வாராதித்துக்கொண்டு இவருடைய பரபந்தமான வமலனாதிபிரானு க்கு ஒரு வ்யாக்யானமிடும், ஜாதிநிரூபணமடியாகவந்த வபசாரங்களெல் லாம் பொறுத்தருளுவர், என்றருளிச்செய்து தம்முடைய பாதுகைகளையும் ஸாதித்தருளினார். தூப்பில்பிள்ளையுமத்தைப்பெற்று ஸந்தஷ்டராய் அமல னாதிப்பிரானுக்கு வ்யாக்யானஞ்செய்து பெரியவாச்சாம்பிள்ளைஸந்நிதியிலே விண்ணப்புஞ்செய்தார். பெரியவாச்சாம்பிள்ளையு மத்தைக்கேட்டு மிகவு முகந்தருளினார். தூப்பிள்பிள்ளையும் பெரியவாச்சாம்பிள்ளை நியமனப்படி யே பூர்வாசார்ய ஸம்ப்ரதாயக்ரந்தமே காலக்ஷேபமாக வெழுந்தருளியிருந் தார். பின்பு பெரியவாச்சாம்பிள்ளையுந் திருநாட்டிற் செழுந் தருளினார். தூப்பில்பிள்ளையும் பெரியவாச்சாம்பிள்ளை ஸ்ரீபாதத்துமுதலிக ளுடனேகூட சரமகைங்கர்யத்திலே யக்வயித்து திருவத்யயனந்தமாக நன்றுக நடத்தியருளினார்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலேயிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களாயிரு க்குமவர்களுக்குத் திருப்பல்லாண்டுமுதலான திவ்யப்ரபந்தமொழிய வேறு கதியில்லை. பூர்வாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையாலேவந்த திவ்ய ப்ரபந்த தாத்பர்யங்களை யறிகைக்கு பெரியவாச்சாம்பிள்ளை செய்தருளின வ்யாக் யானங்களை யொழிய வேறுகதியில்லை. ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்க ளெல்லாரும் பெரியவாச்சாம்பிள்ளை ஸம்பந்தம்பெற்று அவருக்கு நித்ய கோடியாயிருப்பர்கள்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை நம்பிள்ளை ஸந்நிதியிலே ஸ்ரீபாஷ்யம் முதலான ஸகல க்ரந்தங்களையும் அதிகரித்து ஈடுமுப்பத்தாறாயிரம், த்வய ஸம்மதி, முதலான வனேக ப்ரபந்தங்கள் செய்தருளி நம்பிள்ளை திருவடி களிலே அடிமைசெய்துக்கொண்டிருக்கிறகாலத்திலே நம்பிள்ளை தமக் கிஷ்டதெய்வமான பெரியபெருமாள் திருநாமஞ் சாற்றியேயென்பது உள்ளே நினைப்பிட்டிக்கொண்டு வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கொரு குமாரர் திருவவதரிக்கும்படி யநுக்ரஹஞ் செய்தருளினார். அப்படியே குமரரை

யில் திருவோணத்திலே வடக்குத்திருவீதிப்பிள்ளைக் கொருகுமாரர் அவதரித்தார். வடக்குத்திருவீதிப் பிள்ளையுந் தம்முடைய வாசார்ய நிஷ்டைக்கநுகுணமாகக் குமாரருக்குப் பிள்ளைலோகாசார்யரென்று தம்முடைய வாசார்யரான நம்பிள்ளையினுடைய திருநாமத்தைச் சாற்றியருளினார். பின்பு நம்பிள்ளையுமித்தைக் கேட்டருளி தம்முடைய மனோரதம் விதியாமையாலே வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கு இரண்டாவது குமாரர் அவதரிக்கும்படியனுக்ரஹஞ் செய்தருளினர். அப்படியே வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கு இரண்டாவது குமாரர் அவதரிக்க, அவருக்கு, நம்பிள்ளையெழுந்தருளி அழகியமணவாளப் பெருமாள் நயினார் என்றுபெரியபெருமாளுடைய திருநாமத்தை சாற்றியருளினர். இப்படி பிள்ளைலோகாசார்யரும் அழகியமணவாளப்பெருமாள் நயினாரும், அதிமேதாவிகளாய் ஸகலசாஸ்த்ரநிபுணர்களாய் பிதாவான வடக்குத்திருவீதிப்பிள்ளை பக்கலிலே ஸ்ரீபாஷ்யம் முதலான ஸகலக்ரந்தங்களையும் அதிகரித்து உபதேசபரம்பரையாலே பெற்ற வர்த்தமானோபதேசங்களையெல்லாம் லோகோஜ்ஜீவநார்த்தமாக பலப்ரபந்தங்கள் செய்து வெளியிட்டருளினார்கள்.

இவர்களில் பிள்ளைலோகாசார்யர் தத்வத்ரயம் ரஹஸ்ய த்ரயம்முதலான பலப்ரபந்தங்களையும் ஸாரஸங்க்ரஹம், ஸ்ரீவசநபூஷணம். கத்யத்ரயத்திற்கு பெரியபடி சிறியபடி இரண்டு வ்யாக்யானங்களையுஞ் செய்தருளினர். அவர் திருத்தம்பியாரான அழகியமணவாளப்பெருமாள் நயினாரும் பலப்ரபந்தங்களையுஞ் செய்தருளி ஸ்ரீவசநபூஷண ஸ்தாபனார்த்தமான வாசார்யஹ்ருதயமென்கிற மஹாப்ரபந்தத்தைச் செய்தருளி நாதமுனிகள் முதலான பூர்வாசார்ய பரம்பரையாலே யுபதேசமாக நடந்துவந்த ரஹஸ்யார்த்தங்களையும் திவ்ய ப்ரபந்தார்த்தங்களையும் ஸ்தாபித்தார்.

ஒருநாள் நம்பெருமாளுடைய புறப்பாட்டிலே தூப்பில்பிள்ளைக்கும் அழகியமணவாளப்பெருமாள் நயினாருக்கும் ஸ்ரீவசனபூஷண விஷயமான ப்ரஸங்கம் வந்து ஒருவர்க்கொருவர் ப்ரதிக்ஞைபண்ணி அழகிய மணவாளப்பெருமாள் நயினாருபந்யஸித்தவர்த்தங்களை நம்பெருமாளங்கீகரித்தால் தூப்பில்பிள்ளை பனிரண்டுவருஷம் நம்பெருமாள் ஸந்நிதியை யிழந்து ஸ்ரீரங்கத்தை விட்டுப் போவதாகவும், அங்கீகரியாவிட்டால் அழகிய மணவாளப்பெருமாள் நயினார் க்ருத்ஸந்யாஸம் பண்ணுவதாகவும் இப்படி கர்ணயம்பண்ணிக்கொண்டு பெருமாளெழுந்தருளுகிற காலுதிருவீதியிலும் காலுப்ரகாரணமாக வழகியமணவாளப்பெருமாள் நயினாருபந்யஸித்தார். அப்போது பெருமாள் சாற்றிக்கொண்டிருந்த காலு திருமாலையும் ப்ரகாரணத்திற் கொருமாலையாகத்தானே கழன்று விழாநிற்க, அந்தகாலுமாலையும் நம்பெருமாள் அழகியமணவாளப்பெருமாள் நயினாருக்கு காலுதிருவீதிகளிலும் ஸாதித்தருளி அவருபந்யஸித்த வாசார்யஹ்ருதயத்தை யங்கீகரித்தருளினார். தூப்பில்பிள்ளையும் ப்ரதிக்ஞை பண்ணினபடி நம்பெருமாள்

ளைவையைவிட்டு தேசாந்தரத்திற் கெழுந்தருளினர். அழகியமணவாளப் பெருமாள்யினரும் அதிவிரக்தராய் கைஷ்டிகப்ரம்மசாரியாயிருந்து உத்தமாச்ரமஸ்வீகாரஞ்செய்தருளினர். அவர் ஆசார்யஹ்ருதயம்முதலான ஸகல க்ரந்தங்களையும் தள : ஞ) தவஸ்த்ரக்குலமான பெறழுனென்கிறவர்க்குப் ப்ரஸாதித்தார். அந்தபெற்ருரும் ஆசார்யஹ்ருதயம்பெற்ருரென்கிறவருக்கு ப்ரஸாதித்தார். அவர் திருநாராயணபுரத்தாய்க்கு ப்ரஸாதித்தார். பின்னை லோகாசார்யருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நயினர்ஸந்நிதியிலே கிடாம்பியாச்சான் திருவம்சமான கிடாம்பிதிருமலை நயினரென்கிறவர் ஆச்ரயித்து ஸகலவித க்ரந்தங்களையு மநுசந்தித்தார். அழகியமணவாளப்பெருமாள் நயினரும் ஸ்யாஸாச்ரமத்துடனே சிலகால மெழுந்தருளியிருந்து திருத்தமயனருக்குமுன்னுகவே திருநாட்டிற்கெழுந்தருளினர்.

ஸர்வக்ஞரான பின்னைலோகாசார்யர் திருவடிகளைப் பெரியோர்கள் பலரும் ஆச்ரயித்தார்கள். அவர்களிலே கூரகுலோத்தமதாஸர், மணற்பாக்கத்து நம்பிபார், கொல்லிகாவலதாஸர், கோடியிலண்ணர், திருவாய்மொழிப்பின்னை தமப்பனரண்ணர், திருவாய்மொழிப்பின்னை, அவருடைய திருத்தாயார், விளாஞ்சோலைப்பின்னை, என்றிவர்கள் முக்யமாயிருப்பர்கள் மணற்பாக்கத்து நம்பிபாருடனே தேவப்பெருமாள் திருவாய்மலர்ந்தருளி, சிலரஹஸ்யார்த்தங்களை ஸாதித்தருளி, இன்னுஞ் சிலவர்த்தங்களைக் கோயிலிலே அவருக்கு ஸாதிப்பதாக அவரைக்கோயிலிலேபோய் வாஸம்பண்ணும்படி நியமித்தார். மணல்பாக்கத்து நம்பியாரும் கோயில்வாஸம் பண்ணிக்கொண்டு தமக்குத் தேவப்பெருமாள் ப்ரஸாதித்த வர்த்தங்களைத் தனியிடங்களிலேயிருந்து த்யானித்துக்கொண்டிருப்பர். ஒருக்கால்பின்னை லோகாசார்யர், ஸ்ரீபாதத்து முதலிகளுக்தாமுமாக வகாந்தத்திலே ஒருவிடத்திலே யிருந்துக்கொண்டு அங்கே மணற்பாக்கத்து நம்பியாருள்ளேயிருக்கிறுரென்று தெரியாமல் ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு ரஹஸ்யார்த்தங்களை ஸாதித்துக்கொண்டிருந்தார். அத்தை மணற்பாக்கத்து நம்பியா ருள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்து தமக்கு தேவப்பெருமாள ஸாதித்த வர்த்தங்களும் அப்போது பின்னைலோகாசார்யர் அருளிச்செய்த வர்த்தங்களுமொன்றுயிருந்தபடியாலே புறப்பட்டுவந்து அவரோ! நீரென்று சொல்லிக்கொண்டு பின்னைலோகாசார்யர் ஸந்நிதியிலேவிழுந்து ஸேவித்தார். பின்னைலோகாசார்யரும் அவரைத்திருக்கைகளாலே வெடுத்தருளி நீர் ஆர்? என்ன செய்தி? என்று கேட்டருளினர். மணற்பாக்கத்து நம்பியாரும் தேவப்பெருமாள் தமக்கு நியமித்தபடியே விண்ணப்பஞ்செய்தார். பின்னைலோகாசார்யரும் மிகவுமுகந்து மணற்பாக்கத்து நம்பியாரைத் தமக்கு அந்தரங்கசிஷ்யராக்கிக்கொண்டு தேவப்பெருமாள் ஸாதித்தவர்த்தங்களையும் அதற்குமேலே ஸாதிக்கவேண்டுமர்த்தங்களையும் ஸாதித்துக்கொண்டிருந்தார். பின்பொருகால் தேவப்பெருமாள் மணற்பாக்கத்து நம்பியாருடைய ஸவப்நத்தி

லே யெழுந்தருளி இந்தவர்த்தங்களையெல்லாங் கட்டளைப்பாடாக வொரு ப்ரபந்தமாக்கச்சொன்னேனென்று பிள்ளைலோகாசார்யருக்கு விண்ணப்பஞ் செய்யுமென்று நியமித்தார். அவருமப்படியே பிள்ளைலோகாசார்யருடைய ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்தார். லோகாசார்யருந் தேவப்பெருமாளுடைய நியமனத்தை சிரஸாவஹித்துக்கொண்டு உபதேசபரம்பரையாலே வந்தவர்த்தங்களை நாதமுனிமுதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளைக்கொண்டேநிரூபித்து ப்ரதிபாதித்து அதற்கு ஸ்ரீவசநபூஷணமென்று திருநாமஞ் சாற்றியருளினார். இந்த ஸ்ரீவசநபூஷணஸ்தாபநர்த்தமாகவாசார்யஹ்ருதயம் அவதரித்ததென்று முன்பேயெழுதித்து.

இப்பிள்ளை லோகாசார்யர் மஹாநுபவமுடையராய் பெரியபெருமாளுக்கு ப்ராணபூதராய் எழுந்தருளியிருக்கிறகாலத்திலே திருக்கச்சிகலகம் வந்து கோயிலிலே குடியிருக்கப்போகாமையாலே நம்பெருமாள் நாய்ச்சிமாருடனே கூடப்புறப்பட்டு வலஸையாகவெழுந்தருளினார். லோகாசார்யரும் பெருமாளைப்பிரிந்து தரிக்கமாட்டாமல் கிலமுதலிகளுந்தாமும் பெருமாளைப் பின்றொடர்ந்தெழுந்தருளி பெருமாளுக்குத் திருமேனிக்காவலாக வெழுந்தருளியிருந்தார். அப்போது ஜ்யோதிஷ்குடி என்கிற க்ராமத்திலே யெழுந்தருளி யிருக்கச்செய்தே லோகாசார்யர் திருமேனிகோவுசாற்றிக் கொண்டிருக்கச்செய்தே தம்முடைய கிஷ்யரான விளாஞ்சோலைப் பிள்ளையைத் திருவஹீந்தபுரத்திலே நித்யவாஸம்பண்ணும்படி நியமித்தருளி ஸங்யாஸாச்ரமத்தை யங்கீகரித்தருளி ஆவணிமாஸத்தில் சுக்லபக்ஷத்தில் த்வாதசியன்று திருநாட்டிற் கெழுந்தருளினார். பின்பு நம்பெருமாள் பிள்ளையைப்பிரிந்த க்லேசத்தாலே உடனே ஜ்யோதிஷ்குடியைவிட்டு திருமாலிருஞ் சோலைமலைக் கெழுந்தருளி அங்கே சிலநாளெழுந்தருளியிருந்து அவிடத்தில் அழகியமணவாளன் கிணறு என்கிற திருநாமத்தையுடைய ஒரு கிணற்றை யுண்டாக்கி அங்குநின்றும் புறப்பட்டு கோழிக்கோடுக் கெழுந்தருளினார். மற்ற தேசாந்தரத்திய திவ்யதேசத் தெம்பெருமான்களும் நம்மாழ்வாரும் கோழிக்கோட்டுக்கு வலஸையாக வெழுந்தருளினார். அங்கே நம்பெருமாள் நம்மாழ்வாரை மிகவு மூபலாளித்துத் தம்முடைய ஸிம்மாஸனமான வட்டமணையையும் மூத்தின்சட்டையையும் பகற்கருவண பந்தத்தையும் திருவீதியில் தீர்த்தப்படிகத்தையும் நம்மாழ்வாருக்கு ஸாதித்துவிட்டார். அன்றுமுதல் இன்றுவரைக்கும் நம்பெருமாளுக்கு வட்டமணை முதலானதில்லை. நம்பெருமாளங்குநின்றும் புறப்பட்டு திருவேங்கடமலைக் கெழுந்தருளி யங்கே யனேககால மெழுந்தருளி யிருந்தார்.

இனி நம்பெருமாள் புறப்பட்டருளினபின்பு கோயிலிலே கடந்த வ்ருத்தாந்த மெழுதுகிறது. பெருமாள் வலஸைபோனபின்பு கோயிலே அந்த துலுக்கன் ஆக்ரமித்து ஒருமதிளைப்பிரிக்கி கண்ணனூரிலே தனக்கராணுகக்கட்டிவித்து பின்னையு மனேக உபத்ரவங்களைச் செய்யத்துடங்கி

ணன். அப்போது நம்பெருமாள் திருவிடையாட்டமான அழகியமணவாள னென்கிற க்ராமத்தில் காணியான ப்ராம்மணரான சிங்கப்பிரானென்கிற தமிழ் விரகரானவர் அந்தத் தலுக்கன் வாசலிலே காய்பட்டோய்ந்து அவனுக் கனுகூலம்போலே சொல்லிக்கொண்டு அவன் நினைத்தபடி யுப த்ரவம்படவாமல் பணணிக்கொண்டு மதிள் மாளிகை கோபுரங்கள் மணி மண்டபங்கள் சாலைகள் தொடக்கமானவற்றையும் பெரிய பெருமாளையுங் காத்தார். அதுகண்டு அங்குள்ள வாசார்யர்க ளெல்லாரும் அந்த சிங்கப் பிரானுக்கு நல்வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார்கள். பின்பு திரு வாய்மொழிப் பிள்ளைதிருத்தாயார் தம்முடைய வாசார்யரான பிள்ளை லோகாசார்யரைப் பிரிந்து தரிக்கமாட்டாமல் பரமபதத்திற்குப் போ னான். அவள் குமாரரான திருமலையாழ்வா ரென்கிற திருவாய் மொழிப் பிள்ளையைச் சிறியதாயாரான வம்மையார் போஷித்துக் கொண்டிருந்தார். பின்பு திருமலையாழ்வார் பருவம்நிறைந்தவளவிலே தமிழ் விரகராய் ரஸிகராயிருந்தார். அப்போது பிள்ளைலோகாசார்யருடைய சிஷ்யராய் மஹாவைபவமுடையரான கூரகுலோத்தமதாஸரென்கிறவர் கோயிலே மந்த்ரவ்யாக்யானத்தை யெல்லாருகுகும் ப்ரவசனம்பண்ணிக் கொண்டு தர்சனத்தை ப்ரவர்த்திப்பித்துக்கொண்டிருந்தார். அந்த கூர குலோத்தமதாஸர் தம்முடைய வாசார்யரான லோகாசாரியருக்கு சிஷ்ய ராய் சிறியருமான திருமலையாழ்வாலைத்திருத்தி தர்சனப்ரவர்த்தகராமடபடி பண்ணை நினைத்து அவர்செவிப்படும்படி திருவிருத்தப்ரபந்தத்தை யனு ஸந்தித்தார். திருமலையாழ்வாரு மதற்குப் பொருள்கேட்டார். கூரகுலோத் தமதாஸரும் அவனைப்பார்த்து உமக்குச் சொல்லலாகாதென்றுசொல்லி அருளிச்செய்தார். திருமலையாழ்வாரு மிச்செய்தியை அம்மையாருக்குச் சொல்ல, அம்மையாரும் திருமலையாழ்வானைப்பார்த்து நீர் பிள்ளை லோகா சார்யர் திருவடிகளை யதிபால்யத்திலே யாச்ரயித்திருந்தீர்; இப்போதிப்படி நிர்பரராயின்றீரென்று லோகாசார்ய ஸம்பந்தத்தை ஸ்மரிப்பித்தாள். திருமலை யாழ்வாரு மாசார்யரைப்பற்றுகையிலே அபிநிவேசமாயிருந்தார். அக்காலத் திலே மூன்றெண்ணாயிரம் சிங்கப்பிரானுக்கு அவர்செய்த உபகாரத்திற்காக வுகந்து எல்லாவாசார்யர்களும் திருமணத்தூண்களபிமானமென்று திருநாமஞ் சாற்றினார்கள். திருமணத்தூணாவது:—ஸ்ரீரங்கவிமானத்திலே யிருக்கு மொரு பரிமளப்பொற்கம்பம். மணம்=பரிமளம்; தூண்=கம்பம்.

அந்த சிங்கப்பிரானுக்கு எல்லாரு மர்த்தவிசேஷங்கள்சொல்ல, அந்த ச்சு சிங்கப்பிரானும் பலருமருளிச்செய்கையாலே அழகியமணவாள னென்று தெரிகிறதில்லை; வாக்மியாயிருப்பாரொருவனைத் தெளியவருளிச்செய்யும் படி கல்பிக்கவேணுமென்றும், அவரருளிச்செய்த திருவாய்மொழியை யத்தனைக்கண்டு நீர்சொல்லுவென்று நியமித்தார்கள். திருமலையாழ்வாரு மப்படியே சிங்கப்பிரானுக்குச் சொல்விக்கொண்டிருக்கச்செய்தே அதிலே சிறிது அலைமப்ரதாயமாயிருக்கிறபடியைக்கண்டு, கூரகுலோத்தமதாஸர் திரு

பழநடை விளக்கம்.

மலையாழ்வாருக்கு ஸம்ப்ரதாயார்த்தங்களைப்ரஸாதிப்பித்துப் பிள்ளைலோகா சார்யர்தமக்கு ப்ரஸாதித்த ஸ்ரீவசனபூஷணம் முதலான ஸகல ரஹஸ்யங் களையும்ஸாதித்துத் திருமலையாழ்வாரை தர்சகப்ரவர்த்தகராக்கினர் ஆகை யாலே கூரகுலோத்தமதாஸருக்கு உதாரரென்று திருநாமமாயிற்று. பின்பு கூரகுலோத்தமதாஸர் தம்முடைய வந்திமகாலத்திலே திருமலையாழ்வாரை யழைத்தருளி விளாஞ்சோலைப்பிள்ளையிடத்திலே இன்னுஞ் சிறிதுகாலும் திருக்கண்ணங்குடிப்பிள்ளை யிடத்திலே திருவாய்மொழியைக் கேளு மென்று நியமித்துத் திருநாட்டிற் கெழுந்தருளினர்.

திருவாய்மொழிப்பிள்ளையும் திருக்கண்ணங்குடிப்பிள்ளை யிடத்திலே திருவாய்மொழி கேழ்க்கும்போது அவர் தாத்பர்யார்த்தஞ் சொல்லிக் கொண்டிவக்தார். இவருமத்தைசப்தத்திலேயறிட்டுச்சொல்லவேணுமென்று விண்ணப்பஞ் செய்தார். திருக்கண்ணங்குடிப்பிள்ளையு மதற்கு திருப்புட் குழிஜீயர் ஸந்நிதிக்குப் போயென்று நியமித்தார். திருமலையாழ்வாரும் திருப்புட்குழிக்குவந்தார். அன்று ஜீயர் திருநாட்டிற் கெழுந்தருளி பனி ரண்டாவது நாளாயிருந்தது. இவரு மதுகண்டு மிகவுந் தூக்கித்துக்கொண் டிருந்தார். அங்கே நம்பிள்ளைசிஷ்யர் ஈயுண்ணிமாதவருடைய சிஷ்யப்ர சிஷ்யராகிய நாலூராச்சாம்பிள்ளை யெழுந்தருளி யிருந்தார். திருமலையாழ் வாரு மவர்திருவடிகளிலே ஸேவித்துத் தாமிங்கெழுந்தருளின காரியத்தை விண்ணப்பஞ்செய்தார். நாலூராச்சாம்பிள்ளையும் இவரையங்கீகரித்தருளி நாமே யுமக்குத் திருவாயமொழி நடத்துகிறோமென்று அருளிச்செய்து நடத்திக்கொண்டிருக்கச்செய்தே இத்தைத் திருநாராயணபுரத் தாய்ப் பிள்ளைமுதலானவர்கள்கேட்டு எம்பெருமானுடையஸ்ரீமுகமெழுதி நாலூ ராச்சாம்பிள்ளையைத் திருநாராயணபுரத்திற் கெழுந்தருளும்படி யனுப்பி னர்கள், நாலூராச்சாம்பிள்ளையும் ஸ்ரீமுகத்தை உச்சியிலே வைத்துக் கொண்டு உகந்து திருமலையாழ்வாரையுங் கூட்டிக்கொண்டு திருநார யணபுரத்திற் கெழுந்தருளி உடையவருக்கு உகப்பாகப்பிள்ளை திருமலை யாழ்வார்முதலானுக்கு ஈடுமுப்பத்தாறுயிரத்தை ப்ரஸாதித்து, திருமலை யாழ்வாருக்குத் தம்முடைய திருவாராதனமான கண்ணனை ப்ரஸாதித் தருளினர். திருமலையாழ்வாருமத்தைப்பெற்று க்ருதார்த்தராளர். பின்பு திருமலையாழ்வார் நம்மாழ்வாரை ஸேவிக்கவேணுமென்கிற வபிநிவேசத் தாலே புறப்பட்டு நம்மாழ்வார் வலசையாகவெழுந்தருளியிருக்கிற மேல் காட்டில் திருக்கணம்பியென்கிற வூருக்கெழுந்தருளி நம்மாழ்வாரை ஸேவி த்து அவரனுமதிகொண்டு தாம்முன்னதாகத் திருநகரிக்கெழுந்தருளிக் காவிவெட்டி நாடாக்கிக்குடியேற்றி, திரும்பவுந் திருக்கணம்பிக்கு வெழுந் தருளி ஆழ்வானையெழுந்தருளப் பண்ணிவைத்துக்கொண்டு திருநகரியிலே ப்ரதிஷ்டைபண்ணிவித்துத் திருக்கோபுரம் முதலானதுகளைக் கட்டுவித்து நித்யோத்ஸவாதிகளை நடப்பித்தருளினர். அப்போது நம்மாழ்வாரும் மிகவு மூகந்து திருமலையாழ்வாருக்கு சடகோபதாஸனென்று திருநாமஞ்சாற்றி

யருளினார். பின்பு திருமலையாழ்வார் திருவந்தபுரத்திலே விளாஞ்சோலைப் பிள்ளைஸன்னிதிக்குப்போய் அவரைஸேவித்து அவரிடத்திலேவிசஷார்த்தங்களைப்பெற்று அவர் விஷயமாகத் தனியனும் விண்ணப்பஞ்செய்து திருநகரிக்கெழுந்தருளினார். பின்பு சிலநாளிலே விளாஞ்சோலைப்பிள்ளை திருநாட்டிற்கெழுந்தருளின சேதியைக்கேட்டு அவருக்கு சிஷ்யபுத்திரர்கள் செய்யுங் க்ருத்யங்களையெல்லாஞ் செய்தருளினார். பின்பு சிறிதுநாளிலே திருமலையாழ்வார் தம்முடைய மருமகனைப் புத்ராபிமானம்பண்ணிக்கொண்டு தெய்வப்பெருமாளென்று நாலூராச்சாம்பிள்ளை திருநாமஞ் சாற்றியருளினார்.

பிள்ளைலோகாசார்யருடைய சிஷ்யரான கொல்லிகாவலதாஸரென்கிற கோட்டூரழகியமணவாளப் பெருமாள்பிள்ளையும், லோகாசார்யர் சமக்ரு ஸாதித்தருளின வர்த்தவிசேஷங்களையனுஸந்தித்துக்கொண்டு சிக்கில் கிடாரமென்கிறவூரிலே யெழுந்தருளியிருந்தார். அதன்பின்பு எழுபத்து நாலு ஸிம்மாஸனஸ்தர்களிலே கோமடத்தாழ்வானுடைய திருவம்சஸ்தரான திருநாவுடைய பிரான்தாஸரண்ணரென்கிறவர் கொல்லிகாவலதாஸருடைய திருக்குமாரத்தியாரை விவாஹம்பண்ணிக்கொண்டு சிக்கில் கிடாரத்திலே அவர் திருமாளிகைபிலே யிருந்துக்கொண்டு அவர் ஸந்நிதியிலே ஸகலரஹஸ்யங்களையு மதிகரித்து அவரை லோகாசார்யராகவே யநுஸந்தித்துக்கொண்டிருந்தார். பின்பு கொல்லிகாவலதாஸரும் சிலநாளெழுந்தருளியிருந்து திருநாட்டுக் கெழுந்தருளினார். பின்பு திருநாவுடையபிரான் தாஸரண்ணரும் தேவிகளையழைத்துக்கொண்டு திருநகரியிலேபோ யெழுந்தருளி யிருந்தார்.

மணவாளமாமுனிகளவதாரம்.

அக்காலத்திலே நம்மாழ்வாரடியாக வருகிற ப்ரபத்திஸம்பரதாயங் குறைந்து வருகிறதைக்கண்ட பெரியபெருமாள், எப்பெருமானுரைப்போலே எல்லாரையு முஜ்ஜீவிப்பா ரொருவரையுண்டாக்குவோமென்று நினைப்பிட்டு திருவந்தாழ்வானைப் பார்த்தருளி நீர்போய் உம்முடைய வவதாரமான திருப்புளியாழ்வானிருக்கிற திருநகரியிலே திருநாவுடைய பிரான்தாஸரண்ணருடைய தேவிகள் கர்ப்பத்தையடைந்து அவதரியுமென்று நியமித்தருளினார். திருவனந்தாழ்வானு மப்படியே அண்ணருடைய தேவிகள்கர்ப்பத்தையடைந்து கலியுகத்தில் நாலாயிரத்து நூற்றெழுபத்திரண்டாவதாய், சகவர்ஷத்தில் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றிரண்டாவதான ஸாதாரணவர்ஷத்தில் அற்பிசிமாசத்தில் இருபத்தாறுவது நாளில் சுக்லபக்ஷத்தில் வ்யாழக்கிழமை சதுர்த்திகூடின மூலநக்ஷத்ரத்திலே திருநாவுடைய பிரான்தாஸரண்ணருக்குக் குமாரராக வவதரித்தருளி

பழநடை விளக்கம்.

னர். பின்பு அண்ணனருங் குமாரருக்கு ஜாதகர்ம்மம்பண்ணி பனிரண்டா வது நாளிலே திருவிலச்சினையும் ஸாதித்து குமாரருடைய வழிவழுகு பெரிய பெருமாளுடைய வழிவழுகுபோலே யிருக்கையாலே அவருக்கழ கிய மணவாளரென்று திருநாமஞ்சாற்றி, இவர் ஸாமான்யரல்ல மஹாஜ் பாவரென்று அறுதியிட்டிருந்தார். பின்பு அழகிய மணவாள ரென்கிற குமாரரும் சிக்கில்கிடாரத்திலே அம்மான் திருமாளிகையிலேபோய் வளர்க் துக்கொண்டிருக்கிற நாள்லே தமப்பனாரான வண்ணரு மிவருக்கு அன்ன ப்ராசன சௌளோபனயனாதிகளை சாஸ்த்ரப்ரகாரத்திலே செய்வித்து வேதசாஸ்த்ரங்களையு மதிகரிபபித்துக்கொண் டிருந்தார். அப்போ தழகிய மணவாள ரென்கிற குமாரரும் திருவரங்தாழ்வானுடைய வவதாரமாகை தோற்றும்படி பலராமாவதாரத்தைப்போலே சந்திரமண்டலம் திருப்பார்க் கடல்போன்ற திருநிறத்தையுடையராய், அளவில்லாத கல்யாணகுணங்க ளாலே சக்ரவர்த்தித் திருமகனென்றும்படியாய், எழுந்தருளியிருந்தார். இப்படியில ரவதரித்தருளின ஸாதாரணவர்ஷத்திற்கு மூன்றுவதான பரீ தாபிவர்ஷத்தில் வையாசிமாஸத்தில் பதினேழாவதுநாளிலேநம்பெருமாள் நாய்ச்சிமாருடனேகூட கோயிலுக்கெழுந்தருளினார். கோபண்ணரென்கிற வர் நம்பெருமாளைத் திருமலையில் நின்றுஞ் செஞ்சியிலே யெழுந்தருளப் பண்ணிவித்து அங்கே சிறிதுநாளாராதித்து துலுக்கரையெல்லா மடித்து செஞ்சியில்நின்றும் பெருமாளைக் கோயிலுக் கெழுந்தருளப் பண்ணிவித்தா ராகையாலே நம்பெருமாள் கோயிலுக்கெழுந்தருளினார். நம்பெருமாளுங் கோயிலிலே எழுந்தருளியிருந்துக்கொண்டு தம்முடைய திருநோக்குப் பக்கமான தெற்குதிக்கில் சிக்கில் கிடாரத்திலே வளருகிற வழகியமண வாளப்பெருமாளைக் கடாக்ஷித்துக்கொண்டிருந்தார். அப்போது அண்ண ருந் தம்முடைய குமாரரான வழகிய மணவாளப்பெருமாளுக்குத் திருக் கலயாணஞ் செய்வித்து திவ்ய ப்ரபந்தங்களையு மோதுவித்தார். பின்பு சிலநாளிலே தமபபரானவண்ணர் திருநாட்டிற் செழுந்தருளினார். அவ ருக்கு அழகியமணவாளப்பெருமாளுஞ் சிஷ்யபுத்ரர்கள் செய்யவேண்டிய வற்றையெல்லாஞ் செய்தருளினர்.

அக்காலத்திலே திருநகரியிலே யெழுந்தருளியிருக்கிற திருமலையாழ் வார் இனிதர்சன ப்ரவர்த்தகராவாராரென்று நினைத்துக்கொண்டிருக்கச் செய்தே அழகியமணவாளப்பெருமாளுஞ் சிக்கிற் கிடாரத்தினின்றும் புறபபட்டு திருநகரிக்கெழுந்தருளி திருமலையாழ்வார் திருவடிகளையாச்ர யித்தார். பின் பழகியமணவாளப்பெருமாளும் திருவாய் மொழிப்பிள்ளை ளஞ்நிதியிலே த்ரவ்டவேதங்களுடைய தாத்பர்யங்களை யெல்லாமறிந்து அதிலே நிஷ்டராயிருந்தார், திருமலையாழ்வாருந் திருவாய்மொழியினுடைய ரஸானுபவத்திலேயே மிகவுமூன்றியிருக்கையாலே அவருக்குத்திருவாய் மொழிப்பிள்ளையென்று திருநாமமாயிற்று. பின்பு திருவாய்மொழிப் பிள் ளையு மழகியமணவாளப்பெருமாளுடைய நிஷ்டாவிசேஷத்தாலே மிகவு

மூகத்து அவருக்குஉடையவருடையதிருவடிகளேயேபரதெய்வமாகத்தந்தரு ளினார். இவருமத்தைப்பெற்று க்ருதார்த்தரா யெழுந்தருளியிருந்தார். அப் போது திருவாய்மொழிப்பிள்ளையும் திருநகரியிலேஉடையவருக்குத் தனிக் கோயில்கட்டிவைத்து உடையவர் கோவிலெவளைய விராமாநுஜ சதுர்வேதி மங்கலமென்கிற திருவீதியையுமுண்டாக்கி அதில்பெரியோர்களேயும் ப்ர திஷ்டிப்பித்தார். பின்பு அழகியமணவாளப்பெருமாளும் அந்த உடைய வர் திருவடிகளிலே மிகவும்ப்ரவணராய் அவர்விஷயமாக யதிராஜவிம்சதி யென்கிற ப்ரபந்தத்தை விண்ணப்பஞ் செய்தார். அதிலுல் அழகியமண வாளப்பெருமாளுக்கு யதிந்த்ரப்ரவணரென்று திருநாமமாயிற்று.

(ஆகயதிராஜவிம்சதி மணவாளமாமுனிகள் வடதேசயாத்ரை யெழுந் தருளுவதற்கு முன்னேதானே பாண்டியதேசத்திலே ஆழ்வார் திருநகரி யிலே சதுர்வேதிமங்கலத்திலே யெழுந்தருளியிருக்கிற வெம்பெருமானர் விஷயமாகச் செய்ததாகையாலே இது ஸ்ரீபெரும்பூதூரிலேவந்து செய்த தில்லை.)

பின்பு யதிராஜவிம்சதியை திருவாய்மொழிப்பிள்ளை கேட்டருளி மிகவுமுகந்து திருப்புளியாழ்வாரடியிலே தாங்கண்ட நம்முடைய உடைய வரையிவருக்குத் திருவாராதனமாகக் கொடுத்தருளி இவரிடத்திலே யிசை வாபிமானஞ் செய்துக்கொண்டிருந்தார். அப்போது திருவாய்மொழிப் பிள்ளையினுடைய ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு யதிந்த்ரப்ரவணரிடத்திலே சிறிது அஸூயையுண்டாக, அந்தஸர்வக்ஞரான திருவாய்மொழிப்பிள்ளை யறிந்தருளி அவர்க ளபசாரப்படாதபடி இவர் சேஷாவதாரமென்று காணும்படி உபபத்திகளைக்கொண்டு மூதலித்துக்காட்டி அவர்க ளஸூயை யைத்தவிர்ப்பித்து இவரிடத்திலேயவர்களுக்கு ப்ரேமத்தையுண்டாக்கியரு ளினார். பின்பு யதிந்த்ரப்ரவணருக்குக் குமாரரலதரிக்க அவருக்குத் திருவாய் மொழிப்பிள்ளை நியமனத்திலே ராமாநுஜரய்யனென்று திருநாமஞ்சாற்றி யருளினார். பின்பு திருவாய்மொழிப்பிள்ளையுந் தம்முடைய திருவாராதன மான கண்ணனிடத்தில் அதிப்ரேமத்தாலே கண்ணன்சரிதத்தைதன்னுகந் காட்டுகிற பெரியாழ்வார் திருமொழிக்குப் பெருக்கவ்யாக்யானமும் செய் தருளினார். பின்பு சிலநாளிலே திருவாய்மொழிப்பிள்ளைக்குத் திருநாட்டுக் கெழுந்தருளவேணுமென்று மிகவும் வாஞ்சையுண்டாய் திருமேனியிலே நோவுசாற்றிக்கொண்டிருக்கிறபோது அவருக்குத் திருவுள்ளத்திலே சிறிது குறையுண்டானதாகத் தோற்றி, யதிந்த்ரப்ரவணர் முதலான முதலிகள், ஸந்நிதியிலேவந்து திருவாய்மொழிப்பிள்ளையை சேவித்து திருவுள்ளத்தி லே என்னகுறை யென்றுகேழ்க்க, திருவாய்மொழிப்பிள்ளை யருளிச்செய் தது:—காலங் கலியுகமாகையாலே ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளை முதலில் வாஞ்சைகளோடே வளர்த்துக்கொண்டிருப்பா ராரென்று மிகவுங் கிலே மாயிராநின்றதென்றருளிச்செய்தார். பின்பு யதிந்த்ரப்ரவணரைத் திருவா களிலே ஸேவித்து அடியேனப்படியே செய்கிறேனென்று விண்ணப்பஞ்

செய்தார். திருவாய்மொழிப்பிள்ளையு மதுகேவலம் வார்த்தையால் போ
ராதென்ன, யதிந்த்ரப்ரவணரும் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளைத்
தொட்டு அடியேன் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக்கொண்டே காலக்ஷேபம்
பண்ணுகிறேனென்று விண்ணப்பஞ்செய்தார். திருவாய்மொழிப்பிள்ளையுந்
திருவுள்ளமுகந்து நீர் தீர்வாணசாஸ்த்ரங்களில் பலகாலுங் கண்வையாதே
எம்பெருமானுருக் குகப்பாக ஸ்ரீபாஷ்யத்தை யொருக்கால்கேட்டு நமக்கு
மெம்பெருமானுருக்கும் மிகவும் ப்ரியமாக திருவாய்மொழி முதலான
ஸ்ரீஸூக்திகளிலே பரிசீலனம்பண்ணிக்கொண்டு நம்பெருமாளுக்கு மங்
களாசாஸனம் பண்ணிக்கொண்டு கோயிலிலேநித்யவாஸமாகவிருமென்று
ஆக்ஞாபித்து ஸ்ரீபாதத்து முதலிகளையும் மற்றுமுண்டானவர்களையும்
அழைத்தருளி யதிந்த்ரப்ரவணர் கையிலேகாட்டிக்கொடுத்து முதலிகளைப்
பார்த்து இவரவதாரவிசேஷம், நம்மைப்பார்த்தாப்போலே இவரைப்பார்த்
துக்கொண்டு இருங்கோளென்று நியமித்து பிள்ளை லோகாசார்யருடைய
திருவடிகளை த்யாநித்துக்கொண்டு வைகாஸிமாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்தில்
அஷ்டமியில் (திருவாய்மொழிப்பிள்ளை) திருநாட்டிற்கெழுந்தருளினார்.
இவரவதார திருநக்ஷத்ரம்:—வையாழிவிசாகம். அவதாரஸ்தலம்:—குந்தி
நகரம். திருநாமம்:—திருமலையாழ்வார்; ஸ்ரீசைலேசர்; சடகோபதாஸர்;
திருவாய்மொழிப்பிள்ளை; காரெவெட்டியையன். இவர்செய்தருளினப்ரபந்
தம்:-பெரியாழ்வார்திருமொழி வ்யாக்யானமும், ஸ்ரீவசநபூஷணத்திற்கொரு
வ்யாக்யானமும், வ்யாப்த்யநுஸந்தானமென்கிற க்ரந்தமும்.

பின்பு யதிந்த்ரப்ரவணர், ஆசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையி
னுடைய சரமகைங்கர்யத்தை நன்றாக நடப்பித்துத் திருநகரியிலே தர்ச
நத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறகாலத்திலே, அழகியவரதர் ஸைனமுத
லியார் அண்ணர்முடக்கமானவர்கள் இவர் வைபவத்தைக்கேட்டு வந்திவர்
திருவடிகளை யாச்ரயித்தார்கள். அவர்களில் அழகியவரதர் கடிக ஸக்யா
ஸாச்ரமத்தை யடைந்து ராமானுஜ ஜீயரென்று திருநாமத்தை யுடையவ
ராய் யதிந்த்ரப்ரவணருக்கு பாதரேகையாய் பிரியாமல் அடிமைசெய்துக்
கொண்டிருந்தார். பின்பு சிலநாளிலே யதிந்த்ரப்ரவணர் நம்பெருமாளுக்கு
மங்களாசாஸனம் பண்ணவேணுமென்று திருவுள்ளம்பற்றி ஆழ்வார் திரு
முன்பேசென்று சேவித்து "நம்பெருமாள் விரோதிகளையெல்லாம் நசிப்
பித்து திருவரங்கத் திருப்பதியிலே பாங்காக முன்புபோலே யெழுந்தருளி
யிருக்கிறார்; அடியேன் நம்பெருமாளை ஸேவிக்க விடைகொள்ளுகிறே
னென்று" விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும்விடைகொடுத்தருளினார், பின்பு
யதிந்த்ரப்ரவணரும் முதலிகளுடனேகூட திருநகரியினின்றும் புறப்பட்டு
ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஆண்டாளையும் பெரியாழ்வாரையும் வடபெருங்
கோயிலுடையாளையும் சேவித்து அங்குநின்றும் திருமாலிருஞ்சோலைக்
கெழுந்தருளி யழகரை ஸேவித்து அங்குநின்றுங் கோயிலுக் கெழுந்தருளி
னார். அப்போது கோயில்பரிகரங்களெல்லாம் எதிர்கொண்டுவந்து ஸேவி

த்து உள்ளே யழைத்துக்கொண்டுபோக, இவரும் எழுதிருவீதிகளையும் ஸேவித்து கோடியி லண்ணன் திருமாளிகையிலே எழுந்தருளினார். கோடியிலண்ணலுவது பிள்ளைலோகாசார்யருடைய சிஷ்யரென்று முன்பே யெழுதித்து. இவர் பெருமாள் வலசைபோனபோது கோயிலவிட்டுத் திருமெய்யத்திலேபோய், இருபத்திரலாயிரப்படியை ப்ரவசநம்பண்ணிக் கொண்டிருந்து பெருமாள் திரும்பவுங் கோயிலுக்கெழுந்தருளின பின்பு கோயிலிலே குடியேறி யெழுந்தருளியிருந்தார். இந்தக்கோடியிலண்ணர் யதிந்த்ரப்ரவணரைக் கண்டு மிகவும் அவதாரவிசேஷமென் றுதரித்து இவரைப் பெருமாளை ஸேவிக்கப் பண்ணுவதாகக் கோயிலுக் கதிபதியா யிருக்கிற திருமாலைதந்த பெருமாளென்கிற பட்டரணுமதிக்காக பட்டர்திரு மாளிகைக் கெழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோக, பட்டரும் யதிந்த்ரப்ர வணரைக்கண்டு அத்யாதரத்துடனே யெழுந்திருந்து ஸேவித்து உபசாரங் களைப்பண்ணி ஆஸனத்திலே யெழுந்தருளவைத்துக்கொண்டு மிகவு மாதரி த்து திருவாய்மொழியிலே ஈட்டிற்படியே யொருபாட்டிற்குப் பொருளரு ளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ் செய்தார். யதிந்த்ரப்ரவணரும் அப்படியே கங்காப்ரவாஹம்போலே யுபந்யஸித்தருளினர். அதை பட்டர் கேட்டருளி யத்யாச்சாயப்பட்டுயதிந்த்ர ப்ரவணருக்கு முப்பத்தாறுயிரப் பெருக்கரென்று திருநாமஞ்சாற்றித்தம்முடையவன்னிதிப்பேரையும் மற் றப்பரிகரங்களையும் கூடக்கூட்டி நம்பெருமாளை மங்களாசாஸனம் பண் ணும்படி யனுப்பியருளினர். பின்பு யதிந்த்ரப்ரவணரும் ஸேவாக்ரமத்தி லேஸேவித்துக்கொண்டு பெரியபெருமாளையும் நம்பெருமாளையும் சேவித்து மிகவுமானந்தித்து மங்களாசாஸனஞ்செய்தருளி கோடியிலண்ணருடனே கூட அவர்திருமாளிகைக்கெழுந்தருளினர். பட்டரும் அமுதுபடி பரும் பமுதுமுதலான வனேகஞ்சிறப்பு எடுத்துவரக்காட்டியருள, வறையுமங் கீகரித்தருளினர். பின்பு பிள்ளைலோகாசார்யர் முதலான பூர்வாசார்யர்க ளுடையவைபவங்களைக் கோடியிலண்ணரருளிச்செய்யக்கேட்டுக்கொண்டு பூர்வாசார்யர்க ளெழுந்தருளியிருந்த திருமாளிகைகள்நிலைகளையந்த திரு வாசலிலேஸேவித்துமிகவு மாதரத்துடனே லோகாசார்யர்கள் முதலான வாசார்யர்களையே நினைத்துகொண் டெழுந்தருளியிருந்தார். பின்பொரு நாள் யதிந்த்ரப்ரவணர் நம்பெருமாளை ஸேவித்திருக்கச்செய்தே பெருமாள் யதிந்த்ரப்ரவணரைக்கடாக்ஷித்து திருப்பவளந்திறந்து நம்முடையவனைப் போலேநீரும்நம் வீட்டில்கார்யத்தையுந்தர்சநத்தையும் ஆராய்ந்துக்கொண்டு சரீராவஸானத்தளவும் இங்கேயிருமென்று நியமித்தருளினர். யதிந்த்ர ப்ரவணரும் மஹாப்ரஸாதமென்றங்கீகரித்து நியமித்தபடியே யெழுந்தருளி யிருந்தார். அக்காலத்திலே அங்குண்டான ரஹஸ்யப்ரபந்த ஸ்ரீகோசங் களையெல்லாம் திருக்கண்சாற்றி ஜீர்ணோத்தாரணம்பண்ணி ப்ரகாசிப்பித் துக்கொண்டிருந்தார்.

திருப்பணி திருவாராதனம் நடத்திக்கொண்டுபோருகிற வுத்தமநம்பி யானவர் தாழ்வாகநடத்திக்கொண்டு போருகிறபடியைக்கண்டு அவரைத்

பழநடை விளக்கம்.

தாம் நியமித்தும் பெருமானைக்கொண்டு நியமிப்பித்தும், திருப்பணி திருவாராதனந் தடக்கமானவற்றைப் பெருக்கடத்தி யருளினர். பின்பு யதிந்த்ரப்ரவணர் திருமலைமுதலான வடதிசையிலுள்ள திருப்பதிகளைத் திருவடி தொழவேணுமென்ற திருவுள்ளமாய் நம்பெருமாளனுமதிகொண்டு புறப்பட்டு பெருங்கூட்டத்துடனே திருவெள்ளரைத் திருக்கோவலூர் ஸேவித்துக்கொண்டு திருமலைக்கெழுந்தருளி ஸேவாக்ரமத்திலே பெரியாழ்வார் முதலான வாழ்வார்களையும் ஸேவித்து இரண்டாஞ்சுற்றிலே கருமாணிக்கப் பெருமாளை ஸேவித்துப் பெருந்தேவியாரையும் ஸேவித்து உள்சுற்றிலே யெழுந்தருளி ஹஸ்திகிரியடிவாரத்திலே அழகியசிங்கரை ஸேவித்து அங்குநின்றும் புறப்பட்டு, அக்காலத்திலே சூடிக்கொடுத்த நாச்சியார் ஸந்நிதி யில்லாமையாலே ஸேனைமுதலியாரை ஸேவித்து, ஸேவாக்ரமத்திலே ஹஸ்திகிரியேறியருளிப் பேரருளாளரை ஸேவித்துநிற்க, பேரருளாளரும் திருப்பவளந்திறந்து நம்மிராமானுசனைப்போலே யிருப்பா ரொருவரைப் பெற்றோமென் றருளிச்செய்து, ஸகல வரிசைகளையும் ஸாதித்து விடை கொடுத்தருளப் புறப்பட்டு, திருவெஃகா முதலான திருப்பதிகளை ஸேவித்துக்கொண்டு புறப்பட்டு ஸ்ரீபெரும்பூதூருக் கெழுந்தருளி ஸ்ரீபாஷ்யகாரரை ஸேவித்து மிகவு மீடுபட்டு இன்பவெள்ளத்திலேமூழ்கி மங்களாசாஸநம்பண்ணி ஸ்ரீபாஷ்யமதிகாரிக்கைக்கு உடையவ ரனுமதிகொண்டு திரும்பவும் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளி, அங்கே கிடாம்பியாச்சான் திருவம்சஸ்தராய் ப்ரம்மதந்த்ரம் ஸ்வீகாரஸந்நிதியிலே ஸ்ரீபாஷ்யமதிகரித்து லோகாசார்யருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நயினார் ஸந்நிதியிலே ஸகல ரஹஸ்யங்களையும் மூப்பத்தாறாயிரப்படி முதலான ஸகல ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் அதிகரித்து மிகவும் விலக்ஷணராயிருக்கிறகிடாம்பி திருமலையாழ்வார் ஸந்நிதியிலே ஸ்ரீபாஷ்யமதிகரித்துக்கொண்டிலநாளெழுந்தருளியிருந்து, ஸ்ரீபாஷ்யந் தலைக்கட்டினபின்பு அங்குவந்தாச்ரயித்த பெரியோர்களுக்கெல்லாம் உபயவேதாந்தம் ஸாதித்துக்கொண்டு சொன்னவண்ணஞ்செய்த பெருமாளான தேவபிரான் ஸந்நிதியிலே சிலகால மெழுந்தருளி யிருந்தார். அத்தாலே சொன்னவண்ணஞ்செய்த பெருமாள் ஸந்நிதியிலே எழுந்தருளியிருக்கிற யதிந்த்ரப்ரவணர் ஏழுநாழமுத்தையுடனும் திரிதண்டத்துடனுமின்றுவரைக்கு மெழுந்தருளி யிருந்தார். பின்பு யதிந்த்ரப்ரவணரும் தேவபிரானை யனுமதிகொண்டு அங்குண்டான தர்சனக்ரந்தங்களையுமெடுப்பித்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி, அவர் நியமனத்தாலே அங்கேகந்த்யவாஸம் பண்ணிக்கொண்டு பெருமாளுக்கு மங்களாசாஸனபரராயெழுந்தருளியிருந்தார். அக்காலத்திலே பெருமாளுடனை ஸேவைக்கு விரோதியான ஆசௌசத்தைச் சிலர்வந்து விண்ணப்பஞ்செய்ய, அத்தைக்கேட்டு நம்பெருமாள்ஸேவையில்லாமையாலே க்லேசப்பட்டு அப்போதே தம்மூடையவராசார்யரான திருமலையாழ்வாருக்குவித்வானான சடகோபஜீயர்ஸந்நிதியிலே ஆச்ரமஸ்வீகாரஞ்செய்தருளிசடகோபஜீயரென்று திருநாமம்பெற்று நம்பெருமாளைஸேவித்துநிற்க, நம்பெருமா

ளும் மிகவுமாதரித்தருளி தம்முடையதிருநாமமான முத்தின திருநாமத்தை யேயளாதித்தருளி, தம்முடைய அழகியமணவாளஜீயரை ப்ல்லவராயன்மடத் திலே விட்டுவாருங்கோளென்று உத்தமநம்பி முதலான பரிகரத்தையு மிவர்பின்னே யனுப்பியருள, அவர்களுமிவனை யேவித்துக்கொண்டு மடத் திலே யெழுந்தருளப்பண்ணினைவத்தார்கள்.

பின்பு அழகியமணவாளஜீயரும் ராமானுஜஜீயர்முதலான முதலி களைக்கொண்டு மடத்தைச் சொப்பனிடுவித்துத் திருவாய்மொழிப்பிள்ளை யின் திருநாமத்தாலே திருமலையாழ்வானென்று வ்யாக்யான மண்டபத்தை யுண்டாக்கி, ரஹஸ்யங்கள் விளைந்தவிடமான லோகாசார்யர் திருமாளிகை நிலைகளிலுண்டான மண்ணுலெயதற்குத் திருப்பூச்சுபூசுவித்து அவ்விடத் தைக் குருகுலவாஸமாக வெண்ணிக்கொண்டு திருவாய்மொழிப்பிள்ளை திரு வழுச்சாயையிலேயிருந்து வ்யாக்யாநித்துக்கொண்டுபெரியவாதரத்தோடே பெரியபெருமாளுக்குப் பெருக்கமங்களாசாஸனத்தைப் பண்ணிக்கொண் டிருந்து, அதிலுலே பெரியஜீயனென்றுதிருநாமம்பெற்று அங்குள்ளை பெரி யோர்களாலே ஆச்ரயிக்கப்பட்டிருந்தார். பின்புகோவிந்ததாஸரப்பனென்று திருநாமத்தையுடையவரான பட்டர்பிரான் ஜீயரும் பெரியஜீயர் திருவடி களை யச்ரயித்துப் பிரியாமல் அடிமைசெய்துக்கொண்டிருந்தார். பின்பு பெரியஜீயர் பெரியபெருமாளுடைய நியமனத்தாலே ஸ்ரீ ரங்கராஜரைத் தமக்குத் திருவாராதனமாக வெழுந்தருளப்பண்ணிவித்து, லோகாசார்ய ருடைய திருநக்ஷத்ரமான ஐப்பிசியில் திருவோணத்திலே திருப்ரதிஷ்டை பண்ணிவித்து ஆராதித்துக்கொண்டு ஆசார்யஸ்ரீக்ரு இருப்பிடமாகவிருந் தார். அப்போது அத்தேசத்திலுள்ள தேசாந்தரத்திலுமுள்ளா ரெல்லாரும் இவருடைய வைபவத்தைக்கண்டுங்கேட்டும் திரள்திரளாகவந்திவர்திருவடி களை யாச்ரயித்தார்கள்.

பின்புபெரியபெருமாள் திருப்பவளத்திறந்தும் ஸ்வப்நத்திலும் பலமுக மாகப் பெரியஜீயராகிறார் நாமேயாயிருக்கும்; ஆகையால் அவனை யாச்ர யிங்கோளென்று நியமித்தருளுகையாலே ராமானுஜபரிக்ரஹத்தாலும் அபிஜன (அபிஜன) திகளாலும் உயர்ந்திருக்கிற கந்தாடையண்ணன் முத லான வாசார்யபுருஷர்களும், முன்புண்டான வதிசயமிருக்கச்செய்தே மேற்பட்ட வதிசயமும் வேணுமென்று பெரியஜீயருடைய திருவடிகளை யாச்ரயித்தார்கள். வண்டுகள் பலபூக்களிலும் பலதளித்தேன்கொண்டு பெருந்தேன்கூட்டுமாப்போலே பலவாசார்யஸம்பந்தத்தாலே பலவதிசயங் களைப்பெற்று மஹாவைபவத்தையுடையராய் உலகத்திற்கு ஆசார்யபுரு ஷர்களாயிருப்பர்களாகையாலே, எழுபத்திரண்டு ஸிம்மாஸனஸ்தர்களிலே யொருவராகிய கோமடத்தாழ்வான் திருவம்சஸ்தரான பெரியஜீயனை யாச்ரயித்தவர்களுக்கு, முன்னிருந்த வாசார்யபுருஷத்வத்திற்கு முன்பில் லாதவதிசய மிப்போதுண்டாய்த்து, ப்ரம்மசர்யம்முதலான நான்காச்ர

பழநடை விளக்கம்.

மங்களிலே உத்தரோத்தராச்ரமங்களைப்பெற்றால் பூர்வபூர்வாச்ரமமதிசயி க்குமாப்போலே குணதிகரான மேல்மேலாசார்யர் ஸம்பந்தத்தாலே பூர்வ பூர்வாசார்யகளிடத்திற்பெற்ற நல்லறிவிற்கழிவில்லாமையாலே ஆசார்ய புருஷத்வத்திற்கழிவில்லை.

பின்பு க்ருஷ்ணனந்தி யென்கிற ஏகதண்டி ஸந்யாஸி, கோயிலிலே வந்து தன்னோடே சாஸ்த்ரவாதம்பண்ணச்சொல்ல, பெரியஜீயரும் இவ னோடே வாதம்பண்ணும்போது மங்களாசாஸன விரோதமாமே! வாதம் பண்ணவிட்டால் விரோதி நிரஸனம் ஸித்தியாதே! என்ன செய்வோ? மென்று சிந்தித்துக்கொண்டிருக்கச்செய்தே, பெரியபெருமாள் நியமனத் தாலே வேடலப்பைக்கு பெரியபெருமாள் ஸ்ரீமுகத்தை யனுப்ப, முதலி யாண்டான் திருவம்சஸ்தராய் மஹாவைபவமுடையவரான வேடலப்பை யும் ஸ்ரீமுகத்தை சிரஸாவஹித்து தம்முடைய ஸந்நிதியிலேஸகலசாஸ்த்ரங் களையு மதிகரித்து மஹா வித்வானாகிய தாசரதியாச்சானையுங்கூடக் கூட் டிக்கொண்டு (கோயிலுக்கெழுந்தருளி) நம்பெருமாளை மங்களாசாஸனஞ் செய்தருளி ஸகலஸன்னைகளையும் விசேஷ கடாக்ஷங்களையும்பெற்று, ஸ்ரீ ரங்கநாயகியாரை மங்களாசாஸனஞ் செய்தருளி அவருடைய பரிபூர்ண கடாக்ஷம்பெற்று ஸம்மானமும்பெற்று விஷ்வக்ஸேநருக்கு ஸமீபமாக வெழுந்தருளச்செய்தே அப்போதவ்விடத்தில் ஜபம்பண்ணிக்கொண்டிருக் கிற ஏகதண்டியானவன் இவர்களைக்கண்டெழுந்திருந்து தனக்கு ஸகல சாஸ்த்ரங்களும் படிப்பித்த வேடலப்பையை தண்டனிட்டு நின்றான். வேடலப்பையு மவனைப்பார்த்து குசலப்ரச்நம்பண்ணினார். அவனும் தான் வந்த கார்யத்தை வேடலப்பைக்குச் சொன்னான். வேடலப்பையு மதற் கன்றே காமிங்கேவந்ததென் றருளிச்செய்தார். ஆலைபசாரப்பட்டே னென்று பயப்பட்டு தண்டனிட்டுநின்றான். வேடலப்பையு மன்னன் திருமாளிகையிலே யெழுந்தருளி அண்ணனும் வேடலப்பையும் தாசரதி யாச்சானும் அமுதுசெய்தருளி, க்ருஷ்ணநந்தனென்கிற ஏகதண்டி இவர்க ளுடைய ப்ரஸாதத்தை யர்த்திதாணுகையால் ஒருபரிசு ப்ரஸாதத்தை யவனுக்கு ப்ரஸாதித்தார்கள். அவனு மிவர்களனுமதிகொண்டு புறப்பட் டுப்போய்விட்டான். பின்பு வேடலப்பையையுந் தாசரதியாச்சானையுங் கூடக் கூட்டிக்கொண்டு அண்ணன் பெரியஜீயர் ஸந்நிதியிலேயெழுந்தருளி தண்டன் ஸமர்பித்து க்ருஷ்ணநந்தன் போய்விட்டசெய்தியை விண்ணப் பஞ்செய்ய, பெரியஜீயரும் அண்ணனையும் வேடலப்பையையும் தாசரதி யாச்சானையுங் கடாக்ஷித்து மிகவுமுகந்து உகப்பினுடைய வதிசயத்தாலே முதலியாண்டான் திருவம்சவிஷயமாக விரண்டு ச்லோகத்தை யருளிச் செய்து பரிபூர்ணநுக்ரஹஞ்செய்தருளி, வேடலப்பையையுந் தாசரதியாச் சானையும் ஸந்நிதியிலே நித்யவாஸம்பண்ணும்படி நியமித்தருள, வேடலப் பையும் வார்த்திக்யமானபடியாலே தாசரதியாச்சான யிங்கேயிருக்கும் படி நியமித்து தாம் பெரியஜீயர் ஸந்நிதியிலே அனுமதிபெற்று, மிகவும்

உபலாளனம்பெற்று வேடலுக்கெழுந்தருளினர். பின்பு தாசரதியாச்சா னும் மஹாலக்ஷ்மியாகையாலே பெரியஜீயர்ஸந்நிதியிலே யிருந்துகொண்டு பரவாநிரஸனம் பண்ணிக்கொண்டு ஸந்நிதியிலே ஸகல ரஹஸ்யங்களையு மதிகரித்துக்கொண்டிருந்தபர். பின்பு சிறிது நாளிலே பெரியஜீயர் தாச ரதியாச்சானை ஏகாந்தத்திலே கடாக்ஷித்தருளி ஆச்சானே? நெடுநாளாச்சு தே, ஆயி அண்ணனை ஸேவித்து வரவேண்டாவோ? வென்ன, தாசரதி யாச்சானும் நியமித்தபடி நடத்துகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய, பெரியஜீயரு மூகந்தருளி பூபாலராயனிலே சேர்த்தியிலே திருவாராதனங் கொண்டருளின ஸ்ரீரங்கராஜர் திவ்யமங்கள விக்ரஹத்தை நாச்சிமார்க ளுடனேகூட தாசரதியாச்சானுக்கு ப்ரஸாதித்தருளி ஊருக்கு விடை கொடுத் தனுப்பியருளினர்.

பின்பு பெரியஜீயர், ப்ரதிவாதிபயங்கரம் ஹஸ்திகிரிநாத ரண்ணலென் கிறவர் பெருமாள்கோவிலிலே மஹாவாக்மியாயிருக்கிறரென்று கேழ்விப் பட்டு, அவருக்கு அர்த்தவிசேஷங்களை ஸாதித்து பூர்வாசார்ய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராம்படி பண்ணவேணு மென்று நினைத்து, ஸ்ரீவைஷ்ணவர்க ளிருவர்கள் கையிலே ஸ்ரீமுகத்தை ஸாதித்து அனுப்பியருள, அண்ணலும் அவர்கள் கொண்டுவந்துகொடுத்த ஸ்ரீமுகத்தை சிரஸாவஹித்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருள, பெரியஜீயரு மிதுகேட்டு கோயில் பரிகரத்தை யும் ஸந்நிதியில் ஸ்ரீவைஷ்ணவர்களையும் அண்ணலுக்கெதிரேயனுப்ப, அண்ணலும் திருவரங்கத்திலே ப்ரவேசித்து பெரியஜீயர்மடத்திலே சென்று பெரியஜீயனைஸாஷ்டாங்கமாகதண்டன்ஸமர்ப்பித்துநிற்க, பெரிய ஜீயரு மூகந்தருளி, குளிரநோக்கி அப்போது கூடநின்றவருகிற முப்பத்தாரு யிரப்படியி லொருவிடத்தைப்பலமுகமாக வுபந்யஸித்துக்காட்ட, அண்ணலு மதுகேட்டு மிகவு மாச்சர்யப்பட்டு பெரியஜீயர் ஸந்நிதியில் பஞ்சஸம்ஸ் காரங்களைப்பெற்று முன்னே முதலியாண்டானுடைய திருநாமமான ஸ்ரீவைஷ்ணவதாஸனென்கிற திருநாமத்தைப் பெரியஜீயர் திருப்பவளத் தாலே ஸாதிக்கப்பெற்று மிகவும் அந்தரங்கராயெழுந்தருளியிருந்தார். அப் போது பெரியஜீயருடைய பூர்வாச்ரமத்தில் குமாரரான ராமானுஜய்ய னுக்குத் திருநகரியிலே அழகியமணவாளப்பெருமாள் நயனரென்று ஜீயர் திருநாமமாக ஒருகுமாரர் அவதரித்தார். பின்பு ராமானுஜய்யனுக்கு ஸ்ரீ வில்லிபுத்தூரிலே பிறந்த குமாரருக்குப் பெரியாழ்வானென்று திருநாமஞ் சாற்றுங்கோளென்று பெரியஜீயர் நியமித்தனுப்பியருளினர். பின்பு இரு வர் குமாரர்களும் பருவம்முற்றினபின்புவந்து பெரியஜீயர் திருவடிகளை யாச்ரயித்தார்கள். அதில் முதல்குமாரருக்கு ஜீயர் நயினரென்று திருநாம மாய்த் தர்சநப்ரவர்த்தகரா யெழுந்தருளியிருந்தார். பின்பு சிலநாளிலே பெரியஜீயர் பெரியபெருமாளனுமதிகொண்டு திருநகரிக்கெழுந்தருளி ஆழ் வானை மங்களாசாசனஞ்செய்தருளி, யங்கே தந்திருவடிகளை வந்தாச்ரயித்த வர்களை யங்கீகரித்து சிறிதுநாளெழுந்தருளி யிருக்கச்செய்தே, ஆசார்ய

பழநடை விளக்கம்.

ஹ்ருதயத்திற்குப் பொருள்கேழ்க்கைக்காகத் திருநாராயணபுரத்தாய் ஸந் நிதிக்குப் புறப்பட்டெழுந்தருளினார். அப்போது திருநகரிக்கருகே ஆயிரை யெதிர்கொண்டி தண்டன்ஸமர்ப்பித்து அவருடனேதிருநகரிக் கெழுந்தருளி, ஆயிஸந்நிதியிலே ஆசார்யஹ்ருதயத்தை யதிகரித்தருளி, அவராலே இவரொரு அவதாரவிசேஷமென்று மிகவும் உபலாளிக்கப்பட்டு எழுந்தருளியிருந்தார். அப்போது பெரியஜீயரிடத்திலே சிலர் பொறுமை யாலே ஜீயரெழுந்தருளியிருக்கிற ஓலைக்கூறைமடத்திலே நடுநிசையிலே நெருப்பைவைத்தார்கள். பெரியஜீயரும் திருவனந்தாழ்வா ணுகையாலே அந்தத் திருவுருவோடே ஒரு கோழுகச்சாரிகைவழியாக வெளியிலே புறப்பட்டெழுந்தருளினார். அவர்களை யந்ததேசத்தில் ராஜாதண்டிக்கக் கண்டு அத்தைதவேண்டாவென்று மறுத்தருளினார். பின்பு அவர்களுடைய ஸந்நிதியிலே சிலர் பெரியஜீயர் திருவடிகளை யாச்ரயித்து அபராதக்ஷாம ணம் பண்ணிக்கொண்டார்கள். பின்பு பாண்ட்யதேசத்திற்கு ப்ரவர்த்த கரை யிருப்பாரொருவன் பெரிய ஜீயருடைய பெரிய வைபவத்தைக்கண்டு திருவடிகளிலே யாச்ரயித்தான். அவனுக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்தருளி சடகோபதாஸனென்று திருநாமம் ப்ரஸாதித்தருளினார், பின்பு திருநகரியிலே பெரியஜீயர் காளமேகன் திருமண்டபத்தையும் நிருவீதி களையு மெல்லைகளையும் அழகியமணவாளன் திருமண்டபத்தையும்உண்டா க்கினார். பின்பு பெரியஜீயர் திருக்குறுங்குடியிலே யெழுந்தருளி அங்கே திருவேங்கடமுடையானென்கிற ப்ராம்மணனை சிஷ்யனைக்கியருளி, அவ ருக்குத் திருவேங்கடதாஸனென்று தாஸ்யநாமம் ஸாதித்தருளி, அவரைத் திருக்குறுங்குடிக் கோவில் கைங்கர்யத்திலே நியமித்து, நின்றநம்பீ, இருந் தநம்பீ, கிடந்தநம்பீ, மலைமேல்நம்பீ, திருப்பாற்கடல்நம்பீ யென்கிற வைந்துபெருமாள்களுக்கும் கர்ப்பக்ரஹம் முதலான திருப்பணிகளையும் மண்டபங்களையுஞ் செய்தருளினார்.

பின்பு திருக்குறுங்குடியில் நின்றுங் கோயிலுக்கெழுந்தருளி பெரிய டெருமாளை ஸேவித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார். அக்காலத்திலே எரும்பியிலப்பாவென்கிறவர் கோயிலுக்கெழுந்தருளிப் பெருமாளைஸேவித் துக் கந்தாடையண்ணனுக்குத் திருமேனிபந்துவாகையாலே அண்ணனை டேகூட ஜீயர்ஸந்நிதிக்கெழுந்தருள, ஜீயருமப்பாவை மஹாவித்வானென் றறிந்து திருவாய்மொழியிலே ஓரிடத்திற்கு ஆயிரம்படியாக உபந்யாஸஞ் செய்தருள, அப்பாவுங்கேட்டு மிகவு மாச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தும் விதிகூடாமையாலே ஜீயர் திருவடிகளை யாச்ரயியாமலே ஊருக் கெழுந் தருளினார். பின்பு தம்முடைய திருவாராதனமான சக்ரவர்த்தித் திருமக னுக்குத் திருவாராதனம் பண்ணுவதாகக் கோயிலாழ்வார் திருக்காப்பை நீக்கப்புக, அது அனேகோபாயங்களாலும் திறக்கப்போகாமையாலே அப்பா மிகவுந் துக்கித்து அழுது செய்யாம லிருந்தார். அன்றிராத்திரி அப்பாவினுடைய ஸ்வப்நத்திலே முன்பு திருவனந்தாழ்வான் பெரியஜீய

ராகக்கண்டு பின்பு திருவனந்தாழ்வாருகக்கண்டு அதன்பின்பு லக்ஷ்மண ருகக்கண்டு பின்புபெரியஜீயராகக்கண்டது. இப்படி சக்ரவர்த்தித் திருமகன் பெரியஜீயருடைய ஸ்வரூபவைலவபத்தைக்காட்டி, நீர்கோயிலுக்குப்போய் பெரியஜீயரை யாச்ரயித்துவந்தாலொழிய நாம் உம்முடைய கையில் ஆராதனங் கொள்ளுகிறதில்லை; நீர் கடுகப்போகீரென்னு அப்பாவை நியமித்தருள, அப்பாவும் திருக்கண்களாலவிழித்து மிகவு மாச்சர்யப்பட்டு, அப்போதே புறப்பட்டு கோயிலுக்கெழுந்தருளி, அண்ணன் புருஷகாரமாகப் பெரியஜீயர் திருவடிகளாலாச்ரயித்து, வரவரமுனி தாஸரென்று திருநாமமுண்டாகும்படி மிகவு மந்தரங்கரா யெழுந்தருளியிருந்தார். அப்போது அண்ணனும் எரும்பியப்பாவும் பூர்வம் லாடபுரத்திற்செய்தியைப் பெரியஜீயருக்குவிண்ணப்பஞ்செய்தார்கள். அதாகிறது:—அண்ணன்முன் பொருக்கால் ஸ்தாலீபாகத்திற்காக எரும்பி ஸ்ரீரங்காஜருடைய விவாஹ தேசமான லாடபுறத்திற்கு ஸ்ரீரங்காஜருடனே தாமுங்கூடப்போனர். பின்பு அங்கே ஸ்தாலீபாகம் நடந்தது. அன்றைக்கங்கே அத்திக்காய் சமைத்தாள். இதுவன்றிக்கே "உடோவரதநாராயணனே? உடோ ஸ்ரீரங்காஜனே? வருகிற ஸ்தாலீபாகத்திற்கும் வாருங்கோ" என்றுப் போலே மொணப்பேச்சாய்பேசினர்கள். அத்தாலே அண்ணனுக்கும் ஸ்ரீரங்காஜருக்கும் லாடபுறத்திலே மனஸ்ஸுவிட்டுப்போய் அவர்கள்ஸம் பந்தத்தைக் கழித்துக்கொள்ளவேணுமென்றிருந்தார்கள், அந்தசெய்தியை இப்போது பெரியஜீயர் ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்தார்கள். பெரியஜீயர் அத்தைக்கேட்டருளி யொருநிந்தைசெய்து நிருக்குடந்தையி லப்பாவண்ணனையும் வேடலப்பையையும் நாசரதியாச்சானையும் ஸ்ரீமுகமனுப்பியழைப்பித்தருளி, தந்தாடையண்ணனையு மெரும்பியப்பாவையுங்கூட்டியருளிச்செய்தவார்த்தை:-மூதலியாண்டான்ஸந்ததியான வாதூலகோத்ரமும் உடையவருடைய திருவம்சமான ஹாரீதகோத்ரத்தார்முதலான எழுகோத்ரத்தாரும் இந்த எழுகோத்ரத்திலேயே ஸம்பந்தம்பண்ணிக்கொண்டிருங்கோள். இதற்கு யாதொருத்தர்தட்பிரர்கள், அவர்களுக்கு நம்மாணை யென்றுணையிட்டருளி, இப்படித்திருமுகப்பட்டோலையெழுதியருளி தேசாந்தரத்திலே உடையவர்திருவம்சஸ்தரும் முதலியாண்டான் திருவம்சஸ்தருமிருக்கிறவிடங்களுக்கனுப்பியருளினர். அவர்களெல்லாரும் திருமுகப்பட்டோலையைக் கிரஸாவதரித்து அப்படியே நடத்துக்கொண்டார்கள். அது அன்றுமுதல் இன்றுவரைக்கும் நடந்துவருகிறது. (श्लो) वाधूलवत्सकौण्डिन्यहारीता त्रेयकौशिकाः। भारद्वाजश्चसप्तैते वाधूलाश्चिकीर्तिताः॥ இதிலே வாதூலகோத்ரம் முக்யமாகையாலே அதின்பெயரையிட்டேமற்றை யாறுகோத்ரஸ்தருக்குங் கந்தாடையாரென்று வழக்கமாயிருப்பது. இவர்களிலே எழுபத்திரண்டு ஸிம்மாஸனாதிபதிகளிலே பரிகணிதராயிருக்கிற முதலியாண்டான், முதும்பைநம்பி, முதும்பையம்மாள், ஆஸுரிப்பெருமாள், கிடாம்பிப்பெருமாள், குமாரன்தோள் இராமயவில்லியாச்சான், வங்கிப்புறத்துநம்பி,

இவர்களுடைய ஸந்ததிஸ்தரோ இந்த ஏழுகோத்ரத்திலேயிருப்பது. இது பெரியஜீயர் நியமனப்படி நடந்துவருகிறது.

பின்பொருநாள் பெரியஜீயர் பெரியபெருமாளை ஏகாந்தத்தில்ஸேவித்துக்கொண்டிருக்கச்செய்தே உத்தமநம்பியுந் திருவாலவட்டகைங்கர்யஞ் செய்துக்கொண்டிருந்தார். அந்த உத்தமநம்பியானவர் திருவனந்தாழ்வான் திருவவதாரமான பெரியஜீயருடைய பாலின்வண்ணமான திருமேனி நிறத்தை அன்யதாசங்கைபண்ணி பெரியஜீயரைப்பார்த்து நெடும்போ தாச்சுதே யென்று விண்ணப்பஞ்செய்ய, பெரியஜீயரும் அவர்கருத்தறிந்து மஹாப்ரஸாதமென்று புறப்பட்டு மடத்திற்கெழுந்தருளினார். அவ்வளவிலே உத்தமநம்பிநின்றுகொண்டே திருவாலவட்டமுங் கையுமாகத்தாங்கிப் பலகணிக்கதவிலே சார்ந்திருக்கப் பெரியபெருமாளும் அவர்கணவிலே திருப்பவளந்திறந்து திருவனந்தாழ்வானைத்தொட்டு இவர்காணும் பெரியஜீயராக வவதரித்தாரென்று தம்முடைய திருக்கையை யெடுத்தருளிச் செய்தார். உத்தமநம்பியுங் கண்விழித்து மிகவும் நடுங்கி யப்போதே மடத்திற்குவந்து பெரியஜீயர் திருவடிகளிலேவிழுந்து ஸேவித்து அபசார க்ஷாமணம் பண்ணிக்கொண்டார்.

பின்பொருநாள், ஸத்வநிஷ்டையாய் சடகோபக்கொற்றி யென்று திருநாமத்தை யுடையவளான வம்மையாரொருத்தி, பகல் திருவோலக்கங்குலைந்து திருமலையாழ்வாரென்கிற வ்யாக்யாந மண்டபத்திலே திருக்காப்பு சேர்த்துக்கொண்டு ஏகாந்தமாக பெரியஜீயர் யோகத்திலிருந்து அந்த வாநந்தானுபவத்தாலே தம்மைமறந்து திருவனந்தாழ்வானுடைய திருமேனியாக விருக்கிற விருப்பைக் கதவுப்புரையிலே கண்டு திடுக்கிட்டிருக்க, பின்பெரியஜீயரும் யோகதசைநிகழ்ந்து தாமான வடிவுகொண்டு அம்மையாரிதறிந்தாளென்றறிந்து அவளை யழைத்து நீ இத்தை விளம்பரம் பண்ணவேண்டாவென்று அருளிச்செய்தார்.

ஆகவிப்படி திருமேனி நிறத்தாலும், பெருமாளுக்கெல்லா வடிவுமகளைச்செய்கையாலும், கங்காப்ரவாஹம்போலேயிருக்கிற வுபந்யாஸவைபவத்தாலும், திருநகரியிலே சாரிகைவழியாய் சேஷனுருக்கொண்டு புறப்பட்டமையாலும், சக்ரவர்த்திதிருமகன் எறும்பியிலப்பாவுக்கு ஸ்வப்நத்திலே அருளிச்செய்கையாலும், உத்தமநம்பிக்குக் கனவிலே பெரியபெருமாளருளிச் செய்கையாலும், கொற்றியம்மையார்பகலிலே ப்ரத்யக்ஷமாகக் காண்கையாலும் பெரியஜீயர் சேஷாவதாரமென்று லோக ப்ரஸித்தமாயிருக்கும்.

இப்படியிருக்கிற பெரியஜீயர் தம்முடைய ஸ்ரீபாதத்து மூதலிகளுடனேகூட பெரிய பெருமாளைத் திருப்பவித்ரத் திருநாளிலே திருவோலக்கமாக மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே பெரிய

பெருமாள் பெரியஜீயருக் கருளப்பாடிட்டு, நாளைமுதல் நம்முடைய பெரிய திருமண்டபத்திலே திருவாய்மொழிப்பொருளை ஈடுமுப்பத்தாறுயிரத்துடக்க மான வ்யாக்யாநங்களுடனே கடத்தமென்று நியமித்தார். பெரியஜீயரு மத்தை சிரஸாவஹித்து மற்றைநாள் திருமண்டபத்திற் கெழுந்தருளினார். அப்போது பெருமாள் நாச்சிமார்களுடனே தோளிக்கினியானிலே யேறி யருளி சேனைமுதலியார் துடக்கமானவர்களோடும், ஆழ்வார்களோடும், ஆசார்யர்களோடுங்கூட பெரியதிருமண்டபத்திற் கெழுந்தருளி பெரிய திருவோலக்கமாகவிருந்து பெரியஜீயருக் கருளப்பாடு ஸாதித்து ஈடுமுப் பத்தாறுயிரத்தைத்துடங்கிவித்துத் திருச்செவிசாற்றியருளி மிகவுமுகந்து, இப்படி யொருவருஷம் நடப்பதென்றுநியமித்துப் புறப்பட்டருளி பூபால ராயனுக் கெழுந்தருளினார். பின்பு பெரியஜீயரும் அப்படியே யொருவரு ஷம் ஒருதிங்கின்றிக்கே மூப்பத்தாறுயிரத்தை நடத்திக்கொண் டிருந்தார். பின்பு நாளைக்கு சாத்துமுறையா யிருக்கச்செய்தே கந்தாடையண்ணனும், வானமாமலைஜீயரும், பட்டர்பிரான்ஜீயரும், தம்மிலேசேர்ந்து சிந்தித்து, இருவ ரிரண்டடியும், ஒருவ ரிரண்டடியுமாக மூவரும் நாலடியான ஒரு தனியனைச்செய்து அதிரஹஸ்யமாக மனஸிலேவைத்து மறைத்துக்கொ ண்டு நாளை சாத்துமுறை முடிவிலே பெரிய திருமண்டபத்திலே பெரிய பெருமாளுடைய பெரிய திருவோலக்கத்திலே பெரியஜீயர் விஷயத்திலே விண்ணப்பஞ் செய்வாராக வெண்ணிக்கொண்டிருந்தார்கள். பின்பு மற் றைநாள் முன்புபோலே பெருமாள் தோளுக்கினியானிலே யெறியருளி ளேசனைமுதலியார் முதலான ஸமஸ்தபரிகரங்களுடனேகூட பெரிய திரு மண்டபத்திலேயெழுந்தருளியிருந்து பெரியஜீயருக்கு அருளப்பாடு ஸாதித் தருளி, சாற்றுமுறை நடக்கவுமென்று நியமித்தருள, பெரிய ஜீயருஞ் சாற்றுமுறை நடத்தியருள, மூன்சொன்ன கந்தாடையண்ணன் முதலான முதலிகள்மூவரும் முன்சிந்தித்திருந்த தனியனை விண்ணப்பஞ்செய்வதாக வெண்ணிக்கொண்டிருக்கச்செய்தே மிகவு மழகியவுயிருக்கிற ஒரு அஞ்சு வயஸ்ஸாயிருக்கிற பாலகுமாரன் பெரிய திருவோலக்கத்திலே பெருமாள் முன்பேவந்துநின்று "శ్రీవైశ్నవదయాపాత్రదీభక్త్యాదిగుణార్ణవమ్। యతీంద్ర ప్రవణంవందేరమ్యజామాతరమ్మునిమ్॥ என்கிற வித்தைச்சொல்லி ஒருவருக்குங் கண்ணுக்குத் தெரியாதபடி மறைத்துபோனான். இதைத் திருவோலக்கத் திலுள்ளா ரெல்லாருங் கண்டு மிகவு மாச்சர்யப்பட்டார்கள். கந்தாடை யண்ணன் முதலான மூவரும் பிறரொருவரு மறியாமல் நாமறிந்தான விந்தத்தனியனை நமகருமுன்னேவந்து இந்த பாலகுமாரன் சொன்னபடி யாலே இவன் ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீரங்கநாதனே யாகவேணுமென்று பெரிய வாச்சர்யத்துடனே யெல்லாருக்குந் தாங்கள் நினைத்திருந்தசெய்தி யைக் குலாவிக்குலாவிச் சொன்னார்கள். அப்போது நம்பெருமாள் பெரிய ஜீயருக்குத் தீர்த்தப்ரஸாதந்திருமாலை, திருப்பரியட்டம், சடகோபன் முத லானவரிசைகளை ப்ரஸாதித்தருளி உகப்பினுடையமிகுதியாலே அகில ஸ்ரீ

வைஷ்ணவர்களையுங்குறித்த நம்வீடுமுதலான திருப்பதிக ளெல்லாவற்றி லும் இந்த ஸ்ரீசைலேசதயாபாத்ரமாதியாகப்ரபந்தானுஸந்தானம் கடத்தும் கோளென்று நியமித்தருளினர், அன்றுமுத லின்றுவரைக்கும் தமிழ்நடை யாடி திவ்யப்ரபந்தம்நடக்கிற பஞ்சத்ராவிடம் பஞ்ச(கூ)களிடம் என் கிற பத்துபாஷைசெல்லுகிற தேசங்களிலே யிந்தத்தனியன் நடந்துவரு கிறது. இதினுடையவிரிவு இன்னும் முன்னேயெழுதப்படும்.

இனி பதரிகாச்ரமத்தில் வ்ருத்தாந்த மெழுதப்படுகிறது. அயோத்தி ராமானுஜய்ய னென்பாரொருவர் பதரிகாச்ரமத்திலேபோய் பதரிநாரா யணனை ஸேவித்து மிகவுமுபாஸித்துக்கொண்டிருக்கச்செய்தே பதரிநாரா யணன் ப்ரஸன்னராய், அயோத்தி ராமானுஜய்யனுக்கு ஜ்ஞானதிருஷ்டி யாலேமேல்வருகிறத்தைக்கடாக்ஷித்தருளியிந்தத்தனியனை (ஸ்ரீலீஶாத்ய) யுபதேசித்தருளினர். அயோத்தி ராமானுஜய்யங்காரு மித்தை ரஹஸ்ய மாய்ப்பெற்று அனுஸந்தித்துக்கொண்டு சிறிதுகாலங்கேயிருந்து தெற்கே திவ்யதேசயாத்ரை புறப்பட்டு திருமலைக்கு வந்தவிடத்திலே இந்தத் தனி யனையு மிதினுடைய வரவாறுங்கேட்டு மிகவு மாச்சர்யப்பட்டு தமக்கித் தை நாராயணன் பூர்வமே யுபதேசித்தபடியையுஞ் சொல்லி மிகவுமானங் தித்தார்.

ஆகவிப்படி இத்தத்தனியனை முதலிலே மூவர் சிந்தித்துவைத்திருக் கையாலே அவர்கள்செய்ததென்றும், மேல் வருகிறத்தைக் கடாக்ஷித்து பதரிகாச்ரமத்திலே வதரிநாராயணன் அயோத்தி ராமானுஜய்யனுக்கு உப தேசிக்கையாலே பதரிநாராயணன்செய்ததென்றும், உலகத்திலேசொல் லப்படுகிறது. இந்த ந்யாயம், இதிஹாஸ புராணங்களுக்கு முண்டு. எப்படி யென்றால்:—அஷ்டாதச புராணங்களும் தனித்தனியே அந்தந்த ருஷிகள் செய்ததென்றும், வ்யாஸரொருவரே அஷ்டாதச புராணங்களையுஞ்செய்த தென்றும் இருக்கிறது. அங்குமிப்படி முகபேதத்தாலே வழக்கங்களிருக்கு மென்று எல்லாரும் நிர்வஹித்தார்கள். இப்படி வேதத்திலும் வழக்கங்க ளுண்டு. அப்படியே இத்தத்தனியனுக்கும் முகபேதத்தாலே பலர்செய்த தென்கிற வழக்கங்கள் முக்யமாகக்கூடும். கோயில் கந்தாடையண்ணன் செய்த பத்துப்பாட்டிலும் எரும்பியிலப்பாசெய்த வரவரமுனிசதகத்திலும் இந்தத் தனியனுடைய வைபவஞ்சொல்லியிருக்கும். மற்றுமனேக க்ரந் தங்களிலும் இதின்வைபவஞ் சொல்லியிருக்கும்.

இனிக் கோயில் வ்ருத்தாந்தம்:—பின்பு பெரியஜீயரும் பெரியபெரு மாளாலே மிகவு மாதரிக்கப்பட்டு லோகாசார்ய ரருளிச்செய்த ரஹஸ்ய ங்களுக்கு வ்யாக்யானங்களும் மற்று மனேகக்ரந்தங்களுஞ் செய்தருளி னர். அவையாவன:—ரஹஸ்ய வ்யாக்யானம், தத்வத்ரயவ்யாக்யானம், ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம், ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யானம், பெரி யாழ்வார் திருமொழி வ்யாக்யானம், நூற்றந்தாதியுரை, த்ராவிடோபநிஷத்

க்யானம், ப்ரமேயஸாரவ்யாக்யானம், ஏழுபாட்டுவ்யாக்யானம், நிகை க்குத்தாத்பர்யதீபம், சதுவத்ரயத்திற்குப் ப்ரமாணத்திரட்டு, மூப்பத்தாரு யிரப்படிக்கு ப்ரமாணத்திரட்டு, உபதேசரத்நமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, யதிராஜவிம்சதி, தனிக்கவிகளும்விதிச்லோகங்களும், இயற் சாத்து, ஆர்த்திப்ரபந்தம், இன்னுமிப்படிகண்டுகொள்வது. பின்பு பெரிய ஜீயருந் தம்முடைய மடத்திற்குண்டான கோத்ரங்களையெல்லாம் பெரு மாளுக்கு ஸமர்ப்பித்து அத்தசாஸனங்களை ஸ்ரீபண்டாரத்திலே சேர்த்து விட்டார். பின்பு தம்முடைய திருவடிகளை யாச்ரயிக்கவந்த வரந்தரும் பெருமாள்பின்னையைத் தனியேவந்தாரென்று வெறுத்து ஆறுமாஸஞ் சோதித்துப் பின்பங்கீகரித்தருளினர். பின்பு வரந்தரும் பெருமாள்பின்ன தியைகூடியோடேயிருக்க, பெரியஜீயரிதென்னென்று கேட்டருள, அவரும் நிமித்தத்தை விண்ணப்பஞ்செய்ய, ஜீயருமதுகேட்டருளி இன்றைக்குத் திருமுடிவிளக்கிவித்துக்கொள்ளுமென்று நியமித்தருள, அவருமப்படியே செய்தார். அப்போதே ஊரிலேயிருந்து அவர்தேவிகள் ப்ரஸவித்து அன் றைக்குப் பத்தாவதுநாளென்று செய்திவந்தது. அப்போது ஜீயருடைய ஸர்வஜ்ஞதையைக்கண்டு எல்லாரு மாச்சர்யப்பட்டார்கள். பின்பு சில நாளிலே பெருமாள்கோவில் திருமலைமுதலான திவ்யதேசங்களை ஸேவிக்க வேணுமென்று அண்ணன் முதலான முதலிகளெல்லாருடன்கூடப் புறப் பட்டு பெருமாள்கோவிலுக் கெழுந்தருளி தேவப்பெருமாளை ஸேவித்து காலாறுகா ளெழுந்தருளியிருந்து திருவைசாகத் திருநாள்துடங்கினவாறே திருநாள்ஸேவித்துக்கொண்டிருந்து, பெரியதிருவடியின்மேலே பெருமா ளேறியருளி கங்கைகொண்டான் திருமண்டபத்திற் கெழுந்தருள, பெரிய ஜீயரும் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு கூடவெழுந்தருளச்செய்தே திருநாள்ஸேவிக்கவந்த வெரும்பியிலப்பா ஜீயரை நினைவன்றிக்கே ஸேவி த்து மூர்ச்சித்துத் தெளிந்து ஜீயரை ஸாஷ்டாங்கமாக ஸேவித்து அவர் புருஷகாரமாகப் பெருமாளை ஸேவித்தார். பின்பு பெரிய ஜீயரும் மற்ற திருநாள்களையும் ஸேவித்து அப்பாவையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டுத் திருப்புட்குழிவழியாக கடிகாசலத்திற் கெழுந்தருளி அழகியசிங்கரை மங் களாசாஸனஞ்செய்து எரும்பி யென்கிற ஊருக்கு வடதிருவாங்க மென் றும் குளத்திற்குத் திருச்காவேரியென்றும் திருநாமஞ்சாற்றி அப்பாவுக்கு அழகியமணவாளதாஸரென்று அபிமானித்துத் திருநாமஞ்சாற்றி அங்கு நின்றும் திருப்பதிக்கெழுந்தருளி உடையவரை ஸேவித்து கோவிந்தரா ஜனையும்ஸேவித்துத் திருமலையேறியருளி அங்கே கோயில்கேழ்விஜீயர் முகல் மற்றும் பரிகரங்களெல்லாம் எதிர்கொண்டுவந்து ஸேவிக்க, அவர்க ளையு மூபலாளித்து ஸேவாக்ரமத்திலே யுள்ளேபுக்கு, திருவேங்கடமுடை யானை மங்களாசாஸனஞ்செய்து தீர்த்தம் ப்ரஸாதம் ஸ்ரீசடகோபன் மூத லான வரிசைகளையும்பெற்று அங்கே கோயில் ஸ்ரீகார்யத்திற்காக இளங் கேழ்வி யெம்பெருமானார் ஜீயரைக்கல்பித்தருளியங்குநின்றும் புறப்பட்டு, திருவெவ்வுளூர், திருநின்றவூர், திருமழிசை, முதலியாண்டான் திருவவ

பழநடை விளக்கம்.

தாஸ்தலமான பச்சைவாரணப்பெருமாள்கோவில், திருக்கச்சிநம்பி திருவவதாரஸ்தலமான பூவிருந்தவல்லிகை, திருவல்லிக்கேணி, திருநீர்மலை, ஸ்ரீபெரும்பூதூர், ஸேவித்துக்கொண்டு பெருமாள்கோவிலிலே பேரருளாளரை மங்களாசாஸனம் பண்ணி ஸ்ரீமதுராந்தகத்திலே சக்ரவர்த்தித் திருமகனையும் வகுளவ்ருக்ஷத்தையும் ஸேவித்துத் திருவஹீந்திரபுரத்திற் கெழுந்தருளி, தெய்வநாயகனைத் திருவடிதொழுது, திருவாலிதிருநகரியிற் றிருமங்கையாழ்வாரைத் திருவடிதொழுது, அங்குள்ள திருப்பதிகளையும் ஸேவித்து, திருக்கண்ணபுரத்திலே சௌரிராஜரை ஸேவித்து. அவிடத்திலே திருமங்கைமன்னனை யேறியருளப்பண்ணிவித்து, அங்குன்றும் புறப்பட்டுத் தென்றுவரையிலே சென்று, மன்னரரை மங்களாசாஸனஞ் செய்து, மாசறுசோதியை யங்கே நித்யாநுஸந்தானமாக ஸமர்ப்பித்து, திருக்குடந்தைதுதலான திருப்பதிகளை ஸேவித்து, கோயிலுக்கெழுந்தருளி யதிராஜராநுமதியுடனே பெரியபெருமாளை ஸேவித்துத் தாங்கொண்டுவந்த திவ்யாபரணங்கள் திவ்யசாமரங்கள் திவ்யச்சத்ரங்கள் திருவாலவட்டங்கள் அனேகந்திருமெத்தைகள் தலையணைகள் முதலான வஸ்துக்களை ஸமர்ப்பித்து மடத்திற்கெழுந்தருளி வ்யாக்யானித்துக் கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்பு எறும்பியிலே யிருந்துவிட்டவப்பாவும் ஆசார்ய விச்லேஷம் பொறுக்கமாட்டாமல் ஜீயருடைய தினசரிதங்களை நினைத்து அநுபவித்துக்கொண்டு தினசர்யையென்கிற ப்ரபந்தத்தைச் செய்து தலைக்கட்டி ஜீயர்ஸந்நிதிக்கு வரக்காட்ட, ஜீயரும் கடாக்ஷித்து அப்பாவினுடைய வாசார்யநிஷ்டைக்கு மிகவு முகந்து அப்பாவுக்குக் கோயிலுக்குவருவதாக ஸ்ரீமுகமனுப்பி யருளினார். அப்பாவும் ஸ்ரீமுகத்தை சிரஸாவஹித்து மிகவுங் கடுகக் கோயிலுக் கெழுந்தருளி ஜீயரை ஸேவித்து வ்யாக்யான கோஷ்டியிலே ஜீயர் திருமுகமண்டலத்தை ஸேவித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார். அக்காலத்திலேகந்தாடையண்ணன் திருமாளிகையில் அழகிங்காராராதனம் உபாதான த்ரவ்யத்தாலே நடந்துவருகையாலே அது மிகவுங் குறைந்து வருகிறபடியைப் பெரிஜீயர்கண்டருளி திருமுன் காணிக்கை வந்த த்ரவ்யத்தை நித்யமாக வண்ணனுக்கு ஸாதிக்கும்படி நியமித்தருளினார். பின்பு சிலநாளிலே எறும்பியிலப்பாவுக்குத் தம்முடைய திருமேனியாகாரமான வர்ச்சாவிக்ரஹத்தையும் திருவடிநிலையையுந் திருவுத்தரீயத்தையுந் திருமண்காப்பு சேஷத்தையுந் திருக்கண்ணழியையும் ப்ரஸாதித்து மிகவும் நிர்பந்தித்து அப்பாவை யூருக்கனுப்பியருளினார். பின்பழகிய வரதரான ராமாநுஜஜீயரும் வானமாமலை ஸ்ரீகார்யத்திற்காக விடைகொள்ளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, ஜீயரும். அரங்கநகரப்பனை திருவாராதனமாக ஸாதித்து அவரை வானமாமலைக்கனுப்பியருளினார். அவரும் வானமாமலைக்கதிபதியா யிருக்கையாலே வானமாமலை ராமாநுஜஜீயரென்று அவருக்குத் திருநாமமுண்டாயிற்று, பின்பு பெரிய

ஜீயர் கோவிந்ததாஸரப்பரை விசேஷாபிமாளஞ் செய்து தம்முடைய திருநாமத்தாலே அழகிய மணவாளப்பெருமாளை யிவருக்குத் திருவாராதன மாக ப்ரஸாதித்தார். பின்பு கோவிந்ததாஸரப்பர் ஸ்ரீ வில்லிபுத்தூரிலே ஆண்டாளுடைய திருநாளை நன்முகப் பரிபாலித்துக்கொண்டிருந்து ஒரு திருவாடிப்பூரத்திலே ஆண்டாளுடைய தீர்த்த ப்ரஸாதங்களை மிகவுமாத ரத்துடனே கொண்டுவந்து பெரியஜீயருக்கு ஸமர்ப்பிக்க, ஜீயரும் மிகவு முகந்தருளி ஆண்டாளுக்கு உகப்பாக கோவிந்ததாஸரப்பருக்கு பட்டர் பிரான் தாஸரென்று திருநாமம் ப்ரஸாதித்தார். அவரும் மஹா விரக்த ராய் ஆச்ரமஸ்வீகாரஞ்செய்தபடியாலே அவருக்கு பட்டர்பிரான் ஜீய ரென்று திருநாமமாயிற்று. இப்படி மஹாவைபவத்துடனே யெழுந்தருளி யிருக்கிற பெரியஜீயர் நம்மாழ்வாரை ஸேவிப்பதாகப் பெருமாளனுமதி கொண்டு கூடலென்கிற மதுரையிலே சென்று, கூடலழகரை மங்களா சாஸனஞ் செய்தருளி அன்றைக்கங்கே எழுந்தருளியிருந்தார். அப்போது அந்த தேசத்திற்கதிபதியான மஹாபலிவாணராயன் வந்து திருவடிகளிலே யாச்ரயித்தான். பெரியஜீயரும் அவனுக்குத் தாபாதிபஞ்சஸம்ஸ்காரக்களை யும் ஸாதித்தருளி அன்றைக்கு மங்கேயெழுந்தருளியிருந்தார். பின்பு அபர ராத்ரியிலே பயணமாய் மணித்திருப்பல்லக்கை பனிவிழாமைக்காகமூடி வித்து அதிலே யெழுந்தருளி ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்ரீபாதந்தாங்கிக் கொண்டுவரச்செய்தே மஹாபலிவாணராயன் பெரியஜீயருக்குத் தெரியா மல் தானும் ஸ்ரீபாதந்தாங்கிக்கொண்டு இருகாவதவழி ஸேவித்துக்கொ ண்டுவர, வெகுதூரின்பு வைகையாற்றின்கரையிலே இறங்கியருளினார். அப்போது ராஜாவுங் கச்சைக்கட்டும் வியர்த்த வுடம்புமான ஸ்ரீபாதந் தாங்கின வேஷத்தோடேகூடத் திருவடிகளிலே வந்து ஸேவிக்க, ஜீயரு மிப்படிசெய்வதே! என்று ஆச்சர்யப்பட்டருளினர். அப்போது முத்தர சனந்தலென்கிற க்ராமத்தை யங்கீகரிக்கவேணுமென்று ராஜாமிகவும் ப்ரார்த்திக்க, அவனுடைய ப்ரார்த்தனைக்காக வத்தை யங்கீகரித்தருளி, அதற்கு அழகியமணவாளதல்லூரென்று திருநாமஞ் சாற்றியருளினர். பின்பு ராஜாவை மிகவுங் க்ருபைபண்ணியனுப்பியருளி, திருப்புல்லாணி திருவணைவழியாக முதலிகளுந் தாமுமாக நிழல்தேடி வாராநிற்கச்செய்தே அங்கேயொரு பெரியபுளியமரமானது நன்முக நிழலுச்செய்துக்கொண்டு இருக்கக்கண்டு அந்தநிழலிலே எழுந்தருளியிருந்து ச்ரமந்தீர்ந்து புறப்படு மளவில், முதலிகளெல்லாரு மிப்படி மஹோபகாரம்பண்ணின வித்தப்புளி மரத்திற்கு க்ருபை செய்தருளவேணுமென்று ஜீயரை ப்ரார்த்திக்க, அவ ரும் க்ருபாதிசயத்தாலே அந்தமரத்தைத் திருக்கைகளாலே தடவி நீ மோ க்ஷத்தை யடையக்கடவாயென்றருளிச்செய்தார். அந்தமரம் அப்பொழுதே உலர்ந்துபோய்விட்டது. அத்தைக்கண்டெல்லாரு மாச்சர்யப்பட்டார்கள். பெரியஜீயரும் திருநகரிக்கெழுந்தருளி ஆழ்வாரை மங்களாசாஸனஞ் செய்து அங்கே சிறிதுகால மெழுந்தருளியிருந்து அங்கனின்றும் புறப் பட்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து ஸேவித்து திருமாலிருஞ் சோலைமலைக்

அ ப பழநடை விளக்கம்.

கெழுந்தருளி, பரமஸ்வாமியென்கிற மூலவரை மங்களாசாஸனஞ் செய் தருளினர். அப்போதங்கே அழகர் வலசை யெடுத்துத் திருக்குருங்குடி யிலே யெழுந்தருளியிருந்தாராகையாலே மிகவுங் க்லேசித்தருளி, பரமஸ் வாமிக்கு சிற்புகள் கண்டருளப் பண்ணி, அங்கனின்றும் புறப்பட்டு கோயிலுக் கெழுந்தருளி பெரியபெருமாளுக்கு முன்புபோலே மங்களா சாஸனஞ் செய்துக்கொண்டெழுந்தருளி யிருந்தார்.

பின்பு அழகர் திருக்குருங்குடியினின்றும் திருமாலிருஞ்சோலைமலைக் கெழுந்தருளி தம்முடைய தீர்த்தப்ரஸாதமும் அனுப்பித் திருமுகமுமெழுதி யதிலே "தாம்நினைத்தபடியே நாம் திருமாலிருஞ்சோலைமலையிலே குடிபுகுந் தோம், நம்முடைய ஸ்ரீகார்யத்தை நன்றாக நடத்தும்படி பொருவரை வரவிடவேணுமென்று" வரக்காட்டி யருளினர். ஜீயரும் மிகவு முகந்தருளி யதிராஜஜீயரென்று திருநாமத்தையுடையராய் அத்யந்தம் விரக்தராயிருக் கிற ஜீயரைத் திருமாலிருஞ்சோலைமலைக் கனுப்பியருளினர். அவருமங்கே போய் அழகர் ஸ்ரீகார்யத்தை நன்றாக நடத்தியருளினர். அப்போது, முன்பு ஜீயர்திருவடிகளை யாச்ரயித்த மஹாபலிவாணராயன், ஆசார்யரான பெரியஜீயருடைய நியமனத்தாலே அழகருக்கு கோபுரமண்டபப்ராகாரம் முதலான ஸகலகைங்கர்யங்களையும் நன்றாகச் செய்தான். ஜீயரு மது கேட்டு மிகவு முகந்தருளினர். அப்போது தேசாந்தரங்களிலே திரிவா னொரு சிறுபிள்ளை வந்து ஜீயர் திருவடிகளை யாச்ரயிக்க, ஜீயருமவனை யங்கீ கரித்து ஸ்ரீராமானுஜதாஸனென்று தாஸ்யநாமத்தையும் ஸாதித்தருளி, இவனுலே அனேகந்திருப்பதிகளிலே கைங்கர்யங்கள் நடக்குமென்று அருளிச்செய்ய, அதடியாக அவனுலே பெருமாள் கோவில் தொடக்கமான திருப்பதிகளில் கைங்கர்யங்களெல்லாங் கொண்டருளப்பெற்றது.

பின்பு பெரியஜீயரும் பெரியாழ்வார் திருமொழிக்கு பெரியவாச்சான் பிள்ளை செய்தருளின வ்யாக்யானத்தில் நாற்பாட்டிற்கு வ்யாக்யானம் ஜீர்ணமாய் காணுதலாலே, அதற்கு வ்யாக்யானஞ் செய்வ தாகத் திருவுள்ளம்பற்றி அதற்கு ஸஹகாரியாகத் தமிழ்விரகரான திருப் பாணாழ்வார் தாதர்நாயனையுங் கூட்டிக்கொண்டு வ்யாக்யானம் நாலு பத்தளவாகச் செய்தருளினர். அப்போது அதிபாலனையிருக்கிற கந்தாடை நாயன் அங்கே எழுந்தருளி ஜீயர் வ்யாக்யானத்தையும் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்திலே சேஷித்த நாற்பதுபாட்டு வ்யாக்யானத்தையும் பார்த்தருளி ஜீயர் வ்யாக்யானத்தை மிகவு மாதரித்து, இந்த நாற்பது பாட்டிற்கும் வ்யாக்யானஞ் சேஷிப்பதே! யென்றருளிச்செய்ய, ஜீயரு மிதுகேட்டானந்தித்து நாயனை அவதாரவிசேஷமென்று ஆலிங்கித்துக் கொண்டருளினர். பின்பு ஜீயரும் திருப்பாணாழ்வார் தாதர்நாயனுக்குப் பிள்ளைலோகாசார்யர் திருவாராதனமான ஸ்ரீரங்கராஜரை ப்ரஸாதித் தருளி அவருக்கு விடைகொடுத்தருளினர். பின்பு பெரியஜீயர், ஆசார்ய ஹ்ருதயத்திற்கு வ்யாக்யானஞ் செய்வதாகத் திருவுள்ளமாய், திருமேனி

யில் பலஹானியையும் பாராமல் திருவஹணயிலே சாய்ந்தருளினபடியே திருக்கழுத்துநோவத் திருவெழுத்து சாற்றும்படியைக்கண்டாடையண்ணன் கண்டு தேவரீரிப்படி எதுக்காக ப்ரயாஸப்படுகிறதென்று விண்ணப்பஞ் செய்ய, ஸ்ரீயரும் உம்முடைய புத்ராதிகளுக்காக இப்படி ப்ரயாஸப்படுகிறேனென்று அருளிச்செய்து, வ்யாக்யானத்தைத் தலைக்கட்டி பரமதகிரஸன பூர்வகமாக ஸ்வமதஸ்தாபனம் பண்ணியருளினார்.

அக்காலத்திலே திருமலாம்பி திருவம்ச்யரான வட்டூர் சிங்கராசார்யர் ஸ்ரீயர்திருவடிகளிலேவந்தாச்ரயிக்க, அவரையு மங்கீகரித்து அவருக்குப் பஞ்சஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித்தருளி, அவர் மூலமாய் வந்த திரவியங்களைத் திருநகரியிலே ஆழ்வார் திருக்கோபுர கைங்கர்யத்திற்குப் போகவிட்டருள, அதுபோயுஞ் சிறிதுகுறையிருந்ததைத் திருப்போரூரான ஸ்ரீயர்காயனர் சிகரபர்யந்தமாக நிறைவேற்றினார். இப்படி திருக்குருங்குடிமுதல் வடதிருவேங்கடமளவான திருப்பதிகளிலே ஸ்ரீயர்செய்தருளின விமானகோபுர ப்ராகாரமண்டபந்துடக்கமான திருப்பணிகளும், அவர் கல்பித்த ஸ்ரீகார்யகர்த்தரும், அவர் நியமித்த கட்டளைப்பாடுகளும், இப்போது வரைக்கும் நடந்துவருகிறது. இப்படி எண்ணிறந்த ஆசார்யபுருஷர்களாலே ஆச்ரயிக்கப்பட்டிருக்கிற பெரியஸ்ரீயர் திருவடிகளையாச்ரயித்த வம்சதிக்கறுங்கள்:—வானமாமலைஸ்ரீயர்; திருமலைதம்பெருமாளுச்ஸ்ரீயர்; பட்டர்பிரான்ஸ்ரீயர்; கோயிற் கந்தாடையண்ணன்; எறும்பியிலப்பா; அப்பிள்ளை; அப்பிச்சான்; ப்ரதிவாதிபயங்கரமண்ணவகிறைவட்டுர் திருகாமஞ்சுள். இவர்களிலே கோயிற்கந்தாடையண்ணனையும் ப்ரதிவாதிபயங்காமண்ணவரையும், தம்முடைய திருப்போரூரானஸ்ரீயர் காயருக்கு நீங்கும் ஸ்ரீபாஷ்யமும் ஸாதிக்கும்படி நியமித்தருளினார். இப்படி பெரியஸ்ரீயர், தம்முடைய திருவடிகளை யாச்ரயித்தும், தம்மிடத்தில் உபதேசம் பெற்றும், தம்முடைய சுடாகுதத்திற் கிலக்காயும், தம்முடைய திருமேனியை யேயித்தும், தம்முடைய சிஷ்ய ப்ரஸாதங்களை ஸ்வீகரித்தும் தம்முடைய திருவடிகளிலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணியும், தம்முடைய திருநாமத்தைத் கீர்த்திக்கும், தம்முடைய கல்யாணகுணங்களைச் சொல்லும், தாமிருந்திருக்கைகோக்கி தலையெடுப்பும், தம்முடையவைபவத்தைத் தீமைக்கும், தம்மடியார்க்கடியாரோடே ஸம்பந்தப்படும், தம்முடைய மாநிறுவினபட்ட பூதலத்திலே பிறக்கும், ஸம்பவத்தார் நாமஸ்தர் இனிமையுண்டாமவர்களாணை. வெல்லாவுயிர்களும் உய்ந்துவிடுகாண்மினுயிர்களை [illegible] மைப் பெரியபெருமான் நியமித்த வைதாரகார்யத்தலைக்கட்டி வைத்து, (பெரியஸ்ரீயர்) இனி பரமபதத்திலே போய் அடியேன்யுமிருவுள்ளமாய் திருமேனியிலே சோஷு சாந்திக்கைகளாலுருத்தி, நம்பெருமான் திருத்தேரிலே புறப்பட்டருளி மடத்துவாசலிலே நின்று சேவை ஸாதித்தருள, ஸ்ரீயரும் சேவித்துத் தண்டனிட்டு திரும்படி பெருமாளையருளப்பண்ணி, அதன்பின்பு [illegible]

நம்பெருமாள் திரும்பவும் ஒருநாள் புறப்பட்டருளி மடத்துவாசலிலே எழுந்தருளிநிற்க, ஜீயரும் திருக்கைத்தலத்திலே எழுந்தருளி பெருமாளே ஸேவித்து மிகவுமானந்தத்தை யனுபவித்தருளினார். பின்பு வானமாமலை ஜீயர்முதலானருக்குத் திருமுகம் போகவிட்டருள, அவர்களுங் கடிகைப்புறப் பட்டெழுந்தருளிவந்து திருவடிகளிலே ஸேவித்திருந்தார்கள். அப்போது திருமேனிநோவுசிறிது சமித்திருந்தது; அத்தைக்கண்டு வானமாமலைஜீயர் வானமாமலை ஸ்ரீசார்யத்திலுடைய வவஸரத்தாலே மீண்டுவருகிறே னென்று விண்ணப்பஞ்செய்து ஜீயரனுமதிகொண்டு வடதேசத்திற்கெழுந் தருளினார். பின்பு சிலநாளிலே ஜீயருக்குமுண்புண்டான பாமபதவாஞ்சை மிகுத்து ஆர்த்திபிறந்து அதுபாசுரப்பட்டி அது அறுபதுபாட்டாய் ஆர்த்தி ப்ரபந்தமென்று பெயர்பெற்றது. அப்போது மேல்நாட்டுத்தோழப்பரும், அவர்தமையன் அழகிய மணவாளநாயனாரும், பட்டர்பிரான் ஜீயர் புருஷ காரமாகப் பெரியஜீயரை ஸேவித்துப் பெரியஜீயருக்காகத் திருநாராயண புரத்திலே நித்யவாஸத்தை எற்றுக்கொண்டார்கள். பின்பு திருமலைநம்பி லான் திருவம்சஸ்தராய் பரமதகண்டன ப்ரசண்டராய் திருவேங்கட முடையானுக்குப் புரோகிதராய் மஹா ப்ரபாவசாலியா யிருக்கிற அண்ண ராய சக்ரவர்த்தியென்கிறவர் பட்டர்பிரான்ஜீயர் புருஷகாரமாக ஜீயர் திருவடிகளிலே வந்து ஸேவித்துநிற்க, ஜீயரும் தம்முடைய திருவடிகளை யவர் திருமுடியிலேவைத்தருளி யவனைப்பார்த்தருளிச் செய்தது:—நம் முடைய திருமலை யெம்பெருமானுர்ஜீயனைத் திருவேங்கடத்தோழிகள் கலியாதபடி ரக்ஷித்தும், நந்தர்சனத்திற்காக வனேகம் ஸ்ரீ கார்யங்களைப் பண்ணியும், நிர்வஹித்தவன்றே? நீயென்றருளிச்செய்து, அவருக்கு பட்டர் பிரான் ஜீயர்திருக்கைகளாலே பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்தருளி, அவ னையுந் தர்சனப்ரவர்த்தகாரம்படி செய்தருளினார்.

பின்பு மடத்திலப்பிள்ளானும் ஜீயர்தயிரரும் ஜீயர்திருவடிகளிலே ஸேவித்து தேவரீருடைய வர்ச்சாரூபமானவிக்ரஹம் அடியேங்களுக்கு வேணுமென்று ப்ரார்த்திக்க, ஜீயரும் அனுமதிபண்ணி தம்முடைய திருக் கைச்சொம்பை யதற்கு த்ரவ்யமாக ஸாதித்தருளினார். அவர்களும் ஜீய ருடைய வர்ச்சாவிக்ரஹம் இரண்டு திருக்கோலம் எறியருளப் பண்ணிக் கொண்டார்கள். பின்பு பரமபதத்திற் கெழுந்தருள காலுநான் முன்பாக நாலாயிரந் திவ்ய ப்ரபந்தங்களையும் பெரிய திருவோலக்கமாக ஸேவிக்கக் கேட்டருளி யானந்தித்து, முதலிகளுக்கு ஹிதம்ஸாதித்தருளி தம்முடைய திருவாராதனமான உடையவரையும் ஸ்ரீரங்கராஜரையும் ஸ்ரீகோசங்களை யும் கம்பெருமாளதீனமாக்கி, லோகாசார்யர் திருவடிகளை த்யானித்துக் கொண்டு, ருத்ரோத்காரிவருஷம் மாசிமாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்தில் சனிக்கிழமை த்வாதசி திருவோணநக்ஷத்ரத்திலே பெரியஜீயர் திருகாட் டிற் கெழுந்தருளினார். ஆகவிப்படி திருவனந்தாழ்வான் பெரிய ஜீயராக வவதரித்து எழுபத்தெழுமூன்று திருநக்ஷத்ரம் எழுந்தருளி யிருந்தார்.

பின்பு முதலிகளெல்லாரும் ஜீயர்கயிறைக்கொண்டு ஜீயருடைய சரமகைங்கர்யத்தை உடையவருடைய சரமகைங்கர்யம்போலே நடத்தினர்கள். ஆதிகேசவப்பெருமாள் திருவடிக்கீழாக வடபொன்னித்தென்பாலிலே திருப்பள்ளி படித்தார்கள். பின்பு ஜீயர்கயினர் கந்தாடையண்ணன்முதலான முதலிகளெல்லாரும் சிஷ்யக்ருத்யமாகத் திருமுடி விளக்கி வித்துக்கொண்டு அவப்ருதங் கொண்டாடினர்கள். பின்புசெய்யவேண்டுங் கைங்கர்யங்களெல்லாம் சாஸ்த்ரப்ரகாரத்திலேசெய்து ஜீயர் வைபவத்திற்குத் தகுதியாம்படி பெருக்கத் திருவத்யயனம் நடத்தினர்கள். பின்பு நம்பெருமாள் ஜீயர்கயினருக்கு திருமாலை திருப்பரியட்டம் சடகோபனும் ப்ரஸாதித்து ஜீயர் திருவாராதனங்களையும் மடத்தையும் ஸாதித்து வாழ்வித்தருளினர்.

பின்பு கந்தாடை யண்ணனும் ஆசார்யனின் நியமனத்தின்படியே ஆசார்யருடைய திருப்பேரரான ஜீயர்கயினருக்கு ஈடுமுப்பத்தாறுயிரத்தை ப்ரஸாதித்தருளினர். ப்ரதிவாதிபயங்கரமண்ணவும் அப்படியே ஸ்வாசார்ய நியமனத்தாலே ஜீயர்கயினருக்கும் கந்தாடைநாயனுக்கும் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தருளி இதிலேதமக்கு கர்த்ருத்வமில்லை; ஆசார்யரான பெரியஜீயரே இதற்குக் கர்த்தாவென் றருளிச்செய்தார். (ஸ்ரீ) ஸ்ரீமான் సుందర జామాతృమునిఃపర్యాయభాష్యకృత్ । భాష్యంవ్యాకురుతే తస్యశ్రోత్రకో ఽమమాన్వయః॥ இதற்குப்பொருள்—ஸ்ரீமான்களாய் இரண்டாம் பாஷ்யகாரராயிருக்கிற மணவாளமாமுனிகளானவர் ஸ்ரீபாஷ்யத்தை வ்யாக்யானித்துக்கொண்டிருக்கிறார்; அடியேனுக்கதிலே சிஷ்யகோடியாகவேயன்வயமுள்ளதென்று. பின்பு ப்ரதிவாதிபயங்கரமண்ணவும் கந்தாடைபோளிப்பாக்கம்கயினர் தொடக்கமானவர்களுக்கு ஸ்ரீபாஷ்யம்ஸாதித்தருளினர். இந்த கந்தாடை போளிப்பாக்கம்கயினர் அஷ்டகோத்ரநிபந்தனஞ்செய்தருளினர். (ஸ்ரீ) శ్రీవత్సాత్రేయకౌండిన్య భారద్వాజాశ్చకౌశికః । షణ్ణవాధూలఃకాశ్యపాశ్చషట్గోత్రజాః॥

பின்பு வானமாமலைஜீயர் வடதேசத்தில் நின்றுமெழுந்தருளி ஜீயர் திருநாட்டிற் கெழுந்தருளினசெய்தியை வடதிருமலையருகேகேட்டு மிகவுங்க்லேசித்து வானமாமலைக் கெழுந்தருளி கைங்கர்யத்திற்காகக்கூடுந் த்ரவ்யங்களையெல்லாங்கொண்டு கைங்கர்யங்களையெல்லாந்தலைக்கட்டி திருப்பவுமெறும்பியிலே யெழுந்தருளி அங்கிருக்குமவர்களுக்கு ஈடுமுப்பத்தாறுயிரத்தை நடத்தியருளி திரும்பவும் வானமாமலைக் கெழுந்தருளினர்.

பின்பு வாதூலகோத்ரரான தொட்டையங்காரப்பையும், அப்பச்சியாரண்ணவும், வானமாமலைஜீயர் திருவடிகளை யாச்ரயித்தார்கள். தொட்டையங்காரப்பைச் சோளசிங்கபுரத்திலே யெழுந்தருளியிருந்தார். அப்பச்சியாரண்ணை, பெருமாள்கோவிலிலே கூடஸ்தரான தொழப்பள்காலந்தொடங்கி

அவர் ஸந்ததி பரம்பரையிலே யவதரித்துப் பேரருளாளனை விடாமலிருந் துக்கொண்டு, பேரருளாளர் திருக்கோவிலிலே கூடிக்கொடுத்தாச்சியார் ஸன்னிதியையுங் திருமண்டபத்தையுங் கட்டுவைத்தார். அந்த மண்ட பத்திலே அடிப்பாதத்துடனே கூடின திருமண்காப்பு இன்றைவரைக்கு யிருக்கிறது.

பரவஸ்து பட்டர்பிரான்ஜீயரும் திருமலையிலே யெழுந்தருளியிருந்து அண்ணராயசக்ரவர்த்தி முதலாநூறை தர்சன ப்ரவர்த்தகராக்கி, அந்தி மோபாயநிஷ்டையென்கிற ப்ரபந்தத்தையுஞ் செய்தருளினார். பின்பு பட்டர்பிரான்ஜீயர் திருவடிகளாயாஶ்ரயித்த மேல்நாட்டுத் தொழுப்பரும் அவர் தமையனாரும், பெரியஜீயர் நியமனத்தின்படியே திருநாராயணபுரத் திலே இருந்துகொண்டு திருநந்தனவனந் துடக்கமான ஸகல ஸ்ரீகைங்கர்யங் களையுஞ் செய்துக்கொண்டு அங்கிருக்கிறவர்களையும் பெரியஜீயரபிமானத் திலேயே யிருக்கும்படி திருத்திக்கொண்டு ஸ்ரீசைலத்திற்கு மேற்கும் ஸ்ரீசைலேசதயாபாத்ரவைபவத்தை வளர்த்துக்கொண்டு ஸ்ரீ யதிராஜஜீயர் மடத்திற்குப் பின்னடியிலே யெழுந்தருளியிருந்தார்கள். பின் பவர்கள் ஸந்தானப்ரம்பரையிலுண்டான ஜீயன் முதலாநூறும் அந்த ஸ்ரீகைங்கர்யங் களை நடத்திக்கொண்டு வந்தார்கள்.

வரவரமுனிதாஸரான வெறும்பியிலப்பாவும், வரவரமுனி விஷய மாகக் காவ்யம், ஸுப்ரபாதம், தினசர்யை, சம்பூ ப்ரபந்தம் முதலானவை களைச் செய்து பின்பு பெரியஜீயரைப் பிரிந்து ஸஹிக்கமாட்டாமல் அர்த்தி ப்ரபந்தமருளிச்செய்தார்.

பின்பு ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளி வருஷமாய் மாசிமாஸத்தில் க்ருஷ்ணபக்ஷ த்வாதசியிலே ஜீயருடைய திருவத்யயனத்தை, கம்பெரு மாள் தம்முடைய ஸன்னிதியிலே யிருந்து தீர்த்தம், ப்ரஸாதம், திருப் பணியாரம்முதலான ஸகலவினைகளையும் மடத்திற் கனுப்பியருளி, ஜீயர் கயிலைநாதர் கந்தாடையண்ணன் முதலான முதலிகளுக்கு நியமித்து நடத்தி யருளினார். அது அன்றுமுத லின்றுவரைக்கும் நடந்துவருகிறது. பெரிய ஜீயர் சேஷாவதாரமாகையாலே யொருகாலங்களிலே பாலமுது அமுது செய்யும்போது திருவனந்தாழ்வானுகிற நிஜவடிவுகொண்டமுது செய் வதற் கனுகூலமாம்படி கல்தொட்டியிலே பாலமுது சேர்த்து, ஆஸ்ரித ருடைய ப்ரார்த்தனையாலே எகாந்தத்திலே திருவனந்தாழ்வானுகிற நிஜ வடிவுகொண்டு பாலமுது அமுதுசெய்துக்கொண்டிருப்பர். ஆசார்யருடைய போஜனபாத்ரத்திலே ஸம்பந்தப்பட்ட அன்னம்முதலான உச்சிஷ் டத்தை சிஷ்யர்புசிப்பதென்று சாஸ்தரமிருக்கையாலே முன்னே நிஜ ரூபங்கொண்டு பாலமுது அமுதுசெய்தகல்தொட்டியிலே ப்ரஸாதத்தைச் சேர்த்து அத்தத்தொட்டியினுடைய ஸம்பந்தத்தாலே ஆசார்யருடைய உச்சிஷ்டமாகவே அனுஸந்தித்துக்கொண்டு அந்த ப்ரஸாதத்தை ஸகல

மான சிஷ்டர்களும், பெரியஜீயர் திருவத்யயனத்திருநாளிலே வினியோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். பொன்னாலும் வெள்ளியாலுஞ் செய்ததைப்பார்க்கிலும் கல்லாலே செய்த பாத்ரம் விரக்திக்கநுகூலமாயிருக்கிறபடியாலே உத்தமாச்ரமிகளுக்கு மிகவுஞ் சேர்ந்திருக்கும். ஆகையாலே இப்படி சிஷ்டாநுஷ்டானம் முக்யமாக நடந்துவருகிறது.

இப்படி பெரியஜீயருடைய வைபவமானது உடையவர் வைபவம் போலவும் பட்டர்வைபவம்போலவும் மிகவும் விஸ்தரமாகப் பூர்வர்கள் க்ரந்தங்களிலே சொல்லியிருக்கிறதாகையாலே இங்கே ஸங்க்ஷேபமாக வெழுதப்பட்டது.

பெரியபெருமாள் துடங்கி பெரியஜீயர்வரைக்கும் குருபரம்பராக்ரமம்:—எம்பெருமான்; பெரியபிராட்டியார்; லக்ஷ்மணமுதலியார்; நம்மாழ்வார்; நாதமுனிகள்; உய்யக்கொண்டார்; மணக்காலநம்பி; ஆளவந்தார்; பெரியநம்பி; உடையவர்; எம்பார்; பட்டர்; நஞ்சீயர்; நம்பிள்ளை; வடக்குத்திருவீதிப்பிள்ளை; பிள்ளைலோகாசார்யர்; திருவாய் மொழிப்பிள்ளை; பெரியஜீயர். இது உலகத்திலேயிருந்த ஆச்ரய பரம்பரை.

இன்னமும் எழுபத்திரண்டு ஸிம்மாஸனாதிபதிகளுடைய வம்சஸ்தருக்குத் தனித்தனியே உடையவர்துடங்கி ஆச்ரயணகுருபரம்பரைகளுண்டாயிருக்கும். குருபரம்பரையானது ஆச்ரயணகுருபரம்பரையும் க்ரந்தகுருபரம்பரையுமாக விரண்டுபடிப்பட்டிருக்கும். அதில் க்ரந்தபரம்பரையானது, ரஹஸ்யக்ரந்த பரம்பரையும் திவ்யப்ரபந்த வ்யாக்யான பரம்பரையும் ஸ்ரீபாஷ்ய ஸுதபரகாலிகாபரம்பரையுமாக மூன்றுவகைப்பட்டிருக்கும். அதிலே ரஹஸ்ய க்ரந்தபரம்பரையாவது:—உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், கூரகுலோத்தமதாஸர், திருவாய்மொழிப்பிள்ளை, பெரியஜீயர். திவ்ய ப்ரபந்தவ்யாக்யான பரம்பரையாவது:—உடையவர், திருக்குறுங்கைப்பிரான் பிள்ளான், எம்பார், ஆழ்வான், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, நயுண்ணிமாதவர், நயுண்ணிப்பற்பநாபர், கோலவராஹயதீந்ரர், நாலூர் தேவராஜர், திருவாய்மொழிப்பிள்ளை, பெரியஜீயர். இதிலே உடையவர், எம்பாரென்றே க்ரமம். பிள்ளானும் ஆழ்வானும் உபகாரகதனையக்கொண்டு இதிலே அடைப்புண்டிருப்பர். பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சாம்பிள்ளை, அவர்குமாரர் நயினாராச்சாம்பிள்ளை, வாதிகேஸரி அழகிய மணவாளஜீயர், அவர்சிஷ்யர் திருமாலையாண்டான் திருவம்சஸ்தரானவாதிகண்டூரவர், இத்யாதியாக ஒரு அவாந்தரப்பிரிவுமுண்டு. இதிலே நயினாராச்சாம்பிள்ளை செய்தருளின ப்ரபந்தங்கள்:—முக்தபோகாவலி, தத்வஸங்க்ரஹம், ஜ்ஞானார்ணவம், சரமோபாயநிர்ணயம்முதலாகப் பலவுமுண்டு. வாதிகேஸரிகள் செய்தருளின ப்ரபந்தங்கள்:—திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி, தாத்பர்யஸாரம்

அசா. பழநடை விளக்கம்.

தத்வதீபம்முதலானவை பலவுமுண்டு. வாதிகண்டூரவர் ரஹஸ்ய த்ரயஸாரமென்றொரு க்ரந்தஞ் செய்தருளினர்.

ஸ்ரீபாஷ்ய பரம்பரையாவது:—உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசார்யர் இத்யாதியாக வொரு க்ரமமுண்டு. முன்னே உடையவர் தம்முடைய மருமகனான நடாதூராழ்வானுக்கு ஸ்ரீபாஷ்யஸிம்மாஸனத்தை ஸாதித்திருந்தாரே? அந்த நடாதூராழ்வானுடைய திருப்பேரனான நடாதூரம்மாளுக்குத் தம்முடைய பாட்டனான நடாதூராழ்வானுடைய ஸம்ப்ரதாயமில்லாமல் எங்களாழ்வானுகிற ஸ்ரீவிஷ்ணுசித்தருடைய ஸன்னிதியிலே ஸ்ரீபாஷ்யஸம்ப்ரதாயம் உண்டாச்சுது, அதெப்படியென்றால்:—அம்மாள் மஹா மேதாவிகளாய் ஸ்ரீபாஷ்யத்தை நன்றாக அதிகரிக்கவேணுமென்று தமப்பனாருக்குத் தாய்வழியுறவிலே தமையனரான கந்தாடையாண்டான் ஸன்னிதியிலேசென்று, அடியேனுக்கு பரமத நிராகரணப்படியும் ஸ்வமத ஸ்தாபனப்படியுமாக ஸ்ரீபாஷ்ய மருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, மிகவும் வார்த்தகமாயிருந்தகந்தாடையாண்டான் அம்மாளைப் பார்த்து "சோழியன்தினவுகெடச்சொல்லுவர் அங்கேபோம்" என்றருளிச்செய்தார். அம்மாளும் ஸ்ரீவிஷ்ணுசித்தர் ஸன்னிதிக்கு எழுந்தருளியடியேனுக்கு ஸ்ரீபாஷ்ய மருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, அவரும் புத்ரனில்லாதவராகையாலே அம்மாளைப்பார்த்து நீரெனக்குக் கொள்ளியுமிட்டுக் குடமுஞ் சொரியுவீராகில் நானுமக்கு பாஷ்யஞ் சொல்லுகிறேனென்றருளிச்செய்தார். அம்மாளும், அப்படியே செய்கிறேனென்று விண்ணப்பஞ்செய்து ஸ்ரீவிஷ்ணுசித்தர் ஸன்னிதியிலே ஸ்ரீபாஷ்ய மதிகரித்தருளினர். ஆக உடையவர், திருக்குறுகைப்பிரான்பிள்ளான், எங்களாழ்வானென்கிற ஸ்ரீவிஷ்ணுசித்தர், நடாதூரம்மாள், கிடாம்பியப்பிள்ளார், தூப்பில்பிள்ளையாகிற வேதாந்தாசார்யர், அவர்குமாரர் தூப்பில்நயினாராகிற நயினாராசார்யர், ப்ரதிவாதிபயங்கரமண்ணன், டொளிட்பக்கம் நயினர், என்றிதொரு பரம்பரையுமுண்டு.

இதிலே பிள்ளான் திருவாய்மொழிக்கு ஆறாயிரமும், பரம ரஹஸ்யமென்கிற ரஹஸ்யமும், அருளிச்செய்தார். ஸ்ரீவிஷ்ணுசித்தர் ஸ்ரீவிஷ்ணுபுராண வ்யாக்யானமும், ஸாரார்த்த சதுஷ்டயமென்கிற ரஹஸ்யமும், ஸ்ரீபாஷ்யத்திற்கு ஸங்கதிமாலையென்கிற வ்யாக்யானமும் அருளிச்செய்தார். நடாதூரம்மாள், தத்வஸாரம்; ப்ரமேயமாலை; ஸாரார்த்த சதுஷ்டய காரிகைகள் முதலான ப்ரபந்தங்களையருளிச்செய்தார். அப்பிள்ளார் ஸ்ரீபாஷ்யத்திற்கொரு வ்யாக்யானமும் ந்யாயகுலிசமென்கிற க்ரந்தமும் மருளிச்செய்தார். இந்த அப்பிள்ளாருடைய உடன்பிறந்தாருடைய குமாரர் தூப்பில்பிள்ளை. இவர் குழந்தையாய் தவிழ்ந்து விளையாடுகிற பருவத்திலே அம்மாளுடனவப்பிள்ளார் நடாதூரம்மாள் ஸன்னிதியிலே பாஷ்யமதிகரிக்

கச்செய்தே, இந்த குழந்தை தவிழ்ந்துசென்று அம்மாள் திருவடிகளைப் பிடித்தார். அம்மாளுமுகந்தருளி குழந்தையைப்பார்த்து நீர் விச்வாமித்ர கோத்ரராகையாலே தர்சனத்திற்கு விச்வாமித்ர ஸ்ருஷ்டிபண்ணுவீரோ ? என்றருளிச் செய்தார். இந்த தூப்பில்பிள்ளை ஹயக்ரீவோபாஸனைபண்ணி ஸகலசாஸ்த்ரங்களையும் பெற்று அப்பிள்ளார் திருவடிகளை யாச்ரயித்து ஸகலவேதாந்தங்களையு மதிகரித்து "கவிதார்க்கிகேஸரி" என்றும் "ஸர்வ தந்த்ரஸ்வ தந்த்ரர்". என்றும் திருநாமத்தைப் பெற்று பட்டருடைய திரு நாமமான வேதாந்தசார்ய ரென்கிற திருநாமத்தையும் பெற்று சதாதிக (நஷ்டிக) ப்ரபந்தங்களருளிச்செய்தார். அதிலே பிள்ளான் செய்தருளின வாழுயிரப்படிக்கும் பரமரஹஸ்யத்திற்கும் மற்றும் பூர்வாசார்ய க்ரந்தங் களுக்கும் விரோதமாக வ்யாக்யானங்கள் செய்தபடியாலே பெருமாள் திருவுள்ளங் கலங்கினதும் பெரியவாச்சான்பிள்ளை ஸ்வப்னவிருத்தாந்தமும் இவரபசாரக்ஷாமணம் பண்ணிக்கொண்டதும் முதலானதும், ஆசார்யஹ்ரு தயத்திற்காக அழகிய மணவாளப்பெருமாள் நயினாருக்கும் இவருச்சும்வந்த ப்ரதிக்ஞை முதலானதும் முன்பே எழுதிற்று.

நயினாசார்யரும் அதிர்வசனீயகண்டனம், விரோதபரிஹாரம் முத லான க்ரந்தங்கள் செய்தருளி ராமானுஜ ஸித்தாந்த விஜயத்வஜமா யெழுந்தருளி யிருந்தார். ப்ரதிவாதி பயங்கரமன்னவும் அஷ்டச்லோகீ வ்யாக் யானம்முதலான வனேகக்ரந்தங்கள் செய்தருளினர்.

இன்னமும் எழுபத்திரண்டு ஸிம்மாஸனாதிபதிகளுடைய வம்சஸ்தருக் குத் தனித்தனியே தங்கள் தங்கள் கூடஸ்தர்துடங்கி ஸ்ரீபாஷ்யபரம்பரை களுமுண்டு.

நடாதூரம்மாள் ஹஸ்திகிரி யடிவாரத்திலே ஸ்ரீபாஷ்யம் நிர்வஹித் துக்கொண்டிருக்கச்செய்தே, ஸ்ரீரங்கத்திலேயிருந்து ஸுதர்சனபட்டர் சிஷ்யாணுக்ரஹார்த்தமாகப் பெருமாள்கோவிலிலேவந்து அம்மாள் ஸன் னிதியிலே ஸ்ரீபாஷ்யம் அதிகரிப்பதாசத் திருவுள்ளம்பற்றி, சிஷ்யஸஞ்சா ரத்தைத் தவிர்த்து அம்மாள் ஸன்னிதியிலே பனிரண்டு ஸம்வத்ஸரத்திலே பத்தாவ்ருத்தி ஸ்ரீபாஷ்யங் கேட்டருளினர். அப்போது ஆவ்ருத்திகள் தோறும் அர்த்தபேதங்களையும் சப்தபேதங்களையுமொன்றுடொன்று சல சாமல் தனித்தனியே தரித்துக்கொண்டு மௌனமாயிருப்பர். இப்படி யிருக்கு மிவருடைய மஹாசக்தியை யம்மாள் அறிந்திருப்பர். இப்படி யிருக்க, ஒருநாள் சு (ஸு) தர்சனபட்டர் ஸன்னிதிக்கு வருவதற்குப்போது சென்றது. அம்மாள் பட்டர்வரவில்லையென்று கேட்டருளினர். அப் பிள்ளார் முதலானவர் இவருடைய மௌனத்தை யுள்ளபடி யறியாமல் இவர் நிபுணரன்னென்று சிலவற்றை யம்மாள் ஸன்னிதியிலே சொன்னார் கள். அம்மாளும் சுதர்சனபட்டர் எழுந்தருளின வளவிலே பட்டரே ? நாம்சொன்னதேதாகிலுந் தெரிந்ததாகில் சிறிதுசொல்லுமென் றருளிச்

செய்ய, பட்டருமெத்தவுருவில் உபன்யாஸத்தை விண்ணப்பஞ்செய்வ தென்ன, அம்மாளும் உருத்தோறும் சிறிது உபன்யஸியுமென்ன, சுதர் சனபட்டரும் உருத்தோறும் ஒன்றோடொன்று கலசாமல் சப்தாணுவாதத் துடனே யுபன்யஸிக்க, அம்மாளும் முதலிகளுங்கேட்டு மிகவு மாச்சர்யப் பட்டார்கள். பின்பு சுதர்சனப்பட்டர் ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளினவளவிலே பெரியபெருமாள் சுதர்சனப்பட்டருக் கருளப்பாடுளாதித்து ஸ்ரீவேதவ் யாஸனென்று திருநாமஞ்சாற்றி ஸ்ரீபாஷ்யத்திற் கொருவ்யாக்யான மிதி மென்று நியமித்தருளினர். சுதர்சனபட்டரும் மூப்பத்தாறுயிரமாக வொரு வ்யாக்யானமெழுதி, ஆசார்யர் ஸன்னிதியிலே ஸமர்ப்பணம் பண்ணப்பட்ட பொருள்களை ப்ரகாசிப்பிக்கையாலே ச்ருதப்ரகாசிகையென்று திருநாமஞ் சாற்றினர். பின்பு ஸ்ரீபாஷ்யத்திற்கு ச்ருதப்ரதிபிகை யென்றொரு வ்யாக்யானமும், வேதார்த்தஸங்க்ரஹதீபிகையும், கத்யத்ரயவ்யாக்யான மும், ப்ரபத்திப்ரயோகசாரிகையும், பாகவதவ்யக்யானஞ் சுகபக்ஷியமும், சு (ஸு ; பாலோபனிஷத்விவரணமுஞ் செய்தருளினர்.

அப்போது பெருமாளுடைய ஸங்கல்பத்தாலே மேலெழுதியபடியே கோவில் ம்லேச்சாக்ராந்தமாய் அத்தாலே அங்குள்ளாரில்சில ஸ்ரீவைஷ்ணர் வர்களுக்கு எதாலத்திலே கம்பெருமான் பரமபதம் ப்ரயாணித்தருளி, அப் போதே அந்தம்லேச்சரை யங்கிருக்கவொட்டாமல் வடதிசையில் கண்டா ரரிலே போம்படிபண்ணியருளினர். பின்பு ச்ருதப்ரகாசிகாசார்யருடைய குமாரரான உத்தண்டபட்டரும் தாப்பில்பின்னையும் உடையவர்பக்கலே அந்த ஆபத்தைத் தப்பவைத்துக்கொண்டு கிர்மாணுவ்யமாயிருக்கிற வவ்விடத் தில் ச்ருதப்ரகாசிகாபட்டருடைய திருமாளிகையிலேசென்று அந்தச்ருத ப்ரகாசிகா ஸ்ரீகோசத்தை உத்தண்டபட்டரெடுத்துக்கொடுக்க, தாப்பில் பின்னையும் வாங்கிக்கொண்டுஸந்துஷ்டராய், (ஸ்வபிதாவானச்ருதப்ரகாசிகா பட்டரிடத்திலே உபயவேதாந்தாதி ஸகலசாஸ்த்ரங்களையு மப்பாயிதது ஜ்ஞானநிஸ்தருணபரிபூர்ணராய் பரமதார்கிகஸஞ்சாரமே உத்தண்டபட்ட ரென்று வாதிகோஷ்டியிலே ப்ரஸித்தராயிருக்கிற) ச்ருதப்ரகாசிகாசார் யர் குமாரரையுங் கூட்டிக்கொண்டு, மேல்காட்டிலே போயிருந்து ச்ருதப்ர காசிகையை ஸம்ப்ரதாயசுத்தியையுடையரான வவர் ஸன்னிதியிலே படி கரித்து, பல ஸ்ரீகோசங்களையு மெழுதிவிற்று அந்தை யோக்யாரிடங்களிலே ப்ரவர்த்திப்பிக்கையாலே இப்போது ச்ருத ப்ரகாசிகையோடு கூடிய ஸ்ரீ பாஷ்யத்தையதிகரிப்பார் "ச்ரீமத்வேங்கடநாதார்ய:" என்கிறதனையுமெடுத்து ஸ்ரீபாஷ்ய பரம்பரையிலே யனுஸந்தித்துக்கொண்டு போருகிறார்கள். பாஷ்யகாரருடைய காலத்திலேயுண்டான ஸம்ப்ரதாசிகைமுதலான வ்யாக் யானத்தோடே கூடின பாஷ்யான்வயத்திலே இவர் தனியனை யநுஸந்தி ப்பதில்லை.

இப்படி மூன்றுவகைப்பட்டிருக்கிற ச்ரத்தஸம்ப்ரதாய பரம்பரை யிலே த்ராவிடவேதபாஷ்ய ப்ரவர்த்தகராகிய கஞ்சீபர் கம்பின்னாழ்வான்

ணைத் தென்ணசார்யரென்றும், ஸ்ரீபாஷ்யப்ரவர்த்தகராகிய ஸ்ரீவிஷ்ணு சித்தர் நடாதூரம்மாள் மூதலாணை வடவாசார்யரென்றும், க்ரந்தங் களிலே யெழுதியிருப்பதுண்டு. இருவருக்கும் இரண்டுபாஷ்ய ப்ரவர்த் தத்வமுண்டாயிருக்கச்செய்தேயும் மிகுதியைப்பற்ற வழக்கங்களிருக்கிறது. இப்படி க்ரந்தவழக்கங்களை யறியாமல் தென்கலையாரென்றும் வடகலையா ரென்றும் உலகவாதம்வந்துவிழுந்தது. இவர்களிலே தென்னரங்கமான கோயிலிலே இருந்துக்கொண்டு தென்மொழியான த்ராவிடவேதபாஷ்ய ப்ரவர்த்தனமே மிகுதியாயிருக்கையாலே, நஞ்சீயர் நம்பிள்ளை மூதலாணை தென்ணசார்யரென்பது. கோயிலுக்கு வடதேசத்திலே யிருக்கிற பெருமாள் கோவிலாகிற கச்சிநகரிலே இருந்துக்கொண்டு வடமொழியான ஸ்ரீபாஷ்யப்ரவர்த்தனமே மிகுதியாயிருக்கையாலே ஸ்ரீவிஷ்ணுசித்தர்மூத லாணை வடவாசார்யரென்பதென்று வகையிட்டிருக்கும்.

இனி வானமாமலைமடத்துத் திருமுடிவர்க்கமெழுதுகிறது:—பெரிய ஜீயருடைய திருவடிகளாயாச்ரயித்த அஷ்டதிக்கஜங்களிலே யொருவரா யிருக்கிற வானமாமலை ராமாணுஜஜீயர்-க-களமூர்வரதமுனி-உ-சென்ன டலங்காரஸ்வாமி-ங-பெரிய ரங்கப்பஸ்வாமி-ச-திம்மய்யங்கார்ஸ்வாமி-ஞ-எம்பெருமாணர்ஸ்வாமி-ட-பெரியதிருவேங்கடஸ்வாமி-எ-கோனப்பஸ்வாமி அ-சின்னரங்கப்பஸ்வாமி-கூ-சின்னதிருவேங்கடஸ்வாமி-கஂபெரியதெய்வ ணையகஸ்வாமி-கக-திருவேங்கடஸ்வாமி-கஉ-சின்ன தெய்வணையகஸ்வாமி கங-கூரத்தாழ்வான்ஸ்வாமி-கச-ஸ்ரீவத்ஸசின்னஸ்வாமி - கஞ- திருவேங் கடஸ்வாமி-கஜ-திருவேங்கட ராமாணுஜஸ்வாமி-கஎ-சடகோப ராமாணுஜ ஸ்வாமி-கஅ.

வானமாமலை ராமாணுஜஜீயருடைய அஷ்டதிக்கஜங்களெழுதுகிறது:— சோளசிங்கபுரம்தொட்டையங்காரப்பை-க-ஸமரபுங்கவாசார்யார்-உ-சுத்த ஸத்வம் அண்ணன்-ங பெருமாள்கோவில் அப்பச்சியாரண்ணன்-ச-ராமா ணுஜம்பிள்ளை-ஞ-திருக்கோட்டியூரையர்-ட-ஜ்ஞானக்கண்ணைத்தான்-எ-பள் ளத்காலகித்தான்-அ-இவர்களிலே தொட்டையங்காரப்பை ச்ருத ப்ரகாசி கைக்கு நாலிகையென்றொரு வ்யாக்யானஞ்செய்தருளினார். அப்பச்சியா ரண்ணை பெருமாள்கோவிலிலே பேரருளாளர் ஸன்னிதியிலே ஸேனை மூதலியார் ஸன்னிதிக்கு மேற்கிலே ஆண்டாளுக்கு ஸன்னிதியுந் திருமண் காப்புங் கட்டுவித்து திரு ப்ரதிஷ்டை பண்ணிவித்தார். ஹஸ்திகிரியிலே யெழுந்தருளியிருக்கிற பேரருளாளர் மூதலான வாறுதிருக்கோலங்களிலே ஒருதிருக்கோலம் அப்பச்சியாரண்ணை திருமாளிகையிலே திருவுள்ளப்பட்டு திருவாராதனமாக வெழுந்தருளியிருக்கிறார்.

இனி அஹோபில மடத்தாருடைய வரவாறும் திருமுடிவர்க்கமும் எழுதுகிறது:—பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சாம்பிள்ளை, இப் பால்ஸ்ரீரங்காசார்யர்-க கேசவாசார்யர்-உ-ஸ்ரீனிவாஸாசார்யர்-ங-கேசவா

சார்யர்-கூ-ஆக இந்த காலுநிருகாமமும் க்ரஹஸ்தாச்ரமம். இனிமேல் ஸ்ந் யாஸாஶ்ரமம், கேசவாசார்யர் சிஷ்யர் ஆதிவண்சடகோபஸ்வாமி-நு-ஶ்ரீமந் நாராயணஸ்வாமி-கூ-பராங்குசஸ்வாமி-எ-ஶ்ரீநிவாஸஸ்வாமி- அ-வண்சடா ரிஸ்வாமி-கூ-பராங்குசஸ்வாமி-கo-சடகோபஸ்வாமி-கக-பராங்குசஸ்வாமி கஉ-நாராயணஸ்வாமி-கங-வண்சடாரிஸ்வாமி-கச-ஶ்ரீநிவாஸஸ்வாமி- கநு-நாராயணஸ்வாமி-கசு-வீரராகவஸ்வாமி-கஎ-வரதாஜஸ்வாமி-சஅ-ஶ்ரீநிவா ஸஸ்வாமி-ககூ. ஶ்ரீமந்நாராயணஸ்வாமி-உo. கல்யாணவீராகவஸ்வாமி-உக ஶ்ரீசடாரிஸ்வாமி-உஉ-ஶ்ரீநிவாஸஸ்வாமி உங-ஶ்ரீவீராசவஸ்வாமி- உச- ப்ராங்குசஸ்வாமி-உநு-ஶ்ரீமந்நாராயணஸ்வாமி-உகூ-ஶ்ரீவீராகவஸ்வாமி- உஎ-பராங்குசஸ்வாமி-உஅ-ஶ்ரீநிவாஸஸ்வாமி - உகூ-ரங்கராஜஸ்வாமி-கூo- ஆகவிவர்கள் பெரியவாச்சாம்பிள்ளை ஸந்நிதியிலே பஞ்சஸம்ஸ்கார ஸம்ப்ர தாயத்தைப்பெற்றிருப்பர்கள். பட்டர்செய்த அஷ்டச்லோகியென்கிறமந்த் ரவ்யாக்யானத்தையும், அத்தை மூலநூலாகப்பற்றியிருக்கிற பெரியவாச்சாம் பிள்ளைசெய்த பரந்தரஹஸ்யமென்கிற மந்த்ரவ்யாக்யானத்தையும், அதிகரித் துக்கொண்டு அத்தைப்பற்றிக்கொண்டே ரஹஸ்யத்ரயஜீவாதுவென்கிற மந் த்ரவ்யாக்யானத்தையும் புருஷகாரமீமாம்ஸையென்கிற மந்த்ரவ்யாக்யா நத்தையும் மீமாம்ஸாமணிதீபிகையென்கிற மந்த்ரவ்யாக்யானத்தையுஞ் செய்து மூப்பத்தாறுயிரப்படியையு மதிகரித்துக்கொண்டு ஶ்ரீவ்யாக்யா தி களிலே பாரணைமுதலான வாசாரங்களைத் தென்னாசார்யர்களுடைய ஸம் பரதாயப்படிக்கு ஆசரித்துக்கொண்டு மடத்திலே எப்போதும் ஶ்ரீசைலே சதயாபாத்ரத்தநியனை யனுஸந்தித்துக்கொண்டு பட்டர்முதல் பெரியஜீயர் பர்யந்தமான பூர்வாசார்யர்களுடைய திருவாராதநஸவக்களை மடத் திலே பரிபாலித்துக்கொண்டு வருகிறார்கள். மேலெழுதிய ரஹஸ்யத்ர யஜீவாதுவென்கிற க்ரந்தத்திலே யிருக்கிற வவர்களுடையமுகவசனமெழுத கிறது. எப்படியென்றால்:-''விஷ்ணுவேமோக்ஷம் ப்ரயோதிப்பர்; அவ ருடைய பத்நியான லக்ஷ்மி அதற்குப் புருஷகாரமாத்ரமென்று நம்மாசார் யர்களுடைய ஸம்ப்ரதாயமிருப்பது. வேதாந்தாசார்யரோ வென்றால் லக்ஷ்மிக்கு மோக்ஷோபாயத்வஞ் சொல்லிக்கொண்டிருக்கிறரென்று'' ரஹஸ்யத்ரயஜீவாதுவிலே சொன்னார்கள். இந்த முகவசனத்திலே அநேந பிலமடத்தார் தென்னாசார்யர்களைத் தங்களுக் காசார்யர்களென்றும், வேதாந்தாசார்யரைத் தங்கள் ஆசார்யரன்றென்றுங்கொண்டார்களென்று மிகவும் வெளியாகக்காணப்படுகிறது.

இந்த அஹோபில ஸம்ஸ்தானம் ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர்மடத்திற்கு முன்னே என்பதுவருஷந் துடங்கிவருகிறது. இதிலே ஆதிவண்சடகோ பஸ்வாமியென்கிறவர் மஹாநுபாவராய் திருநகரியிலே ஆழ்வார்ஸந்நி தியிலே ஸ்வப்னத்திலே ஹநுமன்மூத்தரையைப்பெற்று, அங்கே அனேகந் திருப்பணிகள் செய்து, மேல்நாட்டிலே திருநாராயணபுரத்திலே வந்து மணவாளமாமுனிகளுக்குத் தனிக்கோயிலுங் கோபுரங்களுஞ் கட்டி.

வைத்து பின்பு அஹோபிலத்திற்குப்போய், அங்கேயிருக்கிற பஞ்சபேரங் களிலே யொரு நரசிங்கவிக்ரஹத்தை யாராதனமாகப்பெற்றார். ஆகை யாலே அன்றுமுதல் அஹோபிலமடமென்று வழக்கமிருக்கிறது. இவர்கள் யாராகிலுந் தங்களையடுத்து வேதாந்தாசார்யருடைய மந்த்ரவ்யாக்யானஞ் சொல்லவேணுமென்று கேட்டால், அவர்களுக்கு வேதாந்தாசார்யர்செய்த மந்த்ரவ்யாக்யானத்தைச் சொல்லிக்கொண்டிவருவர்கள். இவர்களுக்கு த்ராவிடவேததேசிகரென்றே சிறப்புச்சொல்லுக்களிருக்கும். ஆகவிந்த அஹோபிலமடத்தாரெல்லாரும் பெரியவாச்சாம்பிள்ளை சிஷ்யர்களா யிருப்பர்.

இனிப்ரம்மதந்த்ரஸ்வாமி திருமுடியடைவு எழுதுகிறது:--வேதாந்தா சார்யருடைய சிஷ்யரான பேரருளாளய்யரென்கிறவர், ஸந்யாஸம்வாங்கிக் கொண்டு வேதாந்தாசார்யரிடத்திலே ஹயக்ரீவர் விக்ரஹத்தை யாராதன மாகப்பெற்று தமக்குப்பிற்பாடு ஒருஸந்யாஸியை யேர்ப்படுத்திரை. ப்ரம்ம தந்த்ரஸ்வதந்த்ரர்-க-நரஸிம்மர்-உ-வேதாந்தயதிபதி-ங-ராமசந்த்ரர்-சு-ந ரஸிம்மர்-ரு-வேதாந்தலக்ஷ்மணமுனி-சூ-ப்ரம்மதந்த்ரஸ்வதந்த்ரர்-எ-ஸ்ரீநிவா ஸர்-அ-வேதாந்தயதிராஜர்-கூ-ப்ரம்மதந்த்ரமுனி-கo-ஸ்ரீநிவாஸர்-கக-வேதா ந்தலக்ஷ்மணமுனி-கஉ-இந்தமடத்திலே சக்ராங்கநம் பெற்ற ஸ்ரீநிவா ஸய்யங்காரென்கிறவர் ஸந்யாஸம் வாங்கிக்கொண்டு பரகாலரென்று பேர் வைத்துக்கொண்டு மைசூரிராஜாவை யநுஸரித்து சிலத்ரவ்யங்களும் சில சிஷ்யர்களும் ஸம்பாதித்து மடமுங்கட்டிக்கொண்டிருந்தார். அதிலே ஸ்ரீநிவாஸபரகாலர்-க-ராமானுஜபரகாலர்-உ-ஸ்ரீநிவாஸபரகாலர்-ங-கண் டாவதாரபரகாலர்-சு-இந்த மடத்திற்கு பூர்வாசார்ய நியமனமாவதுபகவண் நியமனமாவது இல்லாமல் ஒருப்ரபலவிக்ரஹமுமில்லாமல் கேவலம்ஸ் வேச்சையாலே வைத்துக்கொண்டதாகையாலே இந்த பரகாலமடத்திற்கு மூலசுத்தியில்லை.

இனி பக்தி ப்ரபத்தி விஷயமாக வெழுதுகிறது:--பக்திபண்ணமாட் டாத மந்தாதிகாரிக்கு ப்ரபத்திபண்ணவேண்டுமென்று வேதாந்தாசார்ய ருடைய ஸித்தாந்தமாகையாலே வடகலையார் பக்தி ப்ரபத்திகளிரண்டை யும் பிரிச்சார்களென்று சொல்லுவது ஸித்தாந்தவிரோதமாயும் சாஸ்த்ர விரோதமாயுமிருக்கும். பக்தியும் ப்ரபத்தியும் ஆசார்யப்ரபத்தியும்மோக்ஷ மார்க்கமாயிருக்கும். அதிலே ஆசார்யப்ரபத்தியே முக்யம். அதிலே விச் வாஸமில்லாத மந்தாதிகாரிகளுக்கு ப்ரபத்தியென்று வேதாந்தாசார்யர் ஸித்தாந்தமாகையாலே முக்யமான வாசார்யப்ரபத்தியைவிட்டு அமுக்ய மான ப்ரபத்தியைப் பிடித்தபடியாலே வடகலையாருக்கு முக்யவைஷ்ண வத்வமில்லை. பட்டருடையமந்த்ரவ்யாக்யானமே எல்லாமந்த்ரவ்யாக்யா நங்களுக்கும் மூன்நூலாகையாலே பட்டர்ஸம்பந்தந் தங்களுக்கிருந்தும் தங் களுக்கில்லையென்று சொல்லுமவர்களின் வைஷ்ணவத்வம் விலக்ஷணமா யிருக்கவேணும். ராமானுஜாசார்யருடைய நியமனத்தாலே வந்திருக்கிற

பழநடை விளக்கம்.

பிள்ளாணுரையிரப்படிக்கு மிகவும் விரோதப்பட்டிருக்கிற வேதாந்தாசார்ய ருடைய மந்த்ரவ்யாக்யானத்தை ஸம்ப்ரதாயசுத்தியுடையரா யிருப்பா ரொருவரு மொப்பார்கள்.

எழுபத்திநான்குஸிம்மாஸனஸ்தருடைய வம்சத்திலே பிறந்தவர்கள் சிலர் தங்கள் தமையன்மாரிடத்தில் பஞ்சஸம்ஸ்காரம்மாத்ரம் பெற்று ஆசார்யபுருஷவம்சஸ்தரல்லாத வேதாந்தாசாரியருக்கு சிஷ்யராய் அவ ரிடத்தில் மந்த்ரார்த்த ஜ்ஞானத்தையும் சரணாகதியையும் பெற்றிருப்பர் கள். பஞ்சஸம்ஸ்காரத்தில் காட்டிலும் மந்த்ரார்த்தஜ்ஞானமுந் சரண கதியும் மிகவும் முக்யமாகையாலே முக்யத்தை ஆசார்யபுருஷரல்லாத வேதாந்தாசார்யரிடத்திலே பெற்றபடியாலே அவர்களுக்கு ஆசார்யபுரு ஷத்வம் கஷ்டமாய் போயிற்றென்றுசொல்லவேண்டிவருகையாலேயெதிரி சொன்ன தூஷணம் தனக்கேவந்துவிழுந்தது. இதற்கு இருவருங் கூடச் சொல்லவேண்டிய ஸமாதானம் முன்பேயெழுதிற்று. மதுராவித்வாகுனை ப்ரதிவாதி பயங்கரமண்ணன் வேதாந்தாசார்யருடைய மந்த்ரவ்யாக்யா னத்திலே இருக்கிற ஸம்ப்ரதாயவிரோதத்தையும் பூர்வாசார்ய தூஷணை களையும் பார்த்து இப்படிப்பட்ட வேதாந்தாசார்யருடைய ஸம்பந்தத்தால் தமக்குக் கார்யமில்லையென்று பார்த்து ஸம்ப்ரதாயசுத்தியையுடையராய் பரமஸாத்வீகரான பெரியஜீயர் திருவடிகளை யாச்ரயித்தார். இப்படியிருக்க த்ரவ்யத்திற்காக ப்ரதிவாதிபயங்கரமண்ணை பெரியஜீயரை யாச்ரயித்தா ரென்று வடகலையார்சொல்லுகிற கல்பனைதானே வேதாந்தாசார்யருடைய உபதேசக்கொற்றையை நன்றாக வெளிப்படுத்துகிறது.

இனிஸ்ரீரங்காதிவ்யதலங்களிலே ப்ரதமதீர்த்தங்களைப் பற்றியெழுதுகிறது.

என்னவென்றால்:—கோயிற்றிருமலைபெருமாள்கோயிலென்கிற இந்த மூன்றும் விஷ்ணுஸ்தலங்களிலேமுக்யமென்று ஸித்தாந்தம். அதிலேமுதல் முக்யமான ஸ்ரீரங்கத்திலே ஸ்ரீபாஷ்யகாரர் காலந்தொடங்கி யின்றுவரைக் கும் வடகலையாருக்கு ப்ரதமதீர்த்தம் மர்யாதையென்கிற ப்ரஸங்கமே யில்லையென்று லோகப்ரஸித்தமாயிருக்கும். இனி திருமலையிலும் பாஷ்ய காரர்காள் தொடங்கி இன்றுவரைக்குங் கோயில்விசாரணைமுத்ரையும் ப்ரதம தீர்த்தம்முதலான மர்யாதைகளும் பாஷ்யகாரர் நியமித்த பெரியகேழ்வி ஜீயருக்குநடந்துவருகிறது. மணவாளமாமுனிகள் காலந்தொடங்கி இரண்டா வது முத்ரையும் இரண்டாவது தீர்த்தம் முதலான மர்யாதையும் மணவாள மாமுனிகள் நியமித்ததிருமலை நிறியகேழ்வி யெம்பெருமானார் ஜீயருக்கு நடந்துவருகிறது. மூன்றுவது தீர்த்தம் தோழப்பாசார்யருக்கு சிலகாளாய் நடந்துவருகிறது. அதற்குமுன்னே அனந்தாண்பிள்ளை ஸந்ததியாருக்கு மூன்றுந்தீர்த்தமும் தோழப்பாசார்யர் ஸந்ததியாருக்கு நான்காந்தீர்த்தமு

மாகநடந்துவந்த விந்தைஸாளுவராஜாவினுடைய அவலம்பனத்தாலேவட கலியார் மூன்னது பின்னதாக மாற்றிப்புகட்டார்கள். ஆகையாலே தொழப்பாசார்யர் ஸந்ததியாருக்குத் திருமலையிலே ப்ரதமதீர்த்த மொரு நாளும் நடந்துவந்ததில்லை. பெருமாள்கோவிலிலே மூதலியாண்டான், கந்தாடைதோழப்பர், அப்பச்சியாரண்ணை, இவர்களுக்கு அனேகமர்யாதை களும், பெரியகேழ்விஜீயர், சிறியகேழ்வஜீயர், கோயில்அழகிய மணவாள ஜீயர், இவர்களுக்குக் கோவில்விசாரணை முத்ரையும் ப்ரதமதீர்த்தம் மூத லான மர்யாதைகளும் பாஷ்யகார்நாள்முதல்நடந்துவந்தது. அதிலேகுமார வெங்கடாசார்யருக்கு மூலபுருஷராயும் கந்தாடைதோழப்பருடைய வம் சஸ்தராயு மிருக்கிற அப்பச்சியாரண்ணாவினுடைய கைங்கர்ய நிர்வாஹங் கள் மூன்பே யெழுதிற்று. கோயிலழகிய மணவாளஜீயரென்கிறவர், (இப் போது நூறுவருஷத்திலே யிருந்த பெருமாள் கோயிலழகிய மணவாளஜீய ரல்லாமல் இவருக்கு மூன்னே வேறேயொருவரிருந்தார். அவர்,) தேவப் பெருமாள் ஸந்நிதி ஸமீபத்திலே மூன்றுலே பாலாறு ப்ரவாஹரூபம் பெரு கிக்கொண்டு கோவிலிலேவந்து வீழ்ந்து மிகவுமுபத்ரவம்பண்ணிக்கொண் டிருந்தது. கோயிலழகியமணவாளஜீயர் அத்தைப்பார்த்து காவேரிப்பா க்கத் தண்டையிலே கட்டித்திருப்பி கோவிலுக்கு ஒருகாழிகைவழி தெற்கே போம்படிபண்ணி கோவிலைநிலைநிறுத்தினார். இன்னமும் கீழைப்பெரிய திருக்கோபுரமும் கட்டிவித்து பொற்றூமரைத்தீர்த்தத்தை விஸ்தரித்துப் பெரிய மதிளையுங்கட்டிவித்தார். இப்படியனேக கைங்கர்யங்களுஞ் செய்தார். பின்பு சிலகாலிலே தாதாசார்யரென்கிறவர் காஞ்சீதேசத்திற்கு ராஜா வான ஒருராயனுக்கு குருவாயும் பின்பவனுடைய குழந்தைப்பிள்ளைக்கு ஸ்தானாபதியாயு மிருந்தவர் தம்முடைய அதிகாரமேன்மையாலே ஜீயர்க ளுடைய அதிகாரத்தையும் கந்தாடையாருடைய மர்யாதைகளையும் ஆக் ரமித்துக்கொண்டார். அந்த தாதாசார்யர் எங்கேயிருப்பவரென்றால்:— பெரியவாச்சாம்பிள்ளை ஸம்ப்ரதாயஸ்தரான அஹோபிலமடத்துஸ்வாமி களிலே ஷஷ்டபராங்குசஸ்வாமியென்று ஒருமஹாநுபாவ ரெழுந்தருளி யிருந்தார். உலகத்திலே அவருடைய ஸம்ப்ரதாயமில்லாத வடகலையா ரொருவருமில்லை. அப்பேர்ப்பட்ட ஷஷ்டபராங்குசஸ்வாமி ஸந்நிதியிலே சக்ராங்கனம்பெறவேணுமென்று ஆனைக்கொந்ராவணிலே யொருவன் வந்தான். ஷஷ்டபராங்குசஸ்வாமியானவர் அவனுக்கு சக்ராங்கனம் பண்ணுவதில் ஸம்மதிப்படாமலிருந்தார். அந்தஸ்வாமிஸந்நிதியிலேஸ்ரீதர் சதஹோமமென்கிற பணிவிடைசெய்துக்கொண்டு திருமலைம்பி கோத் ரஸ்தரான வெங்கடாசார்யரென்கிறவர் திருமலையைவிட்டுவந்து சிலநாள் ஸந்நிதியிலே காத்துக்கொண்டிருந்தார். அவர் இராயன்வந்தகார்யத்தை யும் அதற்கு ஷஷ்டபராங்குசஸ்வாமி இசையாமலிருந்ததையு மறிந்து ரஹஸ்யத்திலே ஸ்வாமி ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்தது:—அடியேன் திருவடிகளைக் காத்துக்கொண்டிருக்கிறேனே; அடியேனை இதற்காளாக நியமித்தால் அடியேன்குடும்பியாகையாலேபிழைத்துப்போகிறேனென்று

சொன்னார். ஷஷ்டப்பராங்குசஸ்வாமியு மங்கிகரித்து ராயனுக்கு சு (ஸ்) தர்சனஹோமம் வெங்கடாசார்யர் கையாலே சக்ராங்கனஞ்செய்வித்தார். பின்பு சுதர்சனஹோமம் வெங்கடாசார்யரென்கிறவர்ராயகுருவாய்காஞ்சீபுரத்திலேவந்து அங்கே பூர்வமாயிருக்கிறவர்களைப் பீடித்து வீடுவாசலைப் பறித்துக்கொண்டு கோவில்நிர்வாஹங்களையும் பிடுங்கிக்கொண்டு தெங்கலையாயிருக்குமவர்களை யதிகாரத்தாலே சக்ராங்கம்பண்ணி, முன்னிலே கோயிலழகியமணவாளஜீயர் ஸம்பாதித்து கூடுமித்துவைத்த பெருமாள் தாகங்களையெல்லாம் அபகரித்துக்கொண்டு கோவில் விசாரணையையும் ப்ரதமதீர்த்தத்தையும்பற்றி யநுபவித்துக்கொண்டிருந்தார்.

பின்பு கிலகாளிலே இதுசெய்தி கோலகொண்ட ப்ரபு அறிந்து இவர் ப்ரதமதீர்த்தத்தை நிறுத்திப்புகட்டான், பின்பு கிலகாளிலே அநுஸரணத்தாலே ப்ரதமதீர்த்தத்தைமாத்ரந் திருப்பிக்கொண்டார். இன்னுமிந்த தாதாசார்யருடைய கோணல்கள் அனேகமுண்டு. இப்படி தாதாசார்யருக்கு மத்யேராயபலத்தாலே ப்ரதமதீர்த்தமுண்டாயிற்று. பூர்வகாலத்திலே இவருக்குத்தீர்த்தமில்லை. இப்படியே தாதாசார்யர் ஸந்ததியாருக்கு ப்ரதமதீர்த்தம்முதலான மர்யாதைகள் பலத்தாலே கட்டிக்கொண்டதாயிருக்கும்.

திருக்குடந்தையிலே முன்னிலே தரணீவராஹனென்கிற ராஜாவினுடைய காலத்திலே கந்தாடையாரிலே மங்கலத்திலப்பாவென்கிறவர் ராஜாவினுடைய வாஸ்த்தானத்திலே சாஸ்த்ரவாதத்திலே ஜயித்து தரணீவராகனென்கிற ராஜாவை சிஷ்யனாக்கிக்கொண்டு மங்கலமென்கிற க்ராமத்தையும் பெற்று தரணீவராகபுரமென்று கந்தாடைவீதியையுங் கட்டிவித்து திருக்குடந்தை முதலான திருப்பதிகளிலே மங்கலத்திலப்பாவென்றுந் தம்முடைய திருநாமத்தாலே டரியபட்டம் ப்ரதமதீர்த்தம் முதலான மர்யாதைகளை யநுபவித்துக்கொண்டு திருப்பணிமுதலான ஸகல கைங்கர்யங்களையுஞ் செய்துக்கொண்டிருந்தார். பின்பு ராஜாக்களுடைய காலம் போய் விஜயராகவநாயகன் சோளதேசத்தை யாளுகிறகாலத்திலே அவனுக்கு குருக்களாய் காஞ்சீபுரந் தாதாசார்யருக்கு ஜ்ஞாதியாயிருக்கிற நாவல்பாக்கந் தாதாசார்யர் கந்தாடையாருடைய மர்யாதைகளைப் பற்றிக்கொண்டு கந்தாடைவீதியையு மாக்ரமித்துக்கொண்டார். இப்படிஇன்னுமவர்கள் செய்தவதர்க்கணைகள் பலவுமுண்டு.

இனி ஸ்ரீரங்காதிஸ்தலங்களிலே வேதாந்தாசார்யருடைய விக்ரஹங்களுடைய வரவாறு யெழுதுகிறது.

கந்தாடைதோழப்பருடைய லக்ஷ்மணாசார்யரென்கிற குமாரர் வேதாந்தாசார்யரிடத்திலேயபசாரப்பட்டு குஷ்டரோகம்பிடித்து பின்பு வேதாந்தாசார்யருடைய ஸ்ரீபாததீர்த்தத்தாலே ரோகந்தீர்ந்து பின் ஒருபிள்ளை

பிறந்து அவருக்குத் தீர்த்தபிள்ளானென்று பெயர். அவர் ஸ்ரீரங்கத்திலே வேதாந்தாசார்யர் விக்ரஹத்தை ப்ரதிஷ்டை.பண்ணி வைத்தானென்று சொல்லுமது சுத்த கல்பனையாயிருக்கும். கந்தாடை தோழப்பருக்கு லக்ஷ்மணாசார்யனென்று பெயருள்ள குமாரரில்லையென்றும் அவருக்கு தீர்த்தப்பிள்ளானென்று குமாரரில்லையென்றும் கந்தாடையாருடைய வம்சாவலிப்புஸ்தகங்களைப் பார்த்தால் தெரியும். ஆகையாலே தீர்த்தப்பிள்ளானென்கிறவர் ஸ்ரீரங்கத்திலே வேதாந்தார்யர் விக்கிரஹத்தை ப்ரதிஷ்டைபண்ணி வைத்தானென்கிறது மெய்க்கொள்ளமாட்டாது. வேதாந்தாசார்யர் குமாரர் நயினாசார்யர் ஸ்ரீரங்கத்தில் நின்றும் வேதாந்தாசார்யர் விக்ரஹத்தைக் கொண்டுவந்து காஞ்சிபுரத்திலே வேதாந்தாசார்யருடைய க்ருஹத்தைக் கோவிலென்று பெயரிட்டு அதிலே அந்த விக்ரஹத்தை ப்ரதிஷ்டை பண்ணிவித்தானென்பதும் நூதனகல்பனையாயிருக்கும். அப்படி ப்ரதிஷ்டைபண்ணதுண்டாயிருந்தால், உடையவர் விக்ரஹத்தைக் கந்தாடையாண்டான் ஸ்ரீபெரும்பூதூரிலே ப்ரதிஷ்டை பண்ணிவித்தானென்று உடையவர் சரிதமான குருபரம்பரையிலே சொல்லியிருக்கிறபோலே வேதாந்தாசார்யருடைய சரிதங்களையும் நயினாசார்யருடைய சரிதங்களையும் நன்றாகச் சொல்லியிருக்கிற வைபவ ப்ரகாசிகையிலே இப்பேர்ப்பட்ட பெரியவைபவத்தை அவச்யம் அதிலே சொல்லியிருக்கவே வேணும். அதிலே யப்படி சொல்லியிராமையாலே இது நூதனகல்பனையாயிருக்குமென்று கொள்ளவேண்டியது. இப்போது வேதாந்தாசார்யர் மூலவிக்ரஹமிருக்கிற்விடம் விளக்கொளி கோவிலச்சேர்ந்த வாஹனமண்டபமானபடியாலே வேதாந்தாசார்யர் க்ருஹத்தைக் கோயிலென்று பெயரிட்டானென்று சொல்லுகையும் நூதனகல்பமாயிருக்கும். முன்னிலே ஸ்ரீனிவாஸய்யங்கா ரென்கிறவர் திருப்பதியிலே அதிகாரம்பண்ணிக்கொண்டிருந்தார். அவர் காற்பதுவருஷத்திற்குமுன்னே யொருவேதாந்தாசார்யர் விக்ரஹம் ப்ரதிஷ்டைப்பித்து வைத்திருந்தார். பின்பு ஐந்துவர்ஷகாலங் கழிந்தவுடனே க்ரோதிவருஷத்திலே இடுமுடிக்குப் பார்த்து ஆதுரத்தின்பேரிலே வைகானஸ பாஞ்சராத்ர சஸ்த்ரவிதிக ளொன்றுமில்லாதே, அதற்குக் கடவர்களாகிய அர்ச்சகர்களைக் கொண்டுந் செய்வியாதே, வடகலையார் தங்களோடே அந்த உத்ஸவவிக்ரஹத்தை யசாஸ்த்ரமாக விளக்கொளிப்பெருமாள் வாஹனமண்டபத்திலே மூலவிக்ரஹத்தண்டையிலே வைத்துவிட்டார்கள். அப்போது அதிகாரம் பண்ணுகிற ப்ரபுக்கள் ந்யாயவிசாரணை பண்ணுகிறபோது முன்னிலே கடந்த நடத்தைகளை யறிந்துங்கொள்ளுகைக்காகத் தொண்டைமண்டலஸ்தரென்றவர்களாகம் பகுதபாதமில்லாதவர்களாய் விபூதிதாரிகளாய் அந்த விபூதிதாரிகளாய் விளக்கொளி கோவிலருகேயிருக்கிற வைஷ்ணவர் வாணியர்களை யழைப்பித்துக் கேழ்க்குமிடத்தில் அவர்கள் சொன்னது:—இந்தக் கோவிலிலே என்றைக்குங் கறுப்புசாமியார் மாத்ரமே விக்ரஹமாக சைதப்புச்சாமியார் ஒருகாலுங் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையென்று பெழுதிக்கொடுத்தார்கள். இப்படிக் கேட்டுக்கொண்டு ப்ரபுக்கள் ந்யாயவிசாரணை பண்ணுமென்றும் நா

பழநடை விளக்கம்.

தனமென்றுந் தெரிந்துகொண்டும் வைத்துவிட்டதை யெடுப்பித்துப் போடுகிறதாவென்று கொஞ்சம் தயைபண்ணி அத்தை யெடுத்துப் புகடாதே வைத்திருந்தார்கள். தேவராஜன் கோவிலிலேயும் வேதாந்தாசார்யர் வாஹனமண்டபத்திலேயே யெழுந்தருளியிருக்கிறார். அப்படியே வேதாந்தாசார்யர் மூலவிக்ரஹமும் விளக்கொளிகோவில் வாஹனமண்டபத்திலே இருக்கிறார்.

ஸ்ரீ பெரும்பூதூரிலே தொண்ணூறுவருஷத்திற்கு முன்னே வேதாந்தாசார்யர் விக்ரஹமில்லை. அதெப்படியென்றால்:—ஸ்ரீ பெரும்பூதூரிலே ஸ்தலஜ்ஞராய் பஹுகாலமாயிருக்கிற அப்பையங்காரென்கிறவர் வேதாந்தாசார்யரிடத்திலே பக்தியுடையவர்களாய் வேதாந்தாசார்யர்பேரிலே நூற்றந்தாதிப் பாட்டுகளும் பாடியிருக்கிறவர் பாஷ்யகாரர் ஸந்நிதியிலே ஸுவாக்ரமஞ் சொல்லுகிறவடவிலே வேதாந்தாசார்யர் ராமானுஜன் ஸந்நிதியிலே இருக்கிறதாகவெடுத்துச் சொல்லவில்லை. மண்ணளந்தபெருமாள் கோவிலிலே மணவாளமாமுனிகள்மாத்ரமிருக்கிறதாகவெடுத்துச் சொல்லிக் காண்பித்தார். ஆகையாலே ஸ்ரீ பெரும்பூதூரிலேயும் வேதாந்தாசார்யர் விக்ரஹம் நூதனப்ரதிஷ்டிதமாயிருக்கும்.

திருவல்லிக்கேணியிலும் அறுபதுவருஷத்திற்கு முன்னே வடகலையார் கீழைத்தெருவிலே கீழைச்சிறகிலே யொருவீட்டிலே வேதாந்தாசார்யர் விக்ரஹத்தை வைத்துக்கொண்டிருந்து ஒரு இடிமுடுக்குப்பார்த்து பார்த்தஸாரதிமஹாமண்டபத்திலே யொருதூண்துறையிலே சுவர்வைத்து அதிலே வைத்துவிட்டார்கள். ஆகையாலே அதுவும் நூதனமாயிருக்கும். ஸ்ரீரங்கத்திலும் வேதாந்தாசார்யர் விக்ரஹம் ரங்காசார்யர் நாள்துடங்கியிருக்கிறது.

முன்னுலே மேலெழுதிய பரகால ஸ்வாமியானவர் மைசூரிராஜாவை பகுப் பிரகாரங்களாலேயநுவர்த்தித்துக்கொண்டிருந்து,ஒருசமையத்திலே ராஜா தன்மேலே ஸந்தோஷப்பட்டிருக்கச்செய்தே வேதாந்தாசார்யர் விக்ரஹத்தை ப்ரதிஷ்டைபண்ணும்படி சிலவுவாங்கிக்கொண்டு, மேலைக்கோட்டையிலே திருவீதியிலிருந்த தொருமண்டபத்திலே ப்ரதிஷ்டை பண்ணிவைத்தார் பின்பு சிலநாளிலே ராஜாவுக்கு இவரிடத்திலே கோபம்வந்து வேதாந்தாசார்யர் விக்ரஹத்தைப் பிடுங்கிப் போடுவித்தான். பின்பும் அநுஸந்தித்து அந்த மண்டபத்திலே அந்த விக்ரஹத்தை வைத்துக்கொண்டார். இப்படிவைப்புண்டும் பிடுங்குண்டும் பஹுப்ரயாஸத்தாலே திருநாராயணபுரத்திலே வேதாந்தாசார்ய விக்ரஹம் ஸ்தாபிக்கப்பட்டது. இப்படி பலவிடங்களிலும் பகுப்ரயாஸத்தாலே வேதாந்தாசார்யர் விக்ரஹங்களை வடகலையார் ஸ்தாபித்துக் கொண்டார்கள்.

இனிமேல் "ராமானுஜதயாபாத்ர" மென்கிற பத்யத்தினுடைய வரவாறு எழுதுகிறது.

என்னவென்றால்:—முன்னூலே தொள்ளாயிரத்திற்குமுன்னே ஸ்ரீனிவாஸபரகாலரென்கிறவர் மேலெழுதிய ராஜாவை யநுஸரித்து ஸிங்காரியென்கிற ஸிம்மையழுகமாக வார்த்தைசொல்லி, ராமானுஜதயாபாத்ரத்தையும் வடகலையார்கூடத் தொடங்கும்படி சிலவுவாங்கிக்கொண்டார். அந்த ராஜாவும் முன்கடந்தகடத்தைகளை யாலோசனை பண்ணிப்பாராமல் ராமானுஜதயாபாத்ரத்தையும் மேலேக்கோட்டையிலே திருநாராயணப்பெருமாள்கோவிலிலே சொல்லும்படி சிலவுகொடுத்தான். அப்போது பகுகூடனத்தின்மேலே அதுவுங்கூட சிலகாள் நடந்துவந்தது. இந்த ராமானுஜதயாபாத்ரமானது மேலெழுதிய ஸ்ரீநிவாஸபரகாலராலே நூதனமாக நிர்மிக்கப்பட்டதென்று லோகப்ரஸித்தமாயிருக்கும். இப்படியிருக்க இத்தைவேதாந்தாசார்யருடைய ஸிஷ்யராகிய பேரருளாளப்பனென்கிற ப்ரம்மதந்த்ரஸ்வாமியாலே நிர்மிக்கப்பட்டதென்றுவடகலையார்ரெழுதினது அஸங்கதம். அதெப்படியென்றால்:—வேதாந்தாசார்யருடைய வைபவங்களையெல்லாம் நன்றாக வெளிப்படுத்துகிறதாய், கயிறராசார்யர் ப்ரம்மதந்த்ரஸ்வாமி இவர்கள் வேதாந்தாசார்யர் விஷயமாகச் செய்த ச்லோகங்கள் முதலானதுகளை நன்றாகவெழுதியிருப்பதுமான, வைபவ ப்ரகாஸிகையென்கிற க்ரந்தத்திலே யிப்போப்பட்ட மஹாவைபவத்தை அவச்யம் எழுதியிருக்கவேணுமே. "ஸ்ரீமான் வேங்கடநாதார்ய:" என்கிற பத்யத்தினுடைய வரவாறையும் வைபவத்தையும் அதினுடைய விநியோகத்தையும் நன்றாக வெழுதியிருக்கிற வைபவப்ரகாஸிகையிலே இப்போப்பட்ட மாஹாத்மயத்தையுடைய ராமானுஜ தயாபாத்ர மென்கிற பத்யத்தையும் அதினுடைய வரவாறும் விநியோகமும் எழுதுகிறதற்கு ஒரு விரோதமுமில்லையே. இப்படியிருக்க வைபவப்ரகாஸிகையிலே யெழுதினவையாமையாலே இந்த ராமானுஜதயாபாத்ரமென்கிற பத்யத்தைப் பரகாலஸ்ரீயர் நூதனமாக நிர்மித்தாரென்கிற லோகப்ரஸித்தியை மெய்யென்று நிரூபகராயிருப்பார் கொள்ளவேணும். மணவாளமாமுநிகளுடைய வைபவங்களையெல்லாம் நன்றாக வெழுதியிருக்கிற யதிந்த்ரப்ரவண ப்ரபாவத்திலே ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்கிற பத்யத்தையும் அதற்குப் பெரியபெருமாள் நியமித்த கட்டளைகளையும் நன்றாகவெழுதியிருக்கிறுப்போலே வைபவ ப்ரகாஸிகையிலேயும் இந்த ராமானுஜதயாபாத்ரத்தினுடைய விநியோகம்முதலானதை யெழுதி யிராமையாலே இதுநூதன நிர்மிதமென்று என்னவேணும். ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்கிற பத்யத்திலே காலுபேர் காலுபாதங்களைக் கொண்டுர்களென்று வடகலையா வெழுதியது யதிந்த்ர ப்ரவண ப்ரபாவ. மென்கிற க்ரந்தத்தைத்தாத்பர்யமறியாதவர்கள் கல்பித்தெழுதிய தென்று நன்றாக வெளிவரவேணும். அந்த யதிந்த்ரப்ரவண ப்ரபாவத்திலே

பிறகு

பழநடை விளக்கம்.

இந்த பத்யத்தை நாலுபேர் நாலுபாதங்களாகச் சொன்னார்களென்று எழுதியிருக்கவில்லை. அதிலே அப்படியெழுதியிராவிட்டாலும் மற்ற க்ரந்தங்களிலே மூன்றுபேர் நாலுபாதஞ்செய்தார்களென்று எழுதியிருக்கிறதேயென்று ஆக்ஷேபம்வருமேயென்று கேட்கில், அந்த க்ரந்தத்திலே தானே மூன்றுபேர் நாலுபாதங்களைச் சிந்தித்து நாளைக்குச் சொல்லுவதாக ஒருவருமறியாதபடி மனஸிலே வைத்துக்கொண்டிருக்கச்செய்தே மற்றை நாள் திருவோலக்கத்திலே நம்பெருமாள் ஒருபாலகரைகவத்து மூவர்சொல்வதற்குமுன்னதாகவே சொல்லி மறைந்துபோனரென்கையாலே அந்த ஆக்ஷேபத்திற்கிடமில்லை. ஒன்றைத்தானே பலருஞ் சொன்னார்களென்கிற வழக்கங்களுக்கழியான தாத்பர்யபேதங்கள் புராணங்களிலே கொண்டகட்டளையிலே இங்ஙும் நன்றாகச்சேருமென்று ஸமாதானம் முன்பே யெழுதிற்று, அப்போது அந்த பரகாலஜீயருடையநிர்பந்தத்தாலே திருநாராயணபுரத்திலேமாத்ரம் சிலகாலம் நடந்தது. அக்காலத்திலே மழவூர், தொண்டனூர், மிதிலை சானக்கிராமம், கரியகட்டம்முதலான ஸ்தலங்களிலே ஒருநாளுமிந்த ராமானுஜதயாபாத்ரத்தியன் ப்ரஸங்கமேயில்லை.

பின்பு பரகாலஜீயர்பெருமாள்கோவிலுக்குவந்து அப்போது முக்யராயிருந்த திருமலைதாதாசார்யர் திருமாளிகையிலே வந்து ராமானுஜதயாபாத்ரமென்கிற தனியனையும் கச்சிநகர் பதினெட்டித்திருப்பதியிலே சொல்லும்படி பண்ணவேணுமென்று சொன்னர். அதற்குத் திருமலை தாதாசார்யர்சொன்னது:—ஆதிகாலமேபிடித்து ஸம்ப்ரதாயமாக நடந்துவந்து பின்பு நம்முடைய கூடஸ்தரான தாதாசார்யரும் நடப்பித்துப்பெரியஜீயருக்குத் தனிக்கோவிலுங்கட்டவைத்து இப்படி அன்றுமுதலின்றுவரைக்கும் நடந்துவருகிற இந்த ஸ்ரீசைலேசதயாபாத்ரமென்கிற தனியனைக்கூட ராமானுஜதயாபாத்ரமென்கிற தாதனபத்யத்தை நாம்சொல்லக்கடவதில்லையென்று சொன்னர். அதற்கு பரகாலஜீயர் திருமலைதாதாசார்யனிடத்திலே கோபித்துப்போய்விட்டார். ஆகையாலே பெருமாள்கோவிலிலே இந்த ராமானுஜதயாபாத்ர ப்ரஸங்கமேயில்லை.

திருமலைதாதாசார்யருக்குக் கூடஸ்தரான தாதாசார்யர், தம்முடைய திவ்யஜனனராயனுடைய ஸ்தானாபதியாய் ராஜ்யதந்த்ரஞ் செய்துகொண்டிருக்கிறபோது கார்த்திகைமாஸக்கடைசியிலும் மார்கழிமாஸத்துமுதலிலும் அதிவ்ருஷ்டியுண்டாய் தென்னேரிவரியுடைந்துபோயிற்று. அப்போது அங்கிருப்பவர்களாலே கட்டிப்படாதுபோய் தாதாசார்யர், தாமேபோய்க்கட்டிவிக்கவேணுமென்று புறப்பட்டு, வழியாக ஹஸ்திகிரியிலேயேறி பெருமாளைஸேவிக்கவந்தார். அப்போது திருக்கார்த்திகைக்கழித்தபடியாலே யாழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களை ஸேவிக்கக்கூடாமையாலே அந்தஸ்தானத்திலே அதற்கு ப்ரத்யாம்நாயமாகப் பெரியஜீயர்செய்த வுபதேசரத்தினமாலையென்கிற ப்ரபந்தத்தை ஸ்ரீரங்கம்முதலான ஸ்தலங்களுடைய வழக்கத்தின்படியே தேவப்பெருமாள் ஸந்நி

யிலும் ஸேவித்து சாற்றுகிறவிடத்தில் அந்த சாற்றுமுறையிலே மூடிவுச் சொல்லானது தாதாசார்யர் பெருமாளை ஸேவிக்கிறபோது அவர் செவியிலே சேர்பட்டது. அந்தை தாதாசார்யர் கேட்டு உபச்ருதியாகப் பற்றிக் கொண்டு மிகவும் ஸந்தோஷப்பட்டு அடியேன் போகிற கார்யம் தலைக் கட்டுதல் மணவாளமாமுனிகளுக்குத் தனிக்கோயிலும் கோபுரம் முதலானதும் கட்டுவிக்கிறேனென்று ப்ரார்த்தித்துக்கொண்டு போனவிடத்திலே எரியுடைப்பு ஸுகமாகக் கட்டுப்பட்டது. தாதாசார்யரும் அதிப்ராவண்யத்துடனே வந்து பெருமாளுடைய திருநந்தவனத்திலே யிருக்கிற நாற்கால்மண்டபத்தை கர்ப்ப க்ருஹமாக்கி யதிலே மணவாளமாமுனிகளை ஸம்ப்ரோக்ஷணம்பண்ணிவித்து பின்பு மஹாமண்டபம் மடப்பள்ளிமுதலானதும் கட்டுவித்தாரென்று லோகப்ரஸித்தமாயிருக்கும். பின்பு சிலநாளில் வடகலையார் சிஷ்யனையிருக்கிற ஒருகோலகுண்டவ்யாபாரி (அவன் பெயர்:—ரத்நாஜிபண்டிதன்) விளக்கொளிகோவில் வேதாந்தாசார்யர் முன்னே ராமாநுஜதயாபாத்ரத்தைச் சொல்விவிக்கவேணுமென்று நினைத்து, பெருமாள்கோவிலிலேயிருக்கிற தென்கலையாரைப் பிடித்துக்கொணடுபோய் வேலூரிலே ஆட்டுவாணியன் கடையிலே யடைத்துவைத்து, தெங்கலையார் கையிலே கையெழுத்து வாங்குவதாகப் பீடித்துக்கொண்டிருந்தான். அப்போது அந்த வ்யாபாரிக்கு ஆப்தனான துலுக்கனை நபாபு அண்டையிலே யிருக்கிற பெரிய உத்யோகஸ்தரான துலுக்கர் கொரஞ்சுமற்றிக்கொன்றுவிட்டார்கள். அந்த வ்யாபாரிநினைத்த அதர்க்கணம் அவன்துரையானதுலுக்கனையுங் கொல்லுவித்தது. பின்பு அங்கிருக்கிற அதிகாரிகளெல்லாரும் தெங்கலையானை விடுவித்து உங்களைப் பீடித்துக்கொண்டிருந்தவன் மாண்டுபோனானென்று சொல்லி ஸந்தோஷப்பட்டு, நபாபு இடத்திலே யிவர்களுக்கு சிலவுவாங்கிக்கொடுத்து, காஞ்சீபுரத்திற் கனுப்பிவிட்டார்கள். இது கடந்து எழுபதுவருஷமாயிற்று.

பின்பு திருவயலையிலே நாற்பது வர்ஷத்திலே வடகலையார் அர்ச்சகனுக்கு த்ரவியங்களைக் கொடுத்து அர்ச்சகனைக் ஸுவசமாக்கிக்கொண்டு ஆராதநாரம்பத்திலே "தடங்கண்டி. ஸ்ரீஸைலேசதயாபாத்ர" மென்று அனுதியாய் அர்ச்சகன் சொல்லுகிறவழக்கத்திலே அந்தைதந்தள்ளி "தடங்கண்டி ராமாநுஜதயாபாத்ர" மென்று அர்ச்சகன் சொல்லுவதாகக் கட்டுப்பாடுபண்ணியிருந்தார்கள். அர்ச்சகனுக் த்ரவ்யத்தை வாங்கிக்கொண்டு அப்படியே சொல்லுவதாக நினைத்திருந்து, அந்த ஸமயத்திலே பெருமாள் அவன்மேலே ஆவேசிக்க அவன் மெய்மறந்து "தடங்கண்டி ஸ்ரீஸைலேசதயாபாத்ர" மென்று வழக்கப்படி சொல்லிவிட்டான். அப்போது வடகலையார் பங்கப்பட்டுப்போனார்கள். பின்பு அந்த வர்ச்சகனை நீவழக்கப்படிக்கு என்சொன்னாய்? என்றுகேட்டவிடத்தில், அந்த வர்ச்சகன் பெருமாளென்மேலே யாவேசித்து உடம்பு தெரியாதுபோனபடியாலே வழக்கப்படிக்கு சொன்னேனென்று சொன்னான். பின்பொருக்கால் வட

பழநாடை விளக்கம்.

கலையான ஸ்ரீநிவாஸய்யன் திருப்பதி அதிகாரம் பண்ணிக்கொண்டிருக்கச் செய்தே வடகலையார் கூட்டங்கூடிக்கொண்டு ஒரு வடகலைஸ்யாளியை யழைத்துக்கொண்டுவந்து திருவீதியிலே பெருமாள் புறப்பாட்டிலே ப்ரபந்தந்துடங்கும்போது "ராமாநுஜதயாபாத்ர" மென்கிற பத்யத்தைத் துடங்குவதாக வெல்லாரும் பெருமாள்முன்னே நின்றுகொண்டு துடங்கப் போகிற ஸமயத்திலே, அங்கிருக்கிற டமாயெருதின்மேலே பெருமாளா வேகிக்க, அது அந்த வடகலைஞீயர்மேலே பாய்ந்தது. அவர் விழுந்தெழுந் திருந்து கூட்டங்களுடனே கூடிக்கொண்டோடிப்போனார். அப்போது வடகலையார் பங்கப்பட்டார்கள்.

பின்பு இலகாலத்திலே திருப்பதியதிகாரம்பண்ணுகிற ஸ்ரீநிவாஸய்ய னென்கிறவர் பெரியஜீயர் சிறியஜீயர் முதலான கோவில்முத்தரையதிகா ரஸ்தரை மிகவும் கல்லதனம்பண்ணிக்கொண்டு, கீழைத்திருப்பதியிலே சுற்றுக்கோவில்களிலே வேதாந்தாசார்யர் ஸந்நிதியிலே மாத்ரம் ராமா நுஜதயாபாத்ரஞ் சொல்லும்படியாகக் கேட்டுக்கொண்டார். பெரியஜீயர் முதலானோர் தாக்ஷிண்யத்தாலே ஸம்மதித்து அதற்குத் தாங்கள்போகாதே வடகலை யேகாங்கி யொருவனைத் தங்கள்மடுவ்யவஹாரக் கல்பித்து அவன் வாயைக்கொண்டு நிலநாளாய் கீழைத்திருப்பதி வேதாந்தாசார்யர் கோ விலிலே ராமாநுஜதயாபாத்ரமென்கிற பத்யத்தைச்சொல்லிவிக்கிறார்கள்.

திருவெவ்வுளூரிலே பாஷ்யகாரர் திருவம்சஸ்தராகிய ஆஸ்ரியாருக்கு ப்ரதமதீர்த்தம்முதலான மர்யாதையும் கோவில்விசாரணையும் நடத்து வருகிறகாலத்திலே வீரராகவன் கோவிலைச்சேர்ந்த சில்லரைக்கோவி லான வேதாந்தாசார்யர் கோவிலிலே ராமாநுஜதயாபாத்ரமென்கிற பத் யம் நடந்தில்லை. இப்போது சிறிதுகாலமாய் ஆஸ்ரியாருடைய மர்யா தையையும் அதிகாரத்தையும் அகோபிலமடத்தார் கட்டிக்கொண்டபடி யாலே மடத்தாருடைய அதிகாரபலத்திலே மிகவும் வருந்தத்தின்மேலே வீரராகவன் கோவிலைச்சேர்ந்த சுற்றுப்பட்டுக்கோவிலான வேதாந்தாசார் யர் ஸந்நிதியிலேமாத்ரம் அவர்திருநாள் பத்துநாளும் ராமாநுஜ தயாபாத் ரத்தைச் சொல்விக்கொண்டுவருகிறார்கள். பெரியகோவிலான வீரரா கவன் ஸந்நிதியிலும் மற்றும் ஆழ்வார்கள்கோவில் முதலான சுற்றுப்பட் டுக்கோவில்களிலும் எக்காலத்திலும் ஸ்ரீசைலேசதயாபாத்ரமே நடந் துவருகிறது. வீரராகவனுவது ஆழ்வார்கள் பாஷ்யகாரர்முதலானார்களாவது திருவீதிபுறப்பட்டபோதும் ப்ரபந்தத்துடக்கத்திலே ஸ்ரீசைலேசதயாபாத் ரஞ் சொல்லி, திருவீதிவலம்வந்து ப்ரபந்தஞ்சாற்றும்போதும் ஸ்ரீசைலேச தயாபாத்ரஞ் சொல்லி, மணவாளமாமுனிகள் விஷயமான வாழிதிருநா மத்தையு மநுஸந்திக்கிறார்கள்.

திருவல்லிக்கேணியிலும் மேலெழுதிய ஆஸ்ரியாருக்கு ப்ரதமதீர்த் தம்முதலான மர்யாதைகளும் கோவில்விசாரணையும் நடந்துவருகிறகாலத்

திலே ஸ்ரீசைலேசதயாபாத்ரம் நடந்துவந்தது. பின்புஸ்லகாலத்திலே ஆஸ்ரியார்தீர்த்தங் நிலமாய்ப் போய் தேசாந்தரிதீர்த்தமாகவே நடந்து வருகிறது. அறுபதுவருஷத்திற்கமுன்னே வடகலையார்கள் கலஹம்பண்ணினார்கள். பின்பு அனேகம்பெயர் ப்ரபுக்கள் நன்முக பரிசோதனைபண்ணி ராமாநுஜ தயாபாத்ரமென்கிற புதுமந்தரஞ் சொல்லவேண்டாம். ஸ்ரீசைலேசதயாபாத்ரமென்கிற பழையமந்தரமே சொல்லவேண்டுவதென்று நிர்ப்பந்தப்பண்ணி யந்தப்படிக்கு நடப்பித்துக்கொண்டு வருகிறார்கள்.

அதிமுதல்யதாப்ரகாரம் ஒரு கலஹமுமில்லாமற்படிக்கு ஸ்ரீசைலேசதயாபாத்ரம் நடந்துவருகிறது. ஸ்ரீரங்கத்திலே யிருக்கிற வேதாந்தாசார்யர் விக்ரஹத்திற்கு சேஷையாக வகுத்துத் தென்கலைத் திருமண்காப்பு சாற்றியிருக்கையாலே திருவல்லிக்கேணியில் வேதாந்தாசார்யருக்கு தென்கலை திருமண்காப்பு ஸமர்ப்பிக்கிறது மாறுபாடன்று. க்ரஹஸ்தாச்ரமத்திற் காட்டிலும் ஸந்யாஸாச்ரமம் பெரிதாகையாலே ஸந்யாஸியான மணவாள மாமுனிகளுக்கு அமுதுசெய்யப்பண்ணின ப்ரஸாதத்தை க்ரஹஸ்தாச்ரமியான வேதாந்தாசார்யருக்கு அமுதுசெய்யப்பண்ணுகை யஸக்கதமன்று. ஸ்ரீபெரும்பூதூரிலே த்ரமிடவேதபடநாநந்தரம் கீர்வாணவேதம்படிக்கை யாலே திருவல்லிக்கேணியிலும் அப்படிசெய்கிறதுமாறுபாடாகமாட்டாது. ஸ்ரீபெரும்பூதூரிலே முதலியாண்டான் திருவம்சஸ்தரான கந்தாடையாருக்குக் கோவில்விசாரணை முத்ரையும், பாஷ்யகாரர் திருவம்சஸ்தராகிய ஆஸ்ரியாருக்கு ப்ரதமதீர்த்தம்முதலான மர்யாதைகளும் நடந்துவந்தது. பின்பு சோளசிங்கபுரத்தாருடைய ஸிஷ்யரான யதிராஜஜீயருக்குத் தீர்த்த முண்டாய்த்தது. ஆஸ்ரியார்தீர்த்தம் பிடியாமல் விட்டுவிட்டார்கள். கந்தாடையார்மாத்ரம் கோவில்விசாரணை பண்ணிக்கொண்டிருந்தார்கள். பின்நிலகாலிலே அதுவும்விட்டுப்போய்த்தது. பின்புகோவில்விசாரணையும் யதிராஜஜீயர் வம்சஸ்தர்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகக்கந்தாடையார்காலம் ஆஸ்ரியார்காலந் துடங்கி யின்றைவரைக்கும் ஸ்ரீபெரும்பூதூரிலே பெரியகோவிலாகிய ஆதிகேசவப்பெருமாள் பாஷ்யகாரர் கோவிலிலேயாவது சில்லரைக்கோவிலான வேதாந்தாசார்யர் கோவிலிலேயாவது மற்றுஞ்சில்லரைகோவிலிலே யாவது அந்தவூர் நாலுவீதிக்குள்ளேயாவது ஒருநாழிகைப்போதாகிலும் ராமாநுஜதயாபாத்ரம் நடந்ததில்லை. ஸ்ரீசைலேசதயாபாத்ரமே யெப்போதும் நடந்துவருகிறது. கார்த்திகைமாஸத்திலே இந்த இரண்டுமாஸங்களிலும் த்ராவிடாம்நாயம் ஸேவிக்கக் கூடாமையாலே யதற்கு ப்ரத்யாம்நாயமாக மணவாளமாமுனிகளருளிச் செய்த உபதேசரத்நமாலையைக் கோவிலுக்குள்ளும் திருவீதிப்புறப்பாட்டுகளிலும் துடக்கத்திலுஞ் சாற்றிலும் ஸ்ரீசடகோபன்முதலான மர்யாதைகளுடன் அநுஸந்தித்து வருகிறார்கள்.

பெருமாள்கோவிலிலே விளக்கொளிகோவில் வேதாந்தாசார்யர் ஸந்நிதியில் பத்யநிமித்தமாக திருமலைதாதாசார்யர் ஆத்தான் ராமாநுஜ

ஜீயருக்கெழுதிக்கொடுத்த வுடம்படிச்சினையை ந்யாயாதிபதிகளான ப்ரபுக்கள் அனேக ப்ரகாரத்தாலே பரிசோதித்து, அதற்குவேண்டிய தகவல்களையும் லக்ஷணங்களையும் பரிசோதனம்பண்ணி, அத்தைமுதலாவது மெய்க்கொண்டு, மற்றும் ஸாதகங்களையுஞ் சோதித்துக்கொண்டு காஞ்சீபுரத்திலே பதினெட்டு கோயில்களுக் குள்ப்பட்ட விளக்கொளிகோவிலைச்சேர்ந்த வேதாந்தாசார்யர் ஸந்நிதியிலே ஸ்ரீசைலேசதயாபாத்ரமே சொல்லவேண்டுவதென்று தீர்ப்புபண்ணியிருக்கிறார்கள். அப்படி யெழுதிக்கொடுத்த வுடம்படிக்கை முதலிலேதானே கிழியுண்டுபோய்த்ததென்று சொல்லுகை மிகவுமஸங்கதம். அரசாணிபாலே வெங்கடாசார்யரைக் கையெழுத்து போடச்சொன்னதாயும் அதற்கு அவர் மாட்டோமென்றுசொல்லி பதி லுக்கு ஒரு ச்லோகஞ் சொன்னதாயும் சொல்லுகிறது மிகவுஞ் சோத்ய. அரசாணிபாலே வெங்கடாசார்யருக்கு அந்த வூரிலே யொருஸம்பந்தமு மில்லாமையாலே யவர் கையெழுத்தை யபேக்ஷிக்கவேண்டுவது அநுசிதம். ஆகையாலே யிப்பேர்ப்பட்ட அஸக்கதங்களை யிவிடத்திலே யெழுதிக்கார்யமில்லை. அவரை யுலகத்தார் விகடகோதஹராஸ்யகவியென்று எண்ணி அவர் ச்லோகத்தை யொருவரும் உண்மைக்குரித்தாகக் கொள்ளாதேதள்ளிவிட்டார்கள். இதுவல்லாமல் அவர்சொன்னதாக வெதிரிகளெழுதின ச்லோகத்திலே அறுதியாய் நடந்துவந்த ராமாநுஜதயாபாத்ரத்தனியனை அஸகபல்லி யாசார்யபண்டிதனென்கிறவர் நிவர்த்திப்பித்தாரென்றிருக்கவில்லை; பின்னை யழகியதாணவிந்தபத்யத்தை யிங்கேபுகுரவொட்டாமல்பண்ணினரென்று தாத்பர்யங்காணப்படுகிறது.

பக்திமாலையிருந்து தானிங்கிருக்கும் நாளெல்லாம் எம்பெருமானுக்கடிமைசெய்து தன்னுடைய தேஹாந்தத்திலும் அடிமைசெய்கிறதாக பாவனையாலே தன்னைப்போலே யொரு ப்ரதிமையைப்பண்ணி கோவில்களிலேவைத்து தார்ம்மிகராயிருப்பார் இறந்துபோவதுண்டு. திருமலையிலே கோபுரவாசலுக்குள்ளே க்ருஷ்ணராயனையும் அவர்பார்யைகள்:—திருமலை தேவி, ஜிந்நாதேவி, இருவரையும் ஒருபுருஷப்ரமாணமானமூன்று செப்பு ப்ரதிமைகளாகப்பண்ணிவைத்திருக்கிறது. அங்கேதானே சின்னதாக ஒரு அறைசட்டி தொண்டர் மல்லுவை செப்புத்தொடுப்பு ப்ரதிமையாகப் பண்ணிவைத்திருக்கிறது. மதுரையிலே கூடலழகர் கோவிலிலே மஹாமண்டபக் கம்பங்களிலே புருருவசக்ரவர்த்தியையும் கல்ப்ரதிமையாகப் பண்ணிவைத்திருக்கிறது. மதுரைதிருமலைநாயகனை ஸந்நிதிமுன்பே ஸேவித்தபாவனையாக கல்ப்ரதிமைபண்ணியிருக்கிறது. இப்படி விஷ்ணுஸ்தலங்களிலுஞ் சிவஸ்தலங்களிலும் தங்கள்தங்கள் பக்திக்குத் தகத்தாகத் தங்கள்தங்கள் ப்ரதிமைகளைத் தாங்களே வைத்துக்கொள்வதாகையாலே பகவானிடத்திலே மிகவும் பக்தியுடையவனுயிருந்த தொண்டர்மல்லுவும் தன்ப்ரதிமையைக் கோயில்திருமலைப்பெருமாள்கோவில் மூன்றிலும் வைத்துக்கொண்டாராகையாலே இது தென்கலையார் அவர் தயவுபெறு

கைக்காக அவர் ப்ரதிமையைப் பெருமாள்கோவிலிலே வைத்தார்க ளென்று எதிரிகள் சொல்லுகிறசொல், த்வேஷத்தாலே கல்பிதம். மதராந் தகத்திலே ஆதியாய் முறப்பாக்கம் திருமணியிலிருக்கும் முதலியாண் டான் திருவம்சஸ்தராகிய கந்தாடையாருக்கு ப்ரதமதீர்த்தம் முதலான மர்யாதைகளும் ப்ரபந்தத்துடக்கத்திலே ஸ்ரீசைலேசதயாபாத்ரம் நடந் துக்கொண்டுவந்தது. பின்பு என்பது ஸம்வத்ஸரத்திற்குமுன்னே அந்த அக்ரஹாரத்தார் மேலிட்டுக் கந்தாடையார் தீர்த்தத்தையும் ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தனியனையும் தள்ளிவித்து ராமாநுஜதயாபாத்ரத்தைச் சொல் லிக்கொண்டுவருகிறார்கள்.

முன்னுலே தேவப்பெருமாள் பெரும்பொங்கல்பாரிவேட்டைக்கு மாவலி புரமென்கிற திருக்கடன்மல்லைக்கு யெழுந்தருளிக்கொண்டிருப்பர். அப் பொழுது ஒருகாலத்திலே எழுந்தருள வதுகூலப்படாமற்போய்விட்டது. மேலெழுதிய கோவில்விசாரணை முத்ரையதிகாரஸ்தரா யிருக்கிற கோயி லழகியமணவாளஜீயர் ஆலோசனபண்ணி, காஞ்சீபுரத்திற்குஸமீபத்திலே யிருக்கிற பத்மகிரியென்கிற மலையின்மேலே திருமண்டபம் கட்டுவித்து, காஞ்சீபுரத்திலே சேர்ந்திருந்த உள்ளாவூரைச் செங்கற்பட்டிற்கு விடுவித்து செங்கற்பட்டைச்சேர்ந்திருந்த மேலெழுதிய மலைழ்க்ராமத்தைக் காஞ்சீ புரத்திலேசேர்த்துத்தம்முடையபெயராலேஜீயர்புரமென்று அதைப்பெரிய நகரமாக்கி மலையின்கீழிலே பெருமாள்கோவிலைப்பெருக்கப்பார்த்து அந்த பெருமாளுக்குத் திருவாராதநோத்ஸவாதிகளைக் குறைவற நடப்பித்துக் கொண்டு, பெரும்பொங்கலுக்கு பத்மகிரிமலையிலே தேவப்பெருமாளை யெழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டிருந்தார். அன்றுதுடங்கி பலரு நான்வரைக்கும் ஜீயர் புரத்துஸந்நிதியிலே ஸ்ரீசைலேசதயாபாத்ரம் நடந்து வந்தது. பின்பு சிலநாளிலே அந்த அக்ரஹாரத்தார் அதர்க்கணம்பண்ணி ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தைத் தள்ளிவித்து ராமாநுஜதயாபாத்ரத்தைச் சொல்லிக்கொண்டுவருகிறார்கள். அந்த ஜீயர் புரம்முக்யஸ்தலமல்லாமை யாலே தென்கலையாரும் பிழையாமல் விட்டுவிட்டார்கள்.

திருப்பார்க்கடல்(திருப்புட்குழிக்கு மேற்கேயிருக்கிறது)என்கிறவூர், சிவ னும் விஷ்ணுவுங் கலந்து வைஷ்ணவர்களுக்கு முக்யஸ்தலமல்லாமையாலே அங்கேராமாநுஜதயாபாத்ரம்நடந்தாலும் அதைநடத்தையாகக்கொள்ளப் போகாது. சோளமண்டலத்திலும் முற்காலத்திலே தரணீவராஹராஜாநாளி லும்பின்பு விஜயராகவநாயகன்நாளிலும், அதற்குப்பின்பு ஏகோஜீசாகோஜீ ப்ரதாபஸிம்மராஜா இவர்கள்நாளிலும் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் நடந்து வந்தது. பின்பு துளஜாராஜாநாளிலே அந்தராஜா விஷயாந்தரபரஞ்ஞ ராஜ்யதந்த்ரத்தைப் பராக்குபண்ணியிருந்தான். அப்போது டபீலென்கிற மராட்டிப்ராம்மணன்மந்த்ரியாயிருந்தான். அவனண்டையிலேயிருந்த அய்யா வையங்காரென்கிற ஒருவடகலைவைஷ்ணவர் ராமாநுஜதயாபாத்ரமென்

கிற வழக்கைத்தொடுத்துவித்து டபீலண்டையிலே நிர்ப்பாதிறதொழு முறட்டுத்தனமாய் வாதியினுடைய பேருக்கும் நிசையினுடையபேருக்கும் ஸம்பந்தத்தை யொட்டிக் ''கோவில்களிலே வடகலையார் வடதிசையிலிருந்துக்கொண்டு தங்கள் மந்த்ரத்தைச் சொல்லுவது. தென்கலையார் தென்றிசையிலிருந்து தங்கள் மந்திரத்தைச் சொல்லுகிறது'' என்று நிர்ப்புபண்ணிவித்தார். அது இரண்டிலுமொன்று கோவில்களிலேமாத்ரம் நடந்து வருகிறது.

மேலைக்கோட்டைத் திருநாராயணபுரத்திலே ஸ்ரீதர்மபாபுரத்திலேயிலே ''ஸ்ரீசைலேசதயாபாத்ரமென்கிற பழையமந்த்ரம் மாத்ரந் சொல்லிப் பூர்ணாத்ஸவம் நடப்பிக்கவேண்டியது; ராமானுஜதயாபாத்ரமென்கிற புதுமந்த்ரத்தைச்சொல்லவேண்டாவென்று'' பரமாணைபிறந்து டபுரத்திலேயும் அப்படியேநடந்துவந்து. பூர்ணையன் அதிகாரத்திலும் அப்படியேநடந்துவந்தது. பின்பு வடகலையார்தாங்களே வேதாந்தாசார்யர் விக்ரஹத்தைக் குளத்திலே கீரிலே யமிழ்த்திவைத்துத் தென்கலையாரிடத்திலே பழியேறிட்டுவைத்து ராஜாவுக்கு மாறுபாடாகச் சொல்லித் தென்கலையாரைக் கோவிலுக்குள்ளே விடாமற்போனார்கள். பின்பு ராஜா விசாரிக்கலிலே நன்றாகப் பரிசோதனைபண்ணி விசாரிக்குமிடத்தில் வடகலையார் தாங்களேசெய்து தென்கலையாரிடத்திலே பழியிட்டார்களென்று உண்மையையறிந்துகொண்டு வடகலையார் நாமத்தைக்குறித்துப் பிழைத்தவழக்கு அநீதமென்று எண்ணிக்கொண்டு தென்கலையார் எப்போதும்போலே கோவிலுக்குவரும்படி திட்டம்பண்ணினார்.

மூன்றலே திருச்சிறைப்பள்ளியிலே சொக்கநாத நாயகனென்கிறவன் ராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தான். அவன் சைவன். மதுரை சொக்கநாதர்பெயரை யிட்டுக்கொண்டு சிலபக்தனாயிருந்தான். விஜயராகவநாயகன் தஞ்சைநகரிலே ராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தான். அவன் வைஷ்ணவனாய் விஷ்ணுபக்தனாயிருப்பன். அவன் தஞ்சைநகரிலே உயர்ந்த மேடைகட்டி அதிலேயேறி ஸ்ரீரங்க விமானத்தை தர்சித்து பின்பு போஜனம் பண்ணிக்கொண்டிருப்பன். இப்படி இருக்கச்செய்தே ஒருநாள் ராத்ரி சொக்கநாதநாயக்கன் ஒரு ஸ்வப்நங்கண்டான். என்னவெனில்:— தான் ரங்கநாதனை ஸேவிப்பதற்குப் போனதாகவும் அங்கே த்வாரபாலகன் உள்ளே போகவொட்டாமல் தடைசெய்ததாகவும், அதெதுக்கென்று கேழ்க்க, விஜயராகவநாயகன் உள்ளேபோயிருக்கிறானென்று அவர்கள் சொன்னதாகவும், ஆகில் நானுமுள்ளே போகலாகாதாவென்றுகேழ்க்க, நீ சக்ராங்கனம் பண்ணிக்கொள்ளாதபடியாலே போகக் கூடாதென்று சொன்னதாகவும் ஸ்வப்நங்கண்டு, விழித்துக்கொண்டு வெழுந்தபின்பு சக்ராங்கனம் பண்ணிக்கொள்ளவேணுமென்று விசாரித்து பரிசுத்தமாய் நுக்யராயிருக்கிற ரங்காசார்ய ரிடத்திலே சக்ராங்கனம்பெற்று முன்புபோல முதலியாண்டானுக்கு நடத்துவைத்து கோவில்விசாரகர் முத்தையையும்

தீர்த்தத்தையும் பட்டர் ஸந்ததியாரோ டொப்பந்தம் நடத்தும்படி சிலவு கொடுத்தான். பின்பு ரங்காசார்யரும் அதுகளைப்பெற்று முன்னிலை தங்கள் கூடஸ்தராகிய சாற்றுக்கந்தாடையாருக்கு நடந்துவந்த அத்யாபகம் சாற்றுமுறை ஸ்வதந்த்ரம் முதலானவற்றை ஸ்தாபித்துக்கொண்டார். மற்றப்படி புதியதாகவொன்று மவர்செய்ததில்லை. சொக்கநாதநாயகனும் ரங்காசார்யரிடத்தில் சக்ராங்கணம்பெற்று ரங்கநாதனிடத்திலே மிகவும் பக்தியுடையவனாய் அத்தாலே விஜயரங்கசொக்கநாதநாயகனென்றுபெயர் பெற்றான். இப்படியிருக்க, விஜயரங்க சொக்கநாதநாயக்கன் தாதாசார்யர் சிஷ்யனையிருந்து ரங்காசார்யரிடத்திலே சக்ராங்கணம் பெற்றானென்றும், அந்தபலத்தாலே ரங்காசார்யர் கோயிலிலே சிறிது புதுசட்டங்கள் பண்ணினானென்றுஞ் சொல்வது கல்பிதமென்று கொள்ளவேணும். இப்படியே யெதிரிகள் ஒன்றிருக்க ஒன்று மாறுபாடா யெழுதியிருக்கிறார்கள். அதை நன்றாகப் பரிசோதிக்குமிடத்தில் மனதிற்கு விசதமாகும்.

இனி கோயில்முதலாகிய நூற்றெட்டு திருப்பதிகளிலும் ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் நடக்கிறவிவரம் எழுதுகிறது. "ஸ்ரீரங்கத்திலே ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தை அரையர் என்னத்திற்காகச் சொல்லவில்லை" யென்கிற ஆக்ஷேபம் ஸ்ரீவைஷ்ணவர்களுடையநடத்தையறியாதவர்களுடைய தூரா க்ஷேபம். என்னவென்றால்:—அரையர்களாவார் ஆழ்வார்களென்றே பாவனையாய் ஆழ்வார்கள் பாடுகிறபாவனையாலே அரையர்கள் த்ரவிடப்ரபந்தங்களைப் பாடுகிறதாயிருக்கும். ஆழ்வார்கள் த்ராவிடவேதம் பாடுகிறபோது தங்களைத் தாங்களே வந்தனஞ்செய்துக்கொள்ளக் கூடாதாகையாலும், தங்கள் சிஷ்யரான காதழுஞ்சிமுதலானவர்களைத் தாங்கள் வந்தனஞ்செய்யக் கூடாமையாலும், ஒருதனியன்களும் ஆழ்வார்கள் சொல்லக்கூடாதாப்போலே, ஆழ்வார்களாகவே பாவனைபெற்றிருக்கிற வரையர்களும் அந்த ஆழ்வார்களைப்போலவே ப்ரபந்தம் பாடுகிறபோது ஒருதனியன்களுஞ் சொல்லுகிறதில்லை. அரையரல்லாத மற்றைப்பேர்கள் ஆழ்வார்களாக பாவனைபெற்றிராமையாலும் ஆழ்வார்களுடைய சிஷ்யராய்க்கொண்டு அநுஸந்திக்கையாலும் த்ரவிடவேதங்களை யருளிச்செய்த வாழ்வார்களையும், வைகளைப்ரவசநஞ்செய்த வாசார்யர்களையும், ப்ரபந்தாரம்பத்திலே வந்தநஞ்செய்யவேண்டுகையாலும் ஆழ்வார்கள் தனியன்களையும் ஆசார்யர்கள் தனியன்களையும் ப்ரபந்தாரம்பத்திலே யநுஸந்திக்கவேணும். ஆகையாலே ஸ்ரீரங்கத்திலே அரையர்கள் ப்ரபந்தம் ஸேவிக்கும்போது மற்றத் தனியன்களொன்று மில்லாதாப்போலே ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தனியனுமில்லை. அரையரல்லாத மற்றவமுதனார் வம்சஸ்தர்கள் பெரியபெருமாள் ஸந்நிதிக்குள்ளே இயற்பாப்ரபந்தம் தொடங்கும்போது ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தனியன்முன்பாக இன்றுவரைக்கும் ஸேவித்துக்கொண்டு வருகிறார்கள். இப்படி. யியற்பாசாற்றிலே யிரண்டுதரம் ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தனியனை அமுதனார் முகமாகப்பெருமாள் திருச்செவிசாற்றி யருளுகிறார். கார்த்

திகை மாலைத்திலே கைசிகபுராண ஸ்ரவணத்திலே யுகாதிசேமஷ ஸெய்ராக் திலில் பஞ்சாங்க ஸ்ரவணத்திலும் பட்டர் திருவம்சன்தர்முகமாச ஸ்ரீவைச லேச தயாபாத்ரத் தனியனைப் பேருமான் கேட்டருளுகிறார். ஆகையாலே ஸ்ரீரங்கத்திலே அரையர் ஸேவையிலே ஸ்ரீவைஷ்லேச தயாபாத்ரத் தனியனை யநுஸந்திக்கவில்லை. யென்கிற வாசேஷபம் தராசேஷபமென்று கொள்ள வேணும். ஆகத் தமிழ்பாஷை நடையாடுகிற பாண்ட்ய மண்டலத்திலுள்ள டான திருப்பதிகளிலும் புராணஸ்தலங்களிலும் அபிமான ஸ்தலக்களிலும் திருக்குருங்குடி தொடங்கி யெங்கும் ஸ்ரீவைஷ்லேச தயாபாத்ரத் தனியனை நட த்துவருகிறது. மலையாளத்திலே திருவண்பரிசாரமென்கிற திருப்பதியிலே திருவாழ்மார்பனென்கிற வெம்பெருமானுக்கு நம்பூரிமார் திருவாராதனம் பண்ணிக்கொண்டிருந்தாலும் தென்கலை திருமண்காப்புசாத்தி யிருக்கிறது. பாண்ட்யமண்டலத்திலும் மேலழுதிய விடங்களிலெல்லாம் தென்கலைத் திருமண்காப்பேசாத்தியிருக்கிறது.

சோள மண்டலத்தில் ஸ்ரீரங்கம்முதல் திருக்கூடம்வரைக்கும் உள்ள டான திருப்பதிகளிலும் புராணஸ்தலக்களிலும் அபிமானஸ்தலங்களிலும் ஸ்ரீவைஷ்லேசதயாபாத்ரத்தனியனும் தென்கலைத்திருமண்காப்பும் நடந்துவரு கிறது. நாலைந்து ஸ்தலங்களிலேமாத்ரம் சிறிதுகாலமாய் பலத்திருஷ்டி ஸ்ரீவை ஷ்லேச தயாபாத்ரத் தனியனையுங் கூடச்சொல்லிக்கொண்டு சிறிய வடகலைத் திருமண்ணும் வைத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு ந்யாயவிரோதமும் சாஸ்த்ரவிரோதமுமுண்டு. நடுமண்டலத்திலும் திருக்கோவலூர், ஸ்ரீமுஷ்ண முதலானஸ்தலங்களிலும் ஸ்ரீவைஷ்லேசதாயாபாத்ரத்தனியனும் தென்கலைத்திருமண்காப்பும் நடந்துவருகிறது. திருவஹீந்த்ரபுரத்திலே மாத்ரம் காற்பதுவருஷத் தொடங்கி ராமாநுஜதயாபாத்ரமும் வடகலைத்திருமண்ணும் வடகலையார்பலத்தாலே நடப்பித்துக்கொண்டு வருகிறார்கள். அத்தக்கோவில் அஷ்டாக்ஷரத்தாருடைய திர்த்தமாகையாலே யென்றைக்கும் தென்கலைக்கோவிலாயிருக்கும்.

தொண்டமண்டலத்திலும் பெருமாள்கோவில் முதல் திருமலைவரைக்கு முண்டான திருப்பதிகளிலும் புராணஸ்தலங்களிலும் அபிமானஸ்தலங்களிலும் ஸ்ரீவைஷ்லேச தயாபாத்ரத் தனியனும் தென்கலைத் திருமண்காப்பும் நடந்துவருகிறது. ஒன்றிரண்டிடங்களில் சிறிதுகாலமாய் அத்தனையும் நடப்பித்துக்கொண்டுவருகிறார்கள். வடகாட்டிலும் அஹோபிலம், பத்ரகிரி, மங்களகிரி, லிம்மாத்ரி, ஸ்ரீகாகோலம், தர்மபுரி, ராமத்ர்த்தம். ஸ்ரீகூர்மம், ஸ்ரீஜகந்நாதத்திலே ராமாநுஜமடம், முதலான விடங்களிலே ஸ்ரீவைஷ்லேசதயாபாத்ரமும் தென்கலைத் திருமண்காப்பும் நடந்துவருகிறது. மேல்காட்டிலும் மத்தூர், மழவூர், மாகடி, தொண்டனூர், மிதிலை சாலிக் கிராமம், சாளக்ராமம், திருநாராயணபுரம்முதலான விடங்களிலே ஸ்ரீவைஷ்லேச தயாபாத்ரத் தனியனும் தென்கலைத் திருமண்காப்பும் நடந்து வருகிறது. ஆகவிப்படி தமிழ்நாடையாகிற பூமண்டலமெங்கும் ஸ்ரீவைச

லேசதயாபாத்ரத் தனியனும் தென்கலைத்திருமண்காப்பும் அதுதியாக இன்றுவரைக்கும் நடந்துவருகிறது. வடகலையார் இத்தைதப் பொருக்க மாட்டாமல் புதியதாக விச்வாமித்ரஸ்ருஷ்டிபண்ணி சிறிதிடங்களிலே தர்வழக்குத் தொடுத்து பின்பு மஹாப்ரபுக்கள் விசாரணைபண்ணுமிடத்தில் உள்ளதுவிளங்குகிறபடியாலே வடகலையார் வழக்குத் தோற்றுப் போய் பங்கப்பட்டிவருகிறார்கள். இப்படியிருக்கச்செய்தேயும் அவர்கள் தர்வழக்கை விடுகிறதில்லை.

திருக்குறுக்கைப்பிரான் பிள்ளையுடைய வபிப்ராயத்தை யநுஸரித்துக்கொண்டு உபதேச பரம்பரையாலே பெற்ற ரஹஸ்யார்த்தங்களிலே பிள்ளைலோகாசார்யர் ப்ரதிபாதித்த பதினெட்டர்த்தங்களுக்கும் மாறுபாடாக வேதாந்தாசார்யர் சிலவர்த்தங்கள் சொன்னபடியாலே, நம்பெருமாள் திருமுன்பே அதற்காக ஆசார்யஹ்ருதய ப்ரபந்தமுண்டாகையாலே, ஆசார்ய ஹ்ருதய க்ரந்தத்தாலே வேதாந்தாசார்யர் சொன்னவர்த்தங்கள் கண்டதங்களாய்ப்போய், பிள்ளைலோகாசார்யர் வெளிப்படுத்தின பதினெட்டர்த்தங்களும் நிலைநின்றது. பின்பு வேதாந்தாசார்யரும் தாம் ப்ரதிஜ்ஞைபண்ணின ப்ரகாரம் நம்பெருமாள் ஸன்னதியை விட்டழகியசிங்கர் ஸன்னிதாரமாக மேலே யெழுதப்பட்டது.

இனி ஆசாரதேசதங்களுக்கு ப்ரமாதானம் எழுதப்படுகிறது. அதில் (க) வது:—யாகாதிகள்பண்ணுவிலாழிய ப்ரம்மஜ்ஞானமில்லையென்று வேதம்விதிக்கிறபடியாலே யாகாதிகள் பண்ணிக்கொண்டு வருகிறோமென்றிப்படி சிலவடகலையார்சொல்லுகிறது வேதவிதியுண்மை தெரியாமையாலே. அதெப்படியென்றால்:—அகரணப்ரத்யவாயவிதியும், கரணே அதிசயவிதியுமென்றுவிதி யிரண்டு படிப்பட்டிருக்கும். முதலாவது ஸந்த்யாவந்தனாவித்யாதி விதி. இரண்டாவது பசுயாகாதிவிதி. ஆனையால் யாகம்பண்ணுவிட்டாலும் அதிசயம் லபியாவிட்டாலும் ப்ராம்மண்யத்திற்குக் குற்றமில்லாமையாலே, யாகம்பண்ணுவிலாழிய ப்ராம்மணனல்லனென்று சொல்லுமது வேதவிதியுண்மை தெரியாதவன்போச்சு. யாகம்பண்ணுகிறவர்கள் ஒருவரிருவரொழிந்த மற்றெல்லாப்ராம்மணரும் ப்ராம்மணரன்றிக் கேயாகவேண்டிவரும். வேதாந்தாசார்யரும் யாகம்பண்ணுமையாலே அவருக்கு ப்ராம்மண்யமில்லாமற்போக வேண்டிவரும். வடகலையார் பண்ணின ஸ்மருதிரத்நாகரமென்கிற க்ரந்தத்திலே "யஜ்ஞம்பண்ணவேணுமாம்; ஆசாரமே பண்ணவேணுமா" என்று சொல்லிவிருக்கிறது. வைஷ்ணவாதிகாரிக்குக் கர்மயோகமாகாதென்று வேதாந்தாசார்யரும் சொன்னதையாலே வடகலையார் சிலர் கர்மயோகம்பண்ணுகிறதுங்கூடாது. இப்படி இன்னமுமநேகபரிசாரமுண்டு. (உ) வது:—புருஷன்போனபிற்பாடு ஸ்த்ரைகள் தலைமயிர் சிரைப்பான் பண்ணிக்கொண்டுவருவதில் ப்ரமாணமென்றவர்கள் சொன்னபடி "ஸ்ரீவானமாமலையாண்டான்" என்கிறவடத்திற்கு "மயிரிருப்பதற்கு காரணமென்

ஸைன கரயேத்” என்றும், “முமுக்ஷுயக்தி நாத ஸ்யாவஹஸ்துநிஷித்யதே” என்றுந் சொல்லுகிறவசனங்கள் விசேஷவசநங்களாய் அபவாதகமானையாலே வைஷ்ணவஸ்திதனைகளுக்கு கூஷவரங்கூடாதென்று வடகலையான வைகுண்ட தீக்ஷிதர்பண்ணின ஆசாரக்ரந்தத்திலே சொல்லுகையாலே கூஷவரம்பண்ண வேணுமென்று சொல்லுகிறது தம்முடைய க்ரந்தத்தைப்பாராமல்சொல்லுகிறது. இப்படி இன்னமுமனேக பரிஹாரங்களுண்டு. (ங) வது:— பாஷ்யகாரர் பண்ணின நித்யாராதந க்ரந்தத்திலேயும், நடாதூரம்மாள்செய்த நித்யாராதந க்ரந்தத்திலும், ஸ்மிருதி ரத்நாகரமென்கிற வடகலை க்ரந்தத்திலும் க்ரஹாராதநத்திலே கண்டைசொல்லாமையாலே கண்டையில்லாமலுங் க்ரஹாராதநங் கூடும். வலதுகையாலே திருவாராதநம் பண்ணும்போது இடதுகையாலே மணியடிப்பதற்கு வசமில்லாமையாலே அதுதுராசாரம். (ச) வது:-ப்ராம்மண ஸமுதாயத்திற்கு பஞ்சயஜ்ஞம்விதித்திருக்கிறது. ஆகிலும்வைஷ்ணவாதிகாரிக்குப்ராயச்சித்தகர்மமான பஞ்சயஜ்ஞங் கூடாதென்று வசநமுண்டு. அந்த பஞ்சயஜ்ஞஸ்தாநத்திலே ஹார்யர்ச்சநம் பண்ணச்சொல்லி பரத்வாஜஸம்ஹிதையிலே சொல்லியிருக்கையாலே பகவதாராதநம் பஞ்சயஜ்ஞஸ்தாநத்திலே யாகும். (ரு) வது:—பாஷ்யகாரர்பண்ணின நித்யக்ரந்தத்திலே பகவந் நிவேதிதந்திற்குச் சிலவுசொல்லுகிறவகுப்பிலே வைச்வதேவம் பண்ணவேண்டுவதில்லையென்று நிர்ணயப்படிகையாலும், வைஷ்ணவாதிகாரி வைச்வதேவம் பண்ணக்கூடாதென்று ப்ரமாணங்களிருக்கையாலும், வைச்வதேவம் பண்ணவேண்டுவதில்லை. இன்னுமிப்படி. யனேகபரிஹாரங்களுண்டு. (சு) வது:-தன்னையொழிந்த பாகவதர்களெல்லாருந் தனக்கு ஸ்வாமிகளாகையாலே தன்னையொழிந்த பெரியோர்களுடைய பாததீர்த்தங்களைத் தான் கொள்ளுகிறது விஹிதமாக, ஸாளக்ராமங்கள்போலே எல்லாரும் ஸமமென்கிறநினைவு தென்கலையார் ஸித்தாந்த மல்லாமையாலே அத்தையவர்கள் ஸித்தாந்தமாகச் சொல்லுகைக் கல்பனைச்சொல்லாயிருக்கும். (எ) வது:-வேதம் முதல்ப்ரமாணம், த்ரவிடவேதம் இரண்டாவது ப்ரமாணமென்றுசொல்லுகிறவிதுவும் ஸ்வமதபரமதங்களை யறியாமையாலே சொல்லுகிறது. அதெங்ஙனே யென்னில்:—ஸம்ஸ்க்ருதவேதமென்றும் த்ரவிட வேதமென்று மிரண்டும் வேதமேயென்றும், வேதாதிகாரிகளான நாமும் ஸமஸ்க்ருதவேதங்களிற்றெளியாத பொருள்நிலைகளை த்ரவிடவேதங்களிற் றெளிந்தாராகவும், வேதாந்தாசார்யர் சொல்லுகையாலே, த்ரவிடவேதம் முக்யமென்று அவர்கள் சொல்லுகையாலே அத்தை யிரண்டாவது ப்ரமாணமென்று சொல்லுகிறது ஸ்வமதந் தெரியாமையாலன்றே ? (அ) வது:-எம்பெருமானுடைய விரண்டு பாதங்கள்போலே திருமண்காப்பிடவேணும்; அதற்காஸ்தமாகப் பாதமிடவேணுமென்று வேதஞ்சொல்லுகையாலே முகம் முதலாகிய பனிரண்டிடங்களிலும் ஆஸ்தமான பாதத்தோடே திருமண்காப்பணிந்துக் கொள்ளுகிறார்கள். அதிலே தெற்றியிலே காஸிகாமூலம் துவ்வணியதாகையாலே பாதம் நுண்ணியதாயிருக்கும்;

வயிறு மூதலாகியவிடங்கள் பரந்திருக்கையாலே பாதங்களும் பரந்திருக்கும். ஆகையால் பனிரண்டு திருநாமங்களும் பாதங்களுடனே கூடியேயிருக்கும். அதிலே சிலபொட்டுகள் தன்னடையேயவருமதொழிய அவை சாஸ்த்ரமூலகமாக இடுமவைகளல்ல. இன்னுமிதற்குச் சொல்லவேண்டுவ தண்டு. (கூ) வது:—வைஷ்ணவாதிகாரிக்கு ஏகாதசியிலே ஸ்ராத்தம்பண்ணக்கூடாதென்று பல ப்ரமாணங்களிருக்கையாலும், ஸ்மார்த்த க்ரந்தங்களிலுமப்படி நிர்ணயம்பண்ணியிருக்கையாலும், வைஷ்ணவனுக்கு, உபவாஸதினத்திலே பண்ணத்தக்க ஸ்ராத்தம் பாரணதினத்திலே பண்ணவேண்டும். அப்படியே பண்ணிக்கொண்டு வருகிறார்கள். இப்படியிருக்க உபவாஸதினத்திலே தென்கலையார் தாம்பூலம்போடுகிறார்களென்கிறசொல்லுபொய்யன்றிமெய்யாமோ? எவரேனுமொருமூர்க்கனப்படிசெய்கிறது ஸித்தாந்தமன்றே! மூர்க்கனுடையசெயல்ஸித்தாந்தமாகில்வடகலையாரிலேயொருமூர்க்கன் ஸ்ராத்ததினத்தில்வேச்யாகமம்பண்ணுகிறதும் ஸித்தாந்தமாமே! ஆகையால் உபவாஸதினத்திலேவந்த ஸ்ராத்தம் பாரணதினத்திலே பண்ணிக்கொண்டு வருகிறதே முக்யம். இதற்கின்னுஞ் சொல்வதற்க தனேகமுண்டு. (கo) வது:-ஸ்நாநமும் மற்றையநுஷ்டானங்களும் பகவத் கைங்கர்யமாகவும், உலோகரக்ஷணையழியாமைக்காகவும், பண்ணவேணுமென்று இரண்டு ஸம்ப்ரதாயங்களிலு மிருக்கையாலும் "ஸ்நாநம் ஆத்மசுத்யர்த்தம்; தேஹசுத்யர்த்தம்;" என்று வகையிட்டுச்சொல்லுகையும், மற்றைப்பேர் தங்களை ப்ராம்மணனென்றென்னுவதற்காகப் பண்ணுகிறார்களென்று சொல்லுகையும், ஸ்வமதபரமதங்களை யறியாமையாலே சொல்லுகிறது. (கக) வது. ஸமூத்ரஸ்நாநம், காம்யஸ்நாநமென்று வடகலையார்பண்ணின க்ரந்தத்திலே யிருக்கையாலே ப்ரபன்னனுக்கு ஸமூத்ரஸ்நாநம் பண்ணக்கூடாது. ஸ்நாநம்பலவிதம். அதிலே:—நித்யஸ்நாநம் நைமித்திகஸ்நாநம் ப்ரபந்நனுக்கு வேண்டுவது. காம்யஸ்நாநம் வேண்டாவென்று ஸித்தாந்தம். (கஉ)வது. கங்காஸ்நாநம் பண்ணுவிடில் ப்ரத்யவாயமுண்டென்று விதியாமையாலே கங்காஸ்நாநம் நித்யஸ்நாநமன்று. கங்காஸ்நாநம் ஸம்பவித்தாலத்தைத் தவிரவுங்கூடாது. அது ஸம்பவியாவிடில் ப்ரத்யவாயமுமில்லை. ஆகையால் ஸம்பவித்தவிடத்தில்லை தென்கலையாரும் ஸ்நாநம்பண்ணுகிறதுமுண்டு. ஸம்பவியாவிட்டால் வடகலையாரும் தங்களை கங்காஸ்நாநமில்லாமையாலே பதிதராகக் கொள்ளுகிறதுமில்லை. ஆகையால் கங்காஸ்நாநம் விதிப்ரகாரம் பண்ணுகிறோமென்கிற சொல்லும் ஸித்தாந்தத்தெரியாமையாலே சொல்லுகிறது. (கஉ) வது:-எச்சிற்றின்ற வரைக்கும், பிள்ளைப்பெற்றவரைக்கும், மற்றுந்தின்றதகாதனைத் தின்ற வர்சரைக்கும், தவக்கைப்பற்றியும் என்பைப்பற்றியும் தேகத்திலே சுடக்கிற வரைக்கு ப்ராயச்சித்தமாகப் பஞ்சகவ்யத்தை சாஸ்த்ரஞ் சொல்லிற்றுகையாலே, ஆத்மசுத்யர்த்தமாகப் பஞ்சகவ்யங் கொள்ளுகிறோமென்கிற சொல்லு சாஸ்த்ரந்தெரிந்தவர்கள் சொல்லல்ல. அந்த பஞ்சகவ்யத்திலும் மேற்பட்டதாக பாகவத ஸ்ரீபாததீர்த்தத்தைச் சாஸ்த்ரம்

விதித்தபடியிருலே பஞ்சகன்யம் வேறுமென்கிற நியமமுமில்லை. (கசு) வது:-ஆழ்வார்களும், பாஷ்யகாரர்முதலான பூர்வாசார்யர்களும் அபிகவத சாவதாரமென்று புராணங்கள் சொல்லுகின்றனவென்று வேதாந்தாசார் யருங் கொள்ளுகையாலே ராமக்ருஷ்ணவதாரங்களுக்கு நிவேதநம்பண்ண வண்ணத்தை ச்ராத்ததத்திற்குக் கொடுத்தால் குற்றமில்லாதாப்போலே பகவதவதாரமான வாழ்வார்களுக்கும் பூர்வாசார்யர்களுக்கும் நிவேதநம் பண்ணின வண்ணத்தை ச்ராத்ததத்திற்குக்கொடுத்தால் குற்றமில்லை. ஆழ் வார்களுக்கு நிவேதனம்பண்ணின வண்ணத்தை ச்ராத்ததத்திற்குக் கொடு க்கலாகாதென்று நிஷேதசாஸ்த்ர மில்லாமையாலே ஆழ்வார்களுக்கு நிவேதநம்பண்ணின வண்ணத்தை ச்ராத்ததத்திற்குக் கொடுத்தால் ஒரு குற்றமில்லை. ஸ்ராத்ததத்திலே பித்ருக்கள் புஜித்த போஜனபாத்ரத்தி லிரு ந்த உச்சிஷ்டத்தை யவைஷ்ணவசூத்ரணுக்கும் ஸ்த்ரீபாலாதிகளுக்குங் கொடுக்கலாகாதென்று சாஸ்த்ரஞ் சொல்லுகையாலே, மற்றுக்கழிக்கத் தக்க சேஷத்தைவைஷ்ணவ ஸூத்ரணுக்குக்கொடுத்தாலும் குற்றமில்லை. அப்படி கொடுப்பதுமில்லை.

வடகலையா ரெழுதிவைத்ததில் அநேகம் மாறுபாடுகளிருக்கின்றன. என்னவென்றால்:—நம்மாழ்வார் பாதுகாவதாரமென்று புராணங்களிற் சொல்லுமையாலே அவரைப் பாதுகாவதாரமென்றெழுதியது மாறுபாடு. ஆண்டாள் பூமிதேவியம்சமென்று புராணங்கள் சொல்லியிருக்கையாலே லக்ஷ்மீ அம்சமென்றெழுதியது மாறுபாடு. திருமங்கையாழ்வாருடைய வழிபறிப்பு முதலானது புண்யங்களென்றும் ஸ்ரீரங்கநாதருடைய அழகை யழகியாலே திருக்குருங்குடியிலேபோய் நிஷ்கிஞ்சனாப்போலே ச்வாஸ்ரீரா தநம்பண்ணி திருமேனியைவிட்டித் திருநாட்டிற் கெழுந்தருளினாரென்று புராணத்திலிருக்க, அவருடையவழி பறிப்புமுதலானசெயல்கள் பாபங்க ளென்றும், அந்தபாபபரிகாரத்திற்காக நாவதாரத்தோளில் கட்டிவைத்தா ரென்றும், அரங்கநாதன் கோபம்பண்ணினபடியாலே ஸ்ரீரங்கத்தைவிட் டுப் போனாரென்றும், மைத்துனன்பிள்ளை கையாலே தலையறுப்புண்டி போனாரென்றும், எழுதினது மாறுபாடு. ஆளவந்தாருடைய சிஷ்யரான பெரியதிருமலைநம்பியுடைய உடன்பிறந்தார்களுடைய குமாரர்கள் பாஷ்ய காரரும் எம்பாருமென்று க்ரந்தங்களிலே சொல்லியிருக்கையாலே பெரிய திருமலைநம்பியுடைய பெண்கள் குமாரர்சன் பாஷ்யகாரரு மெம்பாரு மென்ன் றெழுதியது மாறுபாடு. மந்த்ரோபதேசம் பெற்றபின்பு மந்த்ரோபதேசம் பண்ணின வாசார்யருடையபெண்ணை சிஷ்யன் விவாஹம் பண்ணக்கூடா தென்று சாஸ்த்ரஞ் சொல்லுகிறபடியாலே ஆஸூரி கேசவப்பெருமாளுங் கமலநயனப்பட்டரும் பெரிய திருமலைநம்பி ஸந்நிதியில் பருஞ்ஸம்பந்தம் பெற்று சிஷ்யராணபின்பு பெரிய திருமலைநம்பியினுடைய பெண்களை யா ஸூரிகேசவப்பெருமாளுங்கமலநயனபட்டரும் விவாஹம்பண்ணிக்கொண் டார்க ளென்றெழுதியது மாறுபாடு. பாஷ்யகாரர் அவதரித்த காழிலை

மூதல் அவர் திருநாட்டிற்கெழுந்தருளினை நாழிகையளவாக இந்தலோகத்தி லே கலிபுருஷன் நஷ்டமுய்ப்போய்க்ருதயுகமாயிருக்குமென்று நம்மாழ் வார்திருவாய்மொழியிலேவெளியிட்டு அப்படியேகடந்திருக்க, பாஷ்யகார ரொதிசே கலிபுருஷன்வந்து நின்றுவார்த்தைதசான்றனென்று எழுதினது மாறுபாடு.

சுசும்பட்டனென்பா னெருவனுண்டென்று சுருபரம் பராப்ரபாவம் மூதலாகிய க்ரந்தங்களிலே ஒன்றிலுந் சொல்லியிராமையாலே, சுசும் பட்டனென்றொருவ னுண்டென்றும் அவனுக்குப் பெண்களிருவருண் டென்று மெழுதியது மாறுபாடு. பட்டருடைய விரக்தியும், க்ருஹம் மூத லான கல்யாணகுணங்களும், அவருடைய புண்யசரிதங்களும், உபயலம் ப்ரதாயஸ்தருக்கும் ஒப்புதலாயிருக்கிற படியாலே பட்டாவிஷயத்திலே யெழுதிய தூஷணங்கள் மிகவும்மாறுபாடு.

இப்படி பொதுமையாயிருக்கப்பட்ட வர்த்தங்களிலே வடகலையார் மாறுபாடுகள் பலவுங்கல்பித்து எழுதிவித்தபடியாலே, பிள்ளை லோகாசார் யர் விஷயத்திலும் பெரியஜீயர்விஷயித்திலும் அவர்களெழுதிவித்த தூஷ ணங்கள் மிகவும் மாறுபாடாயிருப்பது ஸத்யமென்று நினைக்கவேணும். பிள்ளை லோகாசார்யருக்கும் வேதாந்தாசார்யருக்கும் பதசமலவிஷயத்தி லும் பாதுகாவிஷயத்திலும் கவிசொல்லுகிறதில் ஒருவர்க்கொருவர் கலஹப்பட்டு ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டு ச்லோகங்கள் சொல்லுமிடத் தில் வேதாந்தாசார்யர்மாத்ரம் ஆயிரமும் மூடித்தார்; பிள்ளை லோகா சார்யர் மூடிக்கமாட்டாதே போனதொன்றுயெழுதியது மிகவும் மாறு பாடு. ஸ்ரீரங்கத்திலே ஐந்தாம்பேரான செல்வருடையபுறப்பாட்டை, நம்பிள்ளை திருவோலக்கங் கூட்டங்கலையாமைக்காக பெரியபெருமாளே நம்பிள்ளைகாளிலே நிறுத்திப்புகட்டாரென்று லோகப்ரஸித்தமா யிருக்க, விஜயரங்கசொக்கநாயக்கன் தாதாசார்யரிடத்தில் த்வேஷத்தாலே ஐந் தாம்பேரத்திற்று நித்யோத்ஸவ மில்லாமல் நிறுத்திப்புகட்டானென்று எழுதினது மாறுபாடு. இப்படியே வடகலையாரெழுதிவித்த தங்கள் மத தூஷணமும் இல்லாதவதிசயத்தைக் கல்பித்தெழுவித்தார்களென்றுநினை க்கத்தக்கது.

பாஷ்யகார ஸம்ப்ரதாயஸ்தரனைவருக்கும் நித்யமாக வநுஸந்திக்கத் தக்கதான குருபரம்பராவாக்யம் பதிமூன்றிலே முதல்மூன்று வாக்யம் ச்ருதிவாக்யமாயிருக்கும். மேல் பத்துவாக்யக்களும் பாஷ்யகார் நிய மனத்தாலே பாஷ்யகார சரணரவிந்தமென்று பெயர்பெற்றிருக்கிற கூரத்தாழ்வான் செய்ததாயிருக்கும். இப்படியிருக்க இந்த பதிமூன்று வாக்யத்தின் நடுவே வேதாந்தாசார்யர் விஷயமான வாக்யத்தை தூஷ மாகக் கல்பித்து வடகலையார்கூட்டி யநுஸந்திக்கிறது அநுசிதம்.

ஈகஉ

பழநடை விளக்கம்.

இப்படி யாழ்வார்கள் சரிதங்கள்முதல் இதிலே யெழுதினவைத்தனை யெல்லாம் பழமையாயிருக்கப்பட்ட க்ரந்தங்களிலே தென்கலையார் மூதலிப்பர்கள்.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

பழநடைவிளக்கம்.

மூன்றில்ஐ.